கணபதி துணை.

# ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு.

[illegible]

இது

நல்லூர்

த. கைலாசபிள்ளையால்

திரட்டப்பட்டது.

முதற்பாகம்.

யாழ்ப்பாணம்

வித்தியாநுபாலனயந்திரசாலை.

கலி: ருஉ௲ங

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

# முகவுரை.

நாவலரவர்கள் எழுதிய சைவதூஷண பரிகாரம் முதலிய சில கண்டனங்கள் புத்தகரூபமாயிருக்கின்றன. பல சிறுத்துண்டுப் பத்திரிகைரூபமாகவும் புதினப்பத்திரிகைகளில் எழுதப்பட்டவைகளாகவும் இருக்கின்றன. இக்கண்டனங்களுட் சில தாமாக எழுதியவைகளாகவும், சில வேறு சிலருடைய கேள்விக்காக எழுதியவைகளாகவும் இருக்கும். இவைகள் அக்காலத்திருந்த தியாகேச முதலியார், மயில்வாகனப்பிள்ளை முதலானவர்களுடைய கையெழுத்தோடும் நிட்பக்கவாதி முதலிய பெயர்களோடும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. சில சிலருடைய செயல்களைக் கண்டித்தெழுதப்பட்டிருக்கின்றன. சில தம்மை இகழ்ந்தவரைக் கண்டித்தெழுதப்பட்டிருக்கின்றன.

இக்கண்டனங்களாலே கண்டிக்கப்பட்டவர் சிலர் இப்போதும் உயிரோடு இருக்கலாம்; சிலருக்குப் பந்துக்களிருக்கலாம். இவர்களுக்கு இந்நூல் ஒருபோது வெறுப்பைத்தரும். அவர்கள் அப்போது செய்தவைகளையும் எழுதியவைகளையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். பார்த்தால், இவர்களுக்கு ஒருபோதும் வெறுப்பு உண்டாகாது. துவைனந்துரைக்கு விரோதமாக எழுதப்பட்ட விஷயங்களுக்கு, 1877-ம் ௵ பேதிநோயும் பஞ்சமும் உண்டானபோது, நோயுற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் அவர் கீழுத்தியோகத்தர் சிலர் அத்துரை பிரியப்பட்டுக்கொள்ளுவாரென்று நினைந்து செய்த கொடுமைகளும் துவைனந்துரை அவைகளைக் கவனியாமல் விட்டமையுமே காரணமாகும். அந்தக் காலத்தில் கொழும்பிலே நடந்த Examiner என்னும் பத்திரிகையையும் இங்குள்ள கத்தோலிக்குப் பாதுகாவலன் என்னும் பத்திரிகையையும் பார்ப்பவர்களுக்கு நாவலரவர்கள் எழுதியவைகள் பெருங்கண்டனமாகத் தோன்று. அந்தக் காலமிருந்தபடிக்கு இந்தக் கண்டனங்கள் வேண்

டியவைகளைப் பார்ப்போர்களுக்கும் இப்படியே. இவ்விஷயங்களிற் குற்றஞ்சொல்வோர் அவை எழுதப்பட்ட சந்தர்ப்பங்களையும் காலங்களையும் நோக்கவேண்டும்.

நாவலரவர்கள் அக்காலப் பத்திரிகைகளிலும் புதினப் பத்திரிகைகளிலும் எழுதிய விஷயங்களிலே, பல சைவநூற் கருத்துக்களும் கல்வி விஷயங்களும் இருக்கின்றன என்றும், தமிழிலே வசனமெழுதப் பழகுவோர்க்கு அவர்களுடைய வசன நூல்கள் அத்தியாவசியமானவை என்றும் சொல்லி, அவைகள் சிதைந்துபோகாதபடி அவற்றைத் திரட்டி அச்சிட்டுத் தரும்படி பலர் கேட்டுக்கொண்டபடியால் இந்நூல் என்னாலே திரட்டப்பட்டது. வச்சிரதண்டம் என்னும் பத்திரிகையும், வேறு சில விஷயங்கள் எழுதப்பட்ட இலங்கைநேசன் உதயதாரகை முதலிய பத்திரிகைகளும் பூரணமாயகப்படவில்லை. அவை கிடைப்பின் அவற்றை மூன்றாம் பாகமாக அச்சிட எண்ணி, கிடைத்த விஷயங்களைக் கைக்கடங்கிய இரண்டு பாகமாக அச்சிட்டேன்.

நாவலரவர்கள் பாடிய கீர்த்தனங்கள் கதிரையாத்திரை விளக்கத்திற் சேர்த்து அச்சிடப்பட்டிருத்தலாலும் சுப்பிரமணியபிள்ளையைக் குறித்துப் பாடிய செய்யுள்கள் நாவலரவர்கள் எழுதிய அச் சுப்பிரமணியபிள்ளை சரித்திரத்தோடு சேர்த்து அச்சிட எண்ணியிருத்தலாலும் அவைகளும் அவைபோல்வன பிறவும் இங்கே அச்சிடப்படவில்லை.

யாழ்ப்பாணம்<br>
சைவப்பிரகாச வித்தியாசாலை<br>
துர்மதி௵ ஆனிமீ

இங்ஙனம்,<br>
த. கைலாசபிள்ளை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

கணபதி துணை.

# ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு

## ௧. தோத்திரங்கள்.

சீர்பூத்த கருவிகளா லுணர்ச்சி தங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
னுருப்பொருளைச் சிவனார் தந்த
பேர்பூத்த நிருமலசின் மயவடிவை
யானந்தப் பெருக்கை யென்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன்முதற்புங்
கவர்வணங்குங் கருணை வாழ்வைப்
போர்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகக்கடவுளைப் பணிந்து வாழ்வாம்.

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சத்தசொரூப
    செகதீச திருமங்களம்
தெய்வசா ரணபவசண் முகவற்கு முன்வந்த
    திகழீச திருமங்களம்
பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப்
    பிரகாச திருமங்களம்
பிறைநுதலொ டயில்விழிகொள் வலவையெனு மரிவையிற்
    பெருநேச திருமங்களம்
ஊர்கொண்ட பரிதியணி யெனவிலகு முதாமதி
    லொளிர்தேச திருமங்களம்
ஒருவெண்ணெய் நல்லையமர் மெய்கண்ட தேசிகற்
    குபதேச திருமங்களம்
கார்கொண்ட கரடகட கயமுகவ லங்குசக்
    கராச திருமங்களம்
கருணேச நல்லையங் கைலாச பரிவாச
    கவினேறு கணநாதனே.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

## உ. சுப்பிரபோதம்.

யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்து சமயாசாரியர்களாகிய பாதிரிமார்கள், தங்களால் அச்சிற் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்யப்படும் "நற்கொடை" யென்னும் பத்திரிகையில் "கந்தசுவாமிகோயிற் றிருவிழா" எனப் பெயர்கொண்ட ஏழாஞ் சங்கியையில், கந்தசுவாமி மெய்க்கடவுளல்லரென்றும், அவருடைய ஆலயங்களிலே செய்யப்படுந் திருவிழா முதலியவைகளினாற் பாவங்கள் விளைகின்றனவென்றும் சாதிக்கின்றார்கள். நாம் அப்பத்திரிகையைச் சித்தசமாதானத்தோடும் வாசித்து, அதிற் கொள்ளற்பாலனவற்றையும் தள்ளற்பாலனவற்றையும், அதிப் பிரபல நியாயங்களோடும், நமது சைவசமயிகளுக்கு வெளிப்படுத்தக் கடவேம்.

பாதிரிகள், "கடவுளின் மகிமை ஓரளவிற்கு அவருடைய கிரியையினாலே பிரசன்னமாகின்றது. மனுஷனுடைய குணம் அவன் ஒழுக்கத்தினால் விளங்குகின்றது. விருட்சத்தின்றன்மை கனியினால் வெளிப்படும். உயர்ந்த பொன் அதின் மாற்றினால் விளங்கும். அதுபோலவே நீங்கள் வழிபடும் கந்தசுவாமியின் தாரதம்மியத்தை அவருடைய விருத்தாந்தங்களால் அறிவிப்போம்" என்கிறார்கள். இது விவேகிகள் யாவருக்கும் ஒப்பமுடிந்த பக்ஷமன்றோ? ஆதலால், அப்பாதிரிகள் கந்தசுவாமியைக் கடவுளல்லரென்பதற்குக் கூறும் நியாயங்கள் ஒக்குமோ ஒவ்வாவோ என ஆராயாதொழிதல், மெய்க்கடவுளை உணர்ந்து வழிபட்டு முத்தி பெற விரும்பும் மேன்மக்களுக்குத் தகுதியன்றே! கந்தஸ்வாமியிடத்திலே பதிலக்ஷணம் இன்றென்பதற்கு அவர்கள் எடுத்துக் காட்டும் நியாயங்கள், கந்தபுராணத்திற் கூறப்படும் அவருடைய சரித்திரங்களுள், அவர் சரீரங்கொண்டு பிறந்தமையும் தெய்வயானையம்மையை விவாகஞ் செய்தமையும், கன்னிகையாகிய வள்ளியம்மையிடத்திற் சென்று அவளைத் தம்மோடு புணர்தற்குடன்ப

டும்படி பிரார்த்தித்து, அவளுடன்படாமை கண்டு, தமது தமையனாராகிய விநாயகக் கடவுளை யழைக்க, அவர் யானைவடிவங் கொண்டு வந்தமை கண்டு அஞ்சித் தம்மிடத்தே அடைக்கலம் புகுந்த அவளைப் புணர்ந்தமையுமேயாம். இம்மூன்றுமுடையார் பதியெனப்படுதல் கூடுமோ கூடாதோவெனப் பரீக்ஷிப்போம். பிற்கூறியவாறே, ஒரு கன்னிகையிடத்திற் சென்று அவளுடைய தாய் தந்தையரது அநுமதியின்றி யவளைத் தன்னோடு புணரக் கேட்டலும், புணர்ச்சிக்குடன்படாதவளை உடன்படுத்தற்குத் தமையனை யழைத்தலும், தம்மைபணுபிறேன் நீதிகோடி அவளை அச்சுறுத்தன்முகத்தா லுடன்படுத்தலும், இடையூற்றினுக் கஞ்சித் தன்னிடத்தடைக்கலம் புகுந்தாளை அபத்துக் காலத்திற் புணர்தலும், பாவிகளாகிய மனிதரிடத்துங் காணப்படினும், கல்வியறிவொழுக்கஞ் சற்றுமில்லாப் பேதைகளாலும் மிக இழிக்கப்படுவனவன்றோ? அப்படியேயாமாயில், இவைகளையுடையவரைக் கடவுளென்றேனும் கடவுளிடத்தே இவைகளுண்டென்றேனும் கொள்வது விவேகமா? இனி ஒருத்தியை விவாகஞ்செய்தல் மனிதருக்கேனுமாயினும் கடவுளுக்கு எனுமா? எலாதே! காமமுதலிய குற்றங்களையுடையவர் தம்மை வழிபடும் ஆன்மாக்களுக்கு அக்காமாதிகளை யொழித்து முத்திகொடுப்பதெப்படி? சரீர முண்டாமாயில், சர்வவியாபகத்துவ முதலிய இலக்கணங்களெல்லாம் இல்லையாமே! ஆதலால், பாதிரிகள் கூறியது ஒக்குமென்றே கொள்வமெனில், கூறுதும்:-

நமது பரமபதியாகிய பரமசிவன் பிரதமமகாசிருஷ்டி யாரம்பத்திலே யருளிச்செய்த முதனூல்கள் காமிகமுதல் வாதுளமிறுதியாகிய மூலாகமங்களிருபத்தெட்டுமாம். அவைகளில், பதியாவார் ஆணவம் மாயை கர்மம் என்னும் மும்மலங்களும் அநாதியேயில்லாதவரென்றும், அவருடைய சரீரம் சத்திகாரிய சரீரமன்றி மாயாகாரிய சரீரமன்றென்றும், சத்தியாவது அக்கினியிற் சூடுபோலச் சிவனுக்கு அபின்னமாகிய சாமர்த்தியமென்

றும் விரித்துணர்த்தப்படும். சத்தி அருள் என்பன ஒருபொருட்சொற்கள். அவ்வாறமப் பொருள்களைச் சுருக்கியுணர்த்தும் சிவஞானசித்தியாரிலும் இவ்வாறே "காயமோ மாயையன்று காண்பதுசத்திதன்னால்" எ-ம், "ஆணவமாகமங்க ளருளினலுருவுகொண்டு--காரணனருளாளுகிற் கதிப்பவரில்லையாகும்" எ-ம், கூறப்படுதல் காண்க. இவைகளை ஆராயுங்கால், நமது பரமசிவன் பதிலக்கணங்களிற் சிறிதுங் குறைவில்லாதவரென்பது ஐயந்திரிபறத் தெள்ளிதிற் றுணியப்படும். கந்தஸ்வாமி அச்சிவனுக்கு வேறாகாரென்பதும் அந்நூல்களாற் றெளியப்படும். மூலாகமங்களும் அவற்றின் வழிநூல் சார்புநூல்களும் இவ்வாறே சொல்லுதலால், கந்தசுவாமியை மெய்க்கடவுளல்லரென்று பாதிரிகள் கூறுவதனை நாம் ஒக்குமென்று கொள்ளுதல் கூடாது.

இதனால் கந்தபுராணகர்த்தா முதலிய சிவபுராண கர்த்தாக்களுக்குச் சைவாகமங்களே மெய்ந்நூல்களென்பது துணிவன்றெனக் கொள்வேமெனின், அது கூடாது. கந்தபுராணத்தில் மேருப்படலம் "அந்தமிலாகமத்தி னருப்பத மூன்றுங் கூற" எ-ம், அவைச்சியற்படலம் "தத்தமாற்றங்கணிறுவிய சமயிகள் பலருங்-கத்துபுன்சொலை வினவினரவன்செயல் காணார்-சுத்தவாதுள முதலிய தந்திரத் தொகுதி-யுய்த்துணர்ந்திடுநீரரே யொருசிறிதுணர்வார்" எ-ம், உமை கயிலைநீங்குபடலம் "ஞானதன்னியற்கைகளனைத்துங் கண்ணுதல்--வானவனாகம முறையின் வாய்மையான்--மேனிகழ்தொகைவகை விரிபதாகவே--தானருள்புரிந்தனன் றலைவிகேட்கவே" எ-ம், தக்கன் பூசைசெய்படலம் "நாயகன்மொழிதரு நவையிலாகம--மேயினமுறைதெரி விரதனாகியே" எ-ம், சிவாகம மகிமை செப்புதலானென்க. பிற சிவபுராணங்களுள்ளும் இவ்வாறு வருவனவற்றை யெடுத்துக் காட்டில் விரியுமென்றஞ்சி விடுத்தனம். இதனால் சைவாகமங்களே முத்திநெறிகாட்டும் மெய்ந்நூல்களென்பது புராண கர்த்தாக்களுக்குத் துணிவென்பது தெள்ளிதிற் பெறப்படும்.

அப்படியாயின், சிவபுராணங்கள் சைவாகமங்களோடு மறுதலைப்பட்டனவோ வெனின், இல்லையெனில், கந்தபுராணத்தில் அமைச்சியற்படலம் "வேதக்காட்சிக்கு முபநிடக் துச்சியில் விரித்த--போதக்காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்--மூதக்கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவா--பாதிக்காதியா யுயிர்க்குயி ராய்நின்றவமலன்" எ-ம், "ஞானக்கா லுருவாகிய நாயகனியல்பை--யானுநீயு பாயிசைத்து மென்றாலஃதெளிதோ--மோனந்தீர்கலா முனிவருந் தேறலர் முழுதுங்--கானுங் கண்ணிலா வின்னமுந் தம்பெருந்தலைமை" எ-ம், உமைகயிலைநீங்குபடலம் "உருவிலை நமக்கெனவொன்று நம்மையி--னருளுருவமையெலாமென்ன" எ-ம், ததீசிப்படலம் "உருவுஞ்செய்கைபுமோங்கிய பேருமுன்--னருளினாற்கொண்டு" எ-ம், உத்தரப்படலம் "நிலைநின்றதன்னருளுருக்கொண்டிடுநிமலன்" எ-ம், "காமருவுடிவா யெங்குங் காண்பன சத்தியங்கண்--மாமயமாகிநின்றான் மன்னிய சிவனும்" எ-ம், தக்கன்பூசைசெய்படலம் "அருளுருவாகியே யகிலமாகிக--டருவதுங் கொள்வது மாகித் தானுமாய்" எ-ம். பதிலக்கணங்கள் சைவாகமங்களிற் கூறியவாறே சிவபுராணங்களுள்ளும் கூறப்பட்டமை தெளிக. இனி, திருஅவதாரப்படலம் "அருவமுமுருவுமாகி யநாதியாய்ப்பலவாயொன்றாய்ப் - பிரமமாய்நின்றசோதிப்பிழம்பதோர்மேனியாகக்--கருணைகூர்முகங்களாறுங் கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே-யொருதிருமுருகன்வந்தாங்குதித்தனனுலகமுய்ய" எ-ம். "மறைகளின் முடிவால் வாக்கான் மனத்தினு ளளக்கொணுமை-னிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமலமூர்த்தி--யறுமுக வுருவாய்த்தோன்றி யருளொடு சரவணத்தின்--வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந்தருளினானே" எ-ம். திருவிளையாட்டுப்படலம் "ஆதலினமதுசத்தி யறுமுகனவனும் யாமும்--பேதகமன்றா னம்போற் பிரிவிலன் யாண்டுநின்றான்" எ-ம். அவைபுகுபடலம் "முன்னவர்க்கு முன்னுகுவோர் தமக்குமுற்பட்டுத்--தன்னைநேரிலா தீசனுந் தனிப்பெயர் தாங்கி--யின்னுயிர்க்குயிராயரு வுருவமா யெவர்க்கு--மன்னைதாதையாயிருந்திடும் பரமனேயவன்காண்" எ-ம். "ஈசனே

மவனுடலான் மதலே மாயினன்கா--ணுசிலாவவ ளைமூச்சுத் துணை
யையாளுநிக--பேசிலாங்கவன் பானுடி(டு)தகவில்லன்--றோலாக
கன் மணியிடைக் கதிர்வருதிறம்போல்" எ-ம். "ஈட்டுமன்றையிரே
வற்றிற்கு மிருவினைப்பயனைக் -- கூட்டுவானையுங்களை துலையு
னக்கூடுன்-வேட்டமேனியைக் கதிபுரிவானவன் மேலாய்க்--காட்டு
வான்முதற் றிறமெலா மாங்கவன்கண்டாய்" எ-ம். வருஞ் செய்யுள்களால் கந்தசுவாமி சிவனுக்கு வேறல்லரென்று துணியப்படும்.

இப்படியாமாயின், பரமசிவன் பார்வதியைப் புணர்ந்தார் பிரிந்தார் என்றும் கந்தசுவாமி தெய்வயானையம்மையை விவாகஞ்செய்து புணர்ந்தார் என்றும் வள்ளிநாயகியை இச்சித்துக் கூடினாரென்றும் கூறப்படுதலானும், புராணங்களிற் சொல்லப்பட்டவைகள் ஒன்றற்கொன்று மறுதலைப்படுகின்றனவன்றோவெனின், அன்று: சொற்பொருள் குறிப்புப்பொருள் என இருவகைப்படுமென இலக்கணநூல்கள் விதித்தலானும், சிவபுராணங்கள் சிலவிடங்களிற் குறிப்பாகப் பொருள் கொள்ளக் கிடக்குமென்பது ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய சிவாநுபூதிமான்கள் இயற்றிய பல சாத்திரங்களினாலும் குருசம்பிரதாயத்தினாலும் தெள்ளிதிற் றுணியப்படுதலானும் என்க.

ஆதலின், சிவன் பார்வதிதேவியைப் புணர்ந்தார் பிரிந்தார் எனபனவற்றிற்கும் கந்தசுவாமி தெய்வயானையம்மை வள்ளியம்மை என்னும் பெண்களிருவரைப் புணர்ந்தார் என்பதற்கும் பொருளென்னையெனிற் கூறுதும். ஆண் பெண் அலி என்னும் மூன்றுமல்லாத அநாதிமலமுத்த பதியாகிய சிவத்தையே சர்வான்மாக்களையும் தோற்றுவித்தலால் ஆண்பாற்படுத்துப் பிதாவெனவும், சூரியனுக்குக் கிரணம்போல அச்சிவத்துக்கு அபின்னமாயுள்ள சத்தியையே நிமித்தகாரணமாகிய அச்சிவம் அத்தொழிலியற்றுதற்குத் துணைக்காரணமாயிருத்தலால் பெண்பாற்படுத்து மாதாவெனவும், அச்சிவம் அச்சத்தியோடு கூடி உத்தி

யோகித்தும் சங்கற்பித்தல்லவோ, அவ்வான்மாக்களது தோற்றத்துக்குக் காரணத்தெளிவில்லாமையால், உயர்ந்து புணர்தலெனவும், அச்சங்கற்பம் இல்லாமையையே பிரிதலெனவும், சொல்லியதென்றறிக. கந்தபுராணத்தில் உத்தரப் படலம் "தேன்மலர்க்கடலந்தன்னால் செய்தொழின் முற்றுமாற்ற--லானதன்னருளையாங்கோராயிழையாகல்லி" எனக் கூறுமாற்றுமுணர்க. இனி அக்கினிசத்தி ஒன்றுயவழியும், சுடப்படுவதும் விளக்கப்படுவதும் அடப்படுவதுமாகிய விஷயத்தில் சூடு விளக்கம் அடுதலாகிய தொழிலினால் பலவாதல்போல, கந்தசுவாமியினது சத்தி ஒன்றுயவழியும் கிருத்தியபேதத்தால் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தியென மூவகைப்படும். அவற்றுள், இச்சாசத்தியாவது ஆன்மாக்களை முத்தியிலடைவிக்கவிரும்புதல்; ஞானசத்தியாவது அவ்வான்மாக்களுடைய கர்மங்களையும் அக்கர்மங்களுக்கீடாகிய தநுகரண புவன போகங்களை உபாதானத் திரயத்தினின்றும் தோற்றுவிக்கு முறைமையையும் அறிதல்; கிரியாசத்தியாவது அவ்வான்மாக்களுக்குக் கர்மசமத்துவம் பிறப்பிக்கும் பொருட்டுக் கர்மங்களைப் பக்குவாபக்குவமறிந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பித்தல். கந்தசுவாமிக்கு இம்மூன்று சத்திகளுமே புராணங்களில் முறையே வள்ளியம்மை வேலாயுதம் தெய்வயானையம்மையெனக் கூறப்பட்டன. சைவாகமங்களை ஓதியுணராதார் இவற்றினுண்மைப் பொருளை யுணராது மயங்குவர்கள். இந்தேசத்தில் தேவாலயங்களனைத்திலும் வருஷந்தோறும் கந்தபுராணம் பிரசரிக்கப்படினும் பிரசாரகர்கள் பெரும்பான்மையும் சைவாகமவுணர்ச்சி யில்லாதவராகையால், உண்மைப்பொருள் பரவாதொழிந்தது. செம்பொருளாகிய சிற்றின்பப் பொருளே உண்மைப்பொருளென்று பிரசரிக்கையால், பெருங்கேடு விளைந்தது. சிலவிவேகள் கோயிலதிகாரிகளை நோக்கி, கோயில்களிலே கந்தபுராணப் பிரசாரம் பண்ணுங்கால், செம்பொருளாகிய சிற்றின்பப் பொருளே உண்மைப்பொருளென்று பிரசரிக்கையால் சைவசமயிகளுக்குப்

பெருங்கேடு விளைகின்றது. அது கண்ட பாதிரிகள் நம்மையும் நமது சமயத்தையும் நமது கடவுளையுந் தூஷிக்கிறார்கள். ஆதலால், சைவாகமங்களை ஓதியுணர்ந்த மேன்மக்களைக் கொண்டு உண்மைப்பொருளாகிய பேரின்பப் பொருளையே பிரசரித்தல்வேண்டும் என்று போதிக்கும்பொழுது, அது அக் கோயிலதிகாரிகளுக்கு விஷமூட்டினாற்போலிருக்கின்றது. கோயிலதிகாரிகளுள்ளும் பிறருள்ளும் அநேகர், தங்களால் இச்சிக்கப்பட்ட கன்னிகைகளை அவர் தாய் தந்தையர்கள் தங்களுக்கு விவாகஞ்செய்து தருதற்கு உடன்படாதவழி, துட்டர் பலரைச் சேர்த்துக்கொண்டு இராக்காலத்திற் சென்று, அக்கன்னிகைகளைத் திருடிக்கொண்டுவந்து, பின்னர் விவாகஞ் செய்துகொள்ளுகிறார்கள். அது கண்டு தங்களைக் கண்டிப்பாரை நோக்கி, நமது கடவுளாகிய கந்தசுவாமி செய்தபடியே செய்தோம்; அது குற்றமன்று என்கிறார்கள் இப்பாதகர்கள், வள்ளியம்மை திருமணப் படலத்துக்குக் குறிப்புப்பொருளாகிய பேரின்பப் பொருளேயன்றிச் செம்பொருளாகிய சிற்றின்பப் பொருள் மெய்ப்பொருளன்றென்று யாவருமறிந்துகொள்வார்களாயில், தங்கள் குற்றத்தைக் குணமென்று பேதைகளுக்கு ஒப்பித்தல் கூடாதென்று சிந்தித்தே, வியபிசாரத்தோடு தேவநிந்தையாகிய அதிபாதகத்தையு முடையவர்களாய்ப் பிறரையும் அதிபாதகர்களாக்கி, எரிவாய் நரகத்துக்கு ஆளாகுகிறார்கள். இவர்கள் இவ்வாறு செய்தலால், அநேகர் புராணங்களுக்குச் சிற்றின்பப் பொருளே மெய்ப்பொருளென்று கருதி, காமாதிதோஷங்களையுடையவர் கடவுளாவது எப்படியென்று சைவசமயத்தை வெறுத்து, புறச்சமயங்களிற் பிரவேசிக்கிறார்கள். ஆதலால், கோயில்களெங்கும் சைவாகமங்களை ஓதியுணர்ந்தவர்களும் நல்லொழுக்க முள்ளவர்களுமாகிய மேன்மக்களைக்கொண்டு கந்தபுராணத்தி னுண்மைப் பொருளைப் பிரசரிப்பிக்கில், கேட்போர்களுக்கு இவ்வாறு கேடு விளைதலின்றிச் சிறப்புக்கேயுண்டாகும்.

பாதிரிகள், சண்டை சலஞ்ஞாதித்தல் தாசி சதுர் சங்கீதம் பரஸ்திரிகூட்டம் வாத்திய முழக்கம் வாணவிளையாட்டு முதலிய வேடிக்கைகள் யாவும் திருவிழாவில் உண்டென்றும், அவை கந்தருக்கும் காமுகருக்கும் வாய்ப்பென்றும் இகழ்கின்றார்கள். நமது சைவாகமங்களிலே, ஆலயங்களைக் கட்டுமுறைமையும், அவைகளிற் பிரதிட்டை பூசை முதலியவை செய்யுமுறைமையும், அவைகள் செய்தற்குரிய ஆசாரியர்களது இலக்கணமும், அவைகளில் தரிசனஞ்செய்யு முறைமையும், இவைகளில் வழுவினோர் பெறுந் தண்டமும் விரிவாக உணர்த்தப்படும். இக்காலத்திலே, கோயிலதிகாரிகள் பெரும்பான்மையும் சைவாகமவுணர்ச்சியும் நல்லொழுக்கமும் சிவபத்தியுமில்லாதவர்களாயும், சிவத்திரவியாபகாரத்திலும் வியபிசாரத்திலுமே கருத்தைச் செலுத்துவோர்களாயுமிருத்தலாலும், அக்கோயில்களுக்குப் பொருள் கொடுப்போர்களும் அவ்வாறே புண்ணிய பாவப் பகுப்புணர்ச்சியின்றி, கோயில்களில் வெகுசனங்கள்முன் தாங்கள் பெறும் உபசாரத்தையும் தாசிகள் கூட்டம் வாண விளையாட்டு முதலிய வேடிக்கைகளையுமே பொருளென மதித்தலாலும், சில கோயிலதிகாரிகள் பூசை திருவிழாக்களைக் குத்தகை கூறி விற்றலாலும், பொய் களவு வியபிசாரம் சிசுவதை வழக்கோரம்பேசல் முதலிய பெரும்பாதகங்களைச் செய்யும் பிராமணர்கள் கோயிலதிகாரிகளிடத்திலே பொருள்கொடுத்துப் பூசை திருவிழாக்களையும், அவற்றோடு சிவத்திரவியாபகாரமாகிய அதிபாதகத்தையும் விலைக்குக் கொள்ளுதலாலும், அதனால் சைவாகம வுணர்ச்சியும் நல்லொழுக்கமும் சிவபத்தியுமுள்ள பிராமணர்கள் விலக்கப்படுதலாலும், நமது தேவாலயங்கள் சைவாகம விதிப்படி நடவாதொழிந்தன. ஐயையோ! இதனாற்றானே, "ஆற்றருநோய்மிகு மவனிமழை குன்றும்--போற்றருமன்னரும் போர்வலிகுன்றுவர்-கூற்றுதைத்தான்றிருக் கோயில்களானவை--சாற்றிய பூசைகடப்பிடிற்றானே" எ-ம். "முன்னவனார்கோயிற் பூசைகண் முட்டிடின்-மன்னர்க்குத் தீங்குள வாரி

வளங் குன்றும்--கன்னங்களவு மிகுத்திடுங்காசினி--யென்னருணந் தியெடுத்துரைத்தானே" எ-ம். திருமந்திரத்திற் கூறியவாறே சைவமன்னர்களுடைய அரசு ஒழிந்தது; மழை குன்றிற்று; பஞ்சமிருந்தது; கொள்ளைநோய்கள் பெருகுகின்றன. பாதிரிகள் இவையெல்லாமாராயாமல், நமது சைவசமயிகள் பலராலே தேவாலயங்களில் நடத்தப்படும் தீயொழுக்கங்களைக் கண்டு சைவசமயத்தை யிகழ்தல் பேதைமையன்றோ? நூலின்வழி யொழுகாதது குற்றம் நூலின்மேலதோ? இல்லை! இல்லை! நமது தேவாலயங்களில் நடப்பனவாகப் பாதிரிகள் எடுத்துக் காட்டும் தீயொழுக்கங்கள் நமது நூல்களில் விலக்கப்பட்டனவென்பது காண்பிப்பாம்.

க—வது. ஆசாரியலக்ஷணங்களில்லாதவ பாவிகளாயிருக்கும் பிராமணர்களைக்கொண்டு கோயில்களில் பிரதிட்டை. பூசை திருவிழா முதலியவை செய்விக்கில், கடவுள் அங்கே சாந்நித்தியமாய் அருள் செய்யாரென்றும், அதனால் உலகத்திற்குக் கேடு உளதாமென்றும், சைவாகமங்கள் சொல்கின்றன. இதற்கு மாறாக, இக்காலத்தார் தங்கள் தங்கள் கருத்துக்கிசைய நடந்த பிராமணர்கள் எத்துணைப் பாதகர்களாயினும், அவர்களையே மேன்மக்களென்று பிரதிட்டை பூசை திருவிழா முதலியன செய்ய நியோகிக்கிறார்கள்.

உ—வது. உருத்திரகணிகையர் வியபிசாரம் மதுமாமிச பக்ஷணம் முதலிய பாதகங்களின்றி, சிவவேடம் பூண்டு, சிவபத்தியிற் சிறந்தவர்களென்று சைவாகமங்கள் சொல்கின்றன. இதற்கு மாறாக இக்காலத்தார் கோயில்களெங்கும், மது மாமிச பக்ஷணமுடையவர்களாய் வரைவின்றி யாவரையும் புணரும் ஸ்திரிகளை உருத்திரகணிகையரென்று நியோகிக்கின்றார்கள்.

௩-வது. தேவாலயங்களிலே புணர்ச்சி செய்தல் பெரும் பாதகமென்று சைவாகமங்கள் சொல்கின்றன. இதற்கு மாறாக இக்காலத்தில் சில கோயில்களிலே அவைகளி னதிகாரிகள் புராணங் கேட்கவும் திருவிழாத் தரிசிக்கவும் வரும் பரஸ்திரிகளிற் சிலரோடும் தாசிகளோடும், இம்மையி லிகழ்ச்சிக்கும் மறுமையில் நரகவேதனைக்கும் சிறிதுமஞ்சாமல், விபசாரஞ் செய்கின்றார்கள். சிவதருமோத்தரத்தில் சுவர்க்கநரகவியல் "மற்றொருவர் மனையாளை வாஞ்சையுறப்பரிசித்த--குற்றமறக் கூரழல்வாய்ச் சூசியினாற் குத்திடுவர்-முற்றுமுடற் றுதிரத்தின் முழுக்கனலு பொழுக்கிடுவர்--மற்றுமுள நிரயவிதத் தினுமழுத்தி வருத்துவரே" எ-ம். "மனமுருகவிழிகுளிர வாஞ்சையுறப் பார்த்திடினு-முனமுரைத்ததுபாவிதங் கண்டனினுமுற்றுவிப்பர்-நினைவழிய வலிதொலைய நிலைமையினை நீங்குதற்குத்-தனியதனைமுறையுறவே துய்ப்பிக்குந்தூதுவரே" எ-ம். பரஸ்திரிகளைத் தீண்டினோர் இச்சித்தோர்களுக்கும், "ஈசர்திருவாலயத்து மிடர்கடியும்புனற்றடத்தும்-வாசமலர்த் திருநந்த வனத்திடையு மடத்தினுளு--மாசகலாந் தருந்தியன மைதுனமற்றையதொழிலுங்--கூசமறப்புரிகின்ற கொடியோரை மிகக்கொதித்தே" எ-ம். 'இக்கெனவே செக்கிடையிட்டியந்திரிப்பர்யமதூதர்--துக்கமுறநரகவிதமெனைத்தனைத்துந் தொகுத்தொறுப்ப--ருக்கிரவாரழனிரயத் தொடுக்கிடுவ ரொழுகிவிழுத்--தக்கதிர் மதியளவு மவர்தனிற்றவிப்பாரே" எ-ம். ஆலயங்களிற் புணர்வோர்க்கும், நரகயாதனை விதித்தருளிய கந்தசுவாமிக்கு இப்பாதகங்களை உவப்பென்று வேண்டியவாறே பிதற்றும் பாதிரிகளது மடமைக்கு யாமென்செய்வோம்.

௪—வது. தேவாலயங்களில் கணிகையர்களைத் தீண்டலும், இச்சித்துப் பார்த்தலும், அவர்களோடு பேசலும், சிற்றின்பப் பாடல்களைப் படித்தலும், கேட்டலும், கலகஞ்செய்தலும் பாவிகளை நன்குமதித்தலும், புண்ணியவான்களை யவமதிசெய்தலும்

பிறவும் பிராயச்சித்தங்களாற் றீராத பெரும் பாதகங்களென்று சைவாகமங்கள் சொல்கின்றன. இதற்கு மாறாகக் கோயில்களில் பெரும்பான்மையும் இப்பாதகங்களெல்லாம் நடக்கின்றன.

நமது சைவசமயிகள் அநேகர் சைவாகமவுணர்ச்சி சிறிதுமின்மையாலும், பாவத்துக்கஞ்சாமையாலும், தங்களிடத்தே பொருளுமதிகாரமுமாத்திர முள்ளவழித் தங்களை யாவரும் மேன்மக்களென்று நன்கு மதித்தலாலும், தாம் தாம் வேண்டியவாறே பாவங்களைச் செய்து இம்மையிற் பரசமயிகளாலிகழப்பட்டு மறுமையில் எரிவாய் நரகத்திற்கு ஆளாகின்றார்கள். ஒரோவழிச் சிலர் தங்கள்மேல் வைத்த இரக்க மிகுதியினால் "ஈசனைகாப்பினல்லால் யாரையும் பிறராற் றம்மா--லாசுறப்போற்றலாகா தது துணிவாகும்" எனத் துணிந்து, தங்களைக் கண்டித்தவழி அவர்கள்மேற் பெருவைரங்கொண்டு, அவர்களை யிகழ்ந்து, அவர்களுக்கு இடையூறுசெய்யப் புகுகின்றார்கள். ஐயையோ! இது எவ்வளவு அறியாமை!

நமது சைவசமயிகள் ஒற்றுமையுடையர்களாய்த் திரண்டு, தேவாலயங்களெங்கும் சைவாகமங்களில் விதித்த இலக்கணங்களமைந்த பிராமணர்களைக்கொண்டே பிரதிட்டை பூசை திருவிழா முதலியவற்றை விதிவழுவாது இயற்றுவித்தலும், வாணவிளையாட்டு முதலிய வேடிக்கைகளின் பொருட்டுப் பொருளைச் செலவழித்தலையொழித்து, சிவபத்திமான்களும் பண்ணோடோதவல்லவர்களுமாகிய ஓதுவார்கள் பலரை நியோகித்துப் பூசாகாலத்தும் உற்சவகாலத்தும் யாவருக்கும் மனங்கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரியச் சிவன்மேல் அன்பு செனிக்கும் பொருட்டுத் தேவாரமுந் திருவாசகமுமாகிய தமிழ்வேதத்தை ஓதுவித்தலும், சைவப்பிரசாரகர்களை நியோகித்து வாரந்தோறுங் கடவுளது மகிமையையும் புண்ணிய பாவங்களையும் அவற்றின் பல

ங்களையும் கடவுளை வழிபடும் முறைமையையும் குறித்துச் சனங்களுக்குப் போதிப்பித்தலும் செய்வீர்களாயில், அறியாமை நீங்கும்; பாவந்தேயும்; புண்ணியம் வளரும்; சிவபத்தி தழைக்கும்; மாதமும்மழை பெய்யும்; பஞ்சமொழியும்; கொள்ளைநோய் குன்றும்; உலகம் உய்யும்.

### திருமந்திரம்.

என்பேவிறகாவிறைச்சியறுத்திட்டுப்
பொன்போலெரியிற்பொரியவறுப்பினும்
அன்போடுருகியகங்குழைந்தார்க்கன்றி
என்பொன்மணியினையெய்தவொண்ணாதே.

திருச்சிற்றம்பலம்

## ௫. சைவவிரோதம்.

(இலங்கைநேசன் ௧-ம் புத்தகம், இல்க்கம்-௧௮.)

இலங்கைநேசன் பத்திராதிபரே,

வேதாரணியத்துச் சைவகுரு ஒருவர் சுன்னாகத்தில் ஒரு நாவிதனுக்கு அந்தியேட்டிசெய்தது குற்றம் என்று தமது பத்திரிகை வாயிலாக ஒருவர் கண்டித்தது கண்டு, இப்படிக் கண்டனம் நடக்குமாயின், இத்தேசத்திலே சீர்த்திருத்தம் விளையும் என்று மனமகிழ்ச்சியுற்றேன். சைவசமயக் கிரியா விஷயத்தில் எனக்குத் தோன்றுவன சிலவற்றைத் தமது பத்திரிகைவாயிலாக வெளிப்படுத்துகின்றேன் சைவகுருமார்களுஞ் சைவபண்டிதர்களும் சிவாகமப் பிரமாணங்கொண்டு வாதித்து, உண்மையை நிறுத்தக்கடவர்கள். உண்மையென்று நிறுத்தப்பட்டவைகளைச் சைவசமயிகளெல்லாருங் கைக்கொண்டு நடக்கக் கடவர்கள். பொருளாசைகொண்டும், அதிகாரத்துக்குப் பயந்தும், வழக்கம் வழக்கம் என்று நழுவியும், சிவாகமவிரோதஞ் செய்பவர்கள் சிவபெருமானுடைய சாபத்துக்கு ஆளாவர்கள். அவர்கள், சைவசமயப்பற்றுச் சற்றுமற்றுக், கிறிஸ்துசமயப்பற்று முற்றுமுற்று நடப்பதே மிகநலம்; அதனாற் பிறருக்குத் தீங்கு விளையாது. வழக்கம் வழக்கம் என்பவர்கள், தங்கள் தங்கள் முன்னோர்களுடைய வடிகாது கொண்டைத்தலை சிலுவைக்குறித்தலைச்சீலை முதலிய வழக்கங்களை நீக்கிவிட்டதேனோ?

௧. நாவிதரோ வண்ணாரோ உயர்ந்தசாதியார்! இவவிருதிறத்தாருள் எவர் தொழில் மிக அசுத்தியுடையது! மயிர்களைதலோ, அழுக்குச்சீலையெடுத்தலோ! வடதேசத்

து ங்கோயில்களுள்ளே, நாவிதர் தடுக்கப்படாது பிரவேசிக்கக் காண்கின்ற நாம், யாழ்ப்பாணத்துக் கோயில்களுள்ளே நாவிதர் பிரவேசியாது தடுக்கப்படவும், வண்ணார் தடுக்கப்படாது பிரவேசிக்கவும் காண்கின்றோமே. இவைகளுள் ஏது நீதி, எது அநீதி!

உ. நாவிதரோ கரையாரோ தாழ்ந்த சாதியார்! இவ்விருதிறத்தார் தொழில்களுள் எது பாவத்தொழில்! மயிர்களைதலோ மீன்படுத்தலோ! சைவசமயக் கிரியைக்குக் கரையார் யோக்கியரல்லர் என்று சிவபெருமான் அருளிச்செய்தார் என்பது திருவிளையாடற்புராணத்து வலைவீசின படலத்தாலே துணியப்பட்டதன்றோ! இப்படியாகவும், இங்கே வேதாரணியத்துச் சைவகுருமாரும், வேதாரணியத்துக் கோயிலதிகார நடாத்தும் வரணி கரணவாயிற் சைவகுருமாரும், கரையாருக்குத் தீக்ஷை அந்தியேட்டி முதலியன செய்யக்காண்கின்றோமே! பின் நாவிதருக்கு அவை செய்தாற் குற்றமென்னையோ! கரையாரிற்றாழ்ந்த சாதியார் நாவிதரென்றால், செட்டிவேளாளர்கள், கரையாருக்குச் சவரம்பண்ணுகிற நாவிதரைத் தள்ளலுங் கரையாருக்குச் சவரம்பண்ணாத நாவிதரைக் கொள்ளலும் என்னையோ!

இதுசெய்யும் செட்டிவேளாளர்கள், கரையாருக்குத் தீக்ஷை அந்தியேட்டி செய்யுங் குருமாரைத் தள்ளாது கொள்வதென்னையோ?

ங. கிறிஸ்துமதத்திலே புகுந்த ஒரு நாவிதன் மனையாளுடைய பிரேதத்தைச் சுற்றத்தாராகிய நாவிதர் தீண்டவும் உடன்படாது வெறுத்து மறுத்ததும், ஒரு வேளாளக் கிறிஸ்தவன் சில கரையாரக் கிறிஸ்தவர்க

ளோடு கூடி அந்தப் பிரேதத்தைச் சுமந்ததும் ஊர் அறி யுமே! அந்த வேளாளக் கிறிஸ்தவனுக்கு வேதாரணியத்து வடக்குத்தெருச் சைவகுரு ஒருவர் அந்தியேட்டிசெய் ததும், பிராமணர் பலரும்போய் வீட்டுக்கிருத்தியத்தில் அரிசிவாங்கினதும், கரணவாயிற் சைவகுருமார் சிலர் அந்தவீட்டிலே போய்ப் பூசைபோசனஞ் செய்ததும் ஊர றியுமே! இவையெல்லாங் கண்டித்தார் யாரோ! நாவிதச் சைவனுக்கு அந்தியேட்டி செய்த மூன்றாந் தெருச் சைவ குரு அயோக்கியராம்! வேளாளக் கிறிஸ்தவனுக்கு அந்தி யேட்டிசெய்த வடக்குத்தெருச் சைவகுரு யோக்கியராம்! "கண்டனமின்றியாங் கலியின்வண்ணமே." சாதிபெரிதோ சமயம் பெரிதோ! சிவபதப்பேறு, சிவநிந்தையை வெறுத்த நாவிதருக்கோ! சிவநிந்தையை வெறுக்காது தழுவிய சைவ குருமார் பிராமணர் வேளாளர் என்னும் இவர்களுக்கோ! பிராமணர் முதற் பறையர் ஈறாகிய எல்லாச் சாதியாருள் ளுஞ் சைவர் உண்டன்றோ!

ச. தீக்ஷைபெற்றபின் மரணபரியந்தம் அநுட்டிக் கப்பட்ட சமயாசாரத்தில் விளைந்த குறைவுபாட்டுக்குச் செயப்படும் பிராயச்சித்தமன்றோ அந்தியேட்டி! சமய தீக்ஷைதானும் பெறாது, சமயாசாரம் ஒரு சற்றும் சாராது விபூதி சிறிதுமிடாது, பாதிரிமாரைப் பிரீதிப்படுத்திக் கொண்டு, கிறிஸ்தவர்கள் பந்தியிலே கலந்து போசனஞ் செய்துகொண்டு திரியும் மனிதப் பதர்களுக்குத் தருப் பையிலும் அந்தியேட்டிசெய்யத்தகாதே! இப்படியாகவும், வேதாரணியத்துச் சைவகுருமார்களும் வரணி கரணவா யிற் சைவகுருமார்களும் இவர்களுக்குப் பிரேதத்தில் அந் தியேட்டி செய்யத் தலைப்பட்டுக்கொண்டார்களே! இவை யெல்லாங் கண்டித்தார் யாவர்!

ரு. நாட்டுக்கோட்டைச் செட்டிகள் விபூதிருத்திரா க்ஷதாரணம் பஞ்சாக்ஷரசெபஞ் சிவதரிசனஞ் செய்கிறார்கள். சேதுமுதற் காசிவரையுஞ் சத்திரந்தாபித்து, அன்னதானஞ் செய்கிறார்கள். பல சிவாலயங்கள் கட்டுவித்துப் பிரதிட்டை செய்கிறார்கள். தேவாரம்பெற்ற சிவஸ்தலங்கள் பலவற்றைச் சீர்ணோத்தாரணஞ் செய்து, சம்புரோக்ஷணம் செய்விக்கிறார்கள். பல மடங்கள் கட்டுவித்து, அறுபத்துமூவர் குருபூசை முதலியன செய்விக்கிறார்கள். அவர்களுள்ளே சிலர் சிவபூசை திருவாசகபூசை செய்கிறார்கள். சிலர் ஞான நூல்களை ஓதியுணர்ந்து துறவறம்பூணுகிறார்கள். இப்படிப்பட்ட நாட்டுக்கோட்டையார்களைக், கள்ளும் புலாலும் உண்கின்ற மேளகாரர்கள் தாசிகள் கும்பிடலாகாதாம்! ஒருசாண்வயிற்றின் பொருட்டுச் சாதியாசாரஞ் சமயாசாரம விட்டுப் பாதிரிமார்களை அடுத்துக், கிறிஸ்துமதத்திலே புகுந்து, அவர்கள் வீட்டிலே பறையரோடிய எல்லாச்சாதியாரோடுங் கலந்து, எல்லாம் புசித்து வளர்ந்து, பழிபாவங்களுக்குப் பயப்படாது பொருள் சம்பாதித்து, ஒருசமயப்பற்றுமற்றுப் பிலிக்கித்திரிகிற, போலிப் பிரபுக்களை, இந்த மேளகாரர்கள் தாசிகள் கும்பிடலாமாம்! சைவசமயநடை முடிந்த முடிபு இப்படியாயிற்றே! நாட்டுக்கோட்டையார்களை மேளகாரர்களுந், தாசிகளுங் கும்பிடலாகாது என்கிற செட்டிவேளாளர்கள், தாங்கள் நாட்டுக்கோட்டையார்களுடைய பூசையைக் கும்பிடுவதென்னையோ! கொழும்பிற் கதிரேசன்கோயில் போல இங்கும் வண்ணார்பண்ணையிலே சிவன்கோயிலுக்குத் தெற்கே நாட்டுக்கோட்டையாரால் ஒரு கதிரேசன் கோயில் கட்டுவிக்கப்படுகின்றதே! கொழும்பிற் கதிரேசன்கோயிலிற் போல இங்கும் நாட்டுக்கோட்டையார்களே பூசை செய்வார்கள்

போலும். நாம் தூரத்திலேநின்று கும்பிடுகிற சுவாமியைத் தீண்டிப் பூசைசெய்யும். நாட்டுக்கோட்டையார்களே, நம்மைத் தூரத்திலே நின்று கும்பிட்டு வாய்புதைத்து நிற்கிற மேளகாரர்களுந் தாசிகளும் கும்பிடலாகாதாம்! நல்லது! "கோயிற்பூசை பரார்த்தபூசையன்றோ! அது நாட்டுக் கோட்டையார் செய்யலாமா! இது அநீதியன்றோ" என்பார்க்கு நாட்டுக்கோட்டையார் தங்கள் பிள்ளைகள் செய்யும் பூசை தாங்கள் செய்யலாகாதா என்பார்போலும்!

சு. இங்கே நளவருள்ளே சிலர் கள்ளுக் குடிப்பதை விட்டும், பறையருள்ளே சிலர் மாட்டிறைச்சி தின்பதை விட்டும், திருத்தமடைகிறார்கள். இவர்கள் யோக்கியர்களா? கிறிஸ்தவர்களோடு கூடி மாட்டிறைச்சி தின்று சாராயங் குடிக்கும் லவாடசூனியர்களாகிய வேளாளர்களும், இவர்களுக்கு அந்தியேட்டி கலியாண ஓமஞ் செய்யுஞ் சைவகுருமார்கள் பிராமணகுருமார்களும் யோக்கியர்களா?

எ. ஆடு கோழி தின்று கள்ளுச்சாராயங் குடிக்கிற மேளகாரர்கள், எவ்வளவு பகை வரினுங் கிறிஸ்தவர்கள் வீடுகளிலே, புசிக்க உடன்படுகிறார்களில்லை. புசித்தவர்களைத் தங்கள் கூட்டத்தினின்றும் நீக்கிவிடுகிறார்கள். செட்டிவேளாளர்களுள்ளே இந்தக்கட்டுப்பாடில்லையே.

அ. கோவியர்கள் அகம்படியார்கள் மலையகத்தார்கள் முதலிய தாழ்ந்தசாதியார்கள், மாமிச போசனம் விட்டு, ஆசாரம்பூண்டு, சிவபூசாவான்களாகி, இம்மை மறுமையிரண்டிலும் மேன்மையடைகிறார்கள். தாங்கள் பரம்பரையே மாம்சபோசனம் பண்ணாத உயர்குல வேளாளர்கள் என்று பாராட்டிக்கொள்ளுகிற சிலர், சாதியாசாரஞ் சமயாசாரம் என்பது அணுவளவாயினும் அறியார்கள்; சைவசமயபுத்

தம்ம் ஒன்றுவது இண்டியும் அறியார்கள்; தங்களுக்குத் தீக்ஷையில்லை; அனுட்டானம் இல்லை; சிவதரிசனம் இல்லை; விபூதிதாரணம் இல்லை; முகச்சவரம் விடார்கள்; எச்சிற் புகையிலைச் சுருட்டுக் கைவிடார்கள்; தங்கள் வீடுகளிலே கிறிஸ்தவர்களை உடனிருத்திப் போசனஞ் செய்கிறார்கள்; தங்கள்வீட்டு நிலம் தூண் சுவர் பாத்திரங்கள் முதலான வை எல்லாம் கிறிஸ்தவர்களுடைய எச்சிலாக்கிவிடுகிறார் கள்; தங்களுக்குச் சமையல்பண்ணுகிற கோவியர்கள், கிறிஸ்தவர்களுடைய கலியாணவீடுகளிலே அவர்கள் பாத் திரங்களிலே சமையல்செய்து, அவர்களுக்குப் படைத்துத் தாங்களும் போசனஞ்செய்துகொண்டுவரக் கண்டுங் கேட் டும், அந்தக் கோவியரைக்கொண்டு தாங்கள் சமையல்செய் வித்துப் போசனம் பண்ணுகிறார்கள்; சாதியாசாரஞ் சம யாசாரம் இல்லாத எழுத்துச்சாதியினாலே பயன் யாதோ! சாதியாசாரத்தினால் பயனில்லை என்பது துணிவானால், தங் களை உயர்ந்தசாதியென்று பாராட்டிக்கொள்வதேன்! சம யாசாரத்தினாலே பயனில்லை என்பது துணிவானால், தங்க ளுள் யாவராயினும் இறந்தபொழுது ஒரு பண்டாரத்தை வருவித்துப் பிரேதத்தில் அந்தியேட்டி செய்விப்பதேனோ! இவர்கள் இது செய்வது சைவசமயக் கிரியைகளுக்கு ஒரு பரிகாசமன்றோ! இவர்கள், சாதி உயர்ச்சியையுஞ் சைவசம யத்தையும் விரும்புவது சத்தியமேயானால், சாதியாசாரத் தையுஞ் சமயாசாரத்தையும் இயன்றமட்டுங் கிரமப்படி அநுட்டிக்கக் கடவர்கள். அல்லது மற்றைச் சைவசமயிக ளையுஞ் சைவ குருமார்களையுங் கெடுக்காது, முற்றுங் கிறி ஸ்தவர்களோடு கலந்துவிடக்கடவர்கள்.

௯. சைவகுருமார்கள், தாங்கள் வேதாரணியத்திலா வது இங்கேயாவது, கோயில்களிலே சுவாமி உற்சவங்

கொண்டருளும்பொழுதில் பின்னாகத் தாளந்தட்டித் தேவாரம் ஓதுவது தங்களுக்கு அவமானமாம்! கிறிஸ்தவர்களிடத்துந் தாங்கள். கொடுக்கிற விபூதியை வாங்கிக் கீழே போட்டுவிடுகிற நிரீச்சுரவாதிகளிடத்தும் போய்த் தேவாரம் ஓதியும், கிறிஸ்தவர்களுக்கும் நிரீச்சுரவாதிகளுக்குஞ் சூர்ணோற்சவம் அந்தியேட்டி கலியாணஹோம முதலியன செய்தும், அரைரூபா ஒருரூபா வாங்கி வயிறு வளர்ப்பது தங்களுக்கு அவமானமாகாதாம்! இது பெருங் கீர்த்தி

௧0. கழுத்திலே கண்டிகையுங் காதுகளிலே ஆறு கட்டி சுந்தரவேடமுந் தலையிலே தாழ்வடமுந் தரித்துக் கொண்டு புறப்படுவது தங்கள் குருத்துவத்துக்கு அடாதாம்! வேளாண்குருத்துவத்துக்கு விலக்கப்பட்ட தலைக்கட்டும் உத்தரீயமும் உடையர்களாகி வெருண்டு திரிவது தங்கள் குருத்துவத்துக்குப் பெருஞ் சிறப்பாம்! அவ்வவ் வுத்தியோகத்துக்குரிய சின்னமில்லாதவரை அவ்வவ்வுத்தியோகத்தர் என்று கொண்டு மரியாதை செய்வதெப்படி?

௧௧. மேலே சொல்லப்பட்ட துராசாரங்கள் பூண்ட போலிக்குருமார்களை விலக்குவாருங்கண்டிப்பாரும் இல்லை. இதனாலே சைவசமயநிலை பாறுகின்றது. இவர்கள் இப்படிச் செய்யலாமா இப்படிச் செய்யலாமா என்று இராப்பகல் ஓயாது வாய்ப்பறை அறைகின்ற சைவசாத்திர பண்டிதர்களும், இந்தப் போலிக் குருமார்களைக்கண்டவுடனே, வெறுக்காது புலித்தோலாசனங் கொடுத்து உபசாரஞ் செய்து விடுகிறார்களே! இப்படியானால், இவர்களைக் கண்டித்து விலக்குகிறவர்கள் வேறுயாரோ! யோக்கியர்களுக்கும் அயோக்கியர்களுக்கும் பேதம் எப்படி விளங்கும்! யோக்கியர்களுக்கு எப்படி யோக்கியதையிலே ஊக்கம்

உண்டாகும்! அயோக்கியர்களுக்கு அயோக்கியதையிலே எப்படி நாணம் உண்டாகும்! "சொல்லினுஞ் செய்கை பெலமுடையது" என்ற பழமொழி சைவ பண்டிதர்கள் அறியார்கள்போலும்.

இங்ஙனம்,
ஒரு சைவன்.

---

# குமாரநாயகரலங்காரம்.

(இலங்கைநேசன் உ-ம் புத்தகம், இலக்கம்·௫.)

'ம. ஈ. ஈ. தம்பையாப்பிள்ளை'யே!

நீர் பாடிப் பதிப்பித்த குமாரநாயகரலங்காரங் கண்டேன். அதில் எனக்குத்தோன்றும் சில விழுக்களை வினவுகின்றேன்.

க. "தம்பையாப்பிள்ளை" "தம்பையநாவலன்" "தம்பையகவிஞன்" என்பன இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளன்றோ? இவைகளுள்ளே நிலைமொழி யாது? தம்பையாவோ? தம்பையனோ? தம்பையாவாயின், "தம்பையநாவலன்" "தம்பையகவிஞன்" என்று புணர்ந்ததெப்படி? "தம்பையனாயின், தம்பையாப்பிள்ளை" என்று புணர்ந்ததெப்படி? ஆகாரவீற்று ஐயாவென்பது விளியுருபேற்ற பெயரா? உருபேலாது தன்னியல்பினின்ற பெயரா? உருபேற்ற பெயரும் பின்மொழியுங் கூடி இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகுமா? "ஆழ்வார்ப்பிள்ளை" என்னும் புணர்ச்சிக்கு விதி என்னை?

உ. "சுப்பிரமணியபிள்ளையவர்கள் குமாரன் தம்பையாப்பிள்ளை யவர்கள்" என்றிட்டுக்கொண்டீரே. "குமா

ரன்" என்னும் ஒருமைப்பெயரோடு "அவர்கள்" என்னும் பன்மைப்பெயர் புணர்ந்ததெப்படி?

௩. உமது புத்தகத்தில் உமது பெயருக்கு முன்னும் பின்னும் முறையே "ம.ா. ா." என்றும், "அவர்கள்" என்றும் நீரே இட்டுக்கொண்டது சிறப்பாமா? தாண்டவராயமுதலியார், சரவணப்பெருமாளையர் முதலிய மெய்ப்புலவர்கள் தத்தம் புத்தகத்தில் இப்படி இட்டுக்கொள்ளாதது நீர் பார்க்கவில்லையா?

௪. "வித்துவான் தம்பையாப்பிள்ளை" என்றிட்டுக்கொண்டீரே! வித்துவான் என்பது வடமொழியா? தமிழ்மொழியா? வித்துவான் என்பதற்குப் பொருள் யாது? வித்துவான் என்னுஞ் சொல்லுற்பத்தி யாது? வித்துவானென்னும் பட்டமேற்றற்கு யோக்கியராகும் வண்ணங் கற்றற்பாலனவாகிய நூல்கள் எவை? அந்நூல்கள் நீர் கற்றிருக்கின்றீரா? அவைகளிலே நீர் பரீக்ஷிக்கப்பட்டீரா? பரீக்ஷித்தவர் யாவர்? பரீக்ஷையிலே சித்திபெற்றீரா? பட்டந் தந்தவர் யாவர்? பட்டப்பத்திரம் எங்கே? உமக்குப் பட்டம் நீரே படைத்திட்டுக்கொண்டீரா? அப்படியாயின், இங்கிலிசுப் புத்தகங்கள் சிலநாட் கைக்கொண்டு திரிந்தோரெல்லாம், B. A; B. L, M.A. முதலிய பட்டங்கள் தமக்குத் தாமே படைத்திட்டுக்கொண்டு, இறுமாந்து திரியலாமே. பயன் என்னையோ! சிறுவரும் இகழ்தற்கிடனுமே! இங்கிலிசில் இப்படிச் செய்யத் துணிபவர் யாருமில்லையே! தமிழ்க்கல்வியொன்று பகிடிக்கிடனாயிற்று!!

௫. உமக்குச் சாற்றுகவி தந்தாரை நிறுவிய வரிசை எவ்வரிசை? சிவமுதற் பிரமனீறாக நிறுவிய வரிசை போலப் படியிறக்க வரிசையா? பிரமன் முதற் சிவமீறாக

நிறுவிய வரிசைபோலப் படியேற்ற வரிசையா? இறக்கம் ஏற்றம் யாதுநிலை பற்றியன? ஈற்றுச்சாற்றுகவி தந்த கள்ளியங்காட்டாருக்கு "ஐயா" என்னும் பட்டம்போந்தது எப்படியோ? ஐயர் என்பது வடமொழியோ? தமிழ்மொழியோ? ஐயர் என்னுஞ் சொற்குப் பொருள் யாது? ஐயர் என்னும் பட்டம் எவ்வருணத்தாருக்கு உரியது? கள்ளியங்காட்டுப் புலவர் எவ்வருணத்தார்? ஐயர் என்பது வருணம் பற்றிய பட்டமன்றாயின், வேறு யாது பற்றியது? அதன் காரணம் அக்காட்டாரிடத்து அமைந்ததா?

உமது பிரபந்தம் பிழையற்றதென்று சான்றுசொல்ல வெளிப்பட்ட புலவர்களுள், ஒருவர் தமது பாட்டிலே "முடிசுப்பிரமணியன்" "தருமதலையோன்" "அவனிதிரிகூடாசலாதலன்" என்று பாடியிட்டுக்கொண்டாரே: இரண்டு புலவர் "சடாட்சரம்" என்று இட்டுக்கொண்டாரே. அவ்விருவருள் ஒருவர் "சடாட்சரமாறினையும்" என்றாரே. இக்குறையாமக்களை உமக்குச் சான்றினராக எங்கே தேடிப் பிடித்தீர்?

இவ்வினாக்களுக்கு, என்னோடு சீறாது, என்னை ஏசாது, வீண்வார்த்தை பேசாது, அமைதியோடும் நியாயத்தோடும், விடைசொல்லக் கேட்கின்றேன். இது முடிந்தபின், அலங்காரத்தில் நுழைவேன்.

இங்ஙனம்,
கல்வி விருப்பினன்.

# ௪. தமிழ்ப்புலமை.

௧. தமிழ் கற்கப் புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப் பாலபாடங்களைப் படித்துக்கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து, இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக.

௨. நிகண்டு கற்று, அதனுள் அடங்கிய சொற்களையும் அவைகளின் பொருள்களையும் அறிந்துகொள்க.

௩. திருவள்ளுவர் குறள், நாலடியார் முதலாகிய நீதிநூல்களைப் பதப்பொருளுடனே கற்றறிந்துகொள்க.

௪. சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு, சைவர்களுக்கு இன்றியமையாச் சிறப்பினவாகிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும், பழகிக்கொள்க.

௫. பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், உபதேசகாண்டம், கோயிற்புராணம், காசிகாண்டம், கூர்மபுராணம், சேதுபுராணம், காஞ்சிப்புராணம், திருத்தணிகைப்புராணம், பதினோரந் திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக.

௬. நன்னூல் விருத்தியுரை, அகப்பொருள்விளக்கவுரை, புறப்பொருள்வெண்பாமாலையுரை, காரிகையுரை, வெண்பாப்பாட்டியலுரை, தண்டியலங்காரவுரை என்னுமிலக்கணங்களைக் கற்றறிந்து, தாம் கற்ற இலக்கியங்களில் இவ்விலக்கணவிதிகளை அமைத்துப் பழகுக.

எ. இன்னும், காலம் உளதாயின், தொல்காப்பியம் இளம்பூரணருரை, சேனாவரையருரை, நச்சினார்க்கினியருரை, பிரயோகவிவேகவுரை இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, இறையனாரகப்பொருளுரை என்னுமிலக்கணங்களையுங் கற்றறிக.

அ. பூகோளநூல், ககோளநூல், அங்ககணிதம், வீசகணிதம், க்ஷேத்திரகணிதம் என்னும் நூல்களைக் கற்றறிக.

௯. தருக்கநூல்களைக் கற்றறிந்து, எடுத்தவிடயத்தை நியாயம் வழுவாமல் எழுதவும் பேசவும் பழகுக.

௰. திருவள்ளுவர் குறள் பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக்கோவையார் நச்சினார்க்கினியருரை, கல்லாடம் நச்சினார்க்கினியருரை என்பனவற்றைக் கற்று, இடைவிடாது பலகாலும் உளங்கொளப் பயிலுக.

௰க. விசேஷதீக்ஷைபெற்றுக்கொண்டு, சைவசமயநெறியுரை, சிவதருமோத்தரவுரை, பரமதநிமிரபானு, சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் முதலாகிய சமயநூல்களைக் கற்றறிக.

௰உ. கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமாம். ஆதலால் தம் வாழ்நாள் முழுவதும் சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை, வேதாகம நிந்தை, சிவத் திரவியங் கவர்தல், கொலை, களவு, புலாலுண்டல், கள்ளருந்தல், பிறர்மனை விழைதல், வரைவின்மகளிர்விழைதல், பொய், அழுக்காறு, புறங்கூறல், செய்ந்நன்றி மறத்தல் முதலாகிய பாவங்களை ஒழித்து, சிவத்தியானம், சந்தியாவந்தனம், பஞ்சாக்ஷரசெபம், சிவபூசை, தமிழ்வேத பாராயணம் சிவாலயசேவை, மாகேசுரபூசை, தீக்ஷாகுரு வித்தியாகுரு தந்தை தாய் தமையன் முதலிய பெரியோர்களை வழிபடுதல், இரக்கம், பொறை அடக்கம் முதலாகிய புண்ணியங்களையுடையராய் ஒழுகுக.

௰௩. இருமையின்பத்துக்கும் துணைக்காரணமாகிய பொருளை, பிறவுயிர்களுக்குச் சிறிதாயினுங் கேடு பயவாத நல்வழியாலே, ஈட்டுக.

௰௪. நித்திய கருமத்துக்கும் பொருளீட்டுதலுக்கும் உரிய காலம் அல்லாத மற்றக் காலமெல்லாம், சிறிதும் வீண்படாமல், புண்ணிய நூல்களை ஆராய்தலினும், நன்மாணுக்கர்களுக்குக் கல்வி கற்பித்தலினும், பலருக்குப் பயன்படும் நூல்களையேனும் உரைகளையேனும் செய்தலினும் போக்குக.

௰௫. இவ்வாறே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து விளங்கும் பரிபக்குவர்கள், சற்குருவை அடைந்து, நிருவாணதீக்ஷை பெற்றுக்கொண்டு. ஞானசாத்திரங்களாகிய (க) திருவுந்தியார் (உ) திருக்களிற்றுப்படியார், (௩) சிவஞானபோதம், (௪) சிவஞானசித்தியார், (௫) இருபாவிருபஃது, (௬) உண்மைவிளக்கம், (௭) சிவப்பிரகாசம், (௮) திருவருட்பயன், (௯) வினாவெண்பா, (௰) போற்றிப்பஃறொடை, (௰௧) கொடிக்கவி, (௰௨) நெஞ்சுவிடுதூது, (௰௩) உண்மைநெறிவிளக்கம், (௰௪) சங்கற்பநிராகரணம் என்னும் சைவசித்தாந்த நூல்களை உரையுடனே விதிப்படி சிரத்தையோடுங் கற்றறிந்துகொண்டு, இச்சாத்திரங்களின் அனுபவப் பயனாய் உள்ள தோத்திரவடிவாகிய மேற் கூறப்பட்ட தேவாரம் திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களின் உண்மைப் பொருளைச் சிவனது திருவருள் காட்டக் கண்டு, நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும் நெஞ்சநெக்குருக, கண்ணீர்வார, மெய்ம்மயிர்சிலிர்ப்ப, சிறிதும் மறவாது அச்சிவனது திருவடிக்கீழ்த் தூங்கும் உண்மைநிலையைப் பெற்று வாழ்க.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்".
நின்று மிருந்துங் கிடந்துநடந்துநினை
என்றுஞ் சிவன்றா ளிணை"

☞ வைணவசமயிகள் மேற்கூறப்பட்டவற்றுள் சமயநூல்களொழித்து ஒழிந்தனவற்றையும் தங்கள் சமய சித்தாந்தங்களையும் கற்றறிந்து, அவைகளின் விதிப்படி ஒழுகுக.

தமிழ் கற்றவர்களை நடுவுநிலைமையின் வழுவாது பரீக்ஷை செய்து, அதில் வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெரும் சின்னமும் கொடுக்கும் சபையார் இக்காலத்தில் இல்லாமையால், தமிழ்க்கல்வியில் வல்லவர்களும் வல்லவர்களல்லாதவர்களும் ஒப்ப மதிக்கப்படுகின்றார்கள். அதனால், நமது தேசத்தாருக்குத் தமிழ்க்கல்வியில் விருப்பமும் முயற்சியும் சிறிதாயினும் இலவாயின. பண்டுதொட்டுக் கல்வியிற் சிறப்புற்று விளங்கும் மகிமை பொருந்திய மடாதிபதிகள் பெருங்கருணை கூர்ந்து, காலந்தோறும் தமிழ்கற்றவர்களுள் தங்கள் சந்நிதானத்துக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டவர்களைப் பரீக்ஷைசெய்து, வல்லவர்களென நன்குமதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெரும் சின்னமுங் கொடுத்தருளுவாராயின், எம்மொழியினும் இனிய நமது தமிழ்மொழி மிக வளர்ந்தோங்குமே. ஏழைசொல் அம்பலத்துக்கேறுமா. ஐயையோ! இதற்கு யாது செய்யலாம்!

ரௌத்திரி௵
ஐப்பசி மீ
கலி: ௪௯௬௨.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

# ௫. யாழ்ப்பாணச் சமய நிலை

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள புரோடெஸ்டாண்டு கிறிஸ்து சமயப் பாதிரிமார்கள் இவ்வியாழ்ப்பாணத்தில் வந்து, சிவன் கடவுளல்லரென்றும், அவர் பிசாசென்றும், வேதாகமங்கள் பொய்ந் நூலென்றும், சைவசமயம் துர்மார்க்கமென்றும், சைவர்கள் அஞ்ஞானிகளென்றும், அவர்கள் பிசாசின் அடிமைகளென்றும், பெருந் தூஷணங்களைப் பேசித் திரிந்து, குருட்டுவழி மும்மூர்க்கிலட்சணம் தூராசார விருத்தாந்தம் முதலிய பல தூஷணை புத்தகங்களை வெகுபணஞ் செலவிட்டு அச்சிற்பதிப்பித்து, அவைகளை ஊர்தோறும் கொடுக்கும்படி சம்பளத்துக்கு உபதேசிமாரை நியமித்து விடுவாராயினார்கள். அவைகளிற் கொடுக்கப்படுவன சிலமாத்திரமே; அவைகளும் வாசிக்கப்படுகின்றனவா? இல்லை இல்லை! பட்டணங்களுக்கும் சித்திரவேலைகளுக்கும் சரக்குகள் சேமித்தற்கும் பயன்படுகின்றன. மற்றவைகளெல்லாவற்றையும் அவ்வுபதேசிமார்கள் கல்லுடன் கட்டிப் பாழ்ங் கிணறுகளிலே போட்டுவிட்டு "கொடுத்து விட்டோம்" என்று தெரிவிப்பாராயினார்கள்.

இச்செயல்களினாலே தங்கள் கருத்துச் சித்தியாமையைக் கண்டு, பாதிரிமார்கள் பள்ளிக்கூடங்களைத் தாபித்து, இக்காலத்திலே சீவனத்துக்குப் பெரும்பாலும் வேண்டும் பாஷையாகிய இங்கிலிஷைப் படிப்பிப்பாராயினார்கள். பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடத்தில் இளமைப் பருவத்திலே கற்கப் புகுந்தவர்கள் அநேகர் சைவசமயத்துண்மையை அறியாமையினாலே கிறிஸ்து மதத்திற் பிரவேசித்து விட்டார்கள். அவர்களிற் பலர், சைவசமயத்துண்மையை அறிந்தபின், பச்சாத்தாபம் அடைந்து, சேது

யாத்திரை முதலியன பண்ணி, வெளிப்பட விபூதிதாரணம் அநு ட்டானமுதலியன செய்து வருகின்றார்கள். சிலர் ஒரு சமயத்தி லும் விசுவாசமின்றி எல்லாச் சமயமும் பொய்யென்று சொல்லிக் கொண்டு திரிகின்றார்கள். கண்ணீர் பொழியப் பொழியச் சிவன் பிசாசு என்றும் யேசுக்கிறிஸ்துவே இரக்ஷகர் என்றும் கதறிக் கதறித் திரிந்த எத்தனையோ உபதேசிமார்கள் இப்பொழுது குடு ம்பத்தோடு வெளிப்பட விபூதி தரித்துச் சிவதரிசன முதலியன செய்துகொண்டு திரிவதைக் காணாதவர் யாவர்! சைவசமயத்தை இகழ்ந்துங் கிறிஸ்துசமயத்தைப் புகழ்ந்தும் பற்பல புத்தகங்கள் எழுதி அச்சிற்பதிப்பித்துப் பரப்பிய எத்தனையோ கிறிஸ்தவர் கள் இப்பொழுது குடும்பத்தோடு வெளிப்பட விபூதி தரித்துத் தாங்கள் முன்னே எழுதினவைகள் எல்லாம் அபத்தம் அபத்தம் என்று மறுத்துச் சைவசமயமே மெய்ச்சமயம் என்று பாராட்டிக் கொண்டு திரிவதை அறியாதவர் யாவர்!

இத்தேசத்துள்ள வறியவர்கள் அநேகர் சைவசமயமே மெ ய்ச் சமயமென்று அறிந்தும், அன்னம் வஸ்திர முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும், உபாத்தியாயருத்தியோகம் பிர சங்கியுத்தியோகம் முதலிய உத்தியோகங்களைச் செய்து சம்பளம் வாங்கும்பொருட்டும், கவர்ன்மெண்டு உத்தியோகங்களினிமித் தம் துரைமார்களிடத்தே சிபாரிசு செய்விக்கும் பொருட்டும், கிறிஸ்து சமயப் பெண்களுள்ளே சீதனமுடையவர்களையும் அழ குடையவர்களையும் விவாகஞ் செய்யும்பொருட்டும், கிறிஸ்து சம யத்திலே பிரவேசிப்பாராயினார்கள்.

இவர்கள், பாதிரிமார்களெதிரே முழங்காற்படியிடுதல் இராப் போசனமெடுத்தல் முதலிய கிரியைகளினாலும், கோடுகளிலே விவிலிய புத்தகமெடுத்துப் பிரமாணம் பண்ணுகையினாலும், கிறி ஸ்தவர்கள்போல நடிக்கின்றார்கள். ஆயினும், தங்கள் தங்கள் வீடுகளிலே விபூதிதாரணம் அநுட்டானஞ் செய்துகொண்டும்

சைவசமயக் கோயில்களிலே செய்யப்படுகிற பூசை திருவிழா முதலியனவைகளுக்கு வேண்டுந் திரவியங்கள் கொடுத்தனுப்பிக் கொண்டும், தாங்கள் அங்கே மறைவாகப் போய்த் தரிசனஞ் செய்து கொண்டும், தங்கள் மனைவியரை அங்கே அனுப்பி, கந்த புராணங் கேட்பித்துக்கொண்டும், தங்களுக்கும் தங்கள் பெண்டிர் பிள்ளைகளுக்கும் வியாதி வந்தபொழுது பிராமணரிடத்திலும் குருக்கண்மாரிடத்திலும் பணங்கொடுத்து அவரைக் கொண்டு சிவபூசை கிரகசெப முதலியன செய்வித்துக்கொண்டும் வருகின்றார்கள். தங்களுள்ளே இறந்தவர்களுடைய பிரேதத்தைப் பாதிரிமார் அடக்கஞ் செய்தபின், தாங்கள் அவர் பொருட்டுச் சைவக் குருக்கண்மாரைக் கொண்டு அந்தியேட்டி முதலிய கிரியைகளைச் செய்விக்கின்றார்கள். சிலர் தங்கள் விவாகச் சடங்கைப் பாதிரிமாரைக் கொண்டு செய்வித்த பின்பு, வீட்டிலே பிராமணரைக்கொண்டுஞ் செய்விக்கின்றார்கள். அவர் பெண்டிர் இறந்த பின், அவர் பிரேதத்தைப் பாதிரிமார் அடக்கஞ்செய்யும்படி வர, கணவர்கள் "நாம் யாதுசெய்வோம் நம் மனைவியினுடைய பிதா மாதாக்கள் நீங்களடக்கஞ் செய்தற்கு உடன்படுகின்றார்களில்லையே தங்கள் சமயக் கிரமத்தின்படி தகனம் முதலியவை செய்யப்போகின்றார்களாம்" என்று சொல்லிப் பாதிரிமார்களை அனுப்பிவிட்டு, தாங்கள் தங்கள் மாமன் மாமியரிடத்தே இரகசியமாகப் பொருள் கொடுத்து, அவரைக்கொண்டு அந்தியேட்டி முதலியவை நடத்துவிக்கின்றார்கள். கணவன் மனைவியிருவரும் ஒரே சமயத்தாராகாது வெவ்வேறு சமயத்தாராக, இவரிடத்துப் பிறந்த பிள்ளைகள் எச்சமயத்தாரெனப்படுவரோ! நாம் அறியேம்! சில கிறிஸ்தவர்கள் தாங்களே தனித்துப் பொருள் செலவிட்டுச் சைவ சமயக் கோயில்கள் கட்டுவிக்கின்றார்கள். ஒரு கிறிஸ்தவர் தமக்குக் கிடைக்கும் ஐந்துரூபாச் சம்பளம் போதாது என்று நினைந்து, பத்துரூபாச் சம்பளம் ஆக்குவித்துக் கொள்ளும் பொருட்டு, ஒருநாள் தகப்பனுரிடத்திலே ஒரு உபாயஞ் சொல்லிவிட்

டுப் பாதிரியார் வீட்டிற் போயிருக்க, தகப்பனார் உடைந்த பானை சட்டிகளையும் சிந்திய அன்னம் பலகாரம் பழ முதலியவைகளையும் ஒரு கடகத்தில் வைத்து ஒரு ஆளுடைய தலையில் ஏற்றி எடுப்பித்துக்கொண்டு போய்ப் பாதிரியாரெதிரே கோபத்துடன் போட்டு, "ஐயா! என் மகனுக்கு நீர் பழக்கின பழக்கம் இது தானோ" என்று கதற, பாதிரியார் அவர் மகனைப்பார்த்து "நீர் ஏன் இப்படிச் செய்தீர்" என்று கோபிக்க, அவர் "நான் போசனஞ் செய்யப் போனபோது அஞ்ஞானியாகிய என் தகப்பனார் எங்கள் வளவில் இருக்கிற வைரவன் என்கிற பிசாசுக்கு இந்த அன்ன முதலியவைகளைப் படைத்துப் பூசைசெய்வித்துக்கொண்டு நின்றார். கிறிஸ்தவனாகிய நான் பிசாசுக்குப் படைத்த இவைகளைப் போசனஞ் செய்வேனோ என்று பானை சட்டிகளை உடைத்து இவ்வன்ன முதலியவைகளைக் காலாலே சிந்திவிட்டேன்" என்று சொல்ல, பாதிரியார் "அஞ்ஞானியே அஞ்ஞானியே! வெளியே போ" என்று அவர் தகப்பனை ஓட்டிவிட்டு, அவர் மகனுடைய செய்கைகளைப் பாராட்டி அவருக்குப் பத்துரூபாச் சம்பளமாக்கினார். சிலமாசஞ் சென்றபின் அவர் அப் பாதிரியாருடைய சிபாரிசினாலே சிறந்த கவர்ண்மெண்டு உத்தியோகம் பெற்று, இப்பொழுது வெளிப்பட விபூதி தரித்துக் கதிர்காம யாத்திரை செய்து, சுக்கிரவார விரதம் கார்த்திகை விரத முதலிய பல விரதங்களை அநுட்டித்துக் கந்தசுவாமி தரிசனம் விடாது செய்துகொண்டு, சாதிமகிமையினும் சிவபத்தி மகிமையினும் தமக்கு உயர்வுமில்லை ஒப்புமில்லை என்று செருக்கித் திரிகின்றார். மற்றொரு கிறிஸ்தவர் தாம் ஓய்வுநாளிலே தமது வயல் உழுததைக் கேள்வியுற்றறிந்த பாதிரியார் தம்மைக் கண்டித்த பொழுது, "நான் உழவில்லை. என் வேலைக்காரன் உழுததைக் கண்டு 'ஓய்வுநாளிலே வேலைசெய்கிறாயா' என்று கோபித்துக்கொண்டு, நான் அவன் சமீபத்திற் போக, அவன் தன்னை நான் அடிக்க வருகிறேன் என்று பயந்து கலப்பையை விட்டோட, நான் போய்க் கலப்பையைப்

பிடிக்க, மாடுகளைத் தடுத்துக்கொள்ளும் வல்லமை எனக்குக் கிழப்பருவத்தினால் இல்லையாக, மாடுகள் உழுத பழக்கத்தில் உழ, அதைக்கண்ட யாரோ நான் உழுதேன் என்று ஐயருக்குச் சொல்லினர்" என்று சொல்லித் தப்பிக்கொண்டு, பின்னும் எவ்வளவோ காலம் உத்தியோகஞ் செய்து, இப்போது வெளிப்பட விபூதி தரித்துக் கொண்டு தாஞ் சிவஞானி என்று திரிகின்றார். மற்றொரு கிறிஸ்தவர் அமாவாசை விரதத்துக்கு அநுட்டானஞ் செய்து போசனம் பண்ணி, மற்றை இடங்களில் விபூதியை அழித்து விட்டு, நெற்றியில் விபூதியை மாத்திரம் அழிக்க மறந்து பாதிரியார் வீட்டுக்குப் போக, பாதிரியார் "உமது நெற்றியிலே என்ன" என்று கோபிக்க, அவர் "ஒன்றும் விசாரியாமற் கோபித்தால் நான் என்ன செய்யலாம். நான் வரும் வழியிலே மூன்று அஞ்ஞானிகள் என்னைக் கட்டிப் பிடித்துக்கொள்ள ஒரு அஞ்ஞானி வலாற்காரமாக என்னெற்றியிலே இந்தச் சாம்பரைப் பூசி "அடே நீ இதை உன் பாதிரிக்குக் காட்டு" என்றான். சாத்தானால் ஏவப்பட்ட அஞ்ஞானிகளுடைய துர்க்கிரியைகளை ஐயருக்கு அறிவிக்கும்படி இப்படி வந்தேன்" என்று பின்னும் நெடுங்காலம் உத்தியோகஞ் செய்தார். மற்றொரு கிறிஸ்தவர் ஒருநாளிராத்திரி விபூதி தரித்துக்கொண்டு போய் மாவிட்டபுரத்துக் கந்தசுவாமிகோயிற் றிருவிழாத் தரிசித்து, அதை ஒருபதேசியார் பார்க்கக் கண்டு, உடனே பாதிரியார் வீட்டுக்கு ஓடிப் போய்க் கதவு தட்டி அவரை எழுப்பி, "ஐயா! சாத்தான் என்னை வஞ்சித்துச் சாம்பர் பூசவும் மாவிட்டபுரத்துக் கந்தன் கோயிலுக்குப் போகவும் பண்ணிவிட்டது. என் மனதைத் திருப்பும்படி ஐயர் பரிசுத்தாவியை நோக்கிச் செபம் பண்ணல் வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, உடனே பாதிரியார் விளக்கேற்றுவித்துச் செபம் பண்ணி, அவரையும் அங்கே சயனிக்கச் செய்தார். மறுநாட் காலையிலே உபதேசியார் பாதிரியாரிடத்தே போய் "இராத்திரி இன்னார் சாம்பர் பூசிக்கொண்டு மாவிட்டபுரத்துக் கந்தன் கோயிலிலே நிற்கக் கண்

டேன்" என்றார். அதற்குப் பாதிரியார் "இராத்திரியே அவர் இங்கு வந்து, தான் சாத்தானால் வஞ்சிக்கப் பட்டதை எனக்குத் தெரிவித்துத் தமக்காகச் செபம் பண்ணும்படி கேட்டார். நானும் அம்மாவும் செபம் பண்ண அவர் மனந் திரும்பிவிட்டது" என்றார். அது கேட்ட உபதேசியார் "பாதிரிமார் இவ்வளவு மடையரோ" என்று உள்ளே நினைந்து, குறுநகை செய்துகொண்டு போனார். இப்படி எத்தனையோ சரித்திரங்கள் நடந்திருக்கின்றன. இருசமயத்துள் ஒன்றிலாயினும் உறுதியின்றி இருசமயத்தையும் சார்ந்து நடக்கும் இப்புரட்டர்கள் கோடுகளிலே சொல்லும் சாட்சியம் யாதாய் முடியும்! இவர்கள் யூரி என்னும் மத்தியஸ்தர்களாயும் நீதிபதிகளாயும் இருந்து செய்யும் வழக்குத் தீர்ப்பு யாதாய் முடியும்!! ஐயையோ! நீதி எப்படி நடக்கும். இதைக் கவர்ண்மெண்டு சிந்தியாதது என்னையோ! அறியேம் அறியேம்!

இந்தப் போலிக் கிறிஸ்தவர்களுடைய செய்கைகளெல்லாவற்றையும் பாதிரிமார்கள் நன்றாக அறிந்திருந்தும், இவ்வுண்மையைத் தங்களை இத்தேசத்துக்கு அனுப்பிய சங்கத்தார் அறிந்தார்களாயின் இங்கே கிறிஸ்து மதம் பரவாது என்று துணிந்து தங்களைச் சுவதேசத்துக்கு வருவித்துக் கொள்வார்களென்றும், மேன்மேலும் தங்களுக்குப் பணம் அனுப்பார்கள் என்றும், தாங்கள் இத்தேசத்திற்போலப் பிறதேசங்களில் அதிக சௌக்கியம் அநுபவித்தல் இயலாதென்றும் பயந்து, இவ்வுண்மையை அவர்களுக்குத் தெரிவியாது, இங்கே கிறிஸ்து சமயம் மேன்மேலும் பெருகுகின்றதென்று முழுப்பொய்யறிவிப்பு எழுதுகின்றார்கள். இன்னார் இன்னார் இன்ன இன்ன காலத்திலே இன்ன இன்ன பிரகாரம் பரிசுத்தாவி புகப்பெற்றுக் கிறிஸ்து சமயத்திலே புகுந்தனர் என்று பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தலுற்ற பாதிரிமார்கள், அவர்களுள், இன்னார் இன்னார் இன்ன இன்ன காலத்திலே இன்ன இன்ன பிரகாரம் கிறிஸ்து சமயத்தை விடுத்துச் சைவசமயத்தைத் தழுவினர், இன்னார் இன்னார் இன்ன இன்ன

காலத்திலே தங்களை இன்ன இன்ன பிரகாரம் வஞ்சித்தனர் என்னும் உண்மையையும் அப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தாது வாளாவிருத்தல் யாதுகருத்துப் பற்றியோ! அக்கருத்துச் சிறுவரும் எளிதில் விளங்கக் கிடக்கின்றது.

இந்தக் கிறிஸ்தவர்களுடைய செய்கைகளெல்லாவற்றையும் சைவ சமயக் குருக்கண்மாரும் பிராமணரும் சைவசமயக் கோயிலதிகாரிகளும் நன்றாக அறிந்திருந்தும், தங்களுக்கும் தங்கள் கோயில்களுக்கும் இவர்களாலேயே பொருள்வரவு அதிகமாதலால், இவர்கள் பொருட்டுக் கிரியை செய்யாவிடினும் இவர்களைக் கோயிலிற் சேர்க்காவிடினும் பொருள் வரவு குறையுமென்று பயந்து சேர்க்கின்றார்கள். ஓகோ! இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்துசமய குருமார் சைவசமய குருமார் என்னும் இருசமய குருமாருடைய கருத்தும் தத்தஞ் சமயபத்தியை வளர்த்தலினிடத்ததன்று, தத்தம் வயிறுவளர்த்தலினிடத்ததேயாம்.

இந்தியாவிலே தாழ்ந்த சாதியாருள்ளும் ஒருவன் கிறிஸ்தவனாய் விடின், அவனுடைய மாதாப் பிதாச் சகோதரர் தாமும், அவனிடத்தாவது அவனோடு கூட இருந்தாவது அவன் கையாலாவது போசனம் பண்ணுவதுமில்லை; அவர் அவனைத் தம்வீட்டிற் சேர்ப்பதுமில்லை; அவன் வீட்டுச் சுபாசுப கருமங்களுக்குத் தாம் போவதுமில்லை; அங்கே கிறிஸ்து சமயத்திற் பிரவேசித்தவன் பிராமணனேயாயினும், அவனிடத்தே விபூதி தரிக்கிற பறையனும் போசனம் பண்ணுகிறானில்லை. இவ்வியாழ்ப்பாணத்திலே பிராமணர்களும் நியமாசாரமுடைய சைவர்களுமாகிய இவர்களொழிந்த மற்றைச் சாமானிய சைவசமயிகள் பலரும் தங்களுள்ளே கிறிஸ்துசமயத்திற் பிரவேசித்தவர்களை விவாகசம்பந்தம் பந்திபோசனம் முதலியவைகளிலே சேர்த்துக்கொள்கின்றார்கள். பிராமணருள்ளும் சைவசமயக் குருக்கண்மாருள்ளும் சிலர், கிறிஸ்து சமயத்திற் பிரவேசித்தவர்கள் பொருட்டுச்

சிவாகமக் கிரியைகளைச் செய்யவும், அவர்களைச் சைவசமயக் கோயிலுட் புகுவிக்கவும், உடன்படுகின்றார்கள். இவைகளெல்லாவற்றையும் இந்தியாவிலுள்ள சைவ வைஷ்ணவர்கள் அறிந்து, யாழ்ப்பாணத்தார்களை மிக அவமதிக்கின்றார்கள்! ஐயையோ! இவ்வவமதிப்பு மானிகளாலே எவ்வளவாயினும் சகிக்கற்பாலதன்று. சகிக்கற்பாலதன்று!

உபநயனத்திலே துவிசத்துவம் பெற்று வேதத்தில் விதிக்கப்பட்ட கிரியைகளை அநுட்டிக்கும் பிராமணர் முதலிய உயர்ந்த வருணத்தாரே யாயினும், சிவதீக்ஷை பெறாதவராயின், அவருக்குச் சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சைவக் கிரியைகள் இல்லையெனச் சிவாகமங்கள் முழங்கவும், கிறிஸ்து சமயத்திலே பிரவேசித்துச் சிவதூஷகரும் கோமாமிசபக்ஷகருமாகிய பாதிரிமாருடைய வீட்டிலே புசித்தவர்களுக்குச் சைவ சமயக் கிரியைகளை நடத்துஞ் சிவத்துரோகிகள் சைவாசாரியர்களாம்! இச் சிவத்துரோகிகளை வெறுத்து நீக்கிவிடாது, இவர்களைக்கொண்டு தீட்சை அந்தியேட்டி முதலியவை செய்விப்போரும், இவர்கள் வீட்டிற் புசிப்போரும், இவர்களைப் பந்தியில் இருத்திப் புசிப்போரும் இவர்களை நமஸ்கரிப்போரும் சைவசமயிகளாம்!! கெட்டி கெட்டி!!

இந்தியாவிலுள்ள பாதிரிமார்கள், தங்கள் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற சைவ வைஷ்ணவப் பிள்ளைகளை விபூதி திருமண் என்னும் சமயசின்னங்களை அழிக்கும்பொருட்டாயினும், தங்கள் விவிலிய நூலைப் படிக்கும்பொருட்டாயினும், தங்கள் பிரசங்கத்தைக் கேட்க வரும்பொருட்டாயினும், வலாற்காரம் பண்ணுகிறார்களில்லை; வலாற்காரம் பண்ணினால் அங்கே கவர்ண்மெண்டாராலும் சுதேசிகளாலும் தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்குப் போய்விடுவார்களென்னும் பயமே அப்பாதிரிமார்களைத் தடுக்கின்றது. இந்தியாவிலுள்ள கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங்களிலும் சுதேசிகளுடைய பள்ளிக்கூடங்களிலும் விவிலியநூல்

படிப்பிக்கிறதில்லை. கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங்களிலே விவிலிய நூல் படிப்பித்தல்வேண்டுமென்று பாதிரிமார்கள் இங்கிலாந்திலுள்ள கவர்ண்மெண்டுக்கு விண்ணப்பம் எழுதினார்கள். கவர்ண்மெண்டு விவிலிய நூல் படிப்பிக்க உடன்படவில்லை. இத்தேசத்திலுள்ள பாதிரிமார்கள், தங்கள் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற சைவசமயப் பிள்ளைகளை விபூதியழிக்கும்பொருட்டு வலாற்காரம் பண்ணுகிறார்கள். விபூதியழிக்க உடன்படாத பிள்ளைகளை வித்தியாசாலையினின்றும் நீக்கிவிடுகிறார்கள். கிறிஸ்து சமய புத்தகங்களையும் சைவதூஷண புத்தகங்களையுமே நெடுநேரம் படிப்பிக்கின்றார்கள். ஞாயிற்றுக்கிழமையிலே தங்கள் பிரசங்கங் கேட்க வாராத பிள்ளைகளையும் சைவ சமயத் திருநாட்களிலே சைவசமயக் கோயில்களுக்குப் போகும் பிள்ளைகளையும் தண்டிக்கிறார்கள். இங்குள்ள கத்தோலிக்க குருமார் மாத்திரம் இப்படிப்பட்ட வலாற்காரங்கள் செய்யக் காணோம்.

சில காலத்துக்கு முன்னே கவர்ண்மெண்டார் இத்தேசத்திலே சில இங்கிலிசுப் பள்ளிக்கூடங்களைத் தாபித்துச் சில வருஷம் நடத்தினார்கள். அவைகளிலே கிறிஸ்து சமய புத்தகமொன்றும் படிப்பிக்கப்படவில்லை. அங்கே சைவ சமயப் பிள்ளைகளெல்லாரும் விபூதி தரித்துக்கொண்டே படித்துவந்தார்கள். அதைக் கண்ட பாதிரிமார்கள், கவர்ண்மெண்டுப் பள்ளிக்கூடங்கள் நிலைபெற்றால் தங்கள் கருத்து வாய்க்காது என்று நினைந்து, இங்கிருந்த சில துரைமாரைத் தங்கள் வசப்படுத்திக் கவர்ண்மெண்டுக்கு வேறு நியாயங் காட்டி எழுதுவித்து, அப் பள்ளிக்கூடங்களை எடுப்பித்துவிட்டு, அவைகளுக்குக் கவர்ண்மெண்டார் செலவழிக்கும் பணத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கு ஆக்குவித்துக்கொண்டு, அநீதியாகிய தங்கள் கருத்தையே நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள். கவர்ண்மெண்டுப் பொருளுதவியைப் பெறும் பள்ளிக்கூடங்களிலே விபூதியை அழிக்கும் பொருட்டும், சமய நூல்களைப் படிக்கும்பொருட்டும், சமயப் பிரசங்க

த்தைக் கேட்க வேண்டியதன் பொருட்டும் பிள்ளைகளை வலாற்காரம் பண்ணுதல் கவர்ண்மெண்டாருடைய கருத்துக்கு முழுதும் விரோதமேயாம்.

இப்பொழுது கவர்ண்மெண்டார் இங்கிலிசுப் பாஷையை மாத்திரமன்றித் தமிழ் சிங்களம் என்னுந் தேச பாஷைகளையும் விருத்திசெய்ய விரும்பி, அவைகளின் பொருட்டு வெகு பணஞ் செலவழிக்கின்றார்கள். எந்தச்சமயத்தார் தாபித்த பள்ளிக்கூடங்களேயாயினும், அவைகளிலே படிக்கும் பிள்ளைகளை வருஷந்தோறும் பரீக்ஷை செய்வித்து, அப்பரீக்ஷையின் பலத்துக்கு இசைய அந்த அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் பொருளுதவி செய்கின்றார்கள், கவர்ண்மெண்டார் பொருளுதவி செய்வது லௌகிகநூற் கல்விக்கன்றிச் சமயநூற் கல்விக்கன்று. சமயநூற் கல்வியை விருத்திசெய்ய விரும்புகின்றவர்கள் தங்கள் தங்கள் முதலைக்கொண்டே அப்படிச் செய்யவேண்டுமென்பது கவர்ண்மெண்டாருடைய கருத்து. பள்ளிக்கூடங்களுக்குக் கவர்ண்மெண்டாருதவும் பொருள் குடிகளிறுக்க இறைப் பொருளேயாம். இலங்கையிற் குடிகளுள்ளே பெருந்தொகையினர் சைவ சமயிகளும் பௌத்த சமயிகளுமேயாம். புரோடெஸ்டாண்டு கிறிஸ்து சமயிகள் தொகையோ அத்தியற்பம். ஒருசமயத்தாருடைய பொருளைக்கொண்டு அவர் மனசிலே மெய்யெனப் பதிந்த சமயத்துக்குத் தீங்கு விளைப்பதும், பொய்யெனப் பதிந்த சமயத்தை அவரைக்கொண்டு அவர் மனசுக்கு விரோதமாகவும் வலாற்காரமாகவுந் தழுவுவிப்பதும் அநீதி அநீதி! இப்படியெல்லாமிருக்க, புரோடெஸ்டாண்டுப் பாதிரிமார்கள் இங்கிலிசுப் பள்ளிக் கூடங்களோடு பல தமிழ்ப் பள்ளிக்கூடங்களையுந் தாபித்து, கவர்ண்மெண்டாருடைய பொருளுதவியைப் பெற்றுக்கொண்டு, அவைகளை அவர்கருத்துக்கு முழுதும் விரோதமாக நடத்துகின்றார்கள். பாதிரிமாருடைய தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிப்பிக்கிற உபாத்தியாயர்கள் தமிழை நன்றாகக் கற்றுக்கொண்டவர்களல்லர்; அவர்க

ளிற் பெரும்பான்மையோர் சம்பளநிமித்தம் கிறிஸ்து சமயத்திற் புகுந்தவர்கள்; கிறிஸ்து சமயத்திற் புகுந்தமையின் பொருட்டே, அவர்கள் உபாத்தியாயருத்தியோகம் பெற்றவர்கள். அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும்பாலன சுத்தத் தமிழ்நடையின்றி இலக்கணப் பிழைகளினால் நிறைந்தவைகளும் சைவதூஷணங்களினாற் பொதிந்தவைகளுமாய் உள்ளவைகள். அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத்திலும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகுகின்றார்கள். அவர்கள் பேசுந் தமிழோ அன்னிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத் தமிழ்.

பாதிரிமார்களுடைய இங்கிலிசுப் பள்ளிக்கூடங்களிலே படிக்கிற பிள்ளைகள் மாசச் சம்பளம் மும்மூன்று மாசத்துக்கு ஒரு தரம் முன்னேறவே கொடுத்துவருகின்றார்கள். அந்தந்தப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் கொடுக்குஞ் சம்பளத்தை மாத்திரங் கொண்டு அந்தந்தப் பள்ளிக்கூடத்தை நடத்திக்கொள்கின்றார்கள். கவர்ண்மெண்டார் கொடுக்கும் பணத்தை அந்தந்தப் பள்ளிக்கூடத்தின் பொருட்டுச் செலவு செய்யாது, தங்கள் சமயவிருத்தியின் பொருட்டுஞ் சுவப் பிரயோசனத்தின் பொருட்டுங் கவர்ந்து கொள்கின்றார்கள். மிஷன் பணத்திலே சம்பளம் பெறவேண்டிய உபதேசிமார்களைப் பள்ளிக்கூடங்களிலே உபாத்தியாயர்களாக ஏற்படுத்திக்கொண்டு உபதேசி சம்பளத்தைத் தாங்கள் யாதோ செய்கின்றார்கள். ஒன்பது மாசத்திற் குறையாவண்ணம் பள்ளிக்கூடத்திலே படித்த பிள்ளைகளை மாத்திரமே பரீக்ஷைக்கு ஒப்பித்தல் வேண்டும் என்பது கவர்ண்மெண்டுச் சட்டமேயாகவும், மூன்று மாசம் நான்குமாச மாத்திரம் படித்த பிள்ளைகளையும், வேறு பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்ட பிள்ளைகளையும் தங்கள் பள்ளிக்கூடத்தில் ஒன்பதுமாசத்திற் குறையாவண்ணம் படித்த பிள்ளைகளென்று மனச்சான்றுக்கு விரோதமாகப் பிரமாணஞ்செய்து, பரீக்ஷைக்கு ஒப்பித்துப் பணம் பெறுகின்றார்கள்.

சில பாதிரிமார்கள் இடையிடையே தங்கள் சுவதேசத்துக்குப் போய், யாழ்ப்பாணத்திலே பல பெருங் கட்டடங்கள் செய்வித்தல்வேண்டும் என்று சொல்லி, அங்குள்ள துரைமார்களை வருவித்து அவர்களிடத்திலே பெருந்தொகையாகிய பணங்களைத் தண்டல் செய்து கொண்டுவந்து, இங்கே மிகச் சிறுதொகை மாத்திரஞ் செலவிட்டுங் காற்றடித்தால் உடனே கீழே விழுந்து வெகு பிராணச் சேதஞ் செய்யத்தக்க மிகப் போலியாகிய சில கட்டடங்களை மாத்திரஞ் செய்வித்துவிட்டு, மற்றத் தொகையை இரகசியமாகத் தங்களுக்கு ஆப்தர்களாயுள்ள சில தமிழக்கிறிஸ்தவர்களிடத்தில் ஒப்பித்து, வட்டி. வட்டத்துக்குக் கொடுப்பிக்கின்றார்கள். வெட்கஞ் சிறிதுமில்லாமல் இப்படிக் கொடுங்குணம் பூண்ட இப்பாதிரிமார்களா பரிசுத்தாவி புகப்பெற்ற மெய்ஞ்ஞானிகள்! இவர்களா தங்கள் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் நல்லொழுக்கம் பழக்குகின்றவர்கள்!

இனிப் பாதிரிமார்களையும் சிவிலுத்தியோகத் துரைமார்களையுஞ் சற்றே ஒத்துப்பார்ப்போம். பாதிரிமார்களோ அதிக சௌக்கியமுடைய நாடு நகரங்கள் தேடி அங்கே வசிக்கின்றார்கள்; துரைமார்களோ சௌக்கியமென்பது சிறிதுங் கிடையாத நாடு காடுகளிலும் வசிக்கின்றார்கள். பாதிரிமார்களுக்கோ அவர்கள் சம்பளமும் அவர்கள் பெண்டிர் சம்பளமும் பிள்ளைகள் சம்பளமுங் கிடைக்கின்றன; துரைமார்களுக்கோ அவர்கள் சம்பளம் ஒன்றே கிடைக்கின்றது. பாதிரிமார்களுக்கோ சுதேசத்துக்குப் போக்கு வரவு செய்கிற கப்பல் யாத்திரைச் செலவு மருந்துச் செலவு முதலியனவெல்லாம் மிஷன் பணத்திலே நடக்கின்றன; துரைமார்களுக்கோ அவர்கள் சொந்தப் பணத்திலே நடக்கின்றன. பாதிரிமார்களோ மிஷன் பணத்தினால் வாங்கப்பட்ட வீடுகளும் வீட்டுபகரணங்களும் வண்டி குதிரைகளுமே அநுபவிக்கின்றார்கள்; துரைமார்களோ அவைகள் சொந்தப் பணங்கொண்டு

விலைக்கேனும் வாடகைக்கேனும் வாங்கிக்கொள்ளுகிறார்கள். பாதிரிமார்களோ ஊரை விட்டு எந்த வேலைக்குப் போனாலும் அந்த வேலையெல்லாம் பிரசங்க வேலையெனச் சாற்றிப் படி பெற்றுக்கொள்ளுகின்றார்கள்; துரைமார்களோ கவர்ன்மெண்டு வேலைக்கு மாத்திரமே படி பெறுகின்றார்கள். பாதிரிமார்களுக்கோ ஞாயிற்றுக்கிழமையிலே சிறிதுநேரம் பிரசங்கம் பண்ணுவதன்றி வேறு வேலை கிடையாது; துரைமார்களுக்கோ கவர்ன்மெண்டு வேலைகளில் ஓய்வு கிடையாது. பாதிரிமார்களோ தங்களையும் தங்கள் பெண்டிர் பிள்ளைகளையும் மிக அலங்காரஞ்செய்து, பெருஞ்சிறப்புடைய குதிரைவண்டிகளில் ஏற்றிக்கொண்டு சாயங்காலத்தில் வீதிகளிலே மிக ஒய்யாரமாக உலாவுவார்கள்; துரைமார்களுக்கோ அப்படி உலாவுதற்கு நேரமே இல்லை; அவர்கள் வெய்யிலென்றும் பாராது மழையென்றும் பாராது, ஆபீசுகளுக்கு வண்டியேறிப் போகினும் போவார்கள், கடும் வெய்யிலாயினுங் காற்றடித்தாற் குடையைச் சுருக்கிக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு போகினும் போவார்கள். பாதிரிமார்களையோ அவர்கள் வீடுகளிலாயினும் வீதிகளிலாயினும் உயர்ந்த உத்தியோகத்தர்களுஞ் செல்வர்களும் வட்டிக்குப் பணங் கேட்பவர்களுமல்லாத மற்றவர்கள் கண்டு பேச அவர்களுக்குச் சமயங் கிடையாது; துரைமார்களையோ ஏழைகளும் மிக எளிதிற் கண்டு பேசிக்கொள்ளலாம். பாதிரிமார்களோ பற்பல சாமான்கள் சுதேசத்திலிருந்து இங்கு வருவித்தும், இங்கிருந்து சுதேசத்துக்குக் கொண்டு போயும் வியாபாரமும் நடத்திக்கொள்ளுகின்றார்கள்; துரைமாருக்கோ அதற்கு நேரமே கிடையாது. எந்நாளும் இடையறாது கிளம்புங் கிறிமினல் வழக்குக்களையுஞ் சீவில் வழக்குக்களையும் மிகப் பிரயாசையோடு விசாரணை செய்து மனம் புண்பட ஆலோசித்துத் தீர்ப்புச்செய்தலே ஓயா வேலையாக உடைய நீதிபதிகள் தொகை இவ்வியாழ்ப்பாணத்துக்கு எத்தனை? ஆக நான்கு. வாரத்துக்கொரு

நாட் சிறிது நேரமாத்திரம் பிரசங்கஞ் செய்துவிட்டு ஆறிக் களித்துவாழும் பாதிரிமார். தொகை இவ்வியாழ்ப்பாணத்துக்கு எத்தனை? பத்து. இப்பாதிரிமாரைச் சார்ந்த சுதேச குருமார்கள் தொகை எத்தனை? மிகப் பெரிது. இப்பாதிரிமாரைச் சார்ந்த உபதேசிமார்கள் தொகை எத்தனை? மிகமிகப் பெரிது. ஒரு மணியகாரனுடைய எல்லையினுள்ளே இரண்டு மூன்று பாதிரிமார்களும் பெருந்தொகையினராகிய சுதேச குருமார் உபதேசிமார்களும் இருக்கவேண்டியதென்னையோ! ஒரு மணியகாரனுக்குள்ள வேலைகள் எவ்வளவதிகம் அதிகம்! ஒரு பாதிரியாருக்குள்ள வேலை எவ்வளவற்பம் அற்பம்! ஒரு மணியகாரனுக்குப் பொருள்வரவு எவ்வளவு அற்பம் அற்பம்! ஒரு பாதிரியாருக்குப் பொருள் வரவு எவ்வளவு அதிகம் அதிகம்! கவர்ன்மெண்டார் அரசிறைப் பணத்தை மிகச் சாவதானமாக மிகச் சுருக்கிச் செலவு செய்ய, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமுள்ள கிறிஸ்துமத சங்கத்தார் மிக வறியவர்களிடத்தும் அவர்கள் பசியால் வருந்த வருந்த வாங்கிய பெருந்தொகைத் தருமப் பணங்களை ஒன்றும் விசாரியாது வாரி வாரி இறைப்பது என்னையோ! உடுவில், தெல்லிப்பழை, மானிப்பாய், பண்டத்தெருப்பு, வட்டுக்கோட்டை என்னும் ஐந்திடங்களும் ஒன்றுக்கொன்று எவ்வளவோ அதிக சமீபமானவைகள். இவ்வைந்திடங்களுக்கும் ஐந்துபாதிரிமார்கள் இருக்கின்றார்கள். இவ்வைந்திடங்களுக்கும் இன்னுஞ் சிலவிடங்களுக்கும் ஒருபாதிரியாரே போதியவர். மற்றப் பாதிரிமார்கள், சமீபத்திலே பாதிரியார் இல்லாத முல்லைத்தீவு, வன்னிப்பற்று, அநுராதபுரம் முதலிய ஊர்களிலே போய், அங்கே வாசஞ் செய்துகொண்டு, அங்குள்ள சனங்களை மோட்சத்திற் சேர்க்கலாமே! அப்படிச்செய்ய நினையாதது என்னையோ! இவ்வூர்களிலே போல அவ்வூர்களிலே சுக சௌக்கியமும் நல்ல நல்ல பழவர்க்கங்களுங் கிடையா என்று நினைந்தோ! இவ்வூர்களிலே போல அவ்வூர்களிலே ஒருவருக்கொருவர் அதி சமீபத்திலிருந்து கொண்டு அடிக்

று ஒருவரோடொருவர் கலந்து உண்டாட்டுக் களியாட்டுச் செய்ய இயலாதே என்று நினைந்தோ! சல செளக்கியமும் நல்ல நல்ல பழவர்க்கங்களுங் கிடையாத ஊர்களில் வசிக்கின்றவர்கள் சுவிசேஷப் பிரசங்கங் கேட்பினும் நித்தியநரகமே அடைவார்களென்பது தேவசித்தமென்று நினைந்தோ! பாதிரிமார்கள் தாங்கள் செளக்கிய மில்லாதவைகளென்று வெறுத்துவிட்ட ஊர்களிலே கத்தோலிக்க குருமார்கள் வசிப்பதறியார்களா! அய்யட்டோ, அங்கே சிவிலுத்தியோகத்தர்களும் வசிக்கின்றார்களே! தாங்கள் தங்கள் சென்ன தேசத்தையும் சுற்றத்தாரையும் விடுத்து இங்கே வந்தது, இங்குள்ள அஞ்ஞானிகளுடைய ஆன்மசுகத்தின்பொருட்டேயென்று பேசும் பாதிரிமார்கள் வசித்தற்கு அஞ்சுகின்ற அசௌக்கிய பூமிகளிலே, தாங்கள் இங்கு வந்தது தங்கள் சரீரசுகத்துக்கு ஏதுவாகிய திரவியஞ் சம்பாதித்தற் பொருட்டேயென்று பேசுந் துரைமார்கள், அஞ்சாது வசிக்கின்றார்களே! பாதிரிமார்களை யோக்கியர்களென்போமா! துரைமார்களை யோக்கியர்களென்போமா! சென்னதேசத்திலுஞ் செல்வப் பிள்ளைகளாய் இருந்து வந்தவர்கள் அசௌக்கிய பூமியிலும் வசிக்கின்றார்கள்; சென்னதேசத்திலே கிழிந்த சப்பாத்துத் தைத்துப் பிழைப்பவர் பிள்ளைகளாய் இருந்து வந்தவர்கள் சௌக்கிய பூமியே நாடுகின்றார்கள்.

இடம்பமென்பது சிறிதும் இல்லாமல் எல்லாருந் தங்களைக் காண்பதற்குந் தங்களோடு பேசுதற்கும் எளியர்களாய், எல்லாருக்கும் பணிவு காட்டி, காடு நாடென்பது பாராது எங்கெங்குந் திரிந்து, தங்களை யாவர் வையினும் வாழ்த்தினும் சமமெனக் கொண்டு, வீடுதோறும் போய்க் கிறிஸ்துமதத்தைப் போதித்தலே தங்கள் கடமையாகவும், இப்பாதிரிமார்கள் நடக்குந் திறம் இப்படியா!! நல்லது நல்லது!! இப்படித்தான் கிறிஸ்துவும் அவ

ப்போஸ்தலர்களும் கடந்தார்களா! கெட்டி கெட்டி! புதிய ஏற்பாட்டிலே அந்தப் பகுதிமாத்திரம் பார்த்ததில்லையா!

பாதிரிமார்கள் இந்தேசத்துச் சில பாலியர்களைக் குருமார்களாக்கி, றெவறெண்டுப் பட்டங் கொடுத்துவிட்டார்கள். இங்கே நெல் அரிசி முதலியவையெல்லாம் ஒறுக்க ஒறுக்க, றெவறெண்டுப் பட்டமொன்றோ மலிந்தது. இச் சுதேச குருமார்கள் இங்கிலிசுஞ் செவ்வையாக அறியார்கள், தமிழுஞ் செவ்வையாக அறியார்கள்; கிறிஸ்துசமயமும் அறியார்கள்; சைவசமயமும் அறியார்கள்; தங்களிடத்தே யாராயினும் பதிவிஷயத்தைக் குறித்துச் செய்யும் ஆட்சேபங்களுக்குச் சமாதானஞ் சொல்ல வகையறியாத இவர்கள் யார்மனதைத் திருப்பமாட்டுவார்கள்! கிறிஸ்துமத போதனைக்கென்று தங்களுக்குக் கிடைக்கிற சம்பளத்தினாலே சீவனம் பண்ணுகிற தங்கள் பிதா மாதாச் சகோதரர்களைத் தானுங் கிறிஸ்துமதத்திலே புகுவிக்க மாட்டாத இவர்கள், வேறு யாரைக் கிறிஸ்துமதத்திலே புகுவிக்க மாட்டுவார்கள்! சைவ சமயத்தை வேரோடே களைதற்கென்று தங்களுக்குக் கிடைக்கிற சம்பளத்தினாலே தங்கள் பிதா மாதாச் சகோதரிகள் கந்தபுராணம் படிப்பித்தற்கும் சைவசமயக் கோயிற் பூசை திருவிழாக்கள் செய்வித்தற்கும் பொருளுதவி செய்கிற இவர்கள், வேறு யாருக்குச் சைவ சமயம் பொய்யென்று போதிக்கமாட்டுவார்கள்! தாங்களே இராத்திரியில் வேறு வேஷம் போட்டு விபூதி தரித்துச் சனநெருக்கத்தினுள்ளே புகுந்து திருவிழாத் தரிசிக்கின்றார்களே! அறிந்தவர் யாரேனுங் கைப்பிடித்து "இது என்ன காணும்" என்று கேட்கும்பொழுது, அவர் தாடியைத் தடவி "பேசாதேயும் பேசாதேயும்" என்கின்றார்களே! தங்கள் பெண்டிர் பிள்ளைகளுக்கு நோய் வந்தபொழுது சாதகமெடுத்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41



தூக்கொண்டு, இராத்திரியிலே பறங்கிப் பறங்கிச் சோதிடர்வீடு திரிகின்றார்களே! இப்படியெல்லாஞ் செய்துகொண்டும், தாங்கள் எங்கெங்குந் திரிந்து கிறிஸ்துமதப் பிரசங்கஞ் செய்கின்றார்களென்றும், அப்பிரசங்கத்தைப் பலரும் விரும்பிக் கேட்கின்றார்களென்றும், இன்ன ஊரிலே ஒரு பிராமணன் தங்களோடு சமவாதஞ் செய்து தோற்றுவிட்டான், இன்ன ஊரிலே ஒரு பிராமணன் தங்கள் பிரசங்கத்தைக் கேட்டுப் பரிசுத்தாவியினாலே மனந் திரும்பி ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக இருக்கிறான் என்றும், பாதிரிமார்களைப் பிரீதிப் படுத்தும் பொருட்டுப் பலவகைப்பட்ட பொய்களெல்லாம் நிறைந்த அறிவிப்புக்கள் எழுதி அச்சிற் பதிப்பித்துப் பரப்புகின்றார்கள்.

வண்ணார்பண்ணையிலுள்ள வெஸ்லியன் மிஷன் இங்கிலீஷ்ப் பள்ளிக்கூடத்தில் ஒரு வண்ணாரப்பையன் மூன்று நான்கு வருஷம் படித்தவன். இவ்வருஷத்திலே மற்றப்பிள்ளைகள் "இவ்வண்ணானை எங்களோடிருத்திப் படிப்பிக்கின் நாங்கள் இப்பள்ளிக்கூடத்தை விட்டுவிடுவோம்" என்றார்கள். அதுபற்றி முதலுபாத்தியாயர், தாங் கிறிஸ்தவராயிருந்தும், வண்ணானைத் தள்ளிவிட்டார். வண்ணான் பறங்கித்தெருவிலிருக்கிற வெஸ்லியன் பாதிரியாரிடத்தே போய், தனக்குக் கிறிஸ்துமதமே சம்மதமென்றும், தனக்கு ஞானஸ்நானஞ் செய்து தன்னை அங்குள்ள வெஸ்லியன் பள்ளிக்கூடத்திற் சேர்த்துக்கொள்ளல் வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டான். பாதிரியார், தாம் அதற்கு உடன்பட்டும், அவனைச் சேர்த்துக்கொள்ளும்படி தமக்குக் கவர்ண்மெண்டு ஏசண்டு எழுதிய கடிதம் பெற்றும், அப்பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுஞ் சுதேச குருமாரும் உபாத்தியாயர்களும் உடன்படாமையால், வண்ணானைச் சிலகாலம் அடிக்கடி அலைத்துப் பின்பு ஓட்டிவிட்டார். அவன் இப்போது நெடுந்தூரத்திலுள்ள கத்தோலிக்கப் பள்ளிக்கூடத்திலே போய்ப் படிக்கிறான். இப்பாதிரியார், அப்பள்ளிக்கூடத்திற்றானே ௧௮௪௭ம் (௵) ஒரு நளப்பையன் படித்

தலைக் கண்டு ஏறக்குறைய ஐம்பது பிள்ளைகள் ஓட்டெடுக்கவும் அந்நாள்வரையவனைத் தள்ளாத பாதிரியாரைப் பித்தரென்று நினைந்தாரோ! நளவனிலுந் தாழ்ந்தசாதி வண்ணானென்று கொண்டாரோ! சாதிவேற்றுமை பாராட்டுதல் கிறிஸ்துநாதருக்குஞ் சம்மதமென்று விவிலிய நூலில் எங்கேயாயினும் இப்போது கண்டாரோ! வண்ணானுடைய ஆன்மாப் பரமண்டலத்தில் இடம்பெறதென்று தேவதூதன் சொப்பனத்தில் வந்து சொல்லக் கேட்டாரோ! தேவவாக்கினும் பெரிது மனிதவாக்கென்றும், மனிதவாக்குள்ளுங் கவர்ண்மெண்டு ஏசண்டு வாக்கினும் பெரிது தம்மைச் சேவிக்குஞ் சுதேச குருமார் உபாத்தியாயர்கள் வாக்கென்றுந் தெளிந்தாரோ! வண்ணானைப் பற்றி மற்றப்பிள்ளைகளெல்லாம் ஓடிவிட்டால், அவர்கள் இறுக்குஞ் சம்பளத்திலும், அவர்கள் பொருட்டுக் கவர்ண்மெண்டார் உதவும் பணத்திலுந் தமது கை நிரம்பாதேயென்று பயந்து விட்டாரோ! யாழ்ப்பாணத்திலே சாதிவேற்றுமை அறுத்துக் கிறிஸ்துமதத்தை நாட்ட வல்லவர்கள், பொருள் வாஞ்சைப் பிசாசாவேசிகளாகிய இந்தப் பாதிரிமாரும் சுதேச குருமாருந்தானே! சபாசு! சபாசு!

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமுள்ள சங்கத்தார்கள் நடுவுநிலைமையிற் சிறந்த சில கம்மிஷனர்களை இந்தேசத்துக்கனுப்பி, மிக நன்றாக விசாரணை செய்விப்பார்களாயின், பாதிரிமார்களையும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்தவர்களையுஞ் சுட்டி நாம் இங்கே எழுதினவைகளெல்லாஞ் சத்தியஞ் சத்தியம் என்பது அவர்களுக்கு மிக நன்றாக விளங்கும். அமையும், இனிமேல் அப்பால் நடப்போம்.

இப்பொழுது அமெரிக்கன் பாதிரிமார் வட்டுக்கோட்டையிலே ஐவ்னாக் கலீசு எனப் பெயர்பெற்ற ஒரு இங்கிலிசுப் பள்ளிக்கூடந் தாபித்திருக்கின்றார்கள். இதற்கு நம்முடைய சைவசமயிகளுள் அநேகர் பொருளுதவி செய்திருக்கின்றார்கள். இவர்

கள் சமயாபிமானம் இருந்தபடி! என்னை! இவர்களுக்கு யாது கதி! பள்ளிக்கூடச் சம்பளமும் போசனச் செலவும் நன்னான்கு மாசத்துக்கு ஒருதரம் முன்னறவே கொடுத்துவிட்டுப் பாதிரிமார் வீட்டிலேயே நானாஜாதியாரோடுங் கூடப் போசனஞ் செய்துகொண்டு படித்தற்கும், விபூதி தரியாதொழிதற்கும், கிறிஸ்துசமய நூல்கள் படித்தற்கும், ஞாயிற்றுக்கிழமையிற் கிறிஸ்து மதப் பிரசங்கங் கேட்டற்கும், உடன்பட்ட பிள்ளைகள் மாத்திரமே இந்தப் பள்ளிக்கூடத்திலே படிப்பிக்கப்படுகின்றார்கள். இதனால், நம்முடைய சமயாசாரத்தையுஞ் சாதியாசாரத்தையுங் கெடுத்தற்கும் கிறிஸ்து சமயத்தை விருத்தி செய்தற்குமே, இந்தப்பள்ளிக்கூடந் தாபிக்கப்பட்டதென்பது, இனிது விளங்குகின்றது. முற்காலத்திலே இங்கிலிசுக்குப் பாதிரிமார் பள்ளிக்கூடங்களன்றி வேறு பள்ளிக்கூடங்கள் இல்லாமையினாலும், அன்னவஸ்திரமும் புத்தகமுங் கல்வியும் உபகாரமாகக் கிடைத்தமையினாலும், இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள பெரியவர்கள் அநேகர் பாதிரிமார் வீட்டிலே போசனஞ் செய்துகொண்டு படித்தார்கள். இக்காலத்திலே கவர்ன்மெண்டார் கொடுக்கும் பொருள்கொண்டும் பிள்ளைகள் கொடுக்குஞ் சம்பளங் கொண்டும் நடத்தப்படும் பள்ளிக்கூடங்கள் பல உள்ளனவாகவும், கவர்ன்மெண்டுப் பொருளுதவி கிடையாவிடத்தும், பிள்ளைகள் சம்பளமாத்திரங்கொண்டு பள்ளிக்கூடஞ் சிறப்பாக நடத்தப்படத்தக்கதேயாகவும், இந்தியாவிலுள்ள கலீசுகளிலே படித்துப் பரீக்ஷையிற் சித்திபெற்ற சமர்த்தர்கள் உபாத்தியாயர்களாக அகப்படுதற்கு எளியர்களேயாகவும், நம்முடைய சைவசமயிகளுள்ளே சிலர் அன்னம் வஸ்திரம் புத்தகம் கல்வி முதலியவற்றின் பொருட்டுத் தாங்களே தங்கள் கைப்பணத்தை இறுத்தும், தங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார் வீட்டிலே கீழ்ச்சாதியாரோடும் போசனஞ் செய்வித்துச் சாதியாசாரத்தையுஞ் சமயாசாரத்தையும் இழப்பித்து, அவர்களோடு தாங்களுங் கலந்து, அவ்விரண்டையும் இழக்கின்றார்களே! இவர்கள் இப்ப

டுச் செய்தும், எதிரிகளெதிரே தலை குனியாது, தாங்கள் சைவசமயிகளென்றும், உயர்ந்த சாதியான்களென்றும், சிறிதும் நாணமின்றித் தலையெடுப்புடனே பாராட்டத் தொடங்குகின்றார்களே! சிச்சி! இஃதென்ன மதிமயக்கம்!

இவர்கள், அப்பாதிரிமாருக்கு இறுக்கும் பொருளிற் குறைந்த தொகைப் பொருள் கொண்டே, தங்கள் பிள்ளைகளைச் சென்னபட்டணத்திலுங் கும்பகோணத்திலுமுள்ள கவர்ண்மெண்டுக் கலீசுகளுள் ஒன்றில் விடுத்து, இங்கிலீசுக் கல்வியின் மாத்திரமன்றித் தமிழ்க்கல்வியினுஞ் சாதியாசாரத்தினுஞ் சமயாசாரத்தினும் நாகரிகத்திலும் நன்றாகத் தேர்ச்சியடைவித்துக்கொள்ளலாமே. மலையோடு சிறுமணன்மேட்டுக்குப்போல இந்தியாவில் கலீசுகளோடு இந்தக் கலீசுக்கு வேற்றுமை பெரிதாமென்பதை ஆராய்ந்தறியாத பேதைகளை யாது செய்யலாம்! சென்னபட்டணத்திலுள்ள சாமானியமாகிய ஒரு பள்ளிக்கூடத்துக்குந்தானும் இந்தக் கலீசு சமமாகாதே! தங்கள் பணத்தை இறுத்தும், திருத்தமாகிய கல்வித் தேர்ச்சியும் பெறாது, தங்கள் சாதிநிலை சமயநிலைகளும் இழந்து, அவமதிக்கப்படும் இவர்கள் அறியாமை இருந்தபடி என்னை யென்னை! பாதிரிமாருடைய கலீசுக்குத் தக்க பொருளுதவி செய்தவர்களுள்ளே சிலர், தங்கள் பிள்ளைகள் தங்கள் வீட்டிலே போசனஞ் செய்துகொண்டு போய், அக்கலீசிலே படித்தற்குப் பாதிரிமார் உடன்படாமையைக் கண்டு, வெட்கப்பட்டுச் சும்மா இருக்கின்றார்கள்! இவர்கள் தாங்கள் கொடுத்த பணத்தைப் பாதிரிமாரைத் தொடர்ந்து வாங்காது ஏன் சும்மா இருக்கின்றார்கள்! வெள்ளை முகத்துக்குப் பயந்தோ!

இந்தக் கலீசின்பொருட்டு ஒரு பெரும்பொய் மரணசாசனம் படைக்கப்பட்டதும், "ஒரு பிராமணகுருவே தம்முடைய பெருந்தொகையாகிய ஆஸ்திகளெல்லாவற்றையுங் கிறிஸ்துசமயக் கலீசுக்கு எழுதிவிட்டு மரித்தது தேவசித்தமன்றோ கிறிஸ்துசமயமே

மெய்ச் சமயமென்பதற்கு வேறு பிரமாணமும் வேண்டுமோ" என்று சில பாதிரிமார்களும் பல கிறிஸ்தவர்களும் பற்பலரெதிரே பாராட்டினதும், அப்பத்திரம் பொய்ப்பத்திரமெனப்பட்டு, அப்பத்திரம் படைத்திட்டுக்கொண்டவர்கள் சுப்பிறீங்கோட்டாராலே தண்டிக்கப்பட்டதும், அவர்கள் தண்டிக்கப்பட்டதற்கு இரங்கியிரங்கிப் பாதிரிமாருடைய சமாசாரபத்திரிகையொன்று தேம்பித் தேம்பிப் புலம்பினதும், அறியாதார் யாவர்! பாதிரிமாருடைய சகவாசமும் இங்கிலிசும் விவிலிய நூலுஞ் சற்றுமுற்றறியாத பிராமணகுருவே தம்முடைய ஆஸ்திகளெல்லாவற்றையும் இந்தக் கலீசுக்கு எழுதும்படி செய்தது என்று துணிந்து சொல்லப்பட்ட தேவசித்தமானது, விபூதியையுஞ் சிவாலய தரிசனத்தையும் மறந்து இந்தக்கலீசிலே பாதிரிமாரோடு சகவாசஞ் செய்துகொண்டு இங்கிலிசும் விவிலியநூலுங் கற்குஞ் செல்வர் பிள்ளைகள் ஒவ்வோர் சமயம் வாய்க்கும்பொழுது தங்கள் ஆஸ்திகளெல்லாவற்றையும் இந்தக் கலீசுக்கு எழுதும்படி செய்யமாட்டாதா! இதைப் பிள்ளைகளுடைய பெற்றாரும் உற்றாருஞ் சற்றே யோசிக்கக்கடவர். "நான் வினைவேலிச் சுப்பிரமணியக்குருக்களிடத்திலே போய் 'உமக்குப் பிள்ளை இல்லாமையினால் நீர் உம்முடைய ஆஸ்திகளெல்லாவற்றையும் யாழ்ப்பாணக் கலீசுக்கு எழுதிவிடும்' என்று சொல்லியதற்கு அவர் உடன்பட்டவர்; ஆதலால் மரணசாசனம் மெய்யாகவே இருக்கலாம்" என்று சொல்லித் திரிந்த ஒரு கிறிஸ்தவரும் இந்தக் கலீசிலே ஒருபாத்தியாயர் உபாத்தியாயர்! என்னென்ன சம்பவிக்குமோ! சாவதானம் சாவதானம்!!!

பொய்வழக்குப் பேசுதல், பொய்ப்பிரமாணம் பண்ணுதல், பொய்ப்பத்திரம் படைத்தல், சாராயங்குடித்தல், அக்கை தங்கை மாமி மருமகள் பேர்த்தி என்கிற வரம்பு முறை கடந்து கலியாணஞ்செய்தல், கடவுளில்லை ஆன்மாவில்லை மோட்சநரகமில்லையென்று வாதித்தல், பாம்புக்குத் தலைகாட்டி மீனுக்கு வால் காட்டும்

மலங்குபோலச் சைவருக்குச் சைவராயுங் கிறிஸ்தவருக்குக்
கிறிஸ்தவராயும் நடித்தல் முதலிய இப்பெருங் கொடுந் தீமைக
ளெல்லாம் இவ்வியாழ்ப்பாணத்திலே வர வர பாதிரிமாராலே தலைப்பட்
டோங்குகின்றன! பாதிரிமாராலே சீர்திருத்தம் உண்டா
யிற்று என்று பாராட்டுவோர் தங்கள் தங்கள் மனச்சான்
றை வினவினால் அஃது உண்மை பேசும் பேசும். யாதாயினும் ஒரு
சமயத்திலே நிலைகொண்ட பற்றில்லாதவரிடத்தே மனத்தொடு
சார்ந்த நல்லொழுக்கந் தலைப்படுமா! இந்நல்லொழுக்கத்தொடு
சாராத கல்வித்திறமையும் புறவேஷங்களுஞ் சீர்திருத்தமெ
னப்படுமா! முற்காலத்தில் இவ்வியாழ்ப்பாணத்திலே இராக்கள்
ளர் தொகையோ மிகப் பெரிது; பகற்கள்ளர் தொகையோ
மிகச் சிறிது. ஏழைகளெல்லாருங் கூலிவேலை செய்து
எளிதிற் சீவனஞ் செய்யும் பொருட்டாகிய தெருவேலைக
ளும் பாலவேலைகளுந் தென்னந்தோட்ட வேலைகளும் பெருகப்
பெருக, இராக்கள்ளர் தொகை மிகச் சுருங்கிவிட்டது. பாதிரி
மார்கள் கல்வி முதலியவற்றின் பொருட்டுத் தங்களை அடுத்தவர்
களை அவரவர் மனச்சான்றுக்கு விரோதமாகவே நடக்கும் பொ
ருட்டு வலிந்து வலிந்து ஏவ ஏவ, நிரீச்சுரவாதமும் போலிச்
சமய நடையுந் தலைப்பட்டன. அவை தலைப்படத் தலைப்படப்
பகற் கள்ளர் தொகை மிகப் பெருகிவிட்டது. இராக்கள்ளருக்குத்
தப்புவது எளிதெளிது! பகற்கள்ளருக்குத் தப்புவது அரிதரிது!
சிறிது காலத்தின் முன் சைவவிரோதிசென்று அவர்
சந்நிதிக்கண் அன்னதிகளைக் காலாலே சிந்திய ஊரிற்றானே யாரு
மறியத் தாமே பொருள் செலவழித்துக் கந்தபுராணம் படிப்பிக்
கத் தொடங்கிவிட்டுக் கலியாணப் படிப்புச் சபையிலே வெகு
சனங்கள் கண் காணக் குளோப்பு விளக்குகளை உடைத்துக் கந்
தபுராண புத்தகத்தை ஐயைய இங்கே சொல்லப்புகின் நெஞ்சந்
துடிதுடிக்கின்றது; ... வாய் கூசும் அவமதிபுரிந்து தம்மை வருந்திப் பெற்று
... தப்பனுரைப் பேசாப் பேச்செல்லாம் பேசிக் கையா
... ட்டுந் தாமே பரமயோக்கியரென்று தலையெடுப்பொடு

திரிவோரும், தமக்கு மேலதிகாரியாகிய துரை தமது சொல்லுக்குச் செவிகொடுப்பவரென்று பொய்சொல்லி அவருக்கு அடக்கித்தி விளைத்து உடைத்தாரை வஞ்சித்துக் கைக்கூலி வாங்கி அது பற்றி விளைந்த கிறிமினல் வழக்குக் காரணமாக வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையும் வாரிக்கொண்டு சென்றாற் போலக் கைக்கூலிப்பொருள் முன்னைப் பொருளையும் செந்நிறப் பெண்ணொருத்தியைக் காட்டிக் கருநிறச் சகோதரியை விவாகஞ்செய்துகொடுத்ததனாற் கிடைத்த பொருளையும் வாரிக்கொண்டு செல்லப் பின்னரும் நெடுங்காலம் தம்மாலே வெருசனங்கள் துயருழக்குஞ் சூழ்வசத்தாலோ பிறிது காரணத்தாலோ வழக்கு விசாரணையின்றி ஒழிய இராசதண்டத்துக்குத் தாம் ஒருவாறு தப்பிக்கொண்டு தாந்தப்பினமைக்குக் காரணந் தாஞ் செய்த கதிர்காமயாத்திரை முதலியனவென்று சொல்லிக் கந்தசுவாமிமீது கைக்கூலி வாங்கற் குற்றமேற்றி அம்மட்டினில்லாது கதிர்காமசுவாமி நனவிலுந் தம்மோடு கலந்து பேசுகின்றாரென்று பிதற்றித் திரிவோரும், தாஞ் சுப்பிறீங்கோட்டு யூரிமார்களுள் ஒருவராக ஏற்பட்டுக்கொண்டு முறைப்பாடு காரனையும் மறியற்காரனையுந் தனித்தனி கண்டு "உன்பக்கந் தீர்ப்புச் செய்வேன் உன்பக்கந் தீர்ப்புச் செய்வேன்" என்று சொல்லித் தமது பிள்ளையைச் சுட்டிச் சத்தியம்பண்ணி இருபக்கத்தாருந் தம்மைத் தள்ளுவியாவண்ணம் உபாயஞ் செய்துவிட்டுத் தீர்ப்பு எவன் பக்கஞ் செய்யப்பட்டதோ அவனைக் கண்டு அது தம்மாலாயதென்று மகிழ்ச்சி காட்டியும் அவன் பகைவனைக் கண்டு அது தமது பிரயாசைக்கு மாறாக மற்ற யூரிமாரால் ஆயதென்று துக்கங் காட்டியும் வம்பு செய்து திரிவோருமாகிய பகற்கள்ளர் உயர்ந்த கவர்ண்மெண்டு உத்தியோகத்தில் இருப்பாராயின், ஏழைகள் எப்படித்தான் பிழைப்பார்கள்! எப்படித்தான் பிழைப்பார்கள்!!!' இப்பகற்கள்ளர், இம்மட்டோ, இங்கிலிசுகாரரைப் பிரீதிப்படுத்தும் பொருட்டு அவருடைய "குசினி"ப் பறையர் கொடுத்த கோப்பியும் உவவ

னுங் குடித்துவிட்டுச் சைவசமயக் கோயில்களினுள்ளே நுழைந்து அவைகளைப் பாழாக்குகின்றாரே! கோயிற் குருமார் இவரைக் கோயிலினுள்ளே நுழையவொட்டாது தள்ளித் திருவீதிப்புறத்தில் ஓட்டிவிடாததென்னையோ! ஆகா! ஓகோ! கோயிற் காணிக்கை குறையுமென்று பயந்தோ பயந்தோ!!

இந்தியாவிலே சைவ வைஷ்ணவத்தை விடுத்துக் கிறிஸ்துசமயத்திலே புகுந்தவன் எவ்விடத்தும் எக்காலத்தும் எல்லாரெதிருங் குடும்பத்தோடுங் கிறிஸ்து சமயியே. யாழ்ப்பாணத்தில் ஒருவனே சிலரெதிரே சைவசமயி; வேறு சிலரெதிரே கிறிஸ்து சமயி. ஒருவனே ஒருவரெதிரேதானே சிலநாட் சைவசமயி; சிலநாட் கிறிஸ்துசமயி; திரும்பவுஞ் சிலநாட் சைவசமயி; திரும்ப நிரீச்சுரவாதி. ஒருவனே யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது கிறிஸ்து சமயி; இந்தியாவுக்குப் போனபோது அங்கே சைவசமயி; திரும்பி யாழ்ப்பாணத்துக்கு வந்தபின் தன்னை இந்தியாவிற் கண்ட யாழ்ப்பாணத்தாரெதிருங் கிறிஸ்து சமயி. யாழ்ப்பாணத்தார்களுள்ளே சிலர் பழி பாவங்களுக்கு அஞ்சாது இப்படி நடத்தலினாலும், வேறு பலர் இவர்களைக் கண்டித்துத் தள்ளிவிடாது இவர்களோடு கலத்தலினாலும், இங்குள்ளாரெல்லாருக்கும் அவமதிக்கற்பாடு உண்டாயிற்று.

சென்னபட்டணத்தார்கள் சிலவருஷத்துக்கு முன் இங்கிலாந்துக் கவர்ண்மெண்டுக்கு எழுதி அச்சிற் பதிப்பித்து அனுப்பிய ஒரு விண்ணப்பத்திலே, இலங்கையிலுள்ளவர்கள் ஆதியிலே இந்தியாவினின்றுங் குடியேறிய மிகத் தாழ்ந்த சாதியார்கள் என்றும், அவர்களுக்கு யாதொரு சமயமும் இல்லை என்றும், அவர்களுக்குச் சமயமென்பது அங்க வஸ்திரம் போலும் என்றும், அது பற்றி அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களிலே விவிலியநூற் பாடம் படிப்பிக்க உடன்பட்டார்கள் என்றும், இந்தியாவிலுள்ளவர்களாகிய தாங்கள் பண்டு தொடங்கிச்

சாதியாசாரமுஞ் சமயாசாரமும் வழுவாத உயர்குலத்தார்கள் என்றும், அதுபற்றித் தாங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விவிலியநூற் பாடம் படிப்பிக்க விடமாட்டார்கள் என்றும், எழுதியிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள சைவசமயிகளே! உங்களிடத்துள்ள அன்பு மிகுதியினாலே நான் சொல்பவைகளைக் கேளுங்கள். நீங்கள் சிவதீட்சை பெற்றும் என்னை! விபூதி ருத்திராக்ஷ தாரணம், பஞ்சாட்சரசெபம், சிவாலய தரிசனம் இவைகளை நியமமாகச் செய்தும் என்னை! அந்தியேட்டி சிராத்த முதலியவைகளைச் செய்தும் என்னை! வருஷந்தோறுங் கந்தபுராணம் கேட்டும் என்னை! சிதம்பராலய தருமத்தின்பொருட்டு அளவுகடந்த ஆஸ்திகளைக் கொடுத்தும் என்னை! வருஷத்துக்கு இரண்டுதரஞ் சிதம்பரயாத்திரை செய்தும் என்னை! சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தும் என்னை! ஊர்தோறுங் கோயில் கட்டுவித்துப் பூசை திருவிழாக்கள் செய்வித்தும் என்னை! சிவராத்திரி கந்தசட்டி கார்த்திகை சுக்கிரவாரமுதலிய விரதங்களினாலும் அங்கப் பிரதக்ஷிணத்தினாலும் உடம்பை வருத்தியும் என்னை! நீங்கள் உங்கள் சமயக்கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும், ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும், சிவபெருமானை வழிபடும் முறைமையையும், அதனாலே பெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும், கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகின்றீர்களில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை. உங்கள் கோயில்களிலே சிவபத்தியை வளர்த்தற்கு ஏதுவாகிய வேதபாராயணம் தேவார திருவாசக பாராயணம் சைவசமயப் பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்விக்கின்றீர்களில்லை. காமம் கோபம் சண்டை உயிர்க்கொலை முதலிய பெருந் தீமை

களை வளர்க்கற்கு ஏதுவாகிய பொதுப்பெண்களுடைய நடன சங்கீதம் வாணவிளையாட்டு முதலிய தூர்க்கருமங்களிலே உங்கள் பெரும்பொருளைப் பெருமகிழ்ச்சியோடு செலவு செய்கின்றீர்கள். உங்கள் கோயிற் கோபுரங்களிலுந் தேர்களிலும் பார்க்கத் தகாத நிர்வாணப் பிரதிமைகளைச் செய்விக்கின்றீர்கள். உங்கள் கோயிற் பந்தர்களிலே நிருவாணமாயும் காமவிகாரத்துக்கு ஏதுவாயும் உள்ள சித்திரங்கள் எழுதப்பட்ட காகிதங்களை ஒட்டுவிக்கிறீர்கள். கோயிற் சுவர்களிலே அப்படிப்பட்ட சித்திரங்களை எழுதுவிக்கிறீர்கள். கேட்கத்தகாத சிற்றின்பப் பாட்டுக்களைப் படிப்பிக்கின்றீர்கள். இது பற்றி விளையும் பெருங்கேடுகளையும், இது பற்றி அன்னிய தேசத்தாராலும் அன்னிய சமயத்தாராலும் உங்களுக்குக் கிடைக்கும் எல்லை கடந்த அவமதிப்பையும், இன்னும் நீங்கள் எட்டுணையேனுஞ் சிந்திக்கின்றீர்களில்லை. நீங்கள் பாதிரிமாரும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்தவர்களுஞ் செய்யும் பெருங் கொடுஞ் சிவதூஷணங்களை அஞ்சாது கேட்கின்றீர்கள். பாதிரிமார்கள் உங்களை வஞ்சிக்கும்படி உங்கள் வீடுகளுக்கு அனுப்புகிற பெண்களுடைய மையல் வலையில் நீங்கள் அகப்பட்டு, அவர்கள் செய்யுஞ் சிவதூஷணங்களைக் கேட்டு அவர்களுக்கு உங்கள் பொருளை வாரி வாரி இறைக்கின்றீர்கள். உங்கள் கைப் பொருளையே இறுத்து உங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி அழித்துவிட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்களைப் படிக்கவுஞ் சமயாசாரத்தையுஞ் சாதியாசாரத்தையும் இழக்கவும் பண்ணுகின்றீர்கள். நீங்கள் இப்படிச் செய்வீர்களாயின், நீங்கள் செய்பவைகளென மேற் சொல்லப்பட்ட சிவபுண்ணியங்களினால் யாதொரு பயனும் உண்டாகாதே! பிரமா விட்டுணு முதலிய தேவர்களும் இருஷிகளும் தாங்கள் சிவபூசை சிவதரிசன முதலிய சிவபுண்ணியங்களை நியமமாகச் செய்பவர்களாய் இருந்தும், தக்கன் யாகத்தில் அவன் செய்த சிவதூஷணங்களைக் கேட்டுக்கொண்டிருந்த பாவத்தினாலே அநுபவித்த

பெருங் கொடுந் துன்பங்களெல்லாம், நீங்கள் வருஷந்தோறும் பொருள் செலவிட்டுக் கேட்கும் கந்தபுராணத்திலே நன்றாய் அறிந்திருக்கின்றீர்களே. நான் சொல்லவேண்டுவதென்னை!

சைவசமயிகளே! நீங்கள் உங்களை யாதோரிடையூறும் அடையாவண்ணம் ஆளுகிற கவர்ன்மெண்டாருக்கு வருஷந்தோறும் இறுக்கும் வரிப்பணந் தொண்ணூறு சதமாகிய அத்தியற்பத் தொகையன்றோ! இவ்வரிப்பணங் கொண்டன்றோ, நீங்கள் வேண்டுமிடமெங்கும் அதிசௌக்கியத்தோடும் எளிதிலே சேரத்தக்க தெருக்கள் செப்பமிடப்படுகின்றன! இப்படியாகவும் நீங்கள் இவ்வத்தியற்பத் தொகையாகிய வரிப்பணத்தைக் கண்டவராகிய அதிகாரிகளைப் பலதரம் அலைத்துவிட்டும் புறங்கூறியும் மிக்க மனவருத்தத்தோடும் இறுக்கின்றீர்கள். செப்பமிடப்படாத தெருக்களைச் செப்பமிடுவிக்கும் பொருட்டும், தெருக்கள் இல்லாத இடங்களிலே தெருக்கள் அமைப்பிக்கும் பொருட்டும், அடிக்கடி கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பம் எழுதி, *அவர்களிடத்து ஓயாமலே வாங்குகின்றீர்களே. ஓகோ! இவ்வியல்புடைய நீங்கள், உங்கள் சைவசமய குருமார்களுக்குக் காலந்தோறும் அரிசி பருப்புப் பால் தயிர் நெய் முதலிய பதார்த்தங்களும் வஸ்திரங்களும் ரூபாக்களுஞ் சிறிதும் தடை பேசாது வந்தனைத்தோடுங் கொடுக்கின்றீர்கள், கொடுத்தும் என்னை!’ அவர்களிடத்தே யாது வேலை வாங்குகின்றீர்கள்! அவர்கள் உங்களுக்காயினும் உங்கள் பிள்ளைகளுக்காயினும் உங்கள் சமயத்தையும் நல்லொழுக்கத்தையும் போதிக்கின்றார்களா? உங்கள் கோயில்களிலே சைவ சமயப் பிரசங்கஞ் செய்கின்றார்களா? பள்ளிக்கூடங்களைத் தாபித்து உங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றார்களா? உங்களுள் யாராயினுங் கிறிஸ்து மதத்திலே பிரவேசிக்கப் போம்பொழுது பரிதபித்து அவருக்குச் சைவசமயத்தினது மகிமையையுங் கிறிஸ்துசமயத்தினது இழிவையும் அறிவித்து அவரைத் தடுக்கின்றா

ர்களா? உங்களுக்குத் தீக்ஷை செய்யுமிடத்துத் தக்ஷிணையை வாங்கிக்கொண்டு உடனே ஓட்டம்பிடிப்பதன்றிச் சிலநாளாயினுந் தாமதித்திருந்து உங்களுக்கு அநுட்டானமுஞ் சமயாசாரமும் பழக்குகின்றார்களா? உங்கள் வீட்டுக்கு வந்த பொழுது உங்கள் செல்வப் பெருமை உத்தியோகப்பெருமைகளையுந் தங்கள் பொருண் முட்டுப்பாடுகளையும் வீண்வார்த்தைகளையும் பேசுவதேயன்றிச் சிவபெருமானுடைய பெருமையையுஞ் சைவசமயங் குன்றுதலையுஞ் சுட்டியாதாயினும் பேசுகின்றார்களா? அநுட்டான முதலியவைகளை நீங்கள் கிரமமாகப் பயின்றிருக்கின்றீர்களோ என்று உங்களை எப்பொழுதாயினும் பரீட்சிக்கின்றார்களா? உங்களுள் யாராயினும் இறக்கும்பொழுது அங்கே வந்து அவரான்மா நற்கதி அடையும்பொருட்டு அவருக்கு நல்லறிவுறுத்துகின்றார்களா? உங்கள் சமயத்தைப் பாதிரிமார் கண்டிக்கும்பொழுது அவர்களை எதிர்த்து அவர்கள் சமயத்தைக் கண்டித்து உங்கள் சமயத்தை நிறுத்தத் தொடங்குகின்றார்களா? உங்கள் குருமார்களுள் யாரொருவரேனும் எப்பொழுதாயினும் உங்களுள் யாரொருவரையேனும் பார்த்து "நீ கொலைசெய்யாதே; களவெடாதே; மதுபானம் பண்ணாதே; மாமிசம் புசியாதே; பொய் பேசாதே; விபசாரஞ் செய்யாதே; சூதாடாதே" என்று வாய் திறந்ததுண்டா? நல்லது நல்லது!! உங்கள் வந்தனமும் பொருளும் பெறுத பிறர் சிலர் உங்களுக்கு நன்மை செய்யப் புகுந்தவிடத்து அதற்கு இடையூறு பேசாமலாயினும் இருக்கின்றார்களா? இல்லையே! மாதா வயிற்றிற் சிசுவும் அம்மாதாவினாலுங் கொல்லப்படாவண்ணஞ் சாவதானமாக ஆணை நடாத்தும் அரசினருக்கு வருஷத்திலே தொண்ணூறு சதங் கொடுக்கப் பின்னிட்டொளிக்கிற நீங்கள், உங்களுக்கு யாது நன்மையுஞ் செய்யாத போலிக்குருமாரைக் கும்பிட்டுக் கும்பிட்டு அவர் வேண்டுவனவெல்லாம் உவப்போடு கொடுப்பதென்னையோ! அறியேம் அறியேம்!!

சைவசமயிகளே! கணக்கர், கொல்லர், தச்சர், கன்னர், தட்டார், மேளகாரர், வண்ணர், அம்பட்டர், சக்கிலியர், பறையர் முதலிய பலதொழிலாளர் மரபிற் பிறந்தவராயினும், அவ்வத் தொழில் அறியாதவரை அறிந்தவரெனக்கொண்டு, அவ்வவருக்குப் பொருள் கொடுத்து, அவ்வத்தொழில் செய்விக்கச் சொப்பனத்திலாயினும் நினைக்கின்றீர்களா? இல்லையே! இவ்வாறுசவும், சைவ குருமரபிற் பிறந்தவராயினும், சைவசமய குருத்துவத்துக்கு அவசியம் வேண்டிய சைவசித்தாந்த நூலுணர்ச்சியுஞ் சைவக்கிரிகைகளை மந்திரக்கிரியா பாவனை வழுவாவண்ணஞ் செய்யுந் திறமையுஞ் சைவசமய போதனையும் இல்லாதவரைச் சைவசமய குருமாரெனக் கொண்டு, உங்கள் கைப்பொருளை அவருக்கு இறைத்துவிட்டு, அவரிடத்தில் வேலை வாங்காது பராமுகர்களாய் இருப்பது நீதியா? தவசிப்பிள்ளைகளுந் தங்கள் தொழிலிலே பரீட்சை கொடுத்தே தவசிப்பிள்ளைகளாகுகின்றார்களே! பரீட்சை சிறிதும் வேண்டாத உத்தியோகமாவது, உலக முழுதாளும் அரசரும் பெறுத வந்தனைகளைப் பெறும் மிக மேன்மை பெற்ற உத்தியோகமாகிய சைவசமய குருவுத்தியோகம் ஒன்றேயாய் முடிந்ததே! இஃது என்னையென்னை! கொடுமை கொடுமை!

சைவசமயிகளே! கிறிஸ்து சமயகுருமாராகிய பாதிரிமார்கள் தங்கள் பாஷையையும் அதற்கு மூலபாஷைகளையும் இலக்கண இலக்கிய கணித தருக்க பூகோள ககோளாதிகளையுந் தங்கள் சமயநூல்களையும் படித்துத் தேர்ந்து பரீட்சையிற் சித்திபெற்று நெடுந்தூரத்தினின்றும் இங்கு வந்து, நம்முடைய தேசபாஷைகளையும் நீதிநூல்களையுஞ் சமயநூல்களையுஞ் சிறிதாயினும் படித்துப் பிரசங்கிக்கின்றார்களே! உங்கள் சமய குருமாருள்ளே சில சொழிய, மற்றவர்கள் அந்தியேட்டிப் பட்டோலைதானும், இன்னுஞ் சொல்லின் அந்தியேட்டியென்னும் பெயர்தானும், பிழையற எழுத அறியார்களே! கெட்டி கெட்டி!! சிவாகமத்தில் ஒரு சுலோ

கமாயினும் தேவார திருவாசகங்களில் ஒரு பாட்டாயினுந் திருவள்ளுவரில் ஒரு குறளாயினும் அறியாத மனிதப்பதர்களுஞ் சைவசமயகுருமாராம்! சமணசமயத்துச் செட்டிச்சி விக்கிரகத்தின் இருபக்கத்தும் விநாயகக்கடவுள் விக்கிரகமுஞ் சுப்பிரமணியக்கடவுள் விக்கிரகமும் அஞ்சாது வைத்துப் பூசை உற்சவமுதலியன செய்கிற அதிபாதகர்களுஞ் சைவசமய குருமாராம்! "சிவலிங்கமாவது பரமசிவனுடைய குறி சாபத்தால் அழுகி விழுந்தது" என்று அஞ்ஞானப் பாதிரிகள் போல நெஞ்சந் திடுக்கிடாது வாய் கூசாது பேசுகிற புலையருஞ் சைவசமயகுருமாராம்! சமணசமயக் கடவுளாகிய அருகன் மேலே பாடப்பட்ட திருநூற்றந்தாதியிற் செய்யுளைப் பார்த்திருந்தும் அதன் பொருளை அறியாமலுந் திருநூறென்பதற்குந் திருநீறென்பதற்கும் பேதந் தெரியாமலும் "திருநூற்றந்தாதியிலே விபூதியின் மகிமை சொல்லப்படுகின்றது; அதில் ஒரு புத்தகம் வாங்கித்தரமாட்டீரா" என்கிற அசேதனதிலகர்களுஞ் சைவசமய குருமாராம்! "மாணிக்கவாசகர் பாடின திருவாசகம் ஒன்று வாங்கினேன்; அவர் பாடின தேவாரம் ஒன்று வாங்கித்தரமாட்டீரா" என்கிற மூடசனேந்திரர்களுஞ் சைவசமய குருமாராம்! "பரமசிவனுடைய ஐந்து முகங்களுள்ளே ஈசானமுகம் ஊர்த்துவ முகமென்று சொல்லியிருக்கின்றதே! ஊர்த்துவ முகமாவது அண்ணாந்து கிடக்கிற முகமாமே! அப்படியானால் அபிஷேகம் பண்ணும்பொழுது தீர்த்தம் மூக்கினுள்ளே போமே! போனாற் சுவாமிக்குச் சலதோஷங் கொள்ளுமே! இதற்கு யாது பண்ணலாம்" என்கிற அஞ்ஞான சிரோமணிகளுஞ் சைவசமய குருமாராம்!

தோட்டவேலை, வயல்வேலை, வியாபாரம், உத்தியோக முதலிய தொழில்கள் செய்து சீவனம் பண்ணுகிற உங்களுள்ளுஞ் சிலர், ஒழிவுள்ள நேரங்களிலே சைவசமய விஷயங்களை ஆசை யோடு படித்தாயினுங் கேட்டாயினும் அறிகின்றார்களே! உங்கள்

சைவசமய குருமாருக்கு என்ன வேலை! நீங்கள் வருந்திச் சம்பா தித்துக் கொடுக்கக் கொடுக்க, அவர்கள் எளிதில் வாங்கி உண்டுடு த்துக்கொண்டு வெட்கஞ் சிறிதுமில்லாமல் மாப்பிளை மாடுகள் போலத் திரிகின்றார்களே! சைவ சாத்திர முதலியவற்றைப் படித் தற்கு அவர்களுக்கு வேண்டிய நேரம் இருக்கின்றதே! அப்படியி ருக்கப் படியாமல் அவர்கள் வீண்பொழுது போக்குகின்றார்களே! இனியாயினும் படிக்கும்பொருட்டு நீங்கள் தயைகூர்ந்து அவர்க ளுக்கு நல்லபுத்தி சொல்லமாட்டீர்களா? அவர்கள் தங்களுக்குப் படிக்கச் சத்தியில்லையானால், படித்தவர்கள் பல சைவசாத்திரப் பொருள்களைத் திரட்டிச் சிறுவரும் எளிதில் அறியும்படி செய் கிற பிரசங்கங்களைக் கேட்கும்பொருட்டாயினும், நீங்கள் அவர்க ளுக்குப் புத்திசொல்லலாகாதா? பிரசங்கங் கேட்க நம்முடைய குருமார்கள் கூசுகிறார்களோ என்பீர்கள்போலும். பிரசங்கங் கேட் டுக் கேட்டுப் புத்திமான்களாய்ப் பிறருக்கும் போதித்து நன்குமதி க்கப்பட்டுக் களிப்புற்றுத் திரிவது நல்லதோ! பிரசங்கங் கேட் கக் கூசிக் கூசிப் பிரசங்கங்கேட்ட பிறரெதிரே தங்கள் ஊத்தை வாயைத் திறந்து தங்கள் அறியாமையை வெளிப்படுத்தி அவர் களாலே கண்டிக்கப்பட்டும் அவமதிக்கப்பட்டுஞ் செருக்கிழந்து தலை குனிந்து பதுங்கித் திரிவது நல்லதோ! குலங் கல்வி அறிவு ஒழுக்கஞ் செல்வங் கௌரவ முதலிய பலவற்றாலுந் தங்களினும் உயர்ந்த பிராமண குருமார் முதலாயினோர் போனாந்தத்தோடு வந் திருந்து கேட்பதறிந்துந் தாங்கள் கேட்கக் கூசுவதென்னையோ! ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரமுடுத்து விபூதி ருத்தி ராக்ஷந் தரித்த சைவசமயிகள் பலர் கூடியிருக்கிற உத்தமசபை களிலுந் திருக்கோயில்களிலும் போய்க் கௌரவத்தோடும் இரு ந்து சிவசாத்திரப் பிரசங்கஞ் சிவபுராணப் பிரசங்கங் கேட்கக் கூசுகிற இச்சைவ குருமூர்த்திகள், தங்கள் சென்ன தேசத்திலே செல்வர்கள் சமுகத்திலும் உத்தியோகத்தர்கள் சமுகத்திலும் அரையணா ஒரு அணாப் பூரி வாங்கும்பொருட்டு நெருக்குண்டுந்

கள்ளுண்டும் அடியுண்டும் அவமானப்படக் கூசாததென்னையோ! அம்மட்டோ, தங்கள் சிடர்கள் கிறிஸ்தவர்களாய்ச் சிவநிந்தகர்களாய்ப்போன பின்னும் அவர்கள் வீடுகளிலே போய்ச் சமயம்பார்த்து யாசித்து வயிறு வளர்க்கக் கூசாததென்னையோ! அம்மட்டோ, இழ்சாதியாரோடும் ஒரே பாயிலிருந்துகொண்டு சொக்கட்டான் காகிதம் விளையாடக் கூசாததென்னையோ! அம்மட்டோ, தம்மிடத்து வருந் தூர்த்தர் ஒருவருக்கொருவர் தகப்பன் மகன் என்பதும் நோக்காது, பாட்டன் பேரன் என்பதும் நோக்காது, மாமன் மருமகன் என்பதும் நோக்காது, தமையன் தம்பி என்பதும் நோக்காது, குரு சீடன் என்பதும் நோக்காது, உபாத்தியாயன் மாணாக்கன் என்பதும் நோக்காது, அவர் தம்மின் மிக மூத்தவர் மிக இளையவர் என்பதும் நோக்காது, அவர் தம்மின் மிகத் தாழ்ந்த சாதியார் என்பதும் நோக்காது போகம் விற்றுண்ணும் பொதுப்பெண்களுடைய வீட்டிலே நுழைதற்குக் கூசாததென்னையோ! அம்மட்டோ, பேதிவியாதிக்காலத்திலே சனங்களை வஞ்சிக்கும்பொருட்டு வெறியாட்டாடிய பொதுமகளிருக்கு உருத்திராபிஷேகஞ் செய்து தீபாராதனை பண்ணி நமஸ்கரித்து அவர்கள் கையினின்றும் விபூதி வாங்கக் கூசாததென்னையோ! அம்மட்டோ, உருத்திரகணிகையருடைய இலக்கணங்கள் இவை இவையெனச் சிவாகமங்கள் சொல்லவும், பொதுப்பெண்களை உருத்திர கணிகையரென்க்கொண்டு, கோயில்களில் வைத்து அவர்கள் பொருட்டுச் சிவத்திரவியங்களை எடுத்துபயோகிக்கக் கூசாததென்னையோ! அம்மட்டோ, பிறர்மனைவியரைச் சகோதரிகளாகவும் உருத்திரகணிகையரை மாதாக்களாகவும் பாவித்தொழுகல் வேண்டும் என்று சிவாகமங்களுஞ் சிவபுராணங்களும் விதிக்கவும், அவ்விதி கடந்து, தங்கள் மனசைத் தங்கள் பொறிபோன வழியே போக்கக் கூசாததென்னையோ! அம்மட்டோ, தங்களிடத்தே தீக்ஷைபெற்ற பெண்கள் தங்களுக்குப் புத்திரிகளென்பதை எவ்வளவாயினுஞ் சிந்தியாதவர்களாய் வரம்புகடந்தொழுகக் கூசாததென்னையோ! உங்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41



கள் குருமாருள் அநேகர் இத்தீமைகளுக்கெல்லாங் கூசார்கள்; சுவாமி சந்நிதானங்களிலே நமஸ்காரம்பண்ணவும், உத்தரீயமெடுக்கவும், தலைக்கட்டை எடுத்துவிட்டு உருத்திராக்ஷமாலை தரிக்கவும், தாளந்தட்டித் தேவாரமோதவும், சிவசாத்திரப் பிரசங்கஞ் சிவபுராணப் பிரசங்கங்கள் கேட்கவும், சிவசாத்திர சிவபுராணங்கள் படிக்கவுங் கூசுவார்கள். உங்கள் குருமாருள்ளே யோக்கியருக்குங் கும்பிடு அயோக்கியருக்குங் கும்பிடு யோக்கியருக்கும் பாதகாணிக்கை அயோக்கியருக்கும் பாதகாணிக்கையானால், திருத்தம் எப்படி உண்டாகும்! யோக்கியரை உயர்த்தி அயோக்கியரைத் தாழ்த்தினாலன்றோ, அயோக்கியர் தொகை குறையக் குறைய, யோக்கியர் தொகை அதிகப்படும்.

சைவசமயிகளே, பொய், களவு, நம்பிக்கைத்துரோகம், குற்றம் பழித்தல், வீடுகொளுத்துதல் முதலிய தீமைகளுள் ஒன்றுடையவனையுஞ் சம்பளம் பெறுந் தவசிப்பிள்ளையாகத்தானும் வைத்துக்கொள்ளுதற்கு ஒருவனுஞ் சம்மதியானே! இத்தீமையெல்லாம் ஒருங்குடையவரையும் மோட்சவழி காட்டுங் குருமாரெனக்கொண்டு வழிபடுதற்கு நீங்கள் எவ்வளவேனுங் கூசக்காணேமே! உங்கள் குருமாருள்ளே கல்வியும் நல்லொழுக்கமும் உடையவர் சிலர் உளரேயாயினும், அவர்கள் தங்கள் கடமையை உங்களுக்கு எவ்வளவேனுஞ் செய்யக் காணேமே! சிலகாலத்துக்கு முன் இருந்த கிறிஸ்துசமய குருமாருள்ளே சிலர், தங்களைத் தூஷித்தல் கல்லாலெறிதல் அடித்தல் முதலிய தீமைகளைச் செய்தவர்களுக்குந் தங்கள் சமயத்தைப் போதித்தார்களே! உங்கள் சைவசமய குருமாரோ, தங்களைக் கண்ட கண்ட இடமெல்லாஞ் செருப்புக் கழற்றியும், உத்தரீயமெடுத்தும், வாய் புதைத்தும், ஆசனத்திருத்தியும், சுவாமீ சுவாமீ அடியேன் அடியேன் என்று அடியற்ற மரம் போல விழுந்து நமஸ்கரித்தும், தங்கள் பாதசமீபத்தில் ரூபாக்களைக் கலகலெனக் கொட்டியும் வழிபட்டொழுகுந் தங்கள் சீடர்களுக்குந் தங்கள் சமயத்தைப் போதிக்கின்றார்களில்லையே!

சைவசமயிகளே! உங்கள் கோயில்களிலே பொதுமகளிருடைய நடனசங்கீதம் வாணவிளையாட்டு முதலியவைகளை ஒழித்துவிடுங்கள். நிருவாணமாயும் காமத்தை வளர்த்தற்கு ஏதுவாயுமுள்ள பிரதிமைகளையும் படங்களையும் அமைப்பியாதொழியுங்கள். கோயில்களிலே சைவப்பிரசங்கம், வேதபாராயணம், தேவார திருவாசக பாராயண முதலியவைகளைச் செய்வியுங்கள். உங்கள் குடும்பத்தோடு நியமமாகப் போய்ச் சைவப்பிரசங்கங் கேளுங்கள். சிலமாயுள்ள கோயில்களைப் புதுக்குவியுங்கள். ஒன்றுக்கொன்று சமீபத்தினதாகப் பல கோயில்களைக் கட்டுவியாதொழியுங்கள். நித்திய பூசைக்கு முதற் பொருள் சேருமுன் கோயில் கட்டுவிக்கத் தொடங்காதொழியுங்கள். நித்திய பூசைக்குப் பொருள் இல்லாத கோயில்களிலே இடம்ப நிமித்தந் திருவிழாவைத் தொடங்காது நித்தியபூசையைக் கிரமமாக நடத்துவியுங்கள் சைவசமயத்துக்கு முழுதும் விரோதமாகிய மதுபானம் மாமிசபோசன முதலிய தீமைகள் தலைப்படாவண்ணம் விலக்குங்கள். நீங்கள் வெயர்வைபொழுகப் பலவித முயற்சிகளினால் வருந்திச் சம்பாதித்த பொருளைக் கூத்து முதலிய வேடிக்கைகளிலும் பொய்வழக்குகளிலுஞ் செலவு செய்து, பழி பாவங்களைத் தேடிக்கொள்ளாது, இம்மை மறுமைகளுக்கு உபயோகமாகிய கல்வி விருத்தியிலே செலவு செய்து, புகழ் புண்ணியங்களைத் தேடிக்கொள்ளுங்கள். கல்வியறிவொழுக்கங்களிற் சிறப்புற்ற மேலோர்களையே உங்களுக்குக் குருமாராக ஏற்படுத்திக்கொள்ளுங்கள். கல்வியறிவில்லாதவர்களையும் நல்லொழுக்கமில்லாதவர்களையுங் குருமாரெனக் கொள்ளாது தள்ளிவிடுங்கள். உங்கள் குருமாரினுள்ளே கல்வியறிவில்லாதவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுக்கவேண்டாம் என்று நாஞ் சொல்லவில்லை. அவர்களைத் திருநந்தனவனம் வைத்தல், புஷ்பமெடுத்துத் திருமாலைகட்டித் திருக்கோயிலுக்குக் கொடுத்தல், திருக்கோயிலிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவீதியிற் புல்லைச் செதுக்குதல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்

யப்பண்ணி, அவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுங்கள். சிவாக
மவுணர்ச்சியாலன்றிப் பெறப்படாத குருத்துவஞ்செய்ய ஒட்டா
தேயுங்கள். அவரவர் தகுதிக்கேற்ற வேலைகொடுத்து அவரவரைப்
போஷிப்பதே நீதி. பரமசற்குருவாகிய திருஞானசம்பந்தமூர்த்தி
நாயனார் பதினாறுபிராந் திருக்கூட்டத்தோடு சிவாலயங்களெங்குந்
தாளந்தட்டித் தேவாரமோதியருளினண்மையைப் பெரியபுராணத்
தால் அறிந்திருந்தும், தாங்கள் சுவாமி உற்சவங்கொண்டருளும்
பொழுது தாளந்தட்டித் தேவாரமோதக் கூசுகின்ற பெரும்பாவி
களைச் சைவகுருமாரெனக்கொண்டு வழிபடாமலுங் காணிக்கை
கொடாமலும் வெறுத்து ஓட்டிவிடுங்கள். ஆலயப் பிரதிட்டை
முதலிய கிரியைகளைச் சிவாகமத்தில் வல்ல பெரியோர்கள், பல
ரையிருத்திக்கொண்டு, அவர்களோடு சலந்து ஆலோசித்து, மந்
திரக் கிரியா பாவனைகள் வழுவாவண்ணம் நடத்துவியுங்கள்.

சைவசமயிகளே! பாதிரிமார்களும் அவர்களைச் சார்ந்தகிறி
ஸ்தவர்களுஞ் செய்யுஞ் சிவதூஷணைங்களைக் கேளாதொழியுங்கள்.
உங்கள் பிள்ளைகளை அவர்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி
யழித்துவிட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்கள் படித்தற்கு
அனுப்பாதொழியுங்கள். ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்
து, உங்களுள்ளே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்க
ளைக்கொண்டு அவைகளை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை
அப்பள்ளிக்கூடங்களிலேயே அனுப்பி லௌகிகநூல்களையும் நீதி
நூல்களையுஞ் சைவசமய நூல்களையும் படிப்பியுங்கள். சாதார
ணக்கல்வி விசாரணைத் தலைமைத்துரைக்கு விண்ணப்பமெழுதிக்
கவர்ண்மெண்டாரிடத்திலே பொருளுதவிபெற்று, லௌகிகநூற்
கல்வியை விருத்திசெய்யுங்கள். அதற்குப் பாதிரிமார்கள் இடை
யூறுசெய்யின், நீங்களெல்லாந் திரண்டு கொழும்புக் கவர்ண்மெண்
டாருக்கு விண்ணப்பமெழுதிக் கொள்ளுங்கள். அதற்குக் கொ
ழும்புக் கவர்ண்மெண்டார் பராமுகர்களாயிருப்பின், இங்கிலாந்துக்
கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக்கொள்ளுங்கள். இந்தி

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

யாவையாரும் இங்கிலாந்துக் கவர்ன்மெண்டாரே இலங்கையையும் ஆளுகின்றனர். இந்தியாவிற் குடிகளனுப்பும் விண்ணப்பங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கு நன்மை செய்யுங் கவர்ன்மெண்டார், இலங்கையிற் குடிகள் விண்ணப்பமனுப்பினால், அதைச் சீர்தூக்கிப் பார்த்து நன்மை செய்யாது விடுவார்களா? குற்றம் உங்களிடத்ததேயன்றிக் கவர்ன்மெண்டாரிடத்ததன்று.

ஆதியிலே சோழமண்டலத்தினின்றும் பாண்டிமண்டலத்தினின்றும் தொண்டைமண்டலத்தினின்றும் பிராமணர் முதலிய சாதியார்கள் தமிழரசர்களோடு திருக்கோணமலையினும் யாழ்ப்பாணத்தினும் வந்து குடியேறினார்களென்று திருக்கோணமலைப் புராணமுங் கைலாசமாலையுஞ் சொல்லுகின்றன. இந்தியாவிலோ பிராமணருள்ளும் நியமாசாரமுடைய செட்டிவேளாளருள்ளுங் கிறிஸ்துமதத்திலே புகுந்தவர்கள் பலர்; இத்தேசத்திலோ இச்சாதியார்களுள்ளே இதுவரையுங் கிறிஸ்துமதத்திலே புகுந்தவர் ஒருவருமிலர். இந்தியாவிலோ இங்கிலிசென்னூற் பறையரோடிருந்து படித்தற்குங் கூசாதார் பிராமணருள்ளும் பலர்; இத்தேசத்திலோ வண்ணாரோடிருந்து படித்தற்கும் உடன்படாதவர் அசற்சூத்திரருள்ளும் பலர். இந்தியாவிலோ சிவபுராணப் பிரசங்கஞ் செயப்படுங் கோயில்கள் மிக அரியன; இத்தேசத்திலோ அது செயப்படாக் கோயில் இல்லை. இந்தியாவிலோ வித்துவான்கள் சைவசமய குருமார் முதலியோருள்ளுங் கந்தபுராண முதலியன அறிந்தவர் சிலர்; இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவையறியாதார் இலர். இந்தியாவிலோ சுவாமிசந்நிதானங்களிலே சட்டையிட்டுக்கொண்டும், போர்த்துக்கொண்டும், அங்கவஸ்திரந் தரித்துக்கொண்டும், சோடுமாட்டிக்கொண்டும், குடை பிடித்துக்கொண்டும், வண்டி குதிரையேறிக்கொண்டும் அவமதிப்போடு போவோர் பலர்; இத்தேசத்திலோ அவை செய்வோர் இலர். அம்மட்டோ, இங்குள்ளவர்கள் சுவாமி சந்நிதானங்களிலே இங்கிலிசுத் துரைமாரும் வண்டி குதிரையேறிக்கொண்டு போக விடார்கள். இந்தியாவிலோ திருக்

கோயில்களை மலஞ் சலம் எச்சில் முதலியவற்றினால் அசுசிப்படுத்துவோர் பலர்; இத்தேசத்திலோ அப்படிச் செய்யத்துணிவோர் இலர். இந்தியாவிலோ பெருந்தொகையாகிய ஆஸ்திகளையுடைய கோயில்களுள்ளும் நித்தியபூசை நியமமாக நடத்தப்படாக் கோயில்கள் பல; இத்தேசத்திலோ பொருள் சிறிதுமில்லாச் சிறுகோயில்களுள்ளும் நித்தம் ஒருகாலப் பூசையேனும் நடத்தப்படாக் கோயில்கள் இல. இந்தியாவிலோ பெரும்பான்மையோர்களுக்குக் காடன் மாடன் கறுப்பன் வீரன் பெரியதம்பிரான் முதலிய பிசாசுகளே குலதெய்வம்; இத்தேசத்திலோ பெரும்பான்மையோர்களுக்கு எல்லாவறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவனுக்கிரகமுமுடைய நமது சுப்பிரமணியக்கடவுளே குலதெய்வம். இப்படிப்பட்ட சில விசேடங்கள் இத்தேசத்துக்கு இருக்கின்றன. இருந்தும் என்னை! முன் பேசப்பட்ட பல குறைவுபாடுகளினால் இவ்விசேடங்கள் பிரகாசிக்கவில்லை.

நம்மவர்களே! நெடுங்கால அநுபவத்தால் அறிந்த உண்மைகளைத் தேசாபிமானத்தினாலுஞ் சமயாபிமானத்தினாலும் உங்களுக்கு வெளிப்படுத்திய நம்மை உங்களுக்குப் பகைவரெனக் கொண்டு தூஷித்துத் திரியாது, மேலே பேசப்பட்ட குறைவுபாடுகளை விரைவில் அகற்றி, உங்கள் இகபர லாபங்களை அடையும்படி முயலக் கடவீர்கள். நம்மை நீங்கள் எப்படித் தூஷிக்கினும் உங்களுக்கு நன்மையாக முடிபவைகளை உங்களுக்கு வெளிப்படுத்துதற்கு நாஞ் சிறிதுந் தடைப்படாவண்ணஞ் சிவபெருமான் றிருவருள் செய்க. பொதுப்படப் பலருக்கும் நன்மைகளைச் சொன்னோம். திருந்த விருப்பமுடையவர் திருந்தட்டும்; திருந்தவிருப்பமில்லாதவர் தமக்குப் பயன்படாதாயினும் பிறர் சிலருக்காயினும் பயன்படாமே என்றெண்ணி வாய் மூடிக்கொண்டிருக்கட்டும். நாங்கள் எப்படி நடக்கினும் நடப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்பார்க்கு, நாம் எப்படிக் கண்டிப்பினுங் கண்டி

ப்போம் நீர் ஒன்றும் பேசாதிருக்கலாமே என்போம். பிறர் செய்யும் அநீதிகளைக் கண்டித்தற்கு நீர் யார்! கடவுளோ அரசரோ என்பார்க்கு, கடவுள் கட்டளைக்கும் அரசர் கட்டளைக்கும் மாறாகவே பிறர் செய்யும் அநீதிகளை, அக்கட்டளைக்கு அமைந்து, கண்டித்தலாகிய நமது நீதியைக் கண்டித்தற்கு நீர் யாரோ சற்றே பேசும் என்பேம். ஆகா! பலமனிதராலும் பகைக்கப்பட்டீர் இனிக் கெட்டீர் என்பார்க்கு, ஓகோ கடவுளுக்கஞ்சும் அச்சம் பெருகப் பெருக மனிதருக்கஞ்சும் அச்சங் குன்றிக் குன்றிவிடும் என்பதறியீர்போலும் என்போம். எவ்விதத்தாலும் வாயெடுக்க ஒட்டேம் ஒட்டேம்.

இப்புத்தகத்திலே பேசப்பட்ட போலிக் கிறிஸ்தவர்களையும் போலிச் சைவர்களையும் போலிச்சைவகுருமாரையும் நாங்கள் அறிந்துகொள்ளல் வேண்டும் அவர்கள் பெயரைச் சொல்லல்வேண்டும் என்பீர்களாயின், நாஞ் சொல்லேஞ் சொல்லேம். குறிப்பாலாயினும் அறிந்துகொள்ளும்படி ஒருபாயஞ் சற்றே சொல்லலாகாதா என்பீர்களாயின், "பூசினிக்காயெடுத்தவனைத் தோளிலே தெரியும்" என்றாற்போல ஒருபாயஞ் சொல்வோங் கேளுங்கள். இப்புத்தகத்தை வாசிக்கும் பொழுதுங் கேட்கும்பொழுதும் வாய் முறுமுறுத்தலிலும் உதடு துடித்தலிலுங் கண் சிவத்தலிலும் முகங் கறுத்தலிலுஞ் சரீரம் படபடத்தலிலும் இடையில் எழுந்து ஓட்டம் பிடித்தலிலும் அவர்களை அறிந்துகொள்ளலாம்; விடாதேயுங்கள். இவை நிற்க.

இந்தியாவிலே சைவசமயிகளுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றில்லாதவர் பலரேயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே கிறிஸ்துமதத்திற் புகுந்தவர்களுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றுற்றவர் அரியராதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னையென்னிற் கூறுதும்: எத்துணைக்காலந் திருப்பித் திருப்பிப் படிப்பினுங் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபு

ஞானத்துள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினால் இவர்களுள்ளத் தூற்றெடுத்த மெய்புணர்வேயாம். இப்போதும் இருக்கின்ற ஒரு கிறிஸ்துசமய உபதேசியார் ஏறக்குறைய இருபத்தெட்டு வருஷத்துக்கு முன் நம்முள்ளே நால்வருடன் அந்தரங்கத்திற் கலந்து பேசியபோது "பைபில் வசனங்களெல்லாம் ஒருங்கு திரண்டுங் கந்தபுராணத்து அவைபுகுபடலத்தினும் அமைச்சியற் படலத்தினுமுள்ள பதிலக்கணத் திருவிருத்தங்களுள் ஒன்றனது ஓரடிக்குத்தானும் ஆற்றாது ஆற்றாது! என்ன அற்புதம் அற்புதம்" என்று கண்ணீர்வார உரோமஞ் சிலிர்ப்ப மிக்க ஆராமையோடு சொல்லினர். ஒரு கிறிஸ்தவர் ஏறக்குறைய நாற்பதுவருஷத்துக்கு முன் ஒருநாட் கிறிஸ்துமதப் பிரசங்கஞ் செய்தபோது "பதிலக்கணம் பைபிலிலே எங்கே சொல்லியிருக்கின்றது! சைவருடைய சிவஞானசித்தியாரைப் பார்த்தாலன்றோ பதிலக்கணம் இனிது விளங்கும்" என்று பாதிரிமாருடைய நெஞ்சம் படபடெனத் தம்வசமிழந்து சொல்லினமையும், பின்பு அவரைப் பாதிரிமார் ஓரறையிற் கொண்டுபோய் இருத்திக் கண்டிக்க, அவர் "நான் என்மனச்சான்றுக்கு விரோதமாகப் பொய் பேசும்படி சொல்கின்றீர்களோ" என்று மேசையில் அறைந்தாரவாரித்தமையும், பலரும் அறிகுவர் அறிகுவர். ஒரு கிறிஸ்தவர் பாதிரி பள்ளிக்கூடத்திலே தம்மிடத்து விவிலியநூற் பாடங் கேட்ட சைவசமயப் பிள்ளைகள் சிலரை ஒருநாள் வேறாகப் புறத்திலே கொண்டுபோய் "நான் சிறுபிராயத்தில் அறியாமையினாலே கிறிஸ்துசமயப் படுகுழியில் விழுந்துவிட்டேன். பைபில் முழுதும் சிவஞானசித்தியாரில் ஒரு திருவிருத்தப் பாதிக்கும் ஈடாகாது. சிறுவர்களே, பைபிளினாலே மயங்கிக் குழியில் விழுந்துவிடாதேயுங்கள்" என்றார். ஒரு கிறிஸ்தவர் வெகு சனங்களெதிரே இறக்கும்போது, தம்வசமிழந்து "பூதமுங் கரணமும் பொறிகளும் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும்--நாதமுங் கடந்த வெளியிலே நீயு நானுமாய் நிற்குமா றுளதோ—வாதமுஞ் சமய பேதமுங் கடந்த மனோகர விம்பசா காரனே--ஏதுமொன் றறியேன்

யாதுநின் செயலே யிறைவனே யேகநாயகனே" என்னுந் திருவி ருசைப்பாவால் எமது சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து இறந் தனர். இவ்வுண்மையெல்லாம் அறிந்தறிந்தன்றோ, பாதிரிமார்கள் "கிறிஸ்துமதம் எத்தேசத்திற் பரவினும் பரவும்; யாழ்ப்பாணத் திில் உள்ளபடி பரவாது" என்று அந்தரங்கத்திலே புலம்புகின்றா ர்கள். இவ்வியாழ்ப்பாணத்திலே நெடுங்காலம் வாசஞ் செய்துகொ ண்டு சைவசித்தாந்த பண்டிதர்களோடு பலநாளும் சமயவாதஞ் செய்து சைவசித்தாந்தத் துண்மையை அறிந்த சில பாதிரிமா ர்களுக்கு உட்பற்றுச் சைவசமயத்தினிடத்ததேயாம். இவ்வுண் மை அவர்களோடும் அந்தரங்கத்திற் கலந்து சம்பாஷித்த விவே கிகளுக்கு இனிது விளங்கும். அப்பாதிரிமார்கள் நமது பெரியபு ராணத்துச் சாக்கிய நாயனார் போலக் காலம் விட்டார்கள், விடுகி ன்றார்கள், விடுவார்கள். மனத்திலே நமது பதிரூப பாசிவத்தி யானம்! வாக்கிலே தமது பசுரூப கிறிஸ்துமதப் பிரசங்கம்!!! சைவசித்தாந்திகளுடைய மண்ணும் வீசப்பெற்றறியாத மற்றை யஞ்ஞானப் பாதிரிமார்கள் யாது செய்வார்கள்! பாவம் பாவம்!!!

இப்புத்தகத்தின் இங்கிலீசு மொழிபெயர்ப்பு விரைவில் அச்சிற்பதிப்பிக்கப்படும். இப்புத்தகத்திலே பேசப்பட்டவைகள் எல்லாமேனும் அவைகளுள்ளே பலவேனும் சிலவேனும் ஒன்றே னும் பொய்யென்று யாராயினுங் கண்டாராயின், அவர் புறங்கூ றித் திரியாது உலகறியப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தக் கடவர்.

சைவசமயிகளே! இன்னும் ஒன்று சொல்லி முடிப்போம். தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந் தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றா கிய திருக்கேதீச்சுரத்துக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகமொன்

றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சரம் இவ்வடமாகாணத்தின்கண்ணுள்ள மன்னாருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகாஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வர்.

திருச்சிற்றம்பலம்.

ஆங்கீரசஂஞு<br>ஐப்பசிமீ.<br>(கலி; ௪௯௭௪.) } சைவப்பிரகாசசபையார்.

---

## ௬. சைவசமயி.

விபூதி தரிப்பது மாத்திரமே சைவசமயிகட்கு இலக்கணம் என்று அநேகர் எண்ணுகிறார்கள்.

விபூதி தரிப்பது, மற்ச மாமிசம் புசியாது விடுவது இந்த இரண்டு மாத்திரமே சைவசமயிகட்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிறார்கள்.

விபூதி தரிப்பது மற்ச மாமிசம் புசியாது விடுவது, மற்ச மாமிசம் புசிக்கிறவர் கையாற் போசனஞ் செய்வது இந்த மூன்று மாத்திரமே சைவசமயிகட்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகிறார்கள்.

சைவசமயிகட்கு உரிய முக்கியலக்கணங்களாவன:—

௧. கொலை, களவு, கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், வியபிசாரம், பொய் முதலாகிய பாவங்களை மரணபரியந்தம் விலக்கி நடப்பது.

௨. உயிர்களுக்கு இரங்குதல், மெய்பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்னமாவது கொடுத்தல், செய்ந்நன்றி யறிதல் இந்தத் தருமங்களை மரணபரியந்தம் பாதுகாத்து நடப்பது.

௩. பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, இராசா முதலிய பெரியோர்களை மரணபரியந்தம் உபசரிப்பது.

௪. சிவதீக்ஷை பெற்றுக்கொள்வது,

௫. விபூதி ருத்திராக்ஷந் தரிப்பது.

௬. சந்தியாவந்தனம், சிவத்தியானம், பஞ்சாக்ஷரசெபம், சிவஸ்தோத்திரம் இவைகளை மரணபரியந்தம், நித்தமும் ஒரு பத்து நிமிஷ நேரமாவது, மனத்தை ஒடுக்கி விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது.

௭. நித்தியமாவது, புண்ணியகாலங்களிலாவது சிவலிங்கப் பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதிப்பது.

௮. சைவ வினாவிடை, சிதம்பரமான்மிய வசனம், பெரியபுராணவசனம் முதலாகிய புத்தகங்களை வாசித்தாவது கேட்டாவது அறிவது.

௯. சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணியபாவங்களையும் சிவபெருமானை வழிபடு முறைமையையும் அறிவிக்கிற சைவப்பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.

௰. சிவநிந்தை, சிவசாத்திர நிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைக் கேளாது நீங்கிவிடுவது.

௧௧. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சைவசமய குரவர் நால்வருடைய திருநக்ஷத்திரங்களிலே, அவரவருடைய சரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங்கொடுத்து, விரதத்துடன் இருப்பது.

௧௨. செய்யத்தகாத பாவத்தைச் செய்தாலும், செய்யத்தக்க புண்ணியத்தைச் செய்யாது விட்டாலும், மனம் பதைபதைத்து அஞ்சி நடுநடுங்கி, குருவை அடைந்து, அவர் சிவாகமப் பிரகாரம் விதித்த பிராயச்சித்தத்தை விசுவாசத்துடன் செய்துகொள்வது.

வெகுதானிய ௵
ஐப்பசி ௴
கலி: ௪௯௮0.

——

# எ. அநாசாரம்.

க. மற்சமாமிசம் புசித்தல்.

உ. கள்ளுச் சாராயங் குடித்தல்.

ரு. மற்சம் மாமிசம் புசிப்பவர் கள்ளுச்சாராயங் குடிப்பவர், தாழ்ந்த சாதியார், அன்னியசமயிகள் என்கிற இவர்களிடத்தாவது, இவர்களுடன் இருந்தாவது, இவர்கள் காணவாவது போசனம் பண்ணுதல்.

ச. சனனசௌசம் மரணசௌசம் உடையவரிடத்தே போசனம் பண்ணுதல்.

ரு. போசனஞ்செய்த உடனே எச்சில் தெளியாது விடுதல்.

சு. எந்தப்பாத்திரத்தையாவது எச்சிலாக்குதல்.

எ. பலகாரம் பழம் முதலியவைகளை எச்சில்பண்ணிப் புசித்தல்.

அ. புகையிலைச் சுருட்டுப் பிடித்தல்.

கூ. வெற்றிலை பாக்கு வாயில் இருக்கச் சயனித்தல்.

க0. காலையிலே தந்தசுத்தி பண்ண முன்னே வெற்றிலை பாக்குப் போடுதல்.

கக. வாயோடு கையையுங் கையோடு பாத்திரத்தையும் அணைத்து, எச்சில்பண்ணித் தண்ணீர் குடித்தல்.

கஉ. வீட்டு முற்றத்திலும், கிணற்றங்கரையிலும், குளக்கரையிலும், ஆற்றங் கரையிலும், பூந்தோட்டத்திலும், திருவீதியிலும், எச்சில் உமிழ்தல், மலசலங்கழித்தல்.

கரு. ஸ்நானத்துக்குஞ் சமயனுக்கும் உபயோகப்படுகிற சலத்திலே சௌசம் பண்ணுதல்.

கச. கிணற்றங்கரையிலே சௌசம் பண்ணுதல்.

கரு. சௌசத்தின்பொருட்டுப் பாத்திரத்திலே சலம் மொண்டு கைத்தாங்கொள்ளாது மலசலங்கழித்தல்.

௧௬. சௌசஞ் செய்த உடனும், தந்தசுத்தி செய்த உடனும், போசனஞ் செய்த உடனும், வாய்கொப்பளித்துக் கால் கழுவாது விடுதல்.

௧௭. க்ஷௌரம் பண்ணுவித்துக் கொண்டாலும், துக்கவீட்டுக்குப் போனாலும், உடுத்த வஸ்திரத்துடனே முழுகாது விடுதல்.

௧௮. முகமாத்திரம் க்ஷௌரம் பண்ணுவித்துக்கொள்ளுதல்.

௧௯. மத்தியானத்துக்குப் பின் க்ஷௌரம்பண்ணுவித்தல்.

௨௰. தைச்சங்கிராந்தியிலும், ஆசௌச முடிவிலும், பழைய மட்பாண்டங்களைத் தள்ளாது விடுதல்.

௨௧. மட்பாண்டங்களை எல்லாருங் காணும்படி வெளியிலே வைத்தல்.

௨௨. பாண்டங்களை நாய் காகம் முதலியவை தீண்டவிடுதல்.

௨௩. ஓரத்திலே துப்பாது வழியிலே துப்புதல்.

௨௪. கஞ்சா அபின் உண்டல்.

இந்த அநாசாரங்களை எல்லாரும் விலக்கித் திருத்தமுற நடக்கக் கடவர்கள்.

வெகுதானியஹ
ஐப்பசிமீ.
(கலி; ௪௯௮௰.)

## ௮. திருக்கோயிலிலுந் திருவீதியிலுஞ் செய்யத் தகாத குற்றங்கள்.

௧. ஸ்நானஞ் செய்யாது போதல்.

௨. தோய்த்துலராத வேட்டி தரித்துக்கொண்டு போதல்.

௩. கால்கழுவாது போதல்.

௪. ஆசௌசத்துடனே போதல்.

௫. தலையில் வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல்.

௬. சட்டை இட்டுக்கொள்ளுதல்.

௭. போர்த்துக்கொள்ளுதல்.

௮. மேல்வேட்டி போட்டுக்கொள்ளுதல்.

௯. பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல்.

௧0. வாகனமேறிக்கொள்ளுதல்.

௧௧. குடை பிடித்துக் கொள்ளுதல்.

௧௨. வெற்றிலை பாக்கு உண்டல்.

௧௩. துப்புதல்.

௧௪. மலசலங் கழித்தல்.

௧௫. மூக்குநீர் சிந்துதல்.

௧௬. மயிர் கோதி முடிதல்.

௧௭. சூதாடுதல்.

௧௮. சிரித்தல்.

௧௯. சண்டையிடுதல்.

௨0. வீண்வார்த்தை பேசுதல்.

௨௧. காமப்பற்று வைத்தல்.

௨௨. காலை நீட்டிக்கொண்டிருத்தல்.

உ௩. சயனித்தல்.

உ௪. ஆசனத்திருத்தல்.

உ௫ சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கே போதல்.

உ௬. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல்.

உ௭. சுவாமிக்குக் காலை நீட்டி நமஸ்காரம் பண்ணுதல்.

உ௮. சுவாமிக்குக் காலை நீட்டி அங்கப் பிரதக்ஷிணம் பண்ணுதல்.

உ௯. திருமாலியத்தைக் கடத்தல்.

௩0. திருமாலியத்தை மிதித்தல்.

௩௧. தூபி, துசத்தம்பம், பலிபீடம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல்.

௩௨. விக்கிரகத்தைத் தொடுதல்.

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் நரகத்திலே தண்டிக்கப்படுவார்கள் என்று ஆகமங்களும் புராணங்களுஞ் சொல்கின்றன. குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது போலச் சுவாமி தரிசனமாகிய புண்ணியஞ் செய்யப் போய்ப் பாவத்தைத் தேடிக்கொள்வது புத்தியன்று. எல்லாரும், இந்தக் குற்றங்களை விட்டு, விதிப்படி சுவாமிதரிசனஞ்செய்து, திருவருளைப்பெற்று உய்யக்கடவர்கள்.

இந்தியாவிலே, உத்தியோகத்தர்கள் அநேகர், சுவாமி சந்நிதானத்திலே, விதிக்கு விரோதமாகச் சட்டை இட்டுக்கொண்டும், போர்த்துக்கொண்டும், சொக்காய் போட்டுக்கொண்டும், தலையில் வஸ்திரம் தரித்துக்கொண்டும், பாதரக்ஷை இட்டுக்கொண்டும், குடை பிடித்துக்கொண்டும் போகின்றார்கள். அவர்கள், தங்கள் சமயத்தில் விசுவாசமுடையவர்களானால், இப்படிச் செய்வார்களா! கிறிஸ்தவர்களுள்ளே கவர்னர் முதலிய பெரிய பெரிய உத்தியோ

கத்தர்களுந் தங்கள் கோயில்களுக்குத் தங்கள் சமயக் கிரமப்படியே போவதை, அவர்கள் காணவில்லையா! தங்களிற்றாழ்ந்த மனுஷர்கள் தங்களெதிரே பாதரக்ஷை இட்டுக்கொண்டாயினுங் குடை பிடித்துக்கொண்டாயினும் நின்றால், அவர்களைக் கோபிக்கிறார்களே! இது குற்றம் என்று கொண்டவர்கள், இந்தக் குற்றத்தைத் தாங்கள் சுவாமி சந்நிதானத்திலே செய்யத்துணிவது என்னசெருக்கு!!!

வெகுதானிய௵
ஐப்பசி௴
கலி: ௪௯௮௦.

# ௬. சைவ சமயம்

பிறப்பும் இறப்பும் உடையவர்கள் பசுக்கள்; பசுக்கள் எண்ணில்லாதவர்கள்; பசுக்களாவார், தேவர்கள் முதலாகக் கிருமிகளீறாக உள்ள சீவர்கள்.

பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி; பதி ஒருவரே; அந்தப் பதி சிவபெருமான். சிவபெருமானுக்குப் பசுக்களெல்லாம் என்றும் அடிமைகள்; சிவபெருமான் அந்தப் பசுக்கள் தோறும் நிறைந்து நின்று அவர்களையெல்லாம் ஆளுந் தலைவர்; ஆதலாற் சிவபெருமான் ஒருவரே பசுபதி. [பசுக்களுக்குப்பதி-பசுபதி. பசு-ஆன்மா; பதி-தலைவன்]

இந்த உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழிபடுகிற மார்க்கஞ் சைவசமயம். பலரைப் பரம் என்று கொண்டு வணங்குகிற சமயம் சைவசமயம் ஆகாது. சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றாவது, சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர் உண்டு என்றாவது, கொள்வது சிவத்துரோகம்.

சிவபெருமானின் வேறாகாத திருவருளே சிவசத்தி; அந்தச் சிவசத்தியே பார்வதி தேவியார் என்று சொல்லப்படும். சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கொண்டருளிய மூர்த்தங்கள்:-- விநாயகக் கடவுள், சுப்பிரமணியக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள். இவர்களுக்குச் செய்யும் வணக்கம், சிவபெருமான் ஒருவரைக் குறித்த வணக்கமேயாம். சத்தி-வல்லமை.

முப்பத்து முக்கோடி தேவர்களைப் பரம் என்று கொண்டு வணங்குகிற மார்க்கஞ் சைவசமயம் என்று மூடர்கள் பலர் சொல்லுகிறார்கள். மனிதர்களைப் போலவே பிறந்தும் இறந்தும் உழ

னுகிற தேவர்களைப் பரம் என்று சொல்வது சைவசமயத்துக்கு முற்றும் விரோதம்.

சைவசமயிகள் அஞ்ஞானிகள் (Heathens) என்று கிறிஸ்தவர்கள் வழங்குகிறார்கள். அஞ்ஞானி என்ற சொல்லுக்குப் பொருள் மெய்க்கடவுளை அறிகிற அறிவு இல்லாதவன். கிறிஸ்தவர்கள் தங்கள் கருத்தின்படி தாங்கள் சைவசமயிகளை அஞ்ஞானிகள் என்று வழங்கலாம் என்றால், சைவசமயிகளுந் தங்கள் கருத்தின்படி தாங்கள் கிறிஸ்தவர்களை அஞ்ஞானிகள் என்று வழங்கலாமே!

சைவசமயிகள் என்று பெயர் இட்டுக்கொண்டு, அநேகமூடர்கள், உயிர்ப்பலி ஏற்கிற துட்ட தேவதைகளையும், காடன், மாடன், சுடலைமாடன், காட்டேறி, மதுரைவீரன், கறுப்பன், பதினெட்டாம்படிக்கறுப்பன், சங்கிலிக்கறுப்பன், பெரியதம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சி முதலானவைகளையும், வணங்குகிறார்கள். இந்தியாவில் அநேக மூடர்கள் மகமதியருடைய பள்ளிவாயிலைச் சேவிக்கிறார்கள். இலங்கையில் அநேக மூடர்கள் ரோமான் கத்தோலிக்கருடைய மரியை கோயிலுக்குக் காணிக்கை செலுத்துகிறார்கள். இவர்கள் எல்லாருஞ் சிவத்துரோகிகள்; இவர்களே அஞ்ஞானிகள்.

சைவசமயத்தைத் தமிழ்ச் சமயம் என்றும், சைவசமயக் கோயிலைத் தமிழ்க் கோயில் என்றும், அறிவில்லாத சனங்கள் வழங்குகிறார்கள். தமிழ் என்பது ஒருசமயத்தின் பெயரன்று, ஒரு பாஷையின் பெயர்.

பெறுதற்கு அரிய மனிதப் பிறவியைப் பெற்றும், மிகமேலாகிய சைவசமய மரபிலே பிறந்தும், சைவசமயம் இப்படிப்பட்டது, அந்தச் சமயக் கடவுள் இப்படிப்பட்டவர், அவரை வழிபடுகிற முறைமை இப்படிப்பட்டது என்று ஆராய்ந்து அறிந்துகொண்டு, சைவசமயத்தை அநுட்டியாது, நேர்ந்த நேர்ந்தபடி நடப்பது, ஐயையோ! நரகத்துன்பத்துக்குக் காரணம்.

சைவசமயிகள் சைவசமயத்தை அறியாது கெடுவதற்குக் காரணம், சைவசமயத்தைச் சைவசமய குருமார்கள் பிரசங்கஞ் செய்யாது விடுதலே. யாதானும் ஒரு சமயத்தை அறிந்து பிரசங்கஞ் செய்யாதவர்கள், அந்தச் சமயத்துக்குத் தாங்கள் குருமார்கள் என்று சொல்லிக்கொண்டு திரிவதும் அந்தக் குருத்துவத்துக்கு உரிய பொருளையும் மரியாதையையும் தாங்கள் பெற விரும்புவதும் என்னை! வெட்கம்! வெட்கம்!

வெகுதானிய ஞு
ஐப்பசி மீ
(கலி: ௪௯௮0)

---

# ௧௦. போலியருட்பாமறுப்பு

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் இவ்வைந்தும் அருட்பாவெனப் பெயர் பெற்று, சைவத்துக்கும், சிவபூசைக்கும், சிவாலய நித்திய நைமித்திகங்களுக்கும், சிவதரிசனத்துக்கும் அடியவர் பூசைக்கும் நியமமந்திரங்களாய் இருக்கும். இவ்வாறு திருக்கோவையாருண்மையிலே சொல்லப்பட்டது.

இவைகளுள்ளே, தேவாரம் அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னுஞ் சமயாசாரியர்கள் மூவராலும் அருளிச் செய்யப்பட்டது. சிவபெருமான் உமாதேவியாருக்குச் சதுர்யுகதருமங்களுங் கூறிய பின்னர், இனிக் கலியுகத்திலே அறுபத்துமூன்று தொண்டர்கள் பிறந்து தம்மேற் பத்திசெய்வார்கள் எனவும், அவர்கள் சரித்திரத்தை உபமன்னியுமுனிவர் பத்தர்கூட்டத்துக்குச் சொல்லுவர் எனவுங் கூறி, அச்சரித்திரத்தை முன்னுரைத்தருளினார் என்று, பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே நவமாம்சத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் திருவாய்மலர்ந்தருளிய பிரகாரமே, அறுபத்துமூன்று நாயன்மார்களுந் திருவவதாரஞ்செய்து முத்தி பெற்ற பின்பு, உபமன்னியுமகாமுனிவர் அவர்கள் சரித்திரத்தை இருடிகளுக்கு அருளிச்செய்தார். அதற்கு உபமன்னியு பத்தவிலாசம் என்பது பெயர். உபமன்னியு மகாமுனிவர், சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற்கடலை உண்டவரும், கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷைசெய்து சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொடுத்தவருமாயுள்ளவர் என்று, சைவபுராணம், கூர்மபுராணம், மகாபாரதம் முதலிய நூல்களாலே

---

*இ[illegible] தியாகேசமுதலியாரோற் பதிப்பிக்கப்பட்டது

நிச்சயிக்கப்பட்டவர். உபமன்னியுபக்த விலாசமானது சிவரகசியத்திலே சொல்லப்பட்ட அறுபத்துமூவர் சரித்திரத்துக்கு ஒத்திருக்கின்றது. இன்னும் அகஸ்தியமகாமுனிவரும் இவ்வறுபத்துமூவர் சரித்திரத்தைத் தம்மாணாக்கர்களுக்கு அருளிச்செய்தனர். அதற்கு அகஸ்திய பக்தவிலாசம் என்பது பெயர். விட்டுணு சிவசாரூப்பியம் பெறும் பொருட்டுக் காஞ்சிபுரத்திலே தவஞ்செய்தபொழுது சிவபெருமான் வெளிப்பட்டுக் கலியுகத்திலே சீர்காழியிற் கௌணியர் கோத்திரத்தில் அவதரிக்கும் ஞானசம்பந்தனுடைய தமிழ்ப்பதிகத்தினாலே நமது சாரூப்பியம் பெறுவாய் என்று திருவாய்மலர்ந்தருளினார் என்றும், அப்படியே நிகழ்ந்ததென்றும், காஞ்சிமான்மியத்து இருபத்துநான்காமத்தியாயத்திற் சொல்லப்பட்டது. சிவபாதவிருதயர் சைனசமயத்தையும் பௌத்த சமயத்தையும் மறுத்துச் சைவத்தை நிறுத்தும்பொருட்டு முருகக்கடவுளைத் தமக்குப் புத்திரராகத் தரும்படி தவஞ்செய்தமையால், சிவபெருமான் முருகக்கடவுளைப் புத்திரராகக் கொடுத்தருளினார் என்பதும், அவர் சரித்திரமும் சீர்காழி மான்மியத்து இருபத்துமூன்றாமத்தியாயத்திற் சொல்லப்பட்டன. இந்நாயனார் சரித்திரத்தின் ஓர்பாகம் ஆலாசிய மான்மியத்துஞ் சொல்லப்பட்டது. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் குழந்தைப் பருவத்தில் உமாதேவியாருடைய ஞானப்பாலுண்டு தமிழ்ப்பதிகஞ் செய்தருளினமை வடமொழிச் சௌந்தரியலகரியிலே சிறப்பித்துரைக்கப்பட்டது. அச்சௌந்தரியலகரி, ஆதியிலே திருக்கைலாசமலையில் எழுதப்பட்டிருந்து, பின்பு புட்பதந்தமுனிவராலே மகாமேருமலையில் எழுதப்பட்டு, பின்பு கௌடபாதமுனிவராலே சங்கராசாரியருக்கு உபதேசிக்கப்பட்டு, பின்பு அவராலே இப்பரதகண்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளென்னுஞ் சமயாசாரியரால் அருளிச் செய்யப்பட்டுச் சிதம்பர சபாநாயகராலெழுதப்

பட்டது. அவர் சரித்திரம் ஆலாசிய மான்மியம், திருப்பெருந்துறைமான்மியம் முதலியவைகளிலே சொல்லப்பட்டது.

திருவிசைப்பா, திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், சேந்தனார் முதலிய ஒன்பது நாயன்மார்களாலும், திருப்பல்லாண்டு அவர்களுள் ஒருவராகிய சேந்தனாராலும் அருளிச்செய்யப்பட்டன. இந்நாயன்மார்கள் சரித்திரமும், இவர்கள் செய்தருளிய அற்புதங்களும், திருவாவடுதுறை மான்மிய முதலியவைகளிலே சொல்லப்பட்டன.

பெரியபுராணம் சேக்கிழார் நாயனாரால் அருளிச்செய்யப்பட்டது. அவர் சரித்திரமாகிய சேக்கிழார் புராணஞ் செய்தருளினவர் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர். அவர் தில்லைவாழந்தணர்களுள் ஒருவர்; சபாநாயகர் விடுத்தருளிய "அடியார்க்கெளியன்சிற்றம்பலவன் கொற்றங்குடியார்க் கெழுதியகைச் சீட்டுப் படியின்மிசைப் பெற்றான்சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்தி கொடுக்க முறை" என்னுந் திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு பெற்றான்சாம்பானுக்கு உடனே முத்தி கொடுத்தருளினவர்; அப்பெற்றான் சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோருங் காண அருளுண்மையை வெளிப்படுத்தி அவர்கள் சந்தேகத்தையொழித்தற்பொருட்டு முள்ளிச்செடிக்கு முத்திகொடுத்தருளினவர்.

சருவஞ்ஞராகிய சிவபெருமானுடைய திருவாக்கினாலும், அவரருள்வழிப்பட்ட இருடிகளுடைய திருவாக்குக்களினாலும், திருக்கைலாசபரம்பரைச் சந்தானாசாரியர்களுடைய திருவாக்குக்களினாலும், மேற்கூறிய நாயன்மார்கள் பசுகரணநீங்கிச் சிவகரணம் பெற்றவர்கள் என்பது தெளிவுற நாட்டப்படும். ஆதலினால், இந்நாயன்மார்கள் அருளிச்செய்த தேவார முதலிய ஐந்தும் பதிவாக்கென்றே தெள்ளிதிற் றுணியப்படும்; பசுவாக்கென்று நினைக்

க்னும், அது பிறவித்துன்பத்துக்குப் பாதகத்துக்கும் ஏது வாகும். இவர்கள் திருவாக்கு அருட்பாவென்பதும், வேதத்தி னும் பார்க்க இவைகளிற் புனைந்த சிவபிரானுக்கு அதிகப்பிரியுள் ளது என்பதும், சிவபிரான் உமாதேவியாருக்குக் கூறியருளிச் சிவாகமத்திற் கூறிய கிரந்தங்களுக்கு அநியாயமே. இக்கா லமாக்களுள், சமயாசாரியர் நால்வரையும் சந்தானாசாரியர் நால்வ ரையும் ஞானத்திருமேனியாகிய ஞானபூசையிலே சிவலிங்கப் பெருமானோடு பூசிக்கும்படி விதிக்கப்பட்டிருக்கின்றது. அத் தத்துவப்பிரகாச மகத்துவ மெய்மை நூல்களாலே துணியப்படும். அப்படியே ஞானாசிரியர் மாணாக்கர் பண்டைக்காலமுதற் பூசித் துக்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வருட்பாவைகளையும் ஏடோதும் சிவமயமாகப் பூசித்து வும், இவைகளைச் சிவாலய சித்திர கைவித்தியங்களிலும் சந்நி தானங்களைச் சிவபூசை மகோற்சவ பூசைகளிலும் ஓதுதலும், அங்க ளைப் பதுமவர்க்க வழிபடுதலும், சிவாகம விதிமுறைய போகம் ஞா னம் என்னும் காலத்திரயத்திலும் பண்டைக்காலம் தொடங்கி வழங்கப்பட்டு வருகின்றன.

இவையெல்லாம் இங்ஙனமாக, இக்காலத்திலே கருங்குழி இராமலிங்கபிள்ளையென்பவர் தாம் சிவாநுபூதி பெற்றவரென்று உலகத்தார் நம்பித் தம்மை வழிபடும்பொருட்டுச் சில பாடல்க ளைப் பாடி, அவைகளுக்குத் திருவருட்பாவென்றும், தமக்குத் திருவருட்பிரகாச வள்ளலாரென்றும், தாமே பெயரிட்டுக்கொண் டும், தம்முடைய மாணாக்கருள் ஒருவராலே தமக்குத் திருவருட் பா வரலாறென ஒரு புராணஞ் செய்வித்து இறுதியிற் சேர்த்தும் கொண்டும், அச்சிற் பதிப்பித்து விக்கிரயஞ் செய்விக்கின்றனர். அது கண்ட அறிவிலிகள் சிலர் அவ்விராமலிங்க பிள்ளையைச் சமயாசாரியர்களோடு சமத்துவமுடையவரென்றும், அவர்பாட லைத் தேவார திருவாசகங்களோடு சமத்துவமுடையதென்றும்,

பாராட்டிக்கொண்டும், பூசித்துக்கொண்டும், அநுட்டானம் பூசை சிவதரிசன முதலியன செய்யுங்காலங்களில் ஓதிக்கொண்டும் வருகின்றார்கள்; சிலபோது சென்னபட்டணத்துள்ள சிவாலயங்களில் உற்சவத்திலே தேவார முதலிய அருட்பாக்களை நிறுத்திவிட்டு இராமலிங்கபிள்ளைபாடலையே ஓதுவிக்கின்றார்கள்.

இவ்வேழைகள் இப்படி மயங்கிக் கெடுதற்குக் காரணம், இராமலிங்கபிள்ளை திருவருள் பெற்றவரென்று அவர்பாடலிலும் அவர் மாணாக்கர் பாடலிலுஞ் சொல்லப்பட்டிருத்தலும், இராமலிங்கபிள்ளைக்கு இரசவாதந் தெரியுமென்றும், அவர் பல அற்புதங்களைச் செய்கின்றாரென்றும், அவரும் அவர் மாணாக்கர்களும் சொல்லிக்கொண்டு திரிதலுமேயன்றி வேறில்லை. ஆதலின், அவ்வேழைகண்மேல் வைத்த இரக்கமிகுதியினாலே, அப்பாடல்களுட் சிலவற்றையும் அவர் வாய்மொழிகளையும் இங்கே எடுத்துக் காட்டி; அவர் திருவருள் சிறிதும் பெறாதவரென்றும், உலகத்தாரை வஞ்சித்துப் பொய்ப்புகழ் பெறப் புகுந்தவரென்றும், தெளிவு பெறக் காட்டுவோம்.

இராமலிங்கபிள்ளை தாம் ஓதாமலே திருவருளால் எல்லாவற்றையும் அறிந்தவர் என்று தம் பாட்டினாலே தாமே சொல்கின்றார். அப்பாட்டு இது:--

"நாதாபொன்னம்பலத்தேயறிவானந்தநாடகஞ்செய்
பாதாதுரும்பினும்பற்றாதவென்னைப்பணிகொண்டெல்லாம்
ஓதாதுணரவுணர்த்தியுள்ளேநின்றுளவுசொன்ன
நீதாநினைமறந்தென்னினைக்கேனிந்தநீணிலத்தே"

அவர் மாணாக்கர் வேலுமுதலியார் அவ்வருளால் தாமும் எல்லாம் ஓதாதுணர்ந்தவரென்கின்றார். அப்பாட்டு இது;--

"மீதானத்துயர்பள்ளிமேவவெமைவைக்குமெங்கண்
மேதானைப்பள்ளிவிழைந்தருளிற்றென்றுரைப்பதெவன்

ஓதாமேயவையெல்லா முணர்ந்தருமுருவொளியைச்சேர
ஓதாயேயுணர்ந்ததென்பா ருணர்கிலா ரொருவியப்போ"

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், வித்தியாரம்பஞ் செய்து கொள்ளாமலே மூன்றாம்பிராயத்திலே ஞானப்பாலுண்டு அக்கணத்தே வேதசிவாகமாதிகளையெல்லாம் ஒருங்குணர்ந்து தேவாரம் பாடியருளினமையால், தானுணர்ந்தவரென்று சிவபிரானாலும் இருடிகளாலும் மெய்ஞ்ஞானிகளாலும் சிறப்பித்துரைக்கப்பட்டார். இராமலிங்கபிள்ளையும் அவர் போன்றவராய் ஓதாதுணர்ந்தது சத்தியமேயாயின், அவர்கள் யாரொருவரிடத்தும் சுவடியேந்திப் படிக்கவில்லையா? படித்ததைப் பலர் காணவில்லையா? முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைக்கலாமா? ஓதாதெல்லா முணர்ந்தேம் என்றதில் எல்லாமென்றது எல்லாப் பாஷைகளையுமா? சம்ஸ்கிருதம் தமிழ் என்னுமிரண்டு பாஷைகளை மாத்திரமா? தமிழை மாத்திரமா? தமிழிலுள்ள எல்லா நூல்களையுமா? அவைகளுள் இலக்கணம் இலக்கியம் ஞானசாத்திரமென்னும் இம்மூன்றுசிறந்த நூல்களெல்லாவற்றையுமா? அப்படியாயின், தாம் பதிப்பித்த புத்தகங்களிலுள்ள பிழைகளுக்கு யாதுசமாதானஞ் சொல்லுவார்?

தொண்டைமண்டலம் என்றிருக்கவேண்டுவதைத் தொண்டமண்டலம் எனத் தம் மாணாக்கர் ஒருவர் பொருட்டுச் சாதிக்கப் புகுந்து புதுவிதிகள் கற்பித்து அறிவில்லாதாரை வஞ்சித்தாரே! அவைகள் பழவிதிகளென்பாராயின், இன்ன நூலில் இன்ன அதிகாரத்தில் இன்ன இயலில் இத்தனையாஞ் சூத்திரமெனக் காட்டல் வேண்டுமே! தொண்டைமண்டலமே சரியென்பது அகத்தியமுனிவர் வரத்தாற்றோன்றி வடநூற் கடலுந் தென்றமிழ்க் கடலும் முழுதொருங்குணர்ந்து சிவாநுபூதிப் பெருஞ்செல்வமுற்று விளங்கிய திராவிடபாஷ்ய முனிவராகிய திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறைச் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த காஞ்சிப் புராணத்துத் திருநாட்டுச் சிறப்பில் "எந்நாட்டுப் பெருவளமு மெவ்

னைவ செப்பப் பாவேனு பிசாப்பவன், பொன்னுடைய பொக்கெரு
க்கும் பன்னுக்குப் பனிமொருக்கும் போக்குழிக்க, நன்னுடைப்
புலைமொழ் கொண்டேரா டேனைநமைப்பார் ஞானப்பைகை, தன்னு
டபோ தன்னையுமுசக் கனிவாய சரணத்தின் சார்பார்போதும்"
என்றுஞ் செய்யுளாற் றுணிக.

பிரளயாகலராவர் இருமலமுடையாகிய உருத்திரர்களென்பதும், சகலராவர் மும்மலமுடையாகிய பிரமவிட்டுணு முதற் கிருமியீறாக உள்ள உயிர்களென்பதும், சாதாரணமாகிய தத்துவக் கட்டளைகள் வாசிக்கவருக்குந் தெரியுமே. அது தெரியாது, பிரளயாகலர் மும்மலங்களுள் ஒருமலத்தோர், அவர் பிரமன் முதலானோர் என்று ஒழிவிலொடுக்கவுரைப் புத்தகங்களிலே பதிப்பித்த இராமலிங்கபிள்ளையா ருதாதுணர்ந்தவர்! ஸ்ரீ ஸ்திரீ என்னுஞ் சொற்களுக்கும் சீதம் ஹிதம் என்னுஞ் சொற்களுக்கும் வேற்றுமையறியாது, ஸ்ரீகண்ட பரமசிவனென்பதற்குப் பெண்ணைப் பாகத்துடைய பரமசிவனைப் பொருள் கூறித் தமதறியாமையை உலகறியப் புலப்படுத்திய இராமலிங்கபிள்ளையா ருதாதுணர்ந்தவர்! அவர் தாம் பதிப்பித்த ஒழிவிலொடுக்க வுரையிலே சுழுமுனையைச் சுழிமுனையென்றும், சொப்பனத்தைச் சொற்பனமென்றும், ஞாதிருவை ஞாதுருவென்றும், கேட்கவென்பதைக் கேழ்க்கவென்றும், சரியையைச் சரிதையென்றும், பிராரத்தத்தைப் பிராரத்துவமென்றும், தோன்றிய விருத்தகாலமென்பதைத் தோன்றப்பட்ட விருத்தகாலமென்றும், நால் கேட்டலே நாற்கேட்டலென்றும், அழியுமித்தேகாதியென்பதை அழியப்பட்டவித்தேகாதியென்றும், மண்ணினின்றுங் கடகலசாதிகாரியங்களென்பதில் மண்ணினின்றென்பதை மண்ணேயென்றும், நூல்களறிவிக்கமாட்டாவென்பதை நூல்களறிவிக்கமாட்டாதென்றும், மகேசுரனை மயேசுரனென்றும், இச்சாயத்தினத்தை இச்சாயெத்தினமென்றும், அத்தமயனத்தை அத்தமானமென்றும், அவைகளறியாவென்பதை அவைகளறியாதென்றும், இச்சாஞான முதலிய வரு

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41



கீர்த்தனைகளென்பதிற் பட்டினத்தடிகளைப் பட்டதென்றும், போலியிருப்பதைப் பொய் வருகப் போலவிடுத்ததென்பர் என்றும், சிற்றம்பலவரைப் பெரியவரென்றும், மா நகைநடைந் தவனென்றும், அறிவைத்துப்பத்தநுதின்றா தென்பதைக் கிராவணன்றும், சக்கரநதின்றாக தேனென்றும், சுதாசக்கரந்தச் சகளமாக்கவென்றும், சிற்சபையிலே யெதிர்பதநிலைன்றும், தொநாடகதிலவெறிப்புத்தியென்றும், நீலமிதக்கும் சேரனென்றும், தொடையைத் தொடையென்றும், விரிதியமிருந்ததை விரிவாயனுட்டுமென்றும், ஆகவென்றும் விளம்பரங்களை ஆமென்றும் பரிப்பித்திருக்கின்றனர். இன்னும் அப்பிரகாரமானவைகளை யெடுத்துச் சொல்லப் புகின், பனையோலைப் புத்தகமாகப் பருக்குமென்றும். அப்புத்தகத்திற் பண்டிதரையும் பொருள்களையும் குற்றங்களைக்கொண்டு முறைப்படுத்தி வைத்து வரிமுறை வகைப்படுத்த, அதனை கொள்ளும் பெயர்களை வெளியிட்ட வரிசை, முதலாகக் கொண்டு தொடங்கியிருக்கின்றனர். [illegible] ஞானாசிரியரான குருநாதனாரந்தவர்! குமரகுருபரசுவாமிகள் சூத்திரமாட்டு வண்ணம் ஏகமையாயிருந்த திருச்செந்தூர் முருகக்கடவுள் திருவருளினால் ஞானாசிரியத்துவமே பாடியருளிய திருச்செந்தூர்க் கலிவெண்பா இலக்கணப்பிழையில்லாததாயும், சைவசித்தாந்த சாத்திரத்துண்மைப் பொருளையுடையதாயும் இருக்கின்றதே. அவர் பின் பாடியருளிய பிரபந்தங்களும் அவ்வாறே இருக்கின்றன. அங்ஙனமாகவும், அவர் தாம் ஞானாசிரியரென்று தம்மை யொவ்விடத்தேனும் புகழ்ந்துகொள்ளவில்லையே. இராமலிங்கபிள்ளையோ சிறுவர்களுக்குள்ள கல்வியறிவுதானும் இல்லாதவராயிருந்துகொண்டு தம்மைத் தாமே ஞானாசிரியரென்று புகழ்ந்துகொள்ளுதல் சாலவும் வியக்கற்பாலதாம்.

இராமலிங்கபிள்ளை தாம் தண்ணீரால் விளக்கெரித்தாரென்று தாமே தமது பாட்டினால் வெளிப்படுத்துகின்றார். அப்பாட்டு இது:—

"மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்கில்லையென்றார்மே லோர்நானும், பொய்விளக்கேவிளக்கெனவுட் போங்கிவழிகின்றே னோர்புதுமையன்றே, செய்விளக்குப்புகழுடையசென்னநகர்நண்ப ர்களேசெப்பக்கேளீர், நெய்விளக்கேபோன்றொருதண்ணீர்விளக்கு மெரிந்ததுசந்நிதியின்முன்னே"

இதற்குச் சிதம்பரநாதபிரானார், வேலுமுதலியாரும் சாக்ஷியஞ் சொல்லுகின்றார்கள். அவை இவை:—

"தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாநதிக்கட்
டண்ணீர் நெய்விளங்க வோங்குவித்தான்—கண்ணியரா
நங்க ளிராமலிங்க னைவருட் பாமுறையைத்
தங்கமுற மாணு தொழு"

"பண்ணீர்மெய்ச்சுவைமுதிர்ந்ததிருப்பாவலர்நட்பமைந்த
தண்ணீரென்றொருவெண்பாசரம்பந்தபிரான்வழியிற்
றெண்ணீர்க்கொண்கூடல்வருஞ்சிதம்பரமுனிதெரித்தா
னுண்ணீர்மையொன்றுமிலேனுரைப்பதுமோர்புகழாமே"

"நல்லருளினியல்பெளியோமபெறக்காட்டநன்னீராற்
செல்லவிருளறவிளக்கஞ்செரித்துநதிச்சனன
வல்லபிணியறவிக்குமகைகாட்டியபடியுடலி
னல்லல்செயப்பிறவியினைந்துமருண்மொழியானேயறுத்தும்"

இவ்விருவாசகளும் இங்ஙனஞ் சாக்ஷியஞ் சொல்லப் புகுந்த து, இராமலிங்கபிள்ளை தண்ணீரால் விளக்கெரித்ததை நேரே கண்டார்? அவர் சொல்லைக் கேட்டார்? இவர்கள் உலகறிந்த ஆப்தர் களா? சிதம்பரதம்பிரான் மேற்கூறிய வெண்பாப் பாடினவர் தா மேயென்று அறிஞர்கள் சபையிற் சொல்லமாட்டுவாரா? கனிச்சீர் வெண்பாவில் வருமெனை எங்கே கண்டாரோ? இவர் எவ்வாதீன த்துத் தம்பிரானெனப் படுகின்றாரோ அவ்வாதீனத்துப் பண்டார

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR போஷிய MADRAS-41



சந்நிதிகள் இவர் சாக்ஷிபத்தை அங்கீகரித்தருள்வார்களா? உலகத்தார்களே, ஆராயுங்கள் ஆராயுங்கள்.

இராமலிங்கபிள்ளை, தாம் தண்ணீரால் விளக்கெரித்தது சத்தியமேயாயின், சமிநந்தியடிகள்போலவே சுவசமயிகளும் பரசமயிகளுமாகிய வெகுசனங்களெதிரே தண்ணீரால் விளக்கெரித்துப் பரசமயிகளுக்குச் சைவத்துண்மையை வெளிப்படுத்தலாமே! அது தமக்கு ஆவசியகமன்றாயின், அவர்தாந் தண்ணீரால் விளக்கெரித்தமையைச் சென்னைநகர் நண்பர்களுக்கு மேலைச் செய்யுளால் வெளிப்படுத்தவேண்டுவ தில்லையே! அவர் சும்மாவிருப்பினும், இச்சாக்ஷிகளிருவரும் அவரை வலிந்து பிரார்த்தித்துப் பலரெதிரே தண்ணீரால் விளக்கெரிக்கச் செய்து தங்கள் சாக்ஷியம் மெய்ச் சாக்ஷியமெனத் தாபித்தல்வேண்டுமே! இப்படிச் செய்யாவிடத்து ஆசாரியரும் மாணாக்கர்களும் உலகத்தாரை வஞ்சிக்கப் புகுந்தவர்களென்பதற்கு எள்ளளவுஞ் சந்தேகமில்லையே!

இராமலிங்கபிள்ளை சாக்கிரத்திலே நடேசர் தம்மிடத்திற்கு வந்து தம்மைத் தடவித் தம்மோடு பேசித் தமக்கு ஒன்று தந்தாரென்று தம்முடைய பாட்டுக்கள் பலவற்றினால் வெளிப்படுத்துகின்றார். அப்பாட்டுக்களுட் சில வருமாறு:--

“இருளறவோங்கும் பொதுவிலேநடஞ்செ
யெங்குருநாதனெம்பெருமான்
அருளொளிரும்வடிவங் காட்டியொண்முகத்தே
யழகுறும்புன்னகைகாட்டித்
தெருளுறவருமைத் திருக்கையாற்றடவித்
திருமணிவாய்மலர்ந்தருளிற்
பொருளுறவிருந்தோர் வாக்களித்தெனையுடன்
புகுந்தனனப் துணைமாரிதகன்றோ”

"அன்றொருநாளிரவிடைவந் தணிக்கதவந்திறப்பித்
தருண்மலர்ச்சேவடிவாயிற் படிப்புறத்துமகத்து
மன்றவைத்துக்கொண்டென்னை வரவழைத்துமகனே
வருந்தாதேயிங்கிதனை வாங்கிக்கொள்ளென்ன
வொன்றுசிறியேன்மறுப்ப மறித்தும்வலிந்தெனது
வொருகைதனிற்கொடுத்திங்கே யுறைதியெனமறைந்தாய்
இன்றதுதானுடலத்துக் கிசைந்ததுநாயடியேன்
என்னதவம்புரிந்தேனோ வினித்துயரொன்றிலனே'
"நெடுமாலும்பன்றியென நெடுங்காலம்விரைந்து
நேடியுங்கண்டறியாது நீடியபூம்பதங்க
டொடுமாலையெனவருபூ மகண்முடியிற்சூட்டித்
தொல்வினையேனிருக்குமிடந் தனைத்தேடித்தொடர்ந்து
கடுமாலைநடுவிரவிற் கதவுதிறப்பித்துக்
கடையேனையழைத்தெனது கையிலொன்றுகொடுத்துக்
கொடுமாலைவிடுத்துய்கென்றெனத்திருவாய்மலர்ந்தாய்
குணக்குன்றேயிந்நாளின் கொடையையறிந்தனனே"
"உம்பருக்குங்கிடைப்பரிதா மணிமன்றிற்பூத
வுருவடிவங்கடந்தாடுந் திருவடிகளிடத்தே
செம்பருக்கைக்கல்லுறுத்தத் தெருவினடந்திரவிற்
றெருக்கதவந்திறப்பித்துச் சிறியேனையழைத்து
வம்பருக்குப்பெறலரிதா மொருபொருளென்கரத்தே
மகிழ்ந்தளித்துத்துயர்தீர்ந்து வாழ்கவெனவுரைத்தாய்
இம்பருக்கோவும்பருக்கு மிதுவியப்பாமெங்க
ளிறைவநினதருட்பெருமை யிசைப்பதெவனணிந்தே"
"என்வடிவந்தழைப்பவொரு பொன்வடிவந்தரித்தே
யென்முனடைந்தெனைநோக்கி யிளநகைசெய்தருளித்
தன்வடிவத்திருநீற்றுத் தனிப்பையவிழ்த்தெனக்குத்
தகுசுடர்ப்பூவளிக்கவுநான் றுன்வாங்கிக்களித்து

மின்வடிவப்பெருந்தகையே திருநீறுந்தருதல்
வேண்டுமெனமுன்னரது விரும்பியளித்தனநா
முன்வடிவிற்காண்டியென வுரைத்தருளிநின்று
யொளிநடஞ்செயம்பலத்தே வெளிநடஞ்செயரசே"

இப்படி வரும் பாடல்கள் ஏறக்குறைய இருநூறுண்டு.

இராமலிங்கபிள்ளைக்குத் திருவருட் பிரகாச வள்ளலாரெனக் காரணப்பெயருண்டாயிற்றென்று நான்முகப் பத்திரத்திற் கூறப்பட்டதன்றியும், வேலுமுதலியார் பாட்டிலுங் கூறப்பட்டிருக்கின்றது. அது இது:--

"தனித்துரைத்த விராமலிங்கத்தனி மறையா தரித்துய்ந்தா
ரினித்தவருட்பிரகாச வள்ளலெனவினிதேத்தி
யனித்தமற்றார் சிலவறவரங்தோவென் போன்மறந்து
மனித்தனெனக் கொண்டொழிநதார் மலவாழ்விற்சிலமறவர்"

இராமலிங்கபிள்ளைபாடல் திருவருளாலே பாடப்பட்டமையாலும் திருவருளை விளைவித்தலாலும் திருவருட்பாவெனப் பெயர் பெற்றதென்று வேலுமுதலியார் பாட்டுக்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவை வருமாறு:--

'ஆயவருளிறையெங்க ளருட்பிரகாசப்பெருமான்
றூயவருளாற்பொழிந்த சொல்லமிழ்தாந் தமிழ்ப்பெருக்கு
நேயவருட்பற்றுசி நிறைமனத்துப்பெரியர்க்கு
மாயமயக்குழலென்போன் மறவர்க்கு முள்ளுருக்கி"

"அளவாதபேரன்பு சொரிந்தநூளைவிளைவித்துத்
தளவாருநகைக்கயற்கட் டையலிடங்கொண்டபிரான்
வளமாருங்கழன்மலரோ டிரண்டறத்துவாழ்விக்கு
முளவாலேயருட்பாவென் றொருநாமம்பூண்டதுவே"

இராமலிங்கபிள்ளை, தாம் நடேசரைச் சாக்கிரத்தே தரிசித்து அவராலே கட்டித் தழுவப்பட்டு அவரோடு கலந்து பேசி

அவருடைய திருவருளைப் பெற்றதும், தம்முடைய பாடல் திருவருளை விளைவிக்கும் பொருட்டுத் திருவருளினாலே பாடப்பட்டதுஞ் சத்தியமேயாயின்; சமயாசாரியர்கள் போல உலகத்தார் காணச் செத்தவர்களை உயிர்ப்பித்தல் முதலிய அற்புதங்களைச் செய்து, அவ்வற்புதங்கள் வாயிலாகப் புறச் சமயங்களைக் களைந்து சைவசமயத்தை நிறுத்தலாமே! "மறைகணிந்தனை சைவநிந்தனை பொறுமனமும்" "தீமையாம் பரசமயங்க ளொழித்திடுதிறனும்" மெய்யன்பரிலக்கணங்களென்று திருநந்திதேவர் கூறியிருக்கின்றாரே! பசுகரணநீங்கிச் சிவகரணம் பெற்றவர்க்கு அரியது யாது? "பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்--காலனையன் றேவிக்கராங்கொண்ட--பாலன்--மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்-கரணம்போ லல்லாமை காண்" என்னுந் திருக்களிற்றுப்படித் திருவெண்பாவைக் கேட்டிலர்போலும்.

நான் திருவருளைப் பெற்றது என்னுடைய ஆன்மசுகமொன்றன்பொருட்டேயன்றிப் பிறருடைய ஆன்மசுகத்தின்பொருட்டன்று ஆதலால் அற்புதஞ் செய்யும்பொருட்டு என்னை ஒருவர் கேட்கவேண்டுவதுமில்லை என்று சொல்வாராயின், தாம் திருவருளைப் பெற்றவரென்று பாடி உலகறிய அச்சிட்டு விக்கிரயஞ்செய்ய வேண்டுவதுமில்லை. திருவருளினது விளக்கத்தை வரையாது கொடுப்பவரெனப் பொருள்படுகின்ற திருவருட்பிரகாச வள்ளல் என்னும் பெயரைத் தாம் வகிக்கவேண்டுவதுமில்லை. சென்னை நண்பர்களாகிய நம்மையெல்லாம் முன்னிலைப்படுத்தித் தாம் தண்ணீரால் விளக்கெரித்ததை நமக்கெடுத்துரைக்கவேண்டுவதுமில்லை. தாம் வேத சிவாகமங்கள் விளங்கவும், சைவசமயந் தழைக்கவும், வடமொழியுந் தமிழ்மொழியும் நிலைபெறவும், அன்பர்களுக்குச் சித்தி முத்தியிரண்டும் பாலிக்கவும், கடவுளில்லையென்பவர்களாகிய நாத்திகர்களும் உய்யவும், மூன்று கண்ணும், எட்டுப் புயமும், ஐந்து முகமும், காளகண்டமும் கங்கைச்சடையும் மறைந்

துத் தாம் எழுந்தருளி வந்தவரென்று, தமது மாணாக்கராகிய வேலுமுதலியாராலே தமக்குப் புராணஞ் செய்வித்துக்கொண்டும், ஆன்மாக்களுடைய பாசபந்தங்களை அறுப்பனவ தம்முடைய இரு தோளும், அருள் பொழியும் இருகண்ணும், இராமலிங்க அற்பு தத் திருநாமமும், ஆறு திருமுறைகளுமே யன்றிச் சிவபெருமா னுடைய எட்டுப் புயமும், மூன்று கண்ணும் பஞ்சாக்ஷரமும், நான்கு வேதமுமல்லவென்று தமது மருமகனாகிய சுந்தரப்பிள்ளையைக்கொண்டு பாடுவித்துக்கொண்டும், தம்முடைய பாட்டோடு சேர்த்து அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்த வேண்டுவதுமில்லை: அப்பாடல்கள் இவை:--

"மறைவிளங்க வாகமவாய் மைகள் விளங்கச் சைவநெறித்
துறைவிளங்க வடகலையுந் தென்றமிழுந் துணிபொருளி
னிறைவிளங்க நீடுயிர்க ணெறிவிளங்க நிலைவிளங்கப்
பொறைவிளங்கப் பொய்புகுதா தேழையோம் புலம்விளங்க.

அறங்காட்டுந் துறைகாட்டி யறுசமயத் தவரவர்க்குத்
திறங்காட்டிச் சிவங்காட்டிச் சித்தி முத்தித் திருக்காட்டிப்
புறங்காட்டிற் பொய்புடலை யையாமெய்ப் புலங்காட்டி
மறங்காட்டெங் மனக்காட்டை வளராமே மதிகாட்ட.

தவநெறியுந் தவப்பயனுஞ் சார்புஞ்சார் புணர்பொருளுஞ்
சிவனருளு மருட்பயனுந் தேர்ந்தனர்தேர்ந் ததுமுணரா
தவநெறியிற் புக்குழன்றங் கசதியா டுறுமறிவில்
பவநெறியோத் திக்குமுயப் பரிந்தருளி னியல்காட்டி.

சன்மார்க்கத் தவர்யாருந் தனிவிரும்பு நிலைவிரும்பும்
பன்மார்க்கத் தவர்யாரும் பற்றுமொரு பற்றாகி
யென்மார்க்கத் தவர்களுநா டரியபழம் பொருளொளியென்
றுன்மார்க்கத் தவம்போக்கித் தவமாக்கத் துணிந்தருளி.

ஊரொருபே ருருவொன்று மில்லாத வொப்பிலுணர்
வோருருவி னுருமுக்கணு மிருதோளைந்து முகங்
காருறுகண்டமுமாறு கவர்சடையு மறைத்தருளி
யேருறவந் தெழுந்ததுவோ வன்றியிமையவர்க்கன்று.

உருநாமமிராமலிங்க மெனக்கொண்டா ரோங்கருளாற்
குருநாம மந்திரமாக் கொண்டுய்ந்தாருயநினைந்தார்
பெருநாம மந்திரத்தைப் பெற்றியறியாரெல்லாந்
திருநாம மிதுபிள்ளைத் திருநாம மென்பாரே"

"தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனுமெங்கள்
சனிப்பிறப்பை யொறுத்துவினைத் தனித்தொடக்கையறுக்க
வேய்மலர்ந்தகருணை திருமேனிகொண்டகாலத்
தெண்டோளோ விருதோளோ முக்கணோவிருமை
யாய்மலர்ந்தவருட் கண்ணோநாமமெழுத்தைந்தோ
வன்றியருளிராமலிங்க வற்புதப்பொற்பெயரோ
வாய்மலர்ந்த நீரிரண்டு மறையோ மூவிரண்டு
மாமுறையோ வகுத்துரையீர் மயக்கொழிமாதவரே"

திருவருட்பிரகாசவள்ளலெனப் பெயர் வகித்து நாம் பெற்ற திருவருளை உலகத்தாருக்குப் பாலிப்போம் என்று திருவருட்பாவை வெளிப்படுத்தினவர் பரசமயங்களைக் களைந்து சைவத்தை நிறுத்தாது மறுத்தல், அன்னதாதாவெனப் பெயர் வகித்து அன்னக்கொடி கட்டி அன்னதானஞ் செய்யப் புகுந்த ஒருவர் பசித்தவர்களுக்கு அன்னமில்லையென மறுத்தல்போலாமே. இராமலிங்கபிள்ளை, தம்மை ஞானாசாரியரென அடைந்த சிதம்பரத்துத் தீக்ஷிதரொருவர் சன்னிபாதத்தால் வருந்தி "அடியேனைப் பிழைப்பித்தல் வேண்டும் பிழைப்பித்தல் வேண்டும்" என்று கெஞ்சக் கெஞ்சப் "பிழைப்பிப்போம் பிழைப்பிப்போம்" என்று சொல்லிச் சொல்லி இறுதியிற் பிழைப்பியாது இறக்கும்படி கைவிட்டுவிட்

டாரே! அவர் இறந்தபின்னாயினும், தமது திருவருட்பாவினால் அவரெலும்பை ஆணுக்கித் தமது பெருமையை உலகறிய வெளிப்படுத்தினாரில்லையே! கருணையினாலும், ஆச்சிரமத்தாலும் கல்வி முதலிய பிறவற்றாலும் மிக வுயர்ந்த சங்கராசாரிய சுவாமிகளை அஞ்சலிசெய்யவுங் கூசி யாமுஞ் சபாநாயகருஞ் சமமென்று கூறி இறுமாக்குந் தீக்ஷிதர் மரபிற் பிறந்துந் தங்காலில் வீழ்ந்து தம்மையே ஞானசாரியரெனக் கொண்டு வழிபட்ட அதிதீவிரதர பரிபக்குவராகிய இந்தத் தீக்ஷிதருடைய எலும்பை ஆணுக்காத இராமலிங்கபிள்ளை இனி வேறு யாவருடைய எலும்பை ஆணுக்கப்போகின்றார்! நமது பிள்ளை, சிவாநுபவம் பெறுதிருந்தும் பெற்றவர்போல் நடிப்பவர் பெறும் பேற்றைத் "நன்னறிவுசாக்ஷியல்லாற் சாயுச்சியப்பயனைச்-சொன்னபிழைகெட்டேன் றொலைப்பரோ-முன்னே-நடவா வழியொருவன் சொல்ல நடந்து-தடுமாறி நொந்தறியாதார்" என்னும் ஒழிவிலொடுக்கச் செய்யுளையும் "தன்னெஞ்சந் தனக்குச் சான்றதுவாகத் தத்துவநன்குணராதே, வன்னெஞ்சனாகிக் கூடமேபுரிவோன் வஞ்சகக் கூற்றினுங் கொடியோன், பன்னுங்காலவன்றன் றரிசனம் பரிசம் பழுதற நிரயவேதுவுமாம், புன்னெஞ்சாலவனும் போய்நரகெய்திப் பூமியுள்ளளவு மேறுனல்" என்னும் பெருந்திரட்டுச் செய்யுளையும் இனியாயினுஞ் சிந்தியாரா?

இராமலிங்கபிள்ளைக்குச் சிவபெருமானாலே இரசவாதம் உபதேசிக்கப்பட்டதென்றும், அவர் இரசவாதத்தினாலே ஆறுமாரந்தங்கஞ் செய்து வைத்திருக்கின்றாரென்றும், அதுகொண்டு அவர் பார்வதீபுரம் எனப் பெயர்பெற்ற ஒரு பட்டணமும் அதனுள்ளே ஒரு கனகசபையுங் கட்டுவித்துச் சிதம்பர சபாநாயகரை உலகறிய நடந்து அங்கே வந்துநின்று நிருத்தம் பண்ணும்படி செய்யப்போகின்றாரென்றும், பசித்தவர்கள் எல்லாருக்கும் அன்னங் கொடுக்கவும், வியாதியாளர் எல்லாருக்கும் வியாதி நீக்கவும், கல்வி விருப்பமுடையவர்கள் எல்லாருக்குங் கல்வி கற்பிக்கவும் போகின்றாரென்றும், அவருடைய மாணுக்கர்கள் கடைதோறும் ஆல

யாதோறும் வீடுதோறும் தெருத்தோறும் வாய்ப்பறை அறையப் புகுந்து பலவருஷங்களாயினவே. அவர் பட்டணங் கட்ட அஸ்திவாரம்போட்டு இரண்டு வருஷத்திற்கு மேலாயிற்றே. இவைகள் இன்னும் நடத்தப்படாததென்னையோ? அவர் தாம் இரசவாதத்தினாலே சம்பாதிக்க திரவியத்திலே சிதம்பர சிற்சபா சம்புரோக்ஷணத்தின் பொருட்டு இரண்டுலக்ஷம் ரூபா கொடுத்தற்கு அக்ஷயவருஷ ஆனிமீ சிதம்பராலயத்திலே பலரெதிரே தீக்ஷிதர்களுக்கு வாக்குத்தத்தஞ் செய்தாரே! இதுவரையும் அவ்வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாததென்னையோ? அவர் இரசவாதந தெரிந்தவராயின், ஊர்தோறுந் திரிநது பலரிடத்தும் பணம் நெல்லு முதலியவை யாசிப்பதென்னையோ? பிறரிடத்து வாங்கிய அற்பக்கடன்களையும் இறுக்கமாட்டாது அவரால் வைக்கப்படுவதென்னையோ? அவர் பதிப்பித்த திருவருட்பாப் பிரதிரூபங்கள் பிறரிடத்தில் அடைமானம் வைக்கப்பட்டிருப்பதென்னையோ? தன்னை இரசவாதியென்பவனிடத்துள்ள வறுமையும், தன்னை மஹாவைத்தியன் என்பவனிடத்துள்ள வியாதியும், தன்னை மஹா வீரனென்பவன்மேலே பிறருமிழ்ந்த தம்பலமும், தன்னை ஞானியென்பவனிடத்துள்ள விடயவிச்சையும், அவர் வாக்கைப் பொய்யெனச் சாதிப்பவைகளல்லவோ? அவரும் அவரை நம்புவோரும், "வாதிவடத்தினமு மாமருத்து வன்பிணியுஞ்--சாதித்தவீரன்மேற் றம்பலமுந்-தீததுபோன்-ஞானத்தி லின்னை நசிப்பித்து நானதுவா - மூனத்தை யாரொழிவிப்போர்" என்னும் ஒழிவிலொடுக்கச் செய்யுளைச் சற்றேற சிந்திக்கக் கடவர்கள்.

இராமலிங்கபிள்ளையினுடைய மாணுக்கர்கள், தாங்கள் அவர் சிவாநுபூதி பெற்றவரென்றும், இரசவாதந தெரிநதவரென்றுங் கொண்டது சத்தியமேயாகுல், இச்சென்னபட்டணத்திலே பலரிடத்துஞ் சென்று சேவித்துப் பலவாறு வருந்திச் சீவனஞ் செய்து கொண்டலைவதென்னையோ? தங்களாலே முன்பு வசைப்

பாட்டுப் பெற்றவர்களைப் பின்பு தோத்திரஞ் செய்து மது மாமிசங்களின் பொருட்டு இரண்டணா, ஓரணா யாசித்துத் திரிவதென்னையோ? பிறரோடு கூட்டுவியாபாரஞ் செய்யப் புகுந்து அவர் பொருளைக் கைவசப்படுத்திக்கொண்டு அவர் வாயில் மண் போடுவதென்னையோ? தாசிகளிடத்துந் தட்டார்களிடத்துஞ் சென்று சிவபத்தி காட்டி நடித்து ஆபரணங்களை இரவலாக வாங்கிக்கொண்டு ஓட்டம்பிடிப்பதென்னையோ? அவர்களெல்லாருங் கருங்குழிக்குச சென்று அவ்விராமலிங்கபிள்ளையைத் தரிசித்தலாகிய பேரானந்தப் பெருவாழ்வு பெற்று அவருடைய பரிகலசேட பாத்திர சேடங்களைப புசித்துக்கொண்டிருக்கலாமே!!! அப்படிச் செய்யாமையால், அவர் வேடம் பொய்வேடம் என்று அவர்களே தெளிந்திருக்கின்றார்களென்பது இனிது விளங்குகின்றதே! விளங்கவும் உலகத்தாரை மருட்ட அசத்தியம் பேசுகின்றார்களே!

"சுத்த பரிமளகஸ் தூரிமா னண்டத்தே
வைத்த பிரமன் மதிகேடன்--சத்தியமே
தானொருக்கா லுஞ்சொல்லா தார்நாவில் வையேனோ
யானொருக்கால் வேதனா னால்"

இராமலிங்கபிள்ளை ஆகாய கமன குளிகை செய்து, சென்னபட்டணத்தினின்றுந் தம்மைத் தரிசிக்க வந்த மாணாக்கர்கள் இருவருக்கு ஒவ்வொரு குளிகை கொடுக்க, அவர்கள் அக்குளிகையை உட்கொண்டு கூடலூரினின்றும் இரண்டு தென்னமாவுயரத்தின் மேற்படப் பறந்து இரண்டு நாழிகைப் பொழுதினுள்ளே சென்னபட்டணம் அடைந்தார்கள் என்று அவர் மாணாக்கர்கள் வாய்ப்பறை அறைகின்றார்களே! இராமலிங்கபிள்ளை இச்சென்னபட்டணத்திற்கு வந்து இவ்வற்புதத்தை எல்லாருங் காணச் செய்து காட்டுவாரா?

இராமலிங்கபிள்ளை ஏறக்குறையப் பத்து வருஷத்திற்கு முன்னே சிதம்பரத்திலே தம்மோடு சில உத்தியோகஸ்தர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்களைப் பிரிந்து சற்றே தூரத்திற் சென்றிருந்தாரென்றும், அவர்கள் "அங்கே போயிருப்பது என்னை?" என்று வினவியபோது "சென்னபட்டணத்திலே இப்போது என்மனைவி இறந்துவிட்டாள். அது எனக்கு இங்கே தெரிந்தது" என்று சொன்னாரென்றார், மூன்றுநாள் சென்னபட்டணத்திருந்து அம்மரண சமாசாரக் கடிதம் வந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்து அவ்வுத்தியோகஸ்தர்கள் அன்றுமுதல் அவரைச் சருவஞ்ஞரெனக்கொண்டு வழிபடுகின்றார்களென்றும், அவர் மாணாக்கர்கள் எங்கெங்கும் பாராட்டிக்கொண்டு திரிகின்றார்களே? ஓகோ! கெட்டி கெட்டி! அவர் மனைவி ஒருத்தியே. அவள் இச்சென்னபட்டணத்திலும் இதனைச் சார்ந்த இடங்களிலும், ஒரு பரதேசியோடு கூடி இன்றுவரையுஞ் சஞ்சாரஞ் செய்துகொண்டு திரிவதை யாருங் காணலாம் காணலாம். பிள்ளையும், மாணாக்கர்களும் போல முழுப்பூசினிக்காயைச் சோற்றுக்குள்ளே புதைக்க வல்லவர் வேறியாவர்? இராமலிங்கபிள்ளை, தாம் சர்வஞ்ஞராகிய சிவபெருமானேயிருந்தே உலகத்தாருய்யும்பொருட்டுக் காளகண்டம், திரிநேத்திரம் முதலியவைகளை மறைத்து எழுந்தருளிவந்தது சத்தியமேயாயின், தம்மனைவி பின் இவ்வியல்புடையவளாவாள் என முன்னறியாது விவாகஞ் செய்துவிட்டுப் பின் பழிக்குப் பயந்து சென்னபட்டணத்தை விட்டு ஓட்டம்பிடிப்பாரா? ஆச்சரியம் ஆச்சரியம்!

இதுவரையுஞ் சொல்லப்பட்டவைகளினாலே, இராமலிங்கபிள்ளை ஓதாதே எல்லாமறிந்தவரென்பதும், சிவபெருமானைச் சாக்ஷாத்தே தரிசித்தவரென்பதும், திருவருளைப் பெற்றவரென்பதும், திருவருளைப் பிரசாதிப்பவரென்பதும், அற்புதங்கள் செய்ய வல்லவரென்பதும், இராசாத்தைத் தெரிந்தவரென்பதும், அசத்திய

மே என்றும், அவருக்குத் திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் பெயரும் அவர் பாட்டுக்குத் திருவருட்பாவென்னும் பெயரும் இடப்பட்டது நகைப்புக்கிடமேயாமென்றும், இராமலிங்கபிள்ளை யும் அவர் மாணுக்கர்களும் உலகத்தாரை வஞ்சித்துப் பொய்ப்பு கழ் பெற்று வயிறு வளர்க்கப் புகுந்த வேடங்களே இவைகளென் றும், பசுமரத்தாணிபோற் பதித்து நாட்டப்பட்டது.

இவ்வுண்மையை அறியாது, சிலர் தேவாரமுதலிய அருட் பாவைகளோடும் இராமலிங்கபிள்ளை பாடலைச் சமமாகப்பாராட்டி யும், சிலர் அப்பாடலைக் கைவிட்டு இப்பாடலையே பாராட்டித் துர பிமானத்தினலே தேவாராதிகளைத் தூஷித்தும், எரிவாய் நரகத் துக்கு இரையாகுகின்றார்கள்.

சில செல்வர்கள், இராமலிங்கபிள்ளை பாடலைத் தாங்கள் பா ராட்டியது தப்பென்று விவேகிகளால் அறிந்தவிடத்தும், தங்கள் பெயர் அவ்விராமலிங்கபிள்ளை சரித்திரத்திலே பாடப்பட்டமை யால் பிற்காலத்திலே இராமலிங்கபிள்ளையைச் சிவாநுபூதிமானெ னக் கொள்பவர்களெல்லாரும் தங்களைச் சிவாநுபூதிமானை யடைந் த மெய்யன்பரெனக் கொள்வார்களென்னுந் துரபிமானத்தினலே முன்போலவே பாராட்டிக்கொண்டு வருகின்றார்கள். ஐயையோ! அவர்கள் அதுமட்டோ, தங்களிச்சைக்கேற்றபடி ஒழுகுங் கோ யிலருச்சகர் சிலர் பொருட்டுச் சில தேவாலயங்களிலே தேவாரஞ் சொல்லப் புகுந்த பரம்பரை யோதுவார்களைச் சிவ சந்நிதியிலே துர்ப்பாஷைகளினல் வைது அடித்து ஓட்டுதற்குத் துணைசெய் தார்கள். ஓகோ அதுமட்டோ, அவ்வருச்சகர்கள் கல்வியறிவில் லாத ஒருவன் பேரால் எழுதி அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத் திய "சிவாலய குருமான்மியம்" என்னும் புத்தகத்திலே திருஞா னசம்பந்தமூர்த்திநாயனருக்கும் மாணிக்கவாசக சுவாமிகளுக் கும் உண்மை முத்தி கிடைக்கவில்லை என்றெழுதிய குழறுபடை யைக் கேட்டும், சிவசிவ! அவ்வதிபாதகனைப் பாராட்டிப் பலரெ

திரே அவனுக்குச் சம்மானஞ் செய்தார்களே? இந்நகரத்துப் புல
வர்களிற் சிலர், ஹாஹா! அப்பெருங் கொடும்பாவிகள் சபையி
லிருந்து அதனைக் கேட்டு மௌனமாய்த் திரும்பினார்களே! சிவ
தூஷணஞ் செய்த தக்கன் பட்டபாடும், அதனைக் கேட்டுக்கொ
ண்டிருந்த தேவர்கள் பட்டபாடும் அறியார்களா? அறியார்களா?
சிவபெருமான் தம்மைத் தூஷித்தலைப் பொறுப்பினும், தம்மெய்
யன்பர்களாகிய சமயாசாரியர்களைத் தூஷித்தலைப் பொறுப்பாரா?
பொறுக்கமாட்டாரே பொறுக்கமாட்டாரே!

சில மூடர்கள், இராமலிங்கபிள்ளையையும் அவர் பாடலையும்
பாராட்டுவோர் அறவரென்றும் பாராட்டாதவர் மறவரென்றும்,
வேலுமுதலியார் பாடிய "தனித்துரைத்த விராமலிங்கத் தனிம
றையா தரித்துய்ந்தா - ரினித்த வருட்பிரகாசவள்ளலெனை வினிதே
த்தி - யதித்த மற்றூர் சில வறவ ரந்தோ வென்போன் மறந்து-மணி
த்தனெனக் கொண்டொழிந்தார் மலவாழ்விற் சில மறவர்" என்
னும் பாட்டினாலே மயங்கி, நாம் பாராட்டாதொழிந்தால் பிறரால்
மறவரென்றிகழப்படுவோம் என்று பயந்து பயந்து பாராட்டுகின்
றார்கள். அது, சில பட்டுநூற்காரர்கள் "இப்பீதாம்பரம் பதிவிர
தைகள் புத்திரருக்கன்றி வேசைகள் புத்திரருக்குத் தோன்றாது"
என்றேப்பித்த சூனியப் பொருளை ஓரரசனும் மந்திரி முதலாயி
னோருங் குடிகளுந் தனித்தனியே அகத்திலே "இப்பீதாம்பரம்
எனக்குத் தோன்றவில்லையே நான் மாத்திரம் வேசைமகனோ
னே! பிறரெல்லாருங் கற்புடைமகளிர் மக்களாயினார்களே" என்
று கவலை கொண்டு, புறத்திலே "இப்பீதாம்பரம்போல நானெங்
கும் பார்க்கவில்லை பார்க்கவில்லை" என்று ஒருங்கொத்துப் பாரா
ட்டிய கதைபோலாகும்.

இப்பிரபந்தத்தை எல்லாருஞ் சித்த சமாதானத்தோடு வா
சித்து, "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்-மெய்

ப்பொருள் காண்பதறிவு" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளியபடியே, உண்மையைத் தெளிந்து, பசுவாக்கியங்களைக் கைவிட்டுப் பதிவாக்கியங்களாகிய தேவாரமுதலிய உண்மை நூல்களையே கைக்கொண்டு விதிப்படி. சிரத்தையோடு ஓதியுணர்ந்துய்யக் கடவர்கள்.

திருவிசைப்பா.

"எச்சனைத் தலையைக்கொண்டு செண்டடித் திட்டமேறி
யச்சங்கொண்டமரரோட நின்றவப் பலவற்கல்லாக்
கச்சரைக்கல்லாப்பொல்லாச் சமணரைப்பசுநூல்கற்கும்
பிச்சரைக்காணுகண்வாய் பேசாதப் பேய்களோடே"

இராமலிங்கபிள்ளையாலே பசுத்துவநீங்கிச் சிவத்துவம் பெற்றவர்களென்று அவர் சரித்திரத்திலே பாடப்பட்டவர்களுள்ளே யாவராயினும், இப்பிரபந்தத்திலே தப்புக்கண்டார்களாயின், நியாயமெடுத்துக் காட்டி வாதிக்கக் கடவர்கள். அது கூடாதவழி, நம்மை ஊமையாக்கித் தம்மாசாரியர் பெருமையையும் தம்பெருமையையும் உலகறிய வெளிப்படுத்தக்கடவர்கள். அவர்கள் அதுவுஞ் செய்யாதபோது, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலானோரை அவமதித்து இராமலிங்கபிள்ளையை நன்கு மதிக்கும் பிரபுக்கள் அப்பிள்ளை மாணாக்கர்களைச் செவியிலே பிடித்துக்கொண்டு "திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய மாணாக்கர் அவர் திருச்சின்னத்தைக் கடித்த புத்தநந்தி தலையிலே இடிவிழச்செய்தார்களே இராமலிங்கபிள்ளையைக் கண்டிப்பவனை நீங்கள் ஊமையாக்க மாட்டீர்களா" என்று கேட்கக் கடவர்கள். இவைகளெல்லாஞ் செய்யாது வாயில்வந்தபடி நம்மைத் தூஷிப்பது குலத்திற் பிறந்தார்க்கு அழகன்று. இதனைச் சிந்தியாது தூஷிப்பவர்களுக்கு நாம் எடுத்துக்காட்டுஞ் செய்யுளொன்றுண்டு.

திருவிளையாடற்புராணம்

இசைவாது வென்ற படலம்.

"நெய்யுண் பூங்குழன் மடவாரா னின்றைடும் வாது

செய்புர் பூசலுக் கெதிரலாற் றீயவாய் திறந்து
வையும் பூசலுக் கெதிரலேன் மானம்விற் றுண்போ
லுய்யும் பாவைய ரேயதற் கெதிரென வுரைத்தாள்".

இராமலிங்கபிள்ளை பாடலைக் குறித்து, அவர் மாணாக்கரிருவருக்கும், திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துச் சீடரும் இலக்கண விலக்கியங்களிலும் சைவசித்தாந்த நூல்களிலும் வல்லவரும் இராமநாதபுர சமஸ்தான வித்துவானும் மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகளாதீனத்து ஸ்ரீ சின்னச்சந்நிதானத்திற்குக் கல்வியில் உசாத்துணைவருமாகிய ம. ா. ா. ஸ்ரீ. இராமசுவாமிப்பிள்ளைக்கும், மதுரைச் சோமசுந்தரக் கடவுளாலயத்திலே பலரெதிரே நடந்த வாதத்தை, உலகத்தார் அறியும்பொருட்டு, அவ்விராமசுவாமிப்பிள்ளை ம. ா. ா. சிறீ நல்லூர் ஆறுமுகநாவலரவர்களுக்கெழுதிய விண்ணப்பத்தை இங்கே பதிப்பிக்கின்றேன்.

“சிவஞானச் செல்வர்களாகிய மஹாராஜராஜசிறீ அண்ணா அவர்கள் திவ்வியசமுகத்துக்கு எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

இம்மதி முதலிலே சென்னையிலிருந்து ம. ா. ா. சிறீ ஐயாசாமிமுதலியாரவர்கள் ம. ா. ா. சிறீ வாசுதேவமுதலியாரவர்கள் ம. ா. ா. சிறீ சோமசுந்தரச்செட்டியார் என்னும் பிரபுக்கள் மூவரும் சுவாமிதரிசனார்த்தம் மதுரைக்கு வருவதாக சிறீ பண்டாரச் சந்நிதிகளுக்குச் சென்னை ஓதுவார் விண்ணப்பம் வந்திருந்தது.

அவ்வண்ணமே இம்மதி ௮௨ சோமவாரத்திரவிலே அம்மூன்று பிரபுக்களும் அவர்களைச் சேர்ந்த சிலரும் அதற்கு நாலு தினத்திற்கு முன்பு திருப்பாலைவனம் சிறீ சுந்தரக்குருக்களும் காஞ்சிபுரம் சிறீ கச்சபேசக் குருக்களும் வந்து சேர்ந்தார்கள்.

இரண்டு தினஞ் சென்றபின் ம. ஏ. ஈ. ஸ்ரீ விஜயரங்கமுதலியாரவர்களும் வந்து சேர்ந்தார்கள். பிரபுக்கள் யாவரும் ஒருங்கே பக்தியுடன் சிவாலயசேவை செய்தார்கள். திருப்பரங்குன்றத்துக்கும் போய் வந்தார்கள்.

புதவாரத்திரவு பிரபுக்களுடன் வந்த முத்துச்சாமிமுதலியெனப் பெயரிய ஒருவர் மடத்துக்கு வந்து, ஸ்ரீ சின்னச்சந்நிதானத்தைத் தரிசித்துப் பலவார்த்தைகள் பேசிக் "கருங்குழி இராமலிங்கபிள்ளையவர்களுடைய முதன்மாணுக்கரும் இலக்கணவிலக்கிய வேதாந்த சித்தாந்தங்களிற் பாமபண்டிதரும் எடுத்த விடயங்களை ஸ்தாபிக்க வல்லுநருமாகிய வேலுமுதலியாரென்பவர் பிரபுக்களுடன் வந்திருக்கின்றார். சந்நிதான தரிசனத்துக்கும் நாளை வருவார். வந்தபின்பு வெளியாம்" என்று சொல்லி "இராமலிங்கபிள்ளையவர்கள் அருளிச் செய்த திருவருட்பா இவ்விடத்துக்கு வந்திருக்கின்றதா?" என்று வினவினர். "வரவில்லையே" எனக் கூறியவழிச் "சென்னை சேர்ந்த பின்பு அனுப்புவதிற்றடையில்லை" என்று "அதிலடங்கிய திருப்பாசுரங்கள் இவை" என்று சில பாடல்களைச் சொல்லித் தாமே அருணமப்பட்டுக் கொண்டார். [சென்றவருடத்திலே இராமலிங்கபிள்ளை கூட்டத்திற் சேர்ந்த ஒரு பரதேசி இவ்விடத்துக்கு வந்து ஸ்ரீ சந்நிதானத்திலே இராமலிங்கபிள்ளை கவிகளைக் கழறிப் பாராட்டி, நன்னூல் விருத்தியுரைப் பாடங் கேட்கப் புகுந்து, சில நாட் சென்றபின் சில மாயாவாத நூலுணர்ச்சி கொண்டு, சித்தாந்த வழியை மறுக்கப் புகுந்தார். இராமலிங்கபிள்ளை வீட்டுக்கு நடேசர் வந்து கதவைத் திறப்பித்து இரசவாதத்தைப் புலப்படுத்தியும் சிலபோது கட்டமுது கொடுத்துஞ் செய்தவருளையும் தண்ணீரால் விளக்கெரித்த செய்தி முதலியவற்றையும் பிதற்றினர். உடனே கண்டித்து மாயாவாதத்தையுமறுத்து இராமலிங்கபிள்ளை ஒருவர் வழியாக இலக்கணமாதல் சாஸ்திரமாதல் பாடங் கேட்டவரல்லரென்றும் பேசி

அப்பரதேசியையுந் தூக்கிவிட்ட] யான் ஒன்றுமுரையாடாதிருந்தனன். பின்பு "திருவருட்பாவென்று அபிமானித்து இராமலிங்கபிள்ளையவர்கள் பாடலுக்கு நாங்கள் பெயரிட்டிருப்பதைப்பற்றி நாவலர் மறுத்துப் பேசுகின்றார், அது யாருக்குஞ் சம்மதமன்று" என்றும் பிதற்றினார். எல்லாம் வேலுமுதலியைக் கண்டவழிப் பேசவேண்டுமென வாளா விருந்தனன். குருவாரத்திலே ஷை முத்துச்சாமிமுதலியாதல் வேலுமுதலியாதல் மடத்துக்கு வரவில்லை.

சுக்கிரவாரத்திலே சுவாமிக்கு அபிடேக முதலியன செய்வித்து அஸ்தமயனத்திற்கு மடத்துக்குப்போய்க் குருதரிசனஞ் செய்து உடனே விடைபெற்றுக்கொண்டு ஸ்திரவாரத்திலே பிரயாணஞ்செய்ய நிச்சயித்திருந்த பிரபுக்கள் கருத்தைக் கேள்வியுற்றேனாகையால், அற்றைநாள் அதிகாலையிற் பூசை முடித்துக்கொண்டு வழக்கப்படி திருக்கோயிலுக்குச் சென்று, சிவபெருமானைத் தரிசித்து, அவ்விடத்தே யிருந்து, முத்துச்சாமி முதலியைக்கொண்டு வேலுமுதலியை யானிருக்குமிடத்து வருவித்து வைத்துக்கொண்டு, சில பட்டமார் சில ஓதுவார் சில செட்டிமார் முதலிய பலர் முன்னிலையில் வேலுமுதலியுடன் இஷ்டம்போலப் பல பல வார்த்தைபேசிச் சித்தாந்த விஷயங்களிலே வினவத் தொடங்கி, "சிவஞானபோதம் அதிகாரம் இயல் பாதமுதலியவைகளால் எத்தனைப் பகுப்புடையது? முதன் மூன்று சூத்திரங்கள் முறையே திரிபதார்த்தங்களில் எவற்றைச் சொல்லுகின்றன? விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலராவார் யாவர்? சொல்லவேண்டும்" என்று கேட்டேன், "சிவஞானபோதம் எட்டுப் பிரிவினையுடையது. பெயர் யாதில்லை. முதற் சூத்திரம் சங்காரத்தைச் சொல்லிச் சிருட்டிப்பதைச் சொல்லுமுகத்தாற் பதியுண்டென்று சொல்லுகின்றது. அது பாலுக்குப் பயனைக் கொள்ளவேண்டும். இரண்டாஞ் சூத்திரம் பசுவுண்டென்று சொல்லுகிறது. மூன்றாஞ் சூத்திரம் பாசமுண்டென்று சொல்லுகிறது. விஞ்ஞானகலர் பிறங்கி முத

லாயினோர், சிலர் சதாசிவாதிகளாகச் சொல்லுவர். பிர ளயாகலர் பிரமன் முதலாயினோர், சிலர் உருத்திராதியா கச் சொல்லுவர்., சகலர் மாநுடர், சிலர் விஷ்ணுவாதி யாகச் சொல்லுவர். இவ்வ மூலாகமபேதம்" என்றும், "சிவஞானசித்தியார் பார்த்தபின்பு முடிவிலே ஒழிவி லொடுக்கம் பார்க்கவேண்டும். இது எங்கள் குருமரபு" என்றும், இன்னும் பலபல விதமாகக் குழறினார். "சித் தாந்த சாஸ்திர விஷயத்திலே இவ்வளவு தெளிவாக யா வர் சொல்ல வல்லார்" என்று நகைத்து மெல்ல மெல்ல அருட்பா விஷயத்திலே கொண்டுவந்து, "தேவார முதலிய பன்னிரண்டு திருமுறைகளும் திருவருளினாலே பாடப் பட்டனவே. அவற்றுள் பத்தாந் திருமுறையாகிய திரு மந்திரம் துதிரூப மல்லாமையானும், பதினொராந் திரு முறைப் பிரபந்தங்கள் பெரும்பாலும் பண்ணுக்கிசை யாத பாவினங்களாகியும், விநாயகக்கடவுள் முருகக்கட வுள் நாயன்மார் இவர்கள் பரமாக விரவிய மிருதல் முத லிய காரணம்பற்றி அவ்விரண்டு திருமுறைகளல்லாத தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் ஆகிய ஐந்தும் சிறப்பாக எடுத்துச் சிவா லய முதலிய விடங்களிலே நித்திய நைமித்திகங்களிலே பண்டைக்காலந்தொடங்கி ஓதப்பட்டுவருகின்றன. இவை யோகரூடியாக அருட்பாவென்று ஆன்றோராலே தொன்று தொட்டு வழங்கப்படுகின்றன. அருட்பாவென்னும் பெயர் காரணங்கருதாவழி இடுகுறி மாத்திரையாகத் தேவாரமுதலிய ஐந்திற்கே சென்றும் காரணங்கருதிய வழி ஏனைய அருட்பெற்றோராற் பாடப்பட்ட பாவுக்குச் சென்றும் வருகின்றது. இத்திருநாமம் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய பதினான்கிற்கும் மெய்கண்ட சாஸ்திரமெனவும், திருவாய்மொழி திருமொழி முதலிய

வற்றிற்குத் திவ்வியப் பிரபந்தமெனவும் வழங்கிவருதல் போலும். இங்ஙனமாக விபூதி ருத்திராக்ஷத்திற் குடன்பட்ட இராமலிங்கபிள்ளை தம்பாட்டுக்குத் திருவருட்பா வெனப் பெயரிட்டதும் முறைகள் பிரித்தமை முதலியவும் முறையா" என்று கேட்டேன். "தேவாரமுதலிய ஐந்திற்கும் அருட்பாவென்னும் பெயர் சென்னை முதலிய விடங்களில் வழங்கவில்லை. எங்களாற் பதிக்கப்பட்ட பின்பு நாவலர் பெரியபுராண வசனத்திலே அப்பெயர் காட்டியும், துண்டி விநாயகர் திருவிருத்தமுதலியவற்றிற்குத் துண்டி விநாயகர் திருவருட்பா கதிர்காமவேலர் திருவருட்பாவெனக் கற்பித்தும், பதிப்பித்திருக்கின்றார்" என்று வேலுமுதலி கூறினார். சிவாலயம் ஆதீனமடாலய முதலியவற்றி னெல்லாம் தேவாரமுதலிய ஐந்திற்கும் அருட்பாவென்னுந் திருநாமம் வழங்கிவருவதை ஓதுவார் முதலானவர்களைக்கொண்டு நேரே ஒப்புவித்து "இன்னும் ஆதீன முதலியவற்றில் விசாரித்தால் ஐயந்தீர்ந்துய்யலாம்" என்றும், "இப்போது தேவாரமுதலியவற்றைத் திருக்காப்பிட்டுத் திருவெம்பாவையைமாத்திரம் ஓதும் உற்சவமும் உணரப்பெறாது தேவார திருவாசகங்களை ஓதுகிற உம்போலிகட்குச் சைவசாம்பிரதாயம் எங்ஙனம் தெரியும்" என்றும், "நாவலரவர்கள் பதினேழுவருஷத்திற்கு முன்பே பரிதாபிவருடத்திற் பதிப்பித்த பெரிய புராணவசனத்தில் தேவாரமாதிய ஐந்தும் அருட்பா வென்று பதிப்பித்திருக்கிறார்கள்" என்றும், என்னிடத்துள்ள பழையபிரதியினும் துண்டிவிநாயகர் திருவருட்பா வென்றிருக்கின்றது: தருமையாதீனமுதலியவற்றினும் அங்ஙனமே யிருப்பதை அறிந்துகொள்ளலாம்" என்றும், "அந்நூலுடையார் திருவருட்பாவென வாளா கூறி மயங்க வையாது துண்டிவிநாயகர் என்பது முதலிய

அடைகளொடு புணர்த்திக் கூறுதலானும், அவர் அப் பாக்களிலே தம்மைத் திருவருளைப் பெற்றவரெனச் சிறிதுங்கூறாது தாந் திருவருள் பெறாதவரெனக் கூறித் தமக்குத் திருவருள் கிடைத்தல்வேண்டுமென்று வேண்டிக் கோடலானும், அங்ஙனமாகவே திருவருட்பாவென்பதற்கு அவர் கருத்துத் திருவருளைப்பெற விரும்பிய பாவென்பதாகலானும், அது குற்றமாகாதென்றுங் கூறினேன். வேலுமுதலி முத்துச்சாமிமுதலி என்னுமிருவரும் ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்து விழித்து, இராமலிங்கபிள்ளையவர்களுக்காதல் எங்களுக்காதல் கருத்தில்லாதிருந்தும் வேறு சிலர் திருவருட்பாவெனப் பதிப்பித்து விட்டனர்" என்றும், "அதனைக் காரணக்குறியாகக் கொண்டாற் குற்றமில்லை" என்றும், "நாவலரவர்களுக்கும் இதைச் சொல்லியனுப்பினேம் பேசாதிருந்தார்கள்" என்றுங் கூறினர். "மற்றொருவர் பதிப்பிக்க நீங்கள் உடன்பட்டிருத்தலால் உங்கள் கருத்தே அது" என்றும், அங்ஙனங் காரணக்குறியானால் அதை வெளியிட்டு ஸ்தாபிக்கலாமே" என்றும், "எலும்பைப் பெண்ணாக்குதன் முதலியனபோல ஏதேனுங் காட்டப்படுமா" என்றும் கேட்டேன். "என்னைப் பெண்ணாக்குதலாதிய தேவாரங்களைக்கொண்டு இப்போது நீங்கள் அப்படியாக்கலாமா" என்று அவ்விருவருங் கேட்டனர். "இது விருத்தமான கேள்வி" என்றும், "அவ்வத்தேவாரத்தின் இறுதியிலே ஓதுவோர் பயன்பெறுமாறு வரையறுத்தருளியிருக்கிறதே" என்றுஞ் சொல்லி, "இராமலிங்கபிள்ளை பாட்டைக்கொண்டு உங்களை அற்புதங்காட்டும்படி யான் கேட்கவில்லை; இராமலிங்கபிள்ளை உயிருடன் இருத்தலால் அவரே பலரும் அறியப்பாடி ஏதேனும் அற்புதங்காட்டும்படி கேட்கின்றேன்" என்றும் வினவி

னேன். ஒருத்தரமும் கொடாது திகைத்துத் திசைகளை நோக்கி விழித்துக்கொடுத்து "எல்லாந் திருவருட்செய் கையானதால் சிலராலே திருவருட்பாவென்றிடப்பட்டது சகிக்கவேண்டும்" என்று அவர் கூறினர். அங்ஙனமாயின் யான் கூறுவதுந் திருவருட்செயலாதலால் நீங்களே மருண்டு இராமலிங்கபிள்ளை தெருமருட்பாவுக்குத் திரு வருட்பாவென்றிட்ட பெயரை மாற்றி விடவேண்டும் என்று யான் கூறினேன் அவ்விருவரும் இனியிருப்பது சரியன்று எனக்கருதி யெழுந்து வணங்கிக்கொண்டு சென்றனர் "ஒழிவிலொடுக்கவுரையை இலக்கண வழு வாகவும் சித்தாந்தசாஸ்திர விருத்தமாகவும் பதிப்பித்த இராமலிங்கபிள்ளையா சாக்கிரத்திலே நடேசர் வந்து அருள் செய்யப்பெற்றவரும் ஓதாதுணர்ந்தவருமாவர்" என்பது முதலியவாக யான் சொன்னவற்றைக் கேட்டுங் கேளாதவராக வாளா போய்விட்டனர். கூடியிருந்த யாவரும் "இவர்கள் செய்கை பாவச்செய்கை" என்று அவ்விருவரையும் நோக்கி நகைத்தனர். இன்னும் இடையே பேசினவை பல. அவை விரிக்கிற் பெருகும்.

சுக்கிரவாரத்திரவு ஆறரை மணிக்குப் பிரபுக்கள் யாவரும் கூடவந்தவர்களும் மதுரை யாதீனமடாலயத் திற்கு வந்து உபயசந்நிதானங்களையும் தரிசித்து ஸ்ரீ சின் னச் சந்நிதானம் உபசரித்த அருமை பெருமைகளைப் பாராட்டி மகிழ்ந்தனர். சந்நிதானத்தின்மீது வேலு முதலி சில பாட்டுப் பாடியிருக்கின்றாரென்று கோயிலிலே முத்துச்சாமிமுதலி சொன்னார். அது சபையிலே வெளி யாகாது ஒளிவாய்விட்டது. உடனே பிரபுக்கள் விடை பெற்றுக்கொண்டார்கள்.

ஸ்திரவாரத்துக் காலையிலே பிரபுக்கள் திருப்பரங் குன்றத்துக்குப் போய்வந்தார்கள். பகல் மூன்றுமணிக்கு

ஸ்ரீ சுந்தரகுருக்கள் ஸ்ரீ கச்சபேசக்குருக்கள் இருவரும் மடத்துக்கு வந்தார்கள். அவர்கண்மாட்டும் வேலுமுத லியைக் கண்டித்துப் பேசிய விடயங்களை வெளியிட் டேன். மத்தியஸ்தத்திற்குத் தாங்களில்லாதிருந்ததைப் பற்றிப் பரிதபித்து "நாவலரவர்களைப்போலவே தாங்கள் கண்டித்துப் பேசுதல் நியாயமே" என்றும் என்னை நோக் கிக் கூறினர். "இராமலிங்கபிள்ளை பாடலுக்குத் திரு வருட்பாவென்று பெயரிட்டதைப்பற்றிப் பிரபுக்களும் முனிந்து பேசுகின்றார்கள்" என்றுங் கூறினர். அவ்வெல் லோரும் ஸ்திரவாரத்திரவிலே, திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான் திருவடிக் காட்சிக்குப் பிரஸ்தானமானார்கள்.

சோமவாரத்திரவிலே ம. ா. ா. ஸ்ரீ விஜயரங்கமுத லியாரவர்களும் மடத்துக்கு வந்தார்கள். திருக்கோயி லின்கண்ணே வேலுமுதலியிடத்தே பேசினவைகளை வெளியிட்டேன் சந்தோஷப்பட்டார்கள்.

* * * * *

தாங்கள் வீற்றிருக்குந் தானத்திலே மாசந்தோறுங் குருவாரத்திலே சபை கூட்டிச் சைவப்பிரசங்கஞ் செய்து வருவதையும் கேட்குமுறைப்படி பிரபு பத்த ஜனங்கள் வந்து கேட்பதையும் பலமுறை நலமுறக்கேட்டு மகிழ்ச்சி யடைகின்றேன்.

மதுரை
விபவ௵
மார்கழிமீ௳ கஙஉ.

இங்ஙனம்,
இராமசுவாமி.

# கக. நல்லறிவுச் சுடர் கொளுத்தல்.

நரசிங்கபுர வீராசாமி முதலியாரே,

சென்னைச்சர்வ கலாசாலையிலே பி. ஏ. பட்டம் பெற்ற ம. ௱. ௱. ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளைக்கு மாறாக நீர் அச்சிறப்பதிப்பித்த பத்திரிகையை நான் வாசித்து, நீர் அறிவுடையோர்களை அநீதியாகத் தூஷித்தலினால் எய்தும் பயனை நினைந்து நினைந்து பெருந்துக்கமுற்று, இப்பத்திரிகைவாயிலாக உமக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தப் புகுகின்றேன். நீர் இதனை முழுமையும் நன்றாக வாசித்து, நான் சிறுவனேயாயினும் "ஊகமுளதேற்சிறுவருரையுங்கொள்க" என்னும் ஆன்றோர் வாக்கியப்படி இதனுண்மையைக் கிருகித்து, "யாகாவாராயினு நாகாக்க காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்னுந்திருக்குறளின் பொருளைத் தெளிந்து அமைந்தொழுகும்பொருட்டு, உம்மைப் பல்காலும்வேண்டிக்கொள்கின்றேன்.

"எத்தேசத்தாரும் எத்தீபாந்தர வாசிகளும் தமிழ்த்தேசங்களிற் சிறந்த தொண்டமண்டல வாசிகளோடு பயின்று வருகின்றதால் நாகரீகம், கல்வி, கேள்வி முதலியவற்றிற் பெருமை பெற்று விளங்கிவருகின்றார்கள். ஆதலால் தொண்டமண்டல வித்துவான்களே சிறந்தவர்கள்" என்றீர். ஓகோ! உமது பத்திரிகையின் முதலிலே உமக்காசிரியர்களென உம்மாற்றானே சுட்டப்பட்ட இரு

---

* இது சென்னை சிவபாதநேசப்பிள்ளை என்பவரால் எழுதி நாவலரவர்களுக்குக் காட்டி அவர்கள் சம்மதியோடு பதிப்பிக்கப்பட்டது.

வருள் இராமலிங்கபிள்ளையூர் சோழமண்டலத்துள்ள சிதம்பரமும், இராமாநுசகவிராயரூர் பாண்டிமண்டலத்துள்ள இராமநாதபுரமுமேயாகவும், அவ்விராமாநுசகவிராயர் தமதிலக்கண விளக்கதீபிகையிலே "ஈண்டு [சென்னைபட்டணம்] முப்பத்தாறாண்டுவரையும் இயற்றமிழினை வழிபடுமாணாக்கர்க்குக் கற்பித்து (தொண்டைமண்டலமாகிய) இக்கொடுந்தமிழ்நாடு செந்தமிழ்க்காடாகச் செய்தேம்" என மொழிந்தனராகவும், நீர் உங்கூற்றுக்கும் உமதாசிரியர்கூற்றுக்கும் மறுதலைப்படக்கூறியது ஆச்சரியம் ஆச்சரியம்!!! கல்விப்பொருள் செல்வப்பொருள்கள் ஒவ்வோர்காலத்திலே ஒவ்வோர்தேசத் தொவ்வொருநின்று ஒவ்வோர் குடியில் வளர்வதுங் குறைவதும் இயற்கையென்பதனை நூல்களாலும் அநுபவத்தாலும் அறிந்து அடங்கக்கடவீர். நும்மாசிரியரிருவருள் இராமாநுசகவிராயர் தமது நன்னூலுரையில் "கயவென்கிளவி மேன்மையுஞ் செய்யும்" எனவும், இராமலிங்கபிள்ளை தமது பிரபந்தத்திரட்டில் "கயவென்கிளவி மென்மையுஞ்செய்யும்" எனவும், பதிப்பித்திருக்கின்றார்களே! இங்ஙனம் ஒருவரோடொருவர் மறுதலைப்பட்ட இருவருள் எவர் உத்தமாசிரியர்? பேசும் பேசும்.

பிறரெல்லாம் நாகரிகம் தொண்டைமண்டல வாசிகளிடத்திற் பயின்றுகொள்கின்றார்கள் என்றீரே. தொண்டைமண்டலத்திற் சிறந்த இந்நகரவாசிகளெல்லாரும், தஞ்சாவூர் மேளம், தஞ்சாவூர்ச் சங்கீதம், தஞ்சாவூர்ப் பட்டி, தஞ்சாவூர்ப் பாகை என்பன முதலியனவாகப் பேரிட்டு வழங்கி, இனிதுபாராட்டிக் கைக்கொள்வது எத்தேசத்திற் பயின்ற நாகரிகமோ? சற்றே சொல்லும் சொல்லும்.

இனி எல்லா நாகரிகங்களினுஞ் சிறந்த சைவாசாரம் நமது தொண்டைமண்டலவாசிகளுக்கு மிகப் பிரயாசைப் பட்டுப் பழக்கினவர்கள் சோழதேசத்தும் பாண்டிதேசத்தும் உள்ள சைவாதீனத்தார்களன்றோ? இதற்கு முன்னிருந்த நிலைமை நீர் அறியீரோ! இனியாயினும் கேட்டறிந்துகொள்ளும்.'

தமிழ்நாடுகளிற் சிறந்தது தொண்டமண்டலமென முன்னர்க் கூறிய நீர் பின்னர்ச் செந்தமிழ் கொடுந்தமிழெனப்படும் தமிழ்ப்பாகுபாடு இரண்டனுட் சிறந்த செந்தமிழ் வழங்கு நிலத்துக்கு எல்லை கூறப் புகுந்து "கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும்" எனக் கிழக்கெல்லையும் மேற்கெல்லையுங் கூறுமுகத்தால் செந்தமிழ் நிலம் தொண்டைமண்டலமன்றென மறுத்துச் சோழமண்டலமெனக் கூறினீர். பின்னர் "வைகையாற்றின் றெற்கும்" என வடக்கெல்லை கூறுமுகத்தால் செந்தமிழ் நிலம் சோழமண்டலமுமன்றென மறுத்துப் பாண்டிமண்டலமெனக் கூறினீர். பின்னர் "மருதயாற்றின் வடக்கும்" எனத் தெற்கெல்லை கூறுமுகத்தால் செந்தமிழ் நிலம் பாண்டிமண்டலமுமன்றென மறுத்தீர். கெட்டி கெட்டி! உங்கண் மயக்காற்றோன்றிய குழறுபடை யாவர்க்கும் பெருநகை விளைத்தற்கேதுவாயிற்று. கருவூரின் கிழக்குள்ளது சோழமண்டலமென்பதும், வைகையாற்றின் தெற்குள்ளது பாண்டிமண்டலமென்பதும், மருதயாறு சோழநாட்டுக்கு வடக்குள்ளதென்பதும் சிறிதுமாராயாது எல்லைகூறப் புகுந்த நும்பேதைமை சாலவும் வியக்கற்பாற்றே.

யாழ்ப்பாணமென்னும் ஈழத்தீவு தமிழ்நாட்டுட் படாதது என்றீர். ஈழதேசத்துள் ஓர்கூறு யாழ்ப்பாண

மென்பதறியாது யாழ்ப்பாணமாகிய ஈழத்தீவென்றது தவறு. தமிழ்நாட்டுக்கு எல்லை காலந்தோறும் வேறுபடுதல் சிலப்பதிகாரத்தில் "நெடியோன் குன்றமும்" என்னும் வேனிற்காதைச்செய்யுளின் உரையால் இனிது விளங்கும். வல்லார் வாய்க்கேட்டுணர்ந்து வாய் மூடும். ஈழமண்டலத் துள்ள யாழ்ப்பாண முதலியன தமிழ் வழங்குநாடாதல் பின்னர்க் காட்டுவாம். ஈழத்தீவென் றிகழ்ச்சிபோலக் கூறிய நீர் இது நாவலந்தீவென்பதையும் சற்றே சிந்தியும் சிந்தியும்.

"யாழ்ப்பாணம் ஒரு சிறு நூலையேனும் ஒரு சிற்றுரையையேனுஞ் செய்குநரில்லாத தேசம்" என்றீர். தமிழிலே ஹேமாத்திரிகற்பம், இரகுவம்சம், இராமேசர் கிள்ளைவிடுதூது, செகராசசேகரம், பரராசசேகரம், அமுதாகரம், தக்ஷிணகைலாசபுராணம், சிவராத்திரிபுராணம், ஏகாதசிபுராணம், பரகிதம், புலியூர்யமகவந்தாதி, கல்வளையமகவந்தாதி, மறைசையந்தாதி, திருவண்ணைக்குறவஞ்சி, திருமாவைக்குறவஞ்சி, திருநாகைக்குறவஞ்சி, திருநல்லைக் கிள்ளைவிடுதூது, திருநல்லை வெண்பா, திருநல்லையந்தாதி, வேதாந்த சொயஞ்சோதி, நியாயலக்கணம், வீசகணிதம், விரிவகராதி முதலியன யாழ்ப்பாணத்தாராற் செய்யப்பட்டன வென்பதை அறிந்தடங்கக்கடவீர்.

சிதம்பரத்திலே ஞானப்பிரகாசமென்னுந் திருக்குளஞ் செய்வித்தவரும், சமஸ்கிருதத்திலே பௌஷ்கராகமவிருத்தி, சிவஞானபோதவிருத்தி, சித்தாந்தசிகாமணி, பிரமாணதீபிகை, பிராசாததீபிகை, அஞ்ஞானவிவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்நம், சிவாகமாதிமாகான்மியசங்கிரகம் என்பவைகளையும், சிவஞான

சித்தியார்க்கு ஒருரையையும் இயற்றினவரும், சைவ சமயந் தழைத்தோங்குந் தானமாகிய சோழமண்டலத்தின்கணிருந்த ஆதிசைவர்களுள்ளும், சைவப்பண்டாரங்களுள்ளும், திருவண்ணாமலை யாதீனத்துத் தம்பிரான்களுள்ளும், பலருக்குச் சைவாகமோபதேசஞ் செய்தருளின வருமாகிய ஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவரர் யாழ்ப்பாணத்தாரென்பதை அறிந்து, இனியாயினும் வாய் மூடக் கடவீர்.

"இராவணனால் யாழ்வல்ல பாணக்குடிகளை ஏற்றப் பெற்ற யாழ்ப்பாணத்தீவு" என்றீர். ஓகோ! இதற்கு யாது பிரமாணஞ்சொல்ல வல்லீர்? வாயில் வந்தன வந்தனபேச யாண்டுக் கற்றீர்? இதற்குப் பிரமாணம் யாதெனை உம்மிடத்து வினவினோர் சிலர்க்குத் "திருவிளையாடற்புராணத்து இசைவாதுவென்றபடலம்" என்கின்றீர். அப்படலத்தில் பாண்டியன் சங்கீதத்தில் தன்காமக்கிழத்தியை வென்ற பாணப்பெண்ணை வெல்லும்பொருட்டு ஈழதேசத்திருந்து ஒருபாணப்பெண்ணை அழைப்பித்தான் என்றன்றோ சொல்லப்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்திலுள்ளா ரெல்லாரும் பாணரென்று எங்ஙனந் துணிந்தீர்? மதுரையினும் சில பாணரிருந்தனர் என்றமையால் அங்குள்ளாரெல்லாம் பாணர்களென்றுங் கூசாதுரைப்பீர்போலும்.

இப்பரத கண்டத்திலே பதினெண்பாடை நிலங்களுண்மையும் அவற்றின் பெயரும் "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக் குடகங், கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கங், கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந், தங்கும் புகழ்த்தமிழ் சூழ் பதினேழ்புவி தாமிவையே." எனத்தொல்காப்பியவுரை

யிற் காட்டிய செய்யுளாலறிக. இவைகளுட் சிங்கள மென்பது ஈழம். ஈழதேசத்துள்ள திருப்புகழ்பெற்ற கதிர்காமத்திருந்த நரசிங்கராசனுக்குச் சோழராசாவின் புத்திரிவயிற்றிற் பிறந்தவனுய்க் கண்டியிலிருந்தரசாண்ட பாலசிங்கமகாராசாவினாலே மதுரையினின்றும் வந்த ஓர் யாழ்ப்பாணன்பொருட்டுக் கொடுக்கப்பட்டது யாழ்ப் பாணம். அவ்வியாழ்ப்பாணம் மதுரையினின்றும் பாண்டி யனாலனுப்பப்பட்ட சிங்கையாரிய சக்கிரவர்த்தியினாலும் அவன்வமிசத்தரசர்களாலும் ஆளப்பட்டது. அச்சக்கிர வர்த்தியோடு பாண்டிமண்டலத்தினின்றும் சோழமண்ட லத்தினின்றுஞ் சென்ற பிராமணர் முதலிய நானுசாதி யார்களாலே குடியேறப்பெற்றது. இச்சரித்திரம் கைலாச மாலை, யாழ்ப்பாணவைபவம் என்னு நூல்களிலே விரித் துச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஈழ மண்டலத்துள்ள தேவாரம்பெற்ற ஸ்தலங்களிரண்டனுள்ளே திருக்கோண மலை தன்மான்மியத்தை மற்சபுராணத்தா லறிந்துவந்த சோழராசாவினாலும், அவன் வம்சத்தாராலும் ஆளப்பட் டும், சோழதேசத்தாராலே குடியேறப்பெற்றுமுள்ளது இச்சரித்திரம் கைலாசபுராணத்திலே விரித்துச் சொல் லப்பட்டிருக்கின்றது. பாண்டிநாட்டுள்ள இராமேசுரத் துச் சிவாலயம் யாழ்ப்பாணத்தரசனாலே கட்டப்பட்ட தென்பது அவ்வாலயத்துக் கர்ப்பக்கிருகத்துச் சிலாசாச னத்திலே தெளியப்படும். சோழநாட்டுள்ள வேதாரணி யத்துச் சிவாலயம் யாழ்ப்பாணத்துத் தில்லைநாத தம்பிரா னாலே கட்டப்பட்டதென்பதும், அவர் தஞ்சாவூர் மகா ராசாவுடைய புத்திரனுக்கு விபூதி சாத்தி நோய்நீக்கியரு ளினமைபற்றி அம் மகாராசாவினாலே கோடிக்கரையில் உப்பளமும், கோடிக்கரை தோப்புத்துறைகளில் ரேகுச் சுங்கமும், பல விளைநிலம் தோட்டங்களும், அவ்வால

யத்தின்பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்டன வென்பதும், அக்காலமுதல் இக்காலவரையும் அவ்வாலயத்துக்குத் தருமகர்த்தாக்களா யுள்ளோர் யாழ்ப்பாணத் துள்ள சைவாசாரியர்களே என்பதும், அந்தச் சைவாசாரியர்கள் சோழதேசத்துச் சைவாசாரியர்களோடு போசனமுதலியவற்றாற் கலப்புடையவர்களென்பதும், சிலாசாசனம் தாமிரசாசன முதலியவைகளாலே தெளியப்படும். சிதம்பரத்துள்ள கட்டளைமடங்களுள் எட்டுமடங்கள் யாழ்ப்பாணத்து மடங்கள். அவைகளுக்குத் தாவரசங்கமப் பொருளைத் தானஞ்செய்தவர்கள் யாழ்ப்பாணத்தார்கள். அம்மடங்களுக் கதிபதிகள் யாழ்ப்பாணத்தார்கள். அவர்கள் சோழதேசத்திற் சைவர்களோடு போசனமுதலியவற்றாற் கலப்புடையவர்கள். திருவாவடுதுறையாதீனம், தருமபுரவாதீனம், திருவண்ணாமலையாதீனம், சொர்க்கபுரவாதீனம் முதலிய சைவாதீனங்களிலே பண்டைக்கால முதல் இக்காலம் வரையும் தம்பிரான்களா யுள்ளவர்களுள்ளே பலர் யாழ்ப்பாணத்தார்கள். தற்காலத்திலே திருவண்ணாமலை ஆதீனத்தர்களாய் இச்சென்னை நகரில் வசித்தருளும் சிவசாத்திரபண்டிதரும் சபாப்பிரசங்க சிங்கமுமாகிய ஸ்ரீ சரவணசுவாமிகள் முதலியோர் யாழ்ப்பாணத்தார்களே. பரம்பரைச் சைவாசாரியர்களாய்ச் சிவாகமபண்டிதர்களாயுள்ள திருவாரூர்த்திருக்கூட்டத்தார்களுக்குச் சுற்றத்தார்களாய் வேதாரணியத்திருக்கும் சைவாசாரியர்கள்வீடு ஏறக்குறைய ஐம்பதுண்டு. இவர்களெல்லாருக்கும் யாழ்ப்பாணத்திலே சீஷர்க ளிருக்கின்றார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்துக்கு அடிக்கடி போவதும் அங்குள்ள சைவர்களிடத்தே திருவமுதுகொண்டருள்வதும் வழக்கம். நீர் இவைகளெல்லாம் ஆராயாது யாழ்ப்பாணத்தை வாயில்வந்தபடி நிந்தித்த கொடுமையை யாது சொல்வேன்! பாவம் பாவம்!!!

தமிழ்நாட்டிற் சிறந்த பாண்டிதேசத்தார்களாலும் சோழதேசத்தார்களாலுமே குடியேறப் பெற்றுப் பிறபாஷைகளுள் ஒன்றேனுஞ் சிறிதுங் கலப்புறாத சுத்தத் தமிழ் வழங்கப்பெறும் யாழ்ப்பாணம் திருக்கோணமலை முதலியவைகள் தமிழ்நாடென்பதற்கு ஐயமுமுளதா? மதுரைச் சங்கத்தும், புதுவைச்சங்கத்தும், சென்னைச்சங்கத்தும், தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய களத்தூர் வேதகிரிமுதலியார் உதயதாரகைப் பத்திரிகைவாயிலாக வெளிப்படுத்திய "யாழ்ப்பாணச் சிறப்பு" என்னுங் கடிதத்தில் பிறபாஷை கலவாது சுத்தச்செந்தமிழ் பேசுவோர் யாழ்ப்பாணத்தார்களேயெனவும், மற்றைத் தேசத்தார்களெல்லாரும் தமிழோடுபலபாஷையுங் கலந்துபேசுகின்றார்களெனவும், கூறியிருத்தலை நீர் பார்த்துமிலீர்போலும்.

ஈழமண்டலத்துள்ள சிவாலயங்களெங்கும் வருஷந்தோறும் தவறாது கந்தபுராணமுதலியபுராணங்கள் விதிப்படிவாசித்துப் பொருள் சொல்லப்பட்டு வருதலையும், அவைகளை அங்குள்ள ஆண் பெண் என்னும் இருபாலாரும் விதிப்படி நியமத்தோடு கேட்டுவருதலையும், அத்தேசத்தார் சிவாலயசேவை முதலியன செய்யுங் கிரமத்தையும், அத்தேசத்துக்குப் போய் வந்த இத்தேசத்தார்களுள்ளே பாராட்டாதாரில்லையே. மிக மேலாகிய இந்நல்வழக்கங்கள் வேறெத்தேசத்துள்ளன! ஆராயும் ஆராயும். ஈழதேசத்துப் பிராமணர்களுள்ளே கல்வி சிறிதாயினும் இல்லாதவரும் இதுவரை அன்னிய சமயங்களிலே பிரவேசித்தவரும் இல்லையே.

இச்சென்னைச் சர்வகலாசாலையிலே தலைத்தமிழ் வித்தியாபோதகராயுள்ள கனம்பொருந்திய பார்சிவல்துரை யாழ்ப்பாணத்திலே தமிழ் கற்றுக்கொண்டவரன்றோ?

இச்சென்னைநார்மல்ஸ்கூலில் தலைத்தமிழ் வித்தியாபோதகராய் முன்னிருந்த ம. m. m. ஸ்ரீ சவுந்தரநாயகபிள்ளையவர்களும், இப்போதிருக்கிற ம. m., m ஸ்ரீ வேலுப்பிள்ளையவர்களும், யாழ்ப்பாணத்தாரன்றோ? இங்கிலீசினின்றுந் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழ்நாடெங்குமுள்ள கெவரன்மெண்ட் பாடசாலைகளெங்கும் வழங்கும் தமிழ்ப்புத்தகங்களுக்கு ஆசிரியராகிய ம. m. m. ஸ்ரீ விசுவநாதபிள்ளையவர்களும், யாழ்ப்பாணத்தாரன்றோ. ஓகோ! நீர் இவர்களை நியோகித்த கவரன்மெண்டாரைக் கண்டிக்கவும், இவர்களாலே பரீக்ஷிக்கப்பட்டு, இவர்கள் கட்டளைக்கமைந்து, இவர்கள் கீழிருந்து, தமிழுபாத்தியாயத்தொழில் செய்து சீவனஞ்செய்யும் இந்நாட்டுப்புலவர்களைத் தடுக்கவும், மறந்தீரோ! உமது தேசாபிமானமெங்கே பறந்தது. உமது சொல்லுக்குச் செவி கொடுத்து எழுபதுரூபா ஐம்பதுரூபா முதலிய பெருந் தொகைகளையிழந்து பழையபடி ஐந்துரூபா ஆறுரூபா முதலிய சிறுதொகை வரவிற்றொழில் பூண்டு வருந்துதற்கு உடன்படார்களென நினைந்து சும்மாவிருந்தீர் போலும். இது நிற்க.

ம. m. m. ஸ்ரீ தாமோதரம்பிள்ளையவர்கள் தினவர்த்தமானி வாயிலாக வெளிப்படுத்திய சேனாவரைய விளம்பரத்திலே பிழைகாட்டப் புகுந்து, ஐந்துமாத காலம் இராப்பகல் கஷ்டப்பட்டுச் சில போலிப்புலவர்களிடத்தில் இடையறாது காலோய அலைந்து திரிந்து, இப்போது சில வினாக்கள் வினாவினீரே. நீர் ஆதியிலியற்றமிழ்ப் போதகசாலையில் ஒருபாத்தியாயரா யிருந்து எழுத்துப் பிழையற வெழுதத் தெரியாமையினாலே தள்ளப்பட்டீரன்றோ. பின்பு "எண்மூவெழுத்தீற் றெவ்வகை மொழிக்

கும் முன்வரு ஞநமயவக்க ளியல்பும் என்னுஞ் சூத்திர விதிப்படி உடம்படு மெய்பெற்றது" என்றும், "வயங்கு முச்சிகைக் கழுழுள் என்பதில் வயங்கு என்பது நான் காம் வேற்றுமை விரி சின்க என்பது இரண்டாம்வேற் றுமை விரி" என்றும், பரீக்ஷா பத்திரத்திற்கு உத்தர மெழுதிய ஓர் மகாநுபாவர் மாதம் ஒன்றுக்கு ஐம்பது ரூபாச் சம்பளம் பெற்றுக்கொண்டு தலைத்தமிழ்ப் புலமை நடாத்துகின்ற பாடசாலையிலே நான்காம் உபாத்தியாய ராயிருந்து அதற்கும்யோக்கியரல்லரென்று தள்ளப்பட்டா ரன்றோ? இவ்வியல்புடைய நீரா சிறிதும் நாணாது தலை நிமிர்ந்து வித்தியாபண்டிதப் பட்டம்பெற்ற ம. ா. ா ஸ்ரீ தாமோதரம்பிள்ளையவர்களுடைய விளம்பரத்திலே பிழை காட்டவல்லீர். உம்முடைய வினாக்களுக்குப் போப்பைய ரிலக்கணங்கற்ற சிறுவர்களே விடைசொல்லியும், உம் முடைய விஞ்ஞாபனபத்திரிகையி லுள்ள அளவிறந்த பிழைகளை யெடுத்துக்காட்டியும், உம்மைத் தலைகுனிவிக்க வல்லவர்கள்.

இத்தொண்டைமண்டலத்தின்கணுள்ள ம. ா. ா ஸ்ரீ விசாகப்பெருமாளையர் முதலிய மெய்ப் புலவர்களுள் ம. ா. ா. ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களுடைய இலக்கண விலக்கியத் திறமையையும், சைவசித்தாந்தநூலுணர்ச்சி யையும், நல்லொழுக்கத்தையும் சைவசமய அபிவிருத்தி யின்பொருட்டு இடையறாது சிரத்தையோடுசெய்யும் நன் முயற்சிகளையும் வியந்து பாராட்டாதார் இல்லை இல்லை. இங்ஙனமாகவும், நீர் ஆறுமுகநாவலரை இங்குள்ள வித் வான்க ளொருவரேனும் எண்ணிக்கையி லெண்ணுதிருக் கின்றார்களென்று, சிறிதுங்கூசாதுரைக்குமுகத்தால் சந் துக்களுடைய பெருமையைச் சிறிதும் அறியாத தேசம்

இத்தொண்டைநாடென்று, சான்றோருடைத்தாகிய இத்தொண்டைநாட்டுக்கு அநியாயமாகப் பெரியதோர் அபவாதத்தை ஏற்றினீர் ஏற்றினீர் ஐயையோ பரிதாபம் பரிதாபம்! இப்பெருங் கொடும்பாவம் யாதுபரிகாரத்தாலொழியுமோ! அறிகிலேன் அறிகிலேன்.

தற்காலத்துள்ள தமிழ்நாட்டுப் பிரபுக்களுள்ளே தமிழ்ப்புலமையும் தமிழ்ப்புலவர்களுக்குபகரிக்கும் ஔதாரியமும் ஒருங்குடைய மகாப்பிரபு ம. ள. ள. ஸ்ரீ இராமநாதபுரம் பொன்னுச்சாமித்தேவரவர்களன்றோ? தமிழிலே மிகச் சிறந்த இலக்கியங்கள் திருக்கோவையாரும், திருவள்ளுவருமன்றோ? இவைகளுக்கு முறையே மிகச்சிறந்த உரைகள் நச்சினார்க்கினியருரையும், பரிமேலழகருரையுமன்றோ. இப்பிரபு இந்நூலுரைகளைப் பிழையறப் பரிசோதித்து அச்சிற்பதிப்பிக்க வல்லவர்கள் நாவலரவர்களென்றன்றோ அவர்களைக்கொண்டு அவ்வாறு செய்வித்துப் பரப்பினார்கள்.

இத்தொண்டைமண்டலத்தில் இப்போதிருக்கும் வித்வான்களுக்கும் சிலகாலத்துக்கு முன்னிருந்த வித்துவான்களுக்கும் சாக்ஷாத்தாகவும் பரம்பரையாகவும் தமிழ்சுரந்தருளிய மூலஸ்தானம் திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனமன்றோ? இதனையறியாதவர் யாவர்! இதனை மறுக்கவல்லவர் யாவர்? அவர் தலைநிமிர்ந்து வாய் திறக்கட்டும். இத்திருவாவடுதுறையாதீனம் தோன்றிய காலமுதல் இக்காலம்வரையும் அவ்வாதீனத்திலே கல்வி இடையறாது விருத்தியாகிக்கொண்டேவருதல் பிரசித்தம். இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய திருவாவடுதுறை ஆதீனத்துள்ள பெருங்கருணைப் பிழம்பாகிய ஸ்ரீசற்குருநாத தேசிகசுவாமிகள் அவ்வாதீனத்திற்றோன்றிய மகா

கடின கிரந்தங்களாகிய இலக்கணக்கொத்துரை, தொல் காப்பியச்சூத்திரவிருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி என்னுமூன்றையும் வழுவறப் பரிசோதித்து அச்சிட வல்லவர்கள் நாவலரவர்களே என்று திருவுளத்தடைத்தன்றோ அவர்களைக்கொண்டு அவ்வாறு செய்வித்து எல்லாருக்கும் பயன்படுத்தியருளினார்கள்.

திருவாவடுதுறையாதீனத்து உபயசற்குருநாதசுவாமிகளும் திருவண்ணாமலையாதீனத்துப் பெரியசற்குருநாத சுவாமிகளும் மதுரையாதீனத்து உபயசற்குருநாதசுவாமிகளும் தங்கள் தங்கள் மடாலயங்களிலும் மதுரைச் சிவாலயத்திலும் நாவலரவர்களைக்கொண்டு வெகுசனசமூகத்திலே சைவப்பிரசங்கஞ் செய்வித்து, அவர்களையுபசரித்தருளிய வரிசைகளெல்லாம் நுஞ்செவியின் முழக்கினார் ஒருவருமில்லைப்போலும். முழக்கியவழியும் உமக்குக்கேட்டிலதுபோலும். நாவலரவர்கள் சைவசமயத்தினது அபிவிருத்தியின்பொருட்டுக் கைம்மாறற்ற பெருங் கருணையினாலே சிதம்பரத்திலே தாபித்தருளிய சைவப்பிரகாசவித்தியாசாலையிலே திருவாவடுதுறையாதீனத்து உபயசற்குருநாதசுவாமிகளும் தருமபுரவாதீனத்துப் பெரியசற்குருநாத சுவாமிகளும் சுத்தசைவசித்தாந்த வழியொழுகும் திருக்கூட்டத்தார் சேவிப்ப வீற்றிருந்தருளி அச்சாலைமாணாக்கர்கள் கல்வியைப் பரீக்ஷித்து இனிது பாராட்டியருளினமையை அறியாதார் யாவர்? இத்துணைப் பெரும் பாக்கியம் பெற்ற தாணம் நாவலரவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலை யொன்றன்றி வேறியாது! வீராசாமிமுதலியாரே, சற்றே வாய்திறவும், பார்ப்போம்.

தற்புகழ்ச்சி செய்வாரைக் கண்டிக்குஞ் சிலசெய்யுட்களைத் திரட்டியெழுதினீரே. ஓகோ! இது யாவர்பொருட்

டுச் செய்தீர்! முன்னிலையிடத்தாராகிய தாமோதரம்பிள்ளையவர்கள்பொருட்டுச் செய்தேனென்பீராயின், பிள்ளையவர்கள் ஓரிடத்தேனும் தம்மைத் தாம் புகழவில்லையே. படர்க்கையிடத்தாராகிய நாவலரவர்கள்பொருட்டுச் செய்தேனென்பீராயின் நாவலரவர்களும் ஓரிடத்தாயினும் தம்மைத் தாம் புகழவில்லையே. பின்னை எஞ்சி நின்ற இடம் யாது? தன்மையிடமன்றோ? தன்மையிடத்தார் யாவர்? நீரேயன்றோ? இயற்றமிழ்ப் பயிற்சி எட்டுணையுமில்லாது உமது பத்திரிகை முதலில் இயற்றமிழ்ப் போதகாசிரியர் என உமக்கு நீரே பட்டமிட்டுக்கொண்ட மடமை உம்மிடத்ததெனவே நினைந்து உமக்கு நீரே கண்டனஞ்செய்து கொண்டீர். இஃது அம்மம்ம சாலவுமழகுடைத்து.

தாமோதரம்பிள்ளையவர்கள் தமது சேனாவரைய விளம்பரத்திலே நாவலரவர்களுக்கு "தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர்" எனக் கொடுத்த விசேஷணம் இத்தமிழ்நாடெங்குமுள்ள மெய்ப்புலவர்களுள் ஒருவருக்காயினும் சிறிதேனும் வருத்தம் விளைக்கக் கண்டிலேம் கண்டிலேம். வித்துவமணுஞ் சிறிதேனும் வீசப்பெறுத உமக்கும் தாங்கள் வெளிப்படப் பயந்து உம்மை ஏவி மறைந்துநிற்கும் போலிப் புலவர்களுக்குமே ஆறுமனப்புழுக்கத்தை விளைவிக்கக் கண்டு விவேகிகள் யாவரும் ஆச்சரியப்படுகின்றார்கள்.

நாவலரவர்களைப் பரீக்ஷிக்கும்பொருட்டு இராமாயணத்தில் ஓர் செய்யுள் வரைந்தீர். சபாசு சபாசு!!! நீரா வித்துவான்களைப் பரீக்ஷித்துத் தரங்குறித்துப் பட்டங் கொடுக்கப் புகுந்தீர்! கெட்டி கெட்டி!!! "தான்கிடப்பது குட்டிகைச்சுவர். கனாக்காண்பது மச்சு மாளிகையா? தாமோதரம்பிள்ளையவர்கள் நாவலரவர்களுக்குக் கொடுத்த

விசேஷணத்திலே சந்தேகங்கொண்டவர்களும், அதனை விபரீதமாக மதிப்பவர்களும் ஆகிய யாவருக்கும், நான் மிக்க தாழ்மையோடு சொல்லும் விண்ணப்பமொன்றுண்டு:-

தமிழ்வித்துவான்களை உள்ளபடி பரீக்ஷித்தறியவும், பொருள் காரணமாகவேனும், அச்சங்காரணமாகவேனும், நடுவுநிலைமை கோடாது இவர் உயர்ந்தவர் இவர் இவரிற் றாழ்ந்தவர் எனத் தரங்குறித்துத் தாங்களறிந்த உண்மையை வெளிப்படுத்தவும் வல்லவர்கள் திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீஉபயசற்குருநாத சுவாமிகளும், சூரனார்கோயிற் சிவாக்கிரயோகிகளாதீனத்து ஸ்ரீசற்குருநாதசுவாமிகளும், மதுரையாதீனத்து ஸ்ரீசின்னச்சற்குருநாத சுவாமிகளுமே. இது ஒருவராலும் மறுக்கமுடியாத சத்தியம். ஆதலினாலே, நீங்களெல்லீரும் ஒருங்கு கூடி, இச்சந்நிதானங்களுக்கெல்லாம், தற்காலத்துத் தமிழ்வித்துவான்களுள்ளே யாவர் உயர்ந்தவரென்றும், சைவசித்தாந்த நூலுணர்ச்சியிலே யாவர் சிறந்தவரென்றும், திருவுளங்கொண்டருளியிருக்கின்றதென்று விண்ணப்பமெழுதி உண்மையறிந்து கொள்ளும்பொருட்டு, உங்களைப் பணிந்து வேண்டிக்கொள்கின்றேன். இதுவே நல்லவுபாயம். இதனை விடுத்து, வீண்வழக்குத் தொடுத்து, மனம் புழுங்கிப் புழுங்கி, அறிவுடையோர்களைத் திட்டிக்கொண்டு திரிவது விவேகிகளுக்கடாது. இது நிற்க.

வீராசாமிமுதலியாரே, உம்மை நாம் நோவதென்னை? உம்மாலே திட்டப்படாத வித்துவான்கள் யார்? உம்மாலே புகழப்படாத வித்துவான்கள் யார்? உம்மாலே திட்டப்படாத பிரபுக்கள் யார்? உம்மாலே புகழப்படாத பிரபுக்கள் யார்? உமக்குத் திருப்தி பிறப்பிக்க யாவரான் முடியும்?

குபேரனாலும் முடியாதே! சிலகாலத்துக்கு முன்னே உம்மாலே குடிப்பிறப்பிழுத்துத் திட்டப்பட்டவர்களே இப்போது சத்துக்களைத் திட்டும்படி உம்மை ஏவி மறைந்து நிற்கின்றார்கள். அவர்கள் இன்னும் எத்தனைதரம் உம்மாலே திட்டப்படுவார்களோ! யாரறிவார்! ஐயையோ! வீராசாமிமுதலியாரே, நீர் வயசினாலே மிக முதிர்ந்துவிட்டீர். தேகமோ அநித்தியம். இப்பிறவி தப்பினாலெப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ தெரியாதே. ஆதலினாலே, நீர் சத்துக்களை நிந்தித்தலையும், பஞ்சபாசத் தடையோடு கூடிய பசுக்களாலே செய்யப்பட்ட பசுநூல்களைப் பாராட்டிப் பெரிருள் கோடலையும் ஒழித்துவிட்டு எடுத்த தேகம் விழுவதற்குமுன்னே கடவுளையும், மெய்யடியார்களையும், வழிபட்டு, அடங்கியொழுகி, நற்கதிபெற்றுய்யக் கடவீர்.

விபவஹ மாசிமீ".

# கரு. கரையார் வழக்கு.

(இலங்கைநேசன் க-ம் புத்தகம், இலக்கம்-உக.)

இலங்கைநேச பத்திராதிபரே!

உமாதேவியாரைச் சிவபெருமான் "பரதவர் மகளாகுக" எனச் சபித்ததன்றிக் "கரையார் மகளாகுக எனச் சபித்திலர் எனவும், வலைஞருக்குக் கரையாரென்னும் பெயர் வலைவீசுபடலத்தும் பாரதத்தும் இல்லை எனவும், "வித்வகேசரி" கூறினர். வலைஞருடைய பரியாய நாமங்களுட் கரையாரும் ஒன்றென்பது, இத்தேயத்தும் பிறதேயத்துங் கற்றோரும் மற்றோருமாகிய எல்லாரும் அறிவாராகவும், "வித்வகேசரி" ஒருவர் அறியாதது ஆச்சரியம்! திருவிளையாடற் புராணத்தும் பாரதத்தும் வழங்காமையால் வலைஞரைக் கரையாரென வழங்குவது* கூடாதென்றவர், திருவிளையாடற்புராணத்தும் பாரதத்தும் வழங்காமையால் அந்தணரைப் பிராமணரெனவும், அரசரை க்ஷத்திரியரெனவும், புலையரைப் பறையரெனவும், முருகக்கடவுளைச் சுப்பிரமணியரெனவும், விநாயகக்கடவுளை விக்கினேசுரரெனவும், சிவனைப் பர்க்கனெனவும், திருமாலை விட்டுணுவெனவும், வழங்குவதுங் கூடாதென்பர் போலும்! சாதிப்பெயர் தொழில்பற்றி யல்லது இடம்பற்றி வாராதென்றவர், வலைஞருக்குக் கடலர் கழியர் திமிலர் பஃறியர் என்பன யாதுபற்றி வந்த பெயர்? கூறுக. கரையாரென்பது கரையிலிருத்தல் காரணமாகப் போந்த பெயராதலால் வலைஞரென்னும் ஒருசாதியாரை மாத்திரஞ் சுட்டாதென்றவர், கழியரென்பது கழியிலிருத்தல் காரணமாகப் போந்தபெயரென்பதும், கழி கரை என்பன ஒருபொருட்சொற்

கள் என்பதும், அங்ஙனமாகவே கழியர்போலக் கரையாரும் வலைஞருக்குக் காரணவிடுகுறியாயிற்றென்பது, அறிந்துகொள்ளமாட்டாததென்னையோ! கரையார் வலைஞரென்பது, "கரையார், (A respectable caste of fishermen) வலைஞர்." என்று உவின்சிலோ அகராதியிலே சொல்லப்பட்டதனையும் வழக்குநோக்கியும் அறிக. கிராமமென்பது நெய்தற்றிணைக்குரிய கரை துறையடுத்ததென்றார். நெல்விளைநிலங் கிராமமென்பதறியார் வேறு யாதறிவார்! சூடாமணிநிகண்டிலே பேசப்படாமையாற் கரையாரென்றொரு சாதியில்லையென்றார். சாதியென்பனவெல்லாஞ் சூடாமணிநிகண்டிலே பேசப்பட்டனவென்பது தமக்குங் கருத்தன்மை, இந்நிகண்டிலே பேசப்படாத புலைஞரென்றொருசாதி தாம் பேசியவற்றால் இனிது விளக்கினார். சாதிகள் எத்தனை? அவைகளுள் எந்தெந்தச்சாதி எந்தெந்த உற்பத்தியும் எந்தெந்தத் தொழிலுமுடையது? இவை அறிவிக்கு நூல்கள் எவை? "வித்வகேசரி" அறிவாரா! என் கடிதத்திற் காணப்பட்ட கரையாரென்பது நிகண்டு முதலியவற்றில் இல்லாமையாற் கரையாரென்று ஒருசாதியில்லையென்றவர், என்கடிதத்திற் காணப்பட்ட பறையரென்பதும் நிகண்டு முதலியவற்றில் இல்லாமையாற் பறையரென்று ஒருசாதி இல்லையென்று கரையாததென்னையோ! இஃதேன் கரைவார் கரையார்? இனிப் பறையருள்ளும் ஒரு "வித்வகேசரி" தலைப்பட்டால் அவர் இது பறையாரா பறைவார். சூடாமணி நிகண்டு செய்தவர் பெயர்தானும் பிழையற எழுதமாட்டாது "வீரமண்டலவர்" என்றெழுதியவர், தாம் "வித்வகேசரி" எனவும், தம்மையுள்ளிட்டார் கலைக்கடற்கரையார் எனவுங் கூறிக்கொண்டது பெரிதும் வியக்கற்பாலதே. யாழ்ப்பாணத்துக் கலைக்கடற்கரையாருள்ளே தாம் வட

கலிக்கடற் கரையாரோ தென்கலிக்கடற்கரையாரோ! சற்றே வெளிப்படுத்துக. "வித்வகேசரி" தம் முன்னோர்கள் பெயரான் முடிந்த உறுதிகளைச் சற்றே பார்ப்பாராயிற் கரையாரென்றொரு சாதியுண்டென்பது தெளிவர். ஒரு போது தம் வீட்டுறுதிகளின் மாத்திரங் கரையாரென்னாது வலைஞரென்றுளது போலும்!

உமாதேவியாரைச் சிவபெருமான் வலைச்சியாகுக எனப்பணித்தது தாமுபதேசித்த வேதப்பொருளை விருப்பின்றிக்கேட்ட குற்றத்தாலென்பது வலைவீசுபடலத்தில் இனிது விளங்கிக் கிடப்பவும், வலைஞர்சாதிக்குச் சிவபெருமான் கூறிய "விரதமுமறனுமின்றி மீன்பிடித்திழிஞராகும்" என்னும் அடைமொழி தமது கடிதத்திற்றானே முன்னர் வெளிப்பட்டுக் கிடப்பவும், தாம், பின்னர் அவற்றை மறந்து உமாதேவியார் வலைச்சியாகப் பிறந்ததனால் வலைஞர்குலம் உயர்குலம் என்றார். "வித்வகேசரி"ப்பட்டத்துக்கு யோக்கியர் இவரன்றி வேறியார்! உமாதேவியாரை மகளாகவும் சிவபெருமானை மருமகனாகவுங் கொண்டவன் றலைஞர்குலாதிபனன்றி வேறில்லையென்றார். ஓகோ! மலையரசனையுந் தக்கனையு மறந்தாரோ! தேவவருக்கத்துளன்றி மனிதவருக்கத்துட் பேசினேனென்பார் போலும்! ஆகா! பாண்டியனை மறந்தாரோ! சிவபெருமான் பாண்டியனை மாமனாகக் கொண்டமை, அவன் மீன்வடிவத்தைத் தன் கொடியில் எழுதுவித்துக்கொண்ட விசேடம்பற்றி என்று இனிக் கூறுவர்போலும்! அஃதொக்குமொக்கும்! அப்படியாயின், நேரே மீன்படுத்து நேரே மீனுண்டு நேரே மீன் விற்றுச் சீவிக்கும் இத்துணை விசேடத்தோடு, சிவபெருமானுடைய அருமைக்குழந்தையும் அவரருமைத் திருவாக்கா

கிய சிவாகமத்தை யுபதேசித்த முதற்குருவும் மீன்வடிவெடுப்ப, அவற்றை வலைவீசிப் பிடிக்கும் அத்துணை விசேடமும் ஒருங்குடைய நுளையர்குலம் எத்துணையுயர்குலமாதல்வேண்டும்! உமாதேவியார் வலைச்சிவடிவங்கொண்டதனால் வலைஞர்குலம் உயர்குலம் என்றவர், சிவபெருமான் பறையர் வடிவங் கொண்டதனாற் பறையர் உயர்குலம், வேடர்வடிவங்கொண்டதனால் வேடர் உயர்குலம், பன்றிவடிவங்கொண்டதனாற் பன்றியுயர்குலம், விட்டுணு மீனுமை பன்றி வடிவங்கொண்டதனால் மீனுமைபன்றி யுயர்குலம், பன்றிவாய்ப் புகுவதனாற் பலவீ உயர்பொருள் என்பார் போலும்!

இங்ஙனம்,
மீனக்கிரகண "அசேதனதிலக"னாகிய
ஒருசைவன்.

# கச. "ஓர் வினா"வுக்கு விடை.

(இலங்கைநேசன் க-ம் புத்தகம், இலக்கம்-உஉ)

பத்திராதிபரே!

தீட்சை பெற்ற சூத்திரர் மானிப்பாய் மருதடிப்பிள்ளையார்கோயிலுக்கு வெளியே பொங்கிச் சுவாமிக்கு நிவேதிப்பது சிவாகமசம்மதமாமோ என்று வினாவிய மானிப்பாய்ச்சைவர், அந்தக் கோயிலினுள்ளே சுவாமியைத் தொட்டுப் பூசை செய்கிற பண்டாரங்களுந் திருவிழாச்செய்கிற பண்டாரங்களும் என்னசாதியாரென்று, எண்ணினாரோ! அவர்கள் தீட்சை பெற்ற சூத்திரரன்றோ? தீட்சை பெற்ற சூத்திரர் உள்ளே சுவாமியைத் தொட்டுப் பூசிக்க யோக்கியர், வெளியே பொங்கிப் படைக்க யோக்கியரல்லர் என்பதுதான் அவர்கருத்தோ! பண்டாரங்கள் சூத்திரரல்லர் என்பாராயின், அவர்கள் வேறெந்தச் சாதியோ! பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்னும் மூன்று சாதிகளுள் ஒரு சாதியார் என்பாராயின், அந்தப் பண்டாரங்களுக்கு உபநயனமும் பிரமகாயத்திரி உபதேசமும் வேதாத்தியயனமுமுண்டோ? இல்லை. அவர்கள் சைவர் என்பாராயின், சைவர் என்றொரு சாதியுண்டோ! சிவனை வழிபடுவோர் என்பதன்றோ சைவர் என்பதற்குப் பொருள்! பிராமணர் முதற் பறையரீறாகிய எல்லாச்சாதியாருள்ளும் சிவனை வழிபடுகிறவர்கள் உண்டன்றோ! ஆகவே, அவர்களெல்லாஞ் சைவர்கள் தாமே. இப்படியாகவும், பண்டாரங்களை மாத்திரம் சைவரென்பது எப்படி! தீட்சை பெற்ற சூத்திரர் என்றது புலாலுண்பவர் காணப் புசிக்குஞ் சூத்திரரை என்றும், சைவர் என்றது புலாலுண்பவர் காணுமற் புசிக்குஞ் சூத்திரரை என்றுஞ் சொல்வாராயின், புலாலுண்பவருக்குத் தீட்சை செய்கிற

பண்டாரங்களும் அவர்கள் சீடர்களுஞ் சைவராவார்களோ! இன்னும், சைவருடைய போசனபந்தியைப் பார்த்தற்கு அயோக்கியர்கள் புலாலுண்பவர் மாத்திரந்தானோ! சிவநிந்தகர், வேதசிவாகம நிந்தகர், சிவத்திரவியங் கவர்கிறவர், கொலைஞர், கள்வர், வியபிசாரஞ் செய்வோர், பொய்ச்சாட்சியஞ் சொல்வோர், நித்தியகருமம் விடுத்தோர், பிறன்மனையாளை விவாகஞ் செய்தவர், கைம்பெண்ணை விவாகஞ்செய்தவர், கைம்பெண்ணுடைய பிள்ளைகள், கணவனிருக்க வேறு கணவனுக்குப் பெற்ற பிள்ளைகள் இவர்களெல்லாம் சைவ பந்தியைப் பார்த்தற்கு யோக்கியர்களா! இது சிவாகம சம்மதந்தானோ! புலாலுண்டல்மாத்திரம் பாவம், சிவநிந்தை முதலியவை புண்ணியமா!

சனங்கள் கோயிலுக்கு வெளியே பொங்கிப் படைத்தவினாலே தமக்கு அல்லது தம்முடைய சுற்றத்தாருக்கு அரிசி வரவு குறைகின்றதென்று மானிப்பாய் "ஒரு சைவன்" என்பவர் பதைபதைக்கின்றார்போலும்! பண்டாரங்கள், சனங்களுடைய அரிசியை வாங்கிச் சுவாமிக்கு நிவேதனத்துக்கும் அச்சனங்களுடைய பசிக்கும் உபயோகப்படுத்தாது வீடு சேர்ப்பது சிவாகம சம்மதமோ! சனங்கள், சுவாமிசந்நிதானத்திலே தாங்களே சுசியோடு பொங்கி, மந்திரத் தோடாவது, மந்திரமில்லாமல் "பிள்ளையாரே இதை ஏற்றுக்கொள்ளும்" என்றாவது, தாங்களே பத்தியோடு நிவேதித்துத், தாங்களுந் தங்கள் குழந்தைகளும் புசித்துப் பசித்துவந்த பிறருக்குங் கொடுத்து வீடுசேர்வது சிவாகமசம்மதமோ! சிவாகமம் வல்லவர்கள் வாய் திறக்கட்டும். கோயிலிலே சுவாமியைத் தீண்டிப் பூசை செய்ய உரிமையில்லாத சாதியார்கள், சுவாமிசந்நிதானத்திலே தங்கள் தங்களுக்கு விதித்த இடங்களிலே பாவனையாக அருச்சனைசெய்து

நிவேதிக்கலாமென்பது சிவாகமவிதி. அதிபாதகமாகிய தேவத்திரவியாபகார முதலிய பலபாதகமுஞ் செய்கிற போ, லிச் சைவர்கள், அதிபாதகத்திற்றாழ்ந்த அதிபாதகதுல்லியத்திற்றாழ்ந்த மகாபாதகத்திற்றாழ்ந்த மகாபாதகதுல்லியத்திற்றாழ்ந்த உபபாதகத்திற்றாழ்ந்த உபபாதகதுல்லியத்துள் ஒன்றாகிய புலாலுண்டல்; செய்யுஞ் சூத்திரரில் உயர்ந்தவர்களாமோ! கெட்டி கெட்டி !!!

யாழ்ப்பாணம்
வண்ணார்பண்ணை
௧௧-௧௫-௭௭.

இங்ஙனம்,

ஒரு நடுவன்.

# கரு. இழிமொழித் திமிரதீபிகைச் சண்டமாருதம்.

(இலங்கைநேசன் உ-ம் புத்தகம், இலக்கம் - கஉ.)

பெயர் வெளிப்படுத்தாது மறைவில் நின்று கத்தோலிக்குப் பாதுகாவலன் வாயிலாக வம்பிலக்குத் தொடுக்கின்ற கோப்பாய் மாணுக்கனே! நீ எந்தப்பள்ளிக்கூடத்து மாணுக்கன்? யார்மாணுக்கன்? உன் பெயர் யாது? சமயம் யாது? புரோடெஸ்டண்டசமயமோ? கத்தோலிக்கசமயமோ? புரோடெஸ்டண்டசமயம் என்பையாயின், விக்கிரக வணக்கஞ்செய்யுங் கத்தோலிக்கர்பொருட்டு வாதிக்கப்புகாய். புகுவையாயின், விக்கிரகாராதனதூஷகனாய் நின்ற நீ, சுவமததூஷகனாகுவையே. கத்தோலிக்கசமயம் என்பையாயின், கோப்பாயிலே கத்தோலிக்க வித்தியாசாலையாவது, கத்தோலிக்க குடும்பமாவது, கண்டுமிலேங் கேட்டுமிலேம்.‡ மாணுக்கனே! கத்தோலிக்கமதத்தில் எப்பொழுது புகுந்தாய்.

வாதத்தாற் சமயவுணர்ச்சி பெறலாகாதென்றாய். பின் எதனாற் பெறத்தக்கது? பஞ்சகாலத்திலே பட்டினியால் வருந்தும் நெடுந்தீவார் முதலாயினாருக்கு உதவி உயிர்பிழைப்பிப்பேமென்று சைவர்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டிகள் முதலாயினோரிடத்தும் யாசித்த அரிசி காட்டி, இவ்வரிசி தருவேம் நமது கத்தோலிக்க மதத்தில் வருவீர்களாக என்று ஆசை பூட்டி, அவ்வேழைகளை ஒருங்கு கூட்டி, அரிசி காய் கறிநீட்டி, ஸ்நானமாட்டித், தஞ்சமய

‡ இது எழுதப்பட்டகாலத்தில் கோப்பாயிலே கத்தோலிக்க வித்தியாசாலையாவது குடும்பமாவது இல்லை.

வலையின் மாட்டி, நரகக்குழியில் வீட்டி, இன்ன இன்னகாலத்து இத்தனை இத்தனை அஞ்ஞானிகளை நம்மதத்திலே புகுத்தினேமென்று பொய்ப்புகழீட்டிச், செருக்குறுகின்ற நுஞ் சாஸ்திரியாரைச், செந்திநாதையர் வாதத்துக்கு அழைத்தது குற்றந்தானே. இதனை யாவர் மறுப்பார்! நுஞ் சாஸ்திரியாரை முன்மாதிரியாகப் பின்பற்றினுல் என்னை? 'மடை' ஐயர், சிராத்தாதிகளிலே தமக்குக் கிடைத்த அரிசியை வெளியில்விடாது வைத்துக்கொண்டு, சைவமதபோதகராகப் பார்க்கிறுரோ! பஞ்சத்தால் வருந்தித் தெருத்தோறுந் திரிந்த கத்தோலிக்கர்களுள்ளே சிலருக்குக் கொடுத்தால், அவர்கள் விபூதி பூசார்களோ? அப்பொழுது, இன்ன இன்ன காலத்திலே இத்தனை இத்தனை கத்தோலிக்கர்களைச் சைவமதத்திலே புகுத்தினேம் என்று எழுதிவிடலாமே! எழுதிவிட்டாராஞல், இலங்கைநேசபத்திராதிபர் வெளிப்படுத்திவிடாரா? வியாதிநீக்கம் புத்திரபாக்கிய முதலியவைகளின்பொருட்டு நல்லூர்க்கந்தசுவாமிகோயில் வண்ணார்பண்ணைப் பெருமாள்கோயில்களுக்குப் பிரார்த்தனை செலுத்துகிற கத்தோலிக்கர்கள் பசிநீக்கத்துக்கு விபூதி பூசப் பின்னிடுவார்களா! லகுவழியிருக்க வாதத்துக்கு ஏன் ஐயர் அலைகிறுர்! பிராமணனுக்குப் பின் புத்திதானே!

சைவசமயமும் அறியாது, கத்தோலிக்க மதமுமறியாது தங்கள் பெயரும் எழுத அறியாத பறையர் நளவர் பள்ளர்களுக்குக் கத்தோலிக்க உண்மையை ஒருபடியரிசி மாத்திரத்தால் நாட்டவல்ல நுமது சாத்திரியார், இலக்கண இலக்கியங் கற்றுச் சைவநூலுஞ் சிறிது ஓதி, விவிலியநூல் முழுதுமுணர்ந்து, அவ்வளவினமையாது, இங்கிலாந்திலே எத்தனையோ பிரசித்தசபைகளிலே கிறிஸ்துமத குருமார்க

ளும் கிறிஸ்துமத விரோதிகளும் வாதித்த வாதபுத்தகங்கள் பலவும் வாசித்துக் கிறிஸ்துமத விஷயத்திலே தமக்குத் தோன்றிய சந்தேகங்களை நிவிர்த்திசெய்துகொள்ளலாமென்னும் ஆசைகொண்டு, கத்தோலிக்க குருமாருக்குங் குருவாகிய தம்மோடு வாதிக்க வெளிப்பட்டு வந்த பிராமணருக்குக் கத்தோலிக்க உண்மையை எவ்வாறு காட்டுவார்! சங்கடந் தானே.

நஞ்செந்திநாதையர் உன்னோடு வாதுசெய்யத் துணிந்தால், கோப்பாயில் எந்தமூலை முடுக்குகளிலே ஒ மாணுக்கனே மாணுக்கனே! என்று உன்னைத் தேடிப் பிடிப்பார். தயைகூர்ந்து சற்றே சொல்லு. நின் சாஸ்திரியாரோடு வாதிக்க வெளிப்படையினின்ற உபாத்தியாயர் வல்லரல்லர் என்ற நீ, உபாத்தியாயரோடு வாதிக்க மறைவில் நின்ற மாணுக்கன் வல்லன் என்று, வாதம் பார்த்துக் களிக்க எதிர் பார்த்து நின்ற யாமெல்லாம் எப்படித்துணியலாம்!

இங்ஙனம்,
வண்ணை நடு.

# ௧௫. வண்ணார்பண்ணைக் கதிரேசன்கோயில்.

(இலங்கைநேசன் ௩-ம் புத்தகம், இலக்கம்-௧௩.)

நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களே!

நீங்கள் மெய்ச்சமயம் என்று நம்பி அநுட்டிக்கிற சமயம் சைவசமயமேயானால், நான் வினாவும் வினாக்களுக்குச் சைவசமயநூற் பிரமாணத்தோடு நீங்கள் விடைதரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

௧. சுப்பிரமணியசுவாமிகோயில் சிவன்கோயிலுக்குத் தென்பக்கத்திலே கட்டலாமா?

௨. கோயிற் சந்நிதியிலாவது கோயில் வீதியிலாவது மேல்வீடு கட்டலாமா?

௩. "வேலும் வேறுளபடைகள்யாவும் மூவிரு முகத்துவள்ளல் மொழிந்திடு பணிகளாற்றிக் கோவிலின்மருங்கு முன்னுங் குறுகிவீற்றிருந்தமன்றே" என்று கந்தபுராணஞ் சொல்லவும், அதற்கு மாறாக, மூலத்தானத்திலே வேலாயுதத்தையும் புறவாயிலிலே தண்டபாணியாகிய சுப்பிரமணியசுவாமியையுந் தாபிக்கலாமா?

௪. மூலத்தானத்திலே வேலாயுதந் தாபிக்கப்பட்ட கோயிலை வேலாயுதக்கோயிலென்னாது கதிரேசன் கோயிலென்னலாமா?

௫. சுப்பிரமணியசுவாமிகை வேலாயுதம் ஆறு தலை கொண்டது என்று குமாரதந்திரம் பேசவும் அதற்குமாறாக, ஒருதலைகொண்ட பிறர்கைவேலாயுதத்தைத் தாபிக்கலாமா?

௬. யந்திரத்தைத் தாபித்துப் பூசையில்லாவண்ணம் அதன்மேலே கல்லுவைத்துவிடலாமா?

௭. வேலினாலே வழிபடப்படுஞ் சுப்பிரமணிய யந்திரத்தின்மேலே வேலை வைக்கலாமா?

௮. மூலத்தானத்திலே தாபிக்கப்பட்ட வேலையே திருவிழாக்கொண்டருளுவிக்கலாமா?

௯. சிவன் கோயிலிலே அர்த்தயாமமானதின்பின், அதன் பிராகாரத்துட்பட்ட கதிரேசன்கோயிலிலே திருவிழாச்செய்யலாமா?

௧0. பிரதிட்டைக்கு ஆசாரியரையும் செபத்துக்குப் பிராமணர்களையும் ஏற்படுத்த, நீங்கள் பிரதிட்டாவிதி செபவிதி அறிந்த பண்டிதர்களா?

௧௧. சிவன்கோயிலிலே அருச்சகாசாரியராய் இருந்து தந்தசுத்திதானுஞ் செய்யாது பூசைசெய்தவர் என்று தள்ளப்பட்டவரை நீங்கள் உங்கள் கோயிலுக்குப் பிரதிட்டாசாரியராக ஏற்படுத்தலாமா?

௧௨. கிராத்தத்திலே எந்தச்சாதியாருடைய பிதாமாதாக்களுக்கும் தங்கள் தலையைப் பீடமாகக் கொடுத்துவிட்டு அவர்களுக்கு நிவேதிக்கப்பட்டு எச்சிலாய்விட்ட அரிசிமுதலியவைகளைத் தங்கள் பாத்திரங்களில் இட்டுச் சமைத்து, அந்த எச்சிலைப் பின்பு சிவனுக்கு நிவேதித்துப் புசிக்கிற பிராமணரைப் பிரதிட்டாசாரியராக ஏற்படுத்தலாமா?

௧௩. சிவதீட்சை பெற்றுஞ் சைவாந்தியேட்டியும் சைவசிராத்தமும் இல்லாத வமிசத்தாரைப் பிரதிட்டாசாரியராகவேனும் அருச்சகாசாரியராகவேனும் ஏற்படுத்தலாமா?

கச. சிவன்கோயிலிலே பூசை திருவிழாச் செய்கிற ஆதிசைவகுருமார்கள் இருக்க, வைதிகருமல்லாது சைவரு மல்லாது உபயமதப் பிரஷ்டராயிருக்கிறவரைப் பிரதிட் டாசாரியராக நீங்கள் ஏற்படுத்தலாமா?

கரு. மூன்று நாலு யாகத்துக்கு ஒருவரே ஆசாரிய ராய் இருக்கலாமா?

கசு. செபகாரர்கள் மாரணத்துக்குப்போலப் பிரதிட் டைக்குத் தெற்குமுகமாக இருந்து செபம் பண்ணலாமா?

கஎ. சனங்களைக் குருமார் பிராமணரை அனுப்பி விபூதி பாக்குவெற்றிலை கொடுப்பித்து அழைப்பியாது செ த்தவீட்டுக்குப்போலக் கும்பாபிஷேகத்துக்கும் சூத்திரர் களை வெறுங்கையோடு அனுப்பிச் சொல்லுவித்து அழைக் கலாமா?

கஅ. நீங்கள் உங்கள் சமயக்கிரியைகளைச் செய்யவே ண்டியதும் அவைகளைப்பற்றிய இந்த வினாக்களுக்கு விடை தரவேண்டியதும் அந்தச் சமயநூலின்படிக்கா உங்கள் மனப்பிரியத்தின்படிக்கா? சமயநூலின்படிக்கல்ல மனப்பி ரியத்தின்படிக்கு என்பீர்களானால், எட்டுரூபாவும் பத்து ரூபாவும் எத்தனைரூபா என்பவர்களுக்குப் பதினெட்டு ரூபா என்று கணிதநூலின்படி விடைகொடாது, வாங்கற் கணக்கிலானால் இருபதுரூபா என்றும், கொடுக்கற் கண க்கிலானால் பதினாறுரூபா என்றும் உங்கள் மனப்பிரியத் தின்படிக்கு விடை கொடுப்பீர்கள்போலும்?

வண்ணார்பண்ணை
எகூ-ம் ஞூ ஆடி மீ ௩௳ } இங்ஙனம்,
உற்றது கூறுவோன்.

---

# கஎ. சமயம்! சமயம்!!

(இலங்கைநேசன் க-ம் புத்தகம், இலக்கம்-கஉ)

ஓ யாழ்ப்பாணத்துச் சனங்களே!

வடமாகாணத்துக்குத் துவையினந் துரை (Twynam) கவர்ண்மெண்டு ஏசண்டான காலந்தொடங்கி, அவராலும் அவர் கீழ் உத்தியோகத்தர்கள் சிலராலும் நீங்கள் பலவகைப்பட்ட பெருந் துன்பங்களை அநுபவித்துக்கொண்டு வருகிறீர்கள். அந்தத் துன்பத்தினின்று நீங்கி உய்யும் வகை உங்களுக்கு வாய்க்கும் பொழுதெல்லாம், அதற்கு இடையூறுசெய்து தாம் தப்பித்துக்கொண்டு தலையெடுக்கும் உபாயத்திலே துவையினந்துரை அதி சமர்த்தர். எப்படியெனிற் கேளுங்கள்.

க-வது. ஸ்ரீ. கிறிகோறி (Gregory) கவர்ணர் இங்கே வந்தபொழுது, சுவாதீனப் பிரபுக்களுடைய (Independent Gentlemen) பந்தல்களுக்கு அவர் போவாரானால், தம்முடைய கொடுமைகளைச் சனங்கள் அவருக்கு விண்ணப்பஞ் செய்வார்கள் என்று பயந்து, துவையினந்துரை அவர் அங்கே போகாமைக்கு வேண்டும் உபாயமெல்லாஞ் செய்து, தங்கீழ்ப்பட்ட கச்சேரி உத்தியோகத்தர்களைக் கொண்டும் தலைமைக்காரர்களைக்கொண்டும் அங்கங்கே பந்தல் போடுவித்து, அங்கேமாத்திரம் அவரை அழைத்துக் கொண்டுபோய், தம்மிடத்தில் உள்ள குற்றங்களெல்லாவற்றையும் மறைத்துந், தம்மிடத்தில் ஒரு சிறிதாயினும் இல்லாத குணங்களை உண்டென்று கற்பித்தும், அவரெதிரே பிரசங்கம் (Address,) எழுதி வாசிக்கும்படி செய்துவிட்டார்.

உ. துவையினந்துரை தெருக்களின்பொருட்டு நிலமெடுக்கும் விஷயத்திலே தம்மாலே கொடுமை செய்யப்பெற்றவர்களுள்ளே சிலர் தமக்கு விரோதமாகக் கோட்டிலே வழக்குத் தொடர்ந்ததுகண்டும், சிலர் வழக்குத்தொடுக்க முயல்வது கேட்டும், தங்கீழ்க் கச்சேரிக் கிளாக்குகளுள்ளும் தலைமைக்காரருள்ளுஞ் சிலரைக்கெஞ்சியும் அச்சுறுத்தியும் ஏவி, அவர்களிடத்துக்கனுப்பி, தொடங்கப்பட்ட வழக்குகளை விடும்பொருட்டும், தொடங்கப்படும் வழக்குகளைத் தொடங்காமைப் பொருட்டும், செய்வித்துக்கொண்டார்.

ஙு. துவையினந்துரை யாழ்ப்பாண மணிய உத்தியோகம், உலாந்தர்காலந் தொடங்கி உயர்குடிப் பிறப்போடு உத்தியோகஞ் செல்வங் கல்வியறிவு நல்லொழுக்கஞ் சுற்றப்பெருக்கம் எச்சபையினும் நன்குமதிக்கற்பாடு முதலிய பலதிறத்தாலுஞ் சிறப்புடைய பரம்பரையாராலே கேட்கப்பட்டும், அவருக்கு அது கொடுக்கப்பட்டால் தம்முடைய வெட்கமில்லாத அநீதியாகிய கேள்விகளுக்கு அவர் ஒரு சிறிதும் உடன்படார் என்று பயந்து, அந்தக் கேள்விகளை முடித்தலில் அதிசமர்த்தரென்று மன்னாரிலே தம்முடைய நெடுங்கால அநுபவத்தாலே துணியப்பட்ட மன்னார் அதிகாரத்தை இங்கே வருவித்து, அவ்வுத்தியோகத்தை அவருக்குக் கையளித்துவிட்டார். ஒருஏழை விவாகஞ்செய்துகொண்ட மனையாளை, அவனுக்குத் துரோகஞ் செய்து, தமக்கு மனையாளாக்கிக்கொண்ட ஒருமகாப்பிரபு, யாழ்ப்பாணத்துச் சனங்களே, உங்கள்வீட்டுக் கன்னிகைகளுக்குக் கலியாணம் எழுதும் உத்தியோகத்தராய்விடும்படி செய்துவிட்ட துவையினந்துரை எவ்வளவு பரமயோக்கியர்!!!

௪. முன்னை வழக்கத்திற்கு மறுதலையாக இப்பொழுது நெடுங்கால நிலைபெறுவதாகிய பேதிவியாதிக் காலத்திலே, துவையினந்துரை தாம் சனங்களுக்கு நன்மைசெய்வார்போல நடித்து, அவர்களுக்குத் தீமையும் கவர்ண்மெண்டுத் திரவியாபகாரமுஞ் செய்த தம்முடைய கொடுமையை மறைக்கும்பொருட்டு, தம்மாலே நியாயமொருசிறிதுமின்றி நெடுங்காலம் பகைக்கப்பட்ட நியாயாதிபதியைத், தாம் தப்பும் நியாயநோக்கி, வலிந்து தம்மனையாளோடுபோய்க் கலந்து, தமக்குச் சினேகிதராக்கிக்கொண்டார்.

௫. இப்பஞ்சகாலத்திலே வடதேசத்திலே கவர்ணரும் கலக்கட்டர்களும் பஞ்சத்தால் வருந்துஞ் சனங்களுக்கு எவ்வளவோ பெருநன்மைகளைச் செய்வது பத்திரிகைகளாலறிந்தும், இங்கே சனங்கள்படுந் துயரத்தைக் கண்டுங் கேட்டும், துவையினந்துரை தாம் இங்கே ஒரு நன்மையுஞ் செய்யத் தலைப்படவில்லை. அம்மட்டோ, இரக்கம் ஒரு சிறிதுமில்லாமல், வாயிதாப் பணத்தினாலும் தலைவரிப்பணத்தினாலும் சனங்களை வருத்தத் தலைப்பட்டார். அதுகண்டிரங்கி, இங்குள்ள சிலர் ஒரு கூட்டங் கூட்டிக், கவர்ணருக்கு எழுதிய விண்ணப்பத்தை, அவர் துவையினத்துக்கு அனுப்பி, இங்கே பஞ்சம் உண்டென்றது மெய்யோ என்று கேட்கத், துவையினம் தாம் கவர்ணருக்கு யாதோ எழுதிவிட்டு, இங்கே தலைவரிப்பணத்தையும் வாயிதாப்பணத்தையும் சீக்கிரம் அறவிடும்படி தலைமைக்காரர்களுக்குக் கட்டளை செய்துவிட்டார்.

௬. நீங்கள் துவையினந்துரையினாலே "அல்லற்பட்டாற்றுதழுதகண்ணீ"ரைக்கண்டு, பரங்கருணைத் தடங்கடலாகிய கடவுள், கொழும்பில் "எக்சாமினர்"

(Examiner) என்னுஞ் சமாசாரபத்திரிகையின் அதிபதியுடைய மனசை இரங்குவித்து, உங்களுக்குத் துவையினந்துரை செய்த தீமைகளெல்லாம் அவர் தமது பத்திரிகை வாயிலாக அதி தைரியத்தோடு வெளிப்படுத்தும்படி, செய்தருளினார். அதுகண்ட கவர்ணர், துவையினந்துரையாலே செய்யப்பட்டன என்ற தீமைகளுட் சிலவற்றை விசாரணைசெய்யும்பொருட்டுக் கம்மிஷனர்களாக (Commissioners) மூன்று துரைமார்களை இங்கே அனுப்பியிருக்கின்றார். துவையினந்துரை, தமக்குக் கீழ்ப்பட்ட கச்சேரி முதலிமார்களையும் தலைமைக்காரர்களையுஞ் சனங்களிடத்துக்கு அனுப்பி, அந்தச்சனங்கள் தமக்கு விரோதமாக ஒன்றும் பேசாவண்ணந் தடுக்கும்பொருட்டும், தாம் இங்கே செய்தவைகளெல்லாம் வெகுசனோபகாரமென்று அந்தத் துரைமார்களுக்கு விண்ணப்பஞ் செய்விக்கும்பொருட்டும், தமது மனையாளோடு இடையறுமுயற்சி செய்து கொண்டு திரிகின்றார்.

சனங்களே! உங்கள்மேல்வைத்த இரக்கத்தினாலே நாஞ்சொல்வதைச் சாவதானமாகக் கேளுங்கள். உங்களுக்கு இது நல்லசமயம். இந்தச் சமயந் தப்பினால், உங்களுக்கு இனியொருசமயம் வாயாது. நீங்களெல்லாந் திரண்டு முன்னின்று, துவையினந்துரையாலும் அவர் கீழ் உத்தியோகத்தர்களாலும் விளைந்த தீமைகளைக் கம்மிஷனர்மாருக்கு மறைப்பின்றி வெளிப்படுத்துங்கள். அதுசெய்தால், நீங்களும் உங்கள் சந்ததியாரும் உங்கள் அயலாருந் துன்பமின்றி வாழலாம். நீங்கள் துவையினந்துரையுடைய முகமனையும் அவர்கீழ் உத்தியோகத்தர்களுடைய முகமனையும்பார்த்து மெய்யைமறைத்துப் பொய்யைப் பேசுவீர்களானால், இனிச் சமாசார பத்திரிகைகாரர்கள்,“தலைக்குமேலே

கைகாட்டித் தமிழர்களுக்கு நாம் இரங்கியாவதென்னே!'' என்று பின்னின்றுவிடுவார்கள். உங்கள் பொருட்டிரங்கிக் கூடிய சங்கத்தாரும், "நாங்கள் வீணுகப் பிரயாசைப்பட்டும் என்ன பிரயோசனம்!'' என்று உங்களைக் கைவிட்டு விடுவார்கள் அப்பொழுது நீங்களும் உங்கள் சந்ததியார்களும் உங்கள் அயலார்களும் இன்னும் பற்பல துன்பங்களை அனுபவிப்பீர்கள். இவ்விரண்டினுள், உங்களுக்கு எது பிரியமோ அதைச் செய்யக்கடவீர்கள்.

இவ்வியாழ்ப்பாணத்துப் பிரபுக்களும், கத்தோலிக்குருமார்களும், பாதிரிமார்களும், இவ்வியாழ்ப்பாணத்துச் சனங்கள் பஞ்சத்தினுலே படுந்துன்பமெல்லாம் விவரமாக எழுதிய கடிதங்கள் கவர்ணருக்கு அனுப்பப்பட்டன. வன்கண்மை பொய் வஞ்சனை கோள் கைக்கூலிவாங்கல் முதலியவைகள் நிறைந்த மகாபாவிகளாகிய உத்தியோகத்தர்களுடைய முகமனுக்குப் பயந்து, உங்கள் தலையிலே நீங்களே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளாமல், மேற்சொல்லிய பரோபகாரிகளை நம்பி அவர்களை அநுசரித்து நடந்து வாழுங்கள்.

வண்ணார்பண்ணை
கஅஎஎ-ம் ஞு ஆனிமீ உ௯உ

இங்ஙனம்,
இ ர க் க ம்.

# ௧௮. இது நல்ல சமயம்!

(இலங்கைநேசன் ௧-ம் புத்தகம், இலக்கம்-௨௨.)

யாழ்ப்பாணத்துச் சனங்களே!

தயாநிதியாகிய றசல் துரை நீங்கிவிடத், தாம் இங்கே வந்தகாலந்தொடங்கி உங்களுக்கு அநீதிசெய்ய மெல்லெனத் தலைப்பட்டு அதில் வரவர முதிர்ச்சி பெற்று விளங்குகிற துவையினந்துரைக்கு மாறாக, உங்களுக்குச் சார்பாகச், சம[illegible]த்திரிகைகள் எத்தனையோ மாசம் ஓலமிட்டனை[illegible] இங்கே வந்த கம்மிஷனர்கள், தங்கள் றி[illegible]புத்தகத்திலே பொய்யென்று சாதிக்கி[illegible] கவர்ணராய் இருந்துகொண்டு கம்மிஷனர்[illegible] இங்கே அனுப்பிய பார்ச்சுத்துரை, கம்மிஷனர்களுடைய றிப்போட்டுப் புத்தகமே மெய் என்று சாதிக்கிறார். துவையினந்துரைக்கு விரோதமாகச் சமாசார பத்திரிகைகளிலே பேசப்பட்டவைகள் மெய் என்று விசாரணையிலே ஒப்பிக்கப்பட்டால், துவையினந்துரைக்கு, உத்தியோக இழப்பு ஒன்றுமாத்திரமோ, சுப்பிறீங்கோட்டிலே உடற்றண்டமும் உடன் சம்பவிக்கும். சமாசார பத்திரிகைகளிலே பேசப்பட்டவைகள் பொய் என்று ஒப்பிக்கப்பட்டால், அந்தப் பத்திரிகைகாரர்களுக்கும் பத்திரிகைகளுக்கு எழுதினவர்களுக்கும் டிஸ்திறிக்கோட்டிலே பொருட்டண்டங் கிடைக்கும்.

பத்திரிகைகளிலே தமக்கு விரோதமாகப் பேசப்பட்டவைகள் பொய் என்பது தமக்குத் துணிவானால், துவையினந்துரை, பத்திரிகைகாரர்களுக்கு விரோதமாக மானநட்டவழக்குத் தொடுத்துத், தம்மைச் சுத்திசெய்துகொள்ளா

தது ஏனோ?* பத்திரிகைகளிலே தங்களுக்கு விரோதமாகப் பேசப்பட்டவைகள் பொய் என்பது தங்களுக்குத் துணிவானால், கம்மிஷனர்கள், பத்திரிகைகாரர்களுக்கு விரோதமாக மானநட்டவழக்குத் தொடுத்துத், தங்களைச் சுத்திசெய்யாதது ஏனோ? பத்திரிகைகாரர்மேல் வைத்த கருணையோ! தாங்கள் அகப்பட்டுக்கொள்வார்கள் என்ற பயமோ! இனித், தாம் நீதியுடையவர் என்பது சத்தியமானால், பார்ச்சுத்துரை: "நீங்கள் உங்களைச் சுத்திசெய்து கொள்ளுங்கள்" என்று துவையினந்துரையையும் கம்மிஷனர்களையும் ஏவமாட்டாரா? ஏவினால், தமது சினேகிதராகிய துவையினந்துரையும், தமது ஏவல்வழி ஒழுகிய கம்மிஷனர்களும் அகப்பட்டுக்கொள்வார்கள் என் டுண. வ்தாரா? பரிதாபம் பரிதாபம்! பத்திரிகைகாரர்களைகல் முதலிழைக்கட்டும் என்று இரங்கினாரா? எது மறுமொழி? ஒரு மொழி மௌனந்தானே!

சனங்களே! மேன்மை பொருந்திய புதுக்கவர்னர் உங்கள் துன்பங்களை நீக்குவார் என்று, அவர் வரவை ஆவலோடும் எதிர்பார்த்திருந்தீர்கள். புதுக்கவர்னர், பார்ச்சுத்துரையுடைய வசனத்தினாலும், கம்மிஷனர்களுடைய றிப்போட்டுப் புத்தகத்தினாலும், மயங்கிவிட்டார்! யாதுசெய்வார்! கம்மிஷனர்களுடைய றிப்போட்டுப் புத்தகம் பொய் பொதிந்தது என்பது உங்களுக்குத் தெரியும்; பத்திரிகைகாரர்களுக்குத் தெரியும்; உங்கள் பிரதிநிதியாகிய ஸ்ரீ. குமாரசுவாமிக்குத் தெரியும்; புதுக்கவர்னருக்கு எப்படித் தெரியும்! பத்திரிகைகாரர்களுக்குத் தெரிந்து என்னை! அவர்கள் இன்னும் ஓலமிடுகிறார்கள்! வேறே யாது செய்வார்கள்!

* நாவலரவர்கள் அடைந்தபின் துவையினந்துரையினால் "எக்சாமினர்" என்னும் பத்திரிகையின் அதிபர்மேல் ஒரு வழக்கு வைக்கப்பட்டு விளக்கத்துக்கு வந்ததென அறிகிறேம்.

ஸ்ரீ. குமாரசுவாமிக்குத் தெரிந்து என்னை! மன வஞ்சனை இல்லாது கம்மிஷனர்களுடைய பொய் றிப்போட்டினாலே மயங்கிவிட்ட புதுக்கவர்னரிடத்தே, ஸ்ரீ. குமாரசுவாமி யாது செய்வார்! ஆயினும் அந்த மகானுபாவர் ஒன்று செய்தார். அது என்னை! கொழும்புச் சட்டநிரூபணசபையிலே ஒருகேள்வி கேட்டார். அது என்னை! "போனவருஷம் விளைவில்லாததினாலே இந்தவருஷம் விதைநெல்லுக்கு முட்டுப்படுகிற ஜனங்களுக்கு விதைநெல்லுக் கொடுக்கும் பொருட்டுக் கவர்ண்மெண்டு கட்டளைசெய்ததன்றோ! அந்தக்கட்டளைப்படியே விதைநெல்லுக் கொடுக்கப்பட்டதா? எங்கெங்கே கொடுக்கப்பட்டது? அவ்விஷயத்திலே செய்துகொண்ட உடன்படிக்கை என்னை?" என்றதுதான் அந்தக்கேள்வி. ஓகோ! இஃதன்றோ கேள்வி! இந்தக் கேள்வி லக்ஷம்பொன் பெறுமே. எப்படி? விதைநெல்லுக் கொடுக்கப்படவில்லை என்ற உண்மையை நன்கறிந்த ஸ்ரீ. குமாரசுவாமி, துவையினந்துரையுடைய அநீதியையும், வன்கண்மையையும், பொய்யையும் புதுக்கவர்னருக்கு மெல்லென இனிது விளக்கித், திக்கற்ற ஏழைகளாகிய உங்களுடைய துன்பத்தை நீக்கும் உபாயம் இது என்று கண்டார். நல்லது. இந்தக்கேள்விக்குக் கொலோனியல் சக்கிடுத்தார் கொடுத்த மறுமொழி என்னை! அது இது:—"வடமாகாணத்து ஏசண்டு சந்தேகமில்லாமல் விதைநெல்லுக் கொடுத்திருக்கிறார். விபரமாகிய அறிவிப்பு வேண்டுமானால், வருவிக்கப்படும்" என்பதுதான். என் அன்பர்களே! பார்ச்சுத்துரைகொடுத்த இந்த மறுமொழியைச் சற்றே சீர்தூக்கிப் பாருங்கள். என்ன துணிவுகொண்டு இந்த மறுமொழி கொடுத்தார்! தாம் யாது யாது தீங்குசெய்யினும், அந்தந்தத் தீங்கெல்லாம் தம்முடைய தலைமைக்காரர்கள் வாயிலாக மறைப்பித்துத், தாம் இனிது தப்புவித்துக்கொண்டு துள்

சில உயர்வொப்பில்லாத பண்டிதர் நமது துவைபி னந்துரை என்பது பார்ச்சுத்துரைக்கு இனிது விளங்கும் போலும். அல்லது, இந்த மறுமொழி கொடுக்கத் துணிவா ரா! துணியார் துணியார்! பார்ச்சுத்துரையுடைய துணி வுமல தப்பென்னே! அவர் துணிவு சரிதானே! எப்படி எப் படி! இங்கே தலைமைக்காரர்கள் சிலர், விதைநெல்லுப் பற் றிக்கொண்டோம் என்று சனங்களிடத்திலே பற்றுச்சீட்டு வாங்கித் தரும்படி, தாங்கள் வலிந்து ஏவப்படுகிறார்கள் என்று புலம்பிக்கொண்டு திரிகிறார்கள். இதற்குமுன் எத்த னையோ விஷயங்களிலே, சிலரை அச்சுறுத்தியும், சிலரைத் தங்கள் வேலை போய்விடப்போகிறது என்று கண்ணீர்பொ ழிந்து அழுது கெஞ்சியும், சிலரைக் கைக்கூலிகொடுத்தும், தங்கள் வசப்படுத்திக்கொண்டு, துவைபினந்துரையுடைய காரியங்களை முடித்த தலைமைக்காரர்களும், கச்சேரி உத்தி யோகத்தர்களும், இப்பொழுது விதைநெல்லுப் பற்றிக்கொ ண்டோம் என்று பொய்ப் பற்றுச்சீட்டு வாங்கிக்கொடுக்க மாட்டார்களா! கொடுப்பார்கள் கொடுப்பார்கள். ஏன்! கொடுப்பார்கள் என்பதிலே சந்தேகமா! இப்படிப் பற்றுச் சீட்டுக்கள் வாங்கிக்கொடுக்கப்படுமானால், உங்கள் பிரதிநிதி ஸ்ரீ. குமாரசுவாமி யாது செய்வார்! தலை குனியத்தான் வேண்டும். ஏன்! சந்தேகமா! மெய்தான் மெய்தான். உல கறிய முற்றேதி போட்டுப் பொய்ப் பற்றுச்சீட்டுகள் தலை மைக்காரர்கள் வாங்கிச் சேர்ப்பார்களானால், யாழ்ப்பாணத் திலே சன்மார்க்கம் எப்படித் தலைப்படும்!!! யாழ்ப்பாணத் துக் கச்சேரி அநீதி பொய் கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு(College.) அதற்குத் தலைவர்(Principal) துவைபினந்துரை; உபாத்தியாயர்கள் "பாவந் தோன்றிய நாளையிற்றோன்றிய பதகன்" ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள்; அவைகள் படிப்பிக்கிற தானு

காப் பள்ளிக்கூடங்கள் (Taluk Schools) சில தலைமைக்காரர் களுடைய தானங்கள். இப்படியானால், யாழ்ப்பாணம் விரைவிலே தேவனுடைய சாபத்துக்குப் பாத்திரமாவதிற் சந்தேகமா!!!

இனி மற்றொருவருடைய கேள்வியொன்றுண்டு. அதற்குத் துவையினந்துரையும் கம்மிஷனர்களும் யாது செய்வார்கள்! கேள்வி யாருடைய கேள்வியோ! யாழ்ப்பாணக் கத்தோலிக்க பாதுகாவலனுடைய கேள்வி. அந்தக்கேள்வி என்னையோ! "தமக்குக் கொடுக்கப்பட்ட துவிபாஷிகர் (Interpretor) சனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரால்லர் என்பதை நன்றாக அறிந்த கம்மிஷனர்மார் தம்முடைய றிப்போட்டில் அதனைக்குறித்துப் பேசாது விட்டதென்னை? என்றதுதான் அந்தக்கேள்வி. அடடா! இந்தக்கேள்வி கோடிபொன் பெறுமே! ஏன் ஏன்! இதை அசைக்கவல்லவர் ஆரோ! வல்லவர் உண்டானால், அசைக்கட்டும், சற்றே பார்ப்போம். என்னை! கம்மிஷனர் விசாரணைசெய்யப் புகுந்த விஷயம் என்ன விஷயம்! துவையினந்துரைக்கு விரோதமாகச் சனங்கள் செய்த முறைப்பாட்டு விஷயம். இந்த விசாரணைக்குத் துவிபாஷிகரை நியமித்தவர் யாவர்! துவையினந்துரை. நியமிக்கப்பட்ட துவிபாஷிகர் யாவர்! துவையினந்துரையின் கீழுத்தியோகத்தராகிய கச்சேரி இரண்டாமுதலியார். ஓகோ! இவரா! நல்லது! இவர் எப்படிப்பட்டவரோ! ஆறேழு வருஷகாலமாகச் சுப்பிறீங்கோட்டிலே இராணியுடைய அப்புக்காத்தும் மறியற்காரருடைய அப்புக்காத்துமாகிய இருவராலுஞ் சமமாக விலக்கப்பட்டுப் பெரும்புகழ்படைத்த மகான். ஆகா! இவ்வளவோ! நல்லது நல்லது! இன்னும் விசேஷமுண்டோ? யாழ்ப்பாணச்சமயநிலை என்ற தமிழ்ப்புத்தகத்திலே தம்மிடத்து

உள்ளவைகள் என்று பாராட்டப்பட்ட தமது திருவிளை 'யாடல்கள் எல்லாம், சிலவாரங்களின்முன் வெளிப்படுத்தப் பட்ட எக்சாமினர் பத்திரிகையிலே, இங்கிலிசில் மொழி பெயர்த்து வெளிப்படுத்தப்பெற்ற மகாப் பிரபு. அடடா! அவர்தாமா இவர்! கெட்டி கெட்டி! இவர் துவிபாஷிகரா ளுல், கம்மிஷனர்களுடைய றிப்போட்டைச் சொல்லவேண் டுவதென்னை!!! ஒருபானை சோற்றுக்குள் ஒருசோறுபதம் பார்த்தாற் போதாதா! ஆனால் என்னை! இஃதெல்லாம் கம்மிஷனர்கள் அறிவார்களா! பாவம் பாவம்! அவர்கள் யாதுசெய்வார்கள்! என்ன பாவம் பாவம்! எத்தனையோ இடங்களிலே, எத்தனையோ சனங்கள் கூடி, எத்தனையோ விண்ணப்பங்கள் இந்த முதலியாருக்கு விரோதமாக எழுதி, இந்தக் கம்மிஷனர்களுக்குக் கொடுத்தது உண்டா இல்லையா! ஓகோ! அப்படியா! அந்த விண்ணப்பங்களெல் லாம், இந்தக் கம்மிஷனர்கள், வாசித்த உடனே, உதடுது டிக்க, உடல் நடுங்கக் கைபடபடக்கக், கிழித்தெறிந்துவிட் டது உண்டா இல்லையா! அப்படியா! அப்படியா! பற்பல சனங்களெதிரே இப்படிச்செய்த கம்மிஷனர்கள், "தமக் குக் கொடுக்கப்பட்ட துவிபாஷிகர் சனங்களின் நம்பிக் கைக்குப் பாத்திரரல்லர் என்பதை நன்றாக அறிந்த கம்மி ஷனர்மார் தம்முடைய றிப்போட்டில் அதனைக் குறித்துப் பேசாது விட்டதென்னோ" என்ற இந்தப் பாதுகாவலன் கேள்விக்கு யாது மறுமொழி சொல்வார்களோ! வெளிப்ப ட்டுச் சற்றே வாய்திறக்கட்டும் பார்ப்போம்! அது நிற்க.

சனங்களே! ஸ்ரீ. குமாரசுவாமி உங்கள் பொருட்டு மிகப் பிரயாசப்படுகிறார். இது நல்ல சமயம்! சைவருக்கும் நல்ல சமயம்! வைஷ்ணவருக்கும் நல்ல சமயம்! கிறிஸ்தவ ருக்கும் நல்ல சமயம்! மகமதியருக்கும் நல்ல சமயம்! ஒரு

சமயமும் இல்லாதவருக்கும் நல்ல சமயம்! எல்லாருக்கும் நல்ல சமயம்! ஒருவரும் சந்தேகிக்காத சமயம்! இது நல்லசமயம்! சொன்னேன் சொன்னேன் சொன்னேன்! இந்தச்சமயத்தைக் கைவிடாதேயுங்கள். கச்சேரி உத்தியோகத்தர்களுக்கும் தலைமைக்காரர்களுக்கும், உண்மைக்கு மாறாகப் பயப்படாதேயுங்கள். அவர்களுடைய அழுகையையும் கண்ணீரையும் கெஞ்சுதலையும் கண்டு, மனம் இளகிப் பொய்ப் பற்றுச்சீட்டுக் கொடுத்து, உங்கள் வாய்ச்சோற்றுக்கே கேடு விளைத்து, உங்களுக்கு நன்மைசெய்யத் தலைப்பட்ட பரமதயாளுக்களைத் தலை குனிவித்து, இனி ஒருபொழுதும் வாய் திறவாவண்ணம் அதைரியப்படுத்தி விடாதேயுங்கள். அதைரியப்படுத்திவிடாதேயுங்கள். அன்பர்களே! நீங்கள் ஒன்றுஞ் செய்யவேண்டாம். நீங்களெல்லாம் உங்கள் உண்மையிலே நிலைபெற்று நில்லுங்கள். அப்போது ஸ்ரீ. குமாரசுவாமி எடுத்த கருமம் பலித்துவிடும். அப்போது நீங்கள் உய்து நன்றாக வாழலாம். இது நல்ல சமயம்! இதை விட்டால் இனிமேல் வாய்க்காது. சமயம்.

யாழ்ப்பாணம்
௧௮௭௭-ம்௵
கார்த்திகைமீ ௨௨௳

இங்ஙனம்,

கருணை.

# கக. வெருசனத் துரோகம்.

(இலங்கைநேசன் உ-ம் புத்தகம், இலக்கம்-ச.)

இலங்கைநேசபத்திராதிபரே!

உதயதாரகை என்னும் பத்திரிகை இவ்வளவுகால மும் நிலைபெற்றது எதனாலே? சனங்களுடைய பணத்தி னாலே. பத்திரிகையினது கடமை யாது? சனங்களுக்குப் பொதுநன்மைசெய்வது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துக் கள், கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் என்கிற சனங்கள் இப் பொழுது இரண்டு மூன்று வருஷகாலம் என்னநிலையில் இருக்கிறார்கள்? துவையினந்துரையுடைய சிநேகிதர்க ளாகிய சில உத்தியோகத்தர்கள் ஒழிந்த மற்றச் சனங்க ளெல்லாம் துவையினந்துரையினாலும் அவர் கீழுத்தியோ கத்தர்களாலுந் துன்பமே அநுபவிக்கிறார்கள். சனங்களு டைய பணங்கொண்டு நடாத்தப்படுகிற உதயதாரகை இதிலே தன் கடமையைச் செய்கின்றதா? இல்லை. பின் யாது செய்கின்றது? துவையினந்துரைக்குச் சார்பாகச் சனங்களுக்கு மாறாகப் பொய்வார்த்தையே பேசுகின்றது. அம்மட்டோ, சனங்களுடைய நன்மையின் பொருட்டுச் சனங்களுடைய வேண்டுகோளின்படி சனங்களுடைய விண் ணப்பத்தைக் கவர்னருக்குக் கொண்டுபோய்க் கொடுத்த பிரபுக்களை அயோக்கியர்கள் என்று தூஷிக்கின்றது. உத யதாரகை இவை செய்வது எதனாலே? பருத்தித்துறையி லிருந்துகொண்டு வடதேசத்துக் கூலிச்சனங்களுடைய பணத்தைக் கவர்ந்த ஒரு உத்தியோகத்தரைப் பற்றிய விசாரணையிலே அவர் சார்பாகத் துவையினந்துரை நின்ற தினாலே. அந்த உத்தியோகத்தர் யாவர்? உதயதாரகையின் இங்கிலிசுப் பக்கத்து எடிற்றருடைய மைத்துனர். இவர்

தமது வாழ்க்கைத் துணை நலம், சிம்சன் துரை இருமியிரு மியும் அணைந்து பாராட்ட, வாழ்ந்த சீமான். ஓகோ! சன. ங்களுடைய பணம் இவர் ஒருவர் பொருட்டுச் சனங்க ளுக்கு இடையூறாய் முடிந்ததோ! கெட்டி கெட்டி!

நல்லது. சனங்களுடைய நன்மையின்பொருட்டுக் கவர்னருக்கு விண்ணப்பங்கொடுத்து உதயதாரகையினாலே தூஷிக்கப்பட்ட பிரபுக்கள் எவரெவர்? அவரவருடைய இயற்கை எப்படிப்பட்டது?

க. தில்லையம்பலம் சங்கரப்பிள்ளை. இவர் தீவுபற்று நொத்தாரிசு குமாரர்; சுப்பிறீங்கோட்டுப் பிறக்கிறாசி; இத் தேசத்திலும் வடதேசத்திலும் பற்பல தருமங்கள் செய்து புகழ் படைத்த சைவப்பிரபுவாகிய சிதம்பர சுப்பையச் செட்டியாருடைய மருமகன்; பிரசித்திபெற்ற வர்த்தகரா கிய முத்துக்குமாரச் செட்டியாருடைய மைத்துனர்; வெகு சுற்றத்தொடர்புடையவர்; பரம்பரைச் செல்வர்.

உ. பென்சமீன் சந்தியாகுப்பிள்ளை. இவர் டிஸ்தி றிக்கோட்டுப் பிறக்கிறாசி; கொழும்பு எக்கடேமியிலே படித்துத் தெளிந்தவர்; பரம்பரைச்செல்வர்; வெகு சுற்றத் தொடர்புடையவர்; கரையூர் மணியகாரனுடைய குமாரர்; கச்சேரி இரண்டா முதலியாராயிருந்த பெருஞ் செல்வரா கிய ஆசீர்வாத முதலியாருடைய மருமகன்; தமிழிலே இலக்கணம் இலக்கியம் வைத்தியம் யந்திரசாத்திரம் மந் திரசாத்திரம் முதலிய பலவும் படித்தறிந்து மிக மரியாதை பெற்று வாழ்ந்த கதிர்காமப் புலவருடைய வமிசத்தவர்; கரையூர்க் கலக வழக்கிலே அநீதியாகத் துன்பம் அனுப வித்த ஏழைகள் பக்கம் நின்று அதி தைரியத்தோடு வாதி த்த மகா தயாளு.

௩. சின்னக்குட்டி பொன்னம்பலம். இவர் டிஸ்திறிக்கோட்டுப் பிறக்கிறுசி ஒருவருடைய பிள்ளை; தாமும் டிஸ்திறிக்கோட்டுப் பிறக்கிறுசி; சிச்சிங்க காசிநாதமுதலியாருடைய பௌத்திரியை விவாகஞ்செய்தவர்; வலிகாமவடக்கில் உள்ள பிரபுக்கள் பலரும் இவருக்குச் சுற்றத்தார்கள்; இவர் சகோதரர் தென்மராட்சி மணியகாரனுடைய மருமகன்.

௪. தில்லையம்பலம் குமாரசுவாமி. இவர் கோப்பாய் மணியகாரராயிருந்தவருடைய குமாரர்; தருந்த வர்த்தகர்; தருந்த தென்னந்தோட்டமுடையவர்; உவின்சிலோ அகராதிக்குத் துணைநின்ற பிரசித்திபெற்ற சுவாமிநாதப்புலவருடைய தம்பி; யாழ்ப்பாண மணியகாரர்களாய் இருந்தவர்களுள் ஒருவராகிய இராசரத்தின முதலியாருக்குந் தீவுபற்று மணியகாரர்களாய் இருந்தவர்களுள் இரண்டுபேருக்குஞ் சுற்றத்தவர்; கொழும்புத்துறை நல்லூர் பூநகரி நாவற்குழிகளில் உள்ள கெண்ணியவான்களாகிய வேளாண் செட்டிகள் பலரும் இவருடைய சுற்றத்தவர்கள்.

௫. முதலித்தம்பி சின்னத்தம்பி. இவர் பரம்பரைப் பிரபுவாகிய இராசவரோதயர் பேரர்; பிரசித்திபெற்ற கச்சாய்ச் சின்னப்புவுடைய மருமகன்; மன்னார்க் கச்சேரி முதலியாராயிருந்த அருளம்பல முதலியாருடைய தம்பி; வரையாது கொடுக்கும் வள்ளல்; வேதாந்தசாத்திரப் பயிற்சியுடையவர்.

௬. வைத்தியநாதச்செட்டியார் துரையப்பச்செட்டியார். இவர் மலையாள மகாராசாவிடத்தில் முப்பதுவருஷம் புகையிலை ஒப்பந்தம் எடுத்த மகா வர்த்தகராகிய ஆறுமுகச் செட்டியாருடைய பௌத்திரர்; இத்தேசத்திலும்

வடதேசத்திலும் தமிழ்ப்பிரபுக்களாலும் இங்கிலீசுத் துரைமக்களாலும் மரியாதை பெற்ற முத்துவேலுச் செட்டியாருடைய தம்பி பிள்ளை; எத்தனையோ உத்தியோகத்தர்கள் எத்தனையோ வர்த்தகர்கள், தாங்கள் படைத்த வாழ்க்கையெல்லாம் இவர் பாட்டனாரால் வந்த வாழ்க்கை, தாங்கள் உண்டு வளர்ந்த அன்னம் இவர் பாட்டியார் கை சலியாது அன்போடிட்ட அன்னம் என்று இன்னும் புகழ்ந்து பாராட்டுவார்கள்.

எ. செல்வநாயகச் செட்டியார் துரையப்பச் செட்டியார். இவர் இராமேசுரமுதற் காசிவரையுந் தம் பொருள் கொண்டே பற்பல தருமங்கள் தாபித்த மகாப் பிரபுவாகிய பெரிய வைத்தியலிங்கச் செட்டியாருடைய பிரபௌத்திரர்; தஞ்சாவூர்ச் சரபோசி மகாராசாவுக்குக் கைமாறுவேண்டாது சத்திரத்தின்பொருட்டுக் காசியிலே நிலங்கொடுத்து அவராலே பற்பல மரியாதைகள் பெற்ற கந்தப்பசெட்டியாருடைய தமையனாருடைய பௌத்திரர்; நாகபட்டணத்திலே எந்தப்பிரபுக்களும் தாசில்தார் முதலிய எந்த உத்தியோகத்தர்களுந் தமது வீட்டு வாயில் சமீபித்தவுடனே பல்லக்கு வண்டி விட்டிறங்கி மரியாதை செய்துகொண்டே போகும் வண்ணம் வாழ்ந்த செல்வநாயகச்செட்டியாருடைய பிள்ளை; பத்திலட்சரூபா ஆஸ்தியுடைய வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலுக்கு மானேசர்.

அ. அம்பலவாணமுதலியார் மயில்வாகனம். தமிழரசர் காலந்தொடங்கி இதுகாறும், உயர்குடிப்பிறப்புப் பரம்பரைச் செல்வங் கல்வித்திறமை அதிகாரம் லோகோபகாரமுயற்சி நற்குணம் என்னும் எல்லாவற்றிலும் எத்துணைப் பிரபுக்களாலும் முதன்மரியாதை செயப்படும் வமிசத்தவர்; உடுப்பிட்டியிலே ஒரு வித்தியாசாலை தாபித்துத்

தமிழ் இங்கிலிசு வைத்திய முதலியன கற்பிக்குமாறு செய்து, பற்பலபிள்ளைகளைத் திருத்தியும் வியாதியாளர்களுக்குத் தருமவைத்தியஞ்செய்வித்தும் கிரிதீபம்போல வாழ்ந்த மகாப்பிரபுவாகிய அருளம்பலமுதலியாருடைய பேரர்; எந்தத் துரைமக்களாலும் எந்தப் பாதிரிமார்களாலும் சன்மார்க்கரென்று நன்குமதிக்கப்பட்ட மயில்வாகன முதலியாருடைய பேரர்; நடுவுநிலைமை ஒரு சிறிதுங் கோடாது ஊர்காவற்றுறையிலே இருபத்துநான்குவருஷம் நீதிபதியுத்தியோகஞ் செய்து, "எல்லார்க்கு நன்றாம் பணிதலவருள்ளுஞ் செல்வர்க்கே செல்வந்தகைத்து" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாக்குக்கு இலக்கியமாய் வாழ்ந்த அருமருந்தன்ன அம்பலவாணத்துரைக்கு இருவகையாலும் மருமகன். வெகுசனசமூக சம்மதம்பற்றிப் புறவிஞ்சியல் ரேட்டுக் கம்மிற்றி மெம்பராயிருக்கின்ற பரம்பரை உயர்குலப் பிரபுவாகிய குமாரசூரியருடைய சகலர்; இங்கிலிசு வாக்கியத் தொடையிலே சமர்த்தர்; டிஸ்திறிக்ரேட்டுக் கம்மிற்றி மெம்பருள் ஒருவர். இவருடைய தகப்பனுரை இலங்கைச் சட்டநிரூபணசபையிலே தமிழ்ப்பிரதிநிதியாக நியமிக்கும்பொருட்டு, கஅறுகஎ ம் வருஷம் ஆவணிமாதம் எஉ ஒருமகாசபை [எங்கே எங்கே! பூலோகமுதலியார் வீட்டிலே] கூடி, நிர்ணயங்கள் நடாத்திக் கவர்னருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியதும், விண்ணப்பக் கையொப்பக்காரர் தொகை கக000 என்பதும், அந்தப்பிரபுவின் மகிமையும் அவர் பிதாவின் மகிமையும் அவ்வருஷத்துப் புரட்டாதிமாதம் கக-உ தோன்றிய ஒப்சார்வரிலும் (Observer) உருஉ தோன்றிய உதயதாரகையிலும், அதனதன் எடிற்றர்களே இனிது பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

இவ்வுலகத்திலே பழமை தொட்டுள்ளவர்கள் பலரும் இவையெல்லாம் நன்றாக அறிவர்கள். புதுமையாக முத்தியினின்றும் இறங்கி மிக அரிதிலே முன்வந்தவர் யாதறிவர்! அவர்மீது குற்றம் யாது!

குற்றமேனில்லை! பழமை விசாரித்தறிந்து பேசலாகாதா? எப்படி விசாரிப்பார்? சொல்லாயா சொல்லாயா என்று கிட்டத்தானே விசாரிக்கலாமே! மாதருக்குந் தெரியுமே! தெரியாதிருந்தால் யாது செய்யலாம்? இன்பம் எனக்கு அருளாயா சற்றருளாயா என்று வேண்டி வேண்டிப் பெரிதும் பெற்றனுபவித்துத் தந்தையாருக்கும் பாலித்துவிட்டு இங்கே வந்த பழங்குலானாயினும் பழமையறியானா? அவனை வந்து விசாரிக்கலாமே! பழம் பிரபுக்களையெல்லாம் பழமை தொட்டு மெய்ப்பையினுள் இட்டுவருகிற பழங்குலான் பழங்காலத்து மெய்யெல்லாம் வெளிதிறந்து விடானா? என்ன! போதும் போதும்! பொறும் "தேருந்தோறுமினிதாந் தமிழ்போல்" என்பது பெரியோர் அறியாது சொன்னவாக்கா! தமிழன்றோ தமிழ்.

இந்தப்பிரபுக்கள் தாமா உதயதாரகையினாலே அயோக்கியர்களென்று இகழப்படுகின்றார்கள். நல்லது. வெகுசனத்துரோகியாகிய உதயதாரகையை இப்பொழுதும் சனங்கள் வாங்குகிறார்களா? யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் உள்ள இந்துக்களுள்ளும் கிறிஸ்தவர்களுள்ளும் அறிவும் பொதுநன்மை விருப்புமுடையவர்கள் பலர் இனித் தங்களுக்கு உதயதாரகை அனுப்பவேண்டுவதில்லை என்று கடிதமெழுதி அனுப்பிவிட்டார்களாம். இன்னும் பலர் விட்டுவிடுவார்களாம். தீய பத்திரிகைக்குத் துணை செய்கிறவன் தீமையை விருத்திசெய்கிறவன்.

இங்ஙனம், ஆப்தன்.

# ௨0. அகோரசிவாசாரியபத்ததி தூஷண கண்டனம்.*

கோப்பாய்ச் சபாபதிப்பிள்ளையே!

நீர் இந்தமீ" கூ௨ திங்கட்கிழமை இராத்திரி, இம்மா விட்டபுரத்துக் கந்தசுவாமிகோயிலிலே செய்த பிரசங்கத்திலே சமவாத சைவர்கள் எல்லாரும் நரகத்துக்குப் போவார்கள் என்றீர். முன் "குருவளி" என்ற ஒரு பத்திரிகையிலே சமவாதசைவர்களைப் பிசாசுகள் என்றீர். அகோரசிவாசாரிய பத்ததி பிழைப்பத்ததி. அதைக் கைக்கொள்ளுகிறவர்கள் சமவாதசைவர்கள் என்று தூஷித்துக்கொண்டு திரிகிறீர்.

பூமியிலுள்ள சிவாலய விக்கினேசுராலய சுப்பிரமணியாலயங்களிலே பூசை திருவிழாச் சம்புரோட்சண முதலிய கிரியைகள் செய்கிற ஆதிசைவர்களெல்லாரும் அகோரசிவாசாரிய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள். மகாசைவர்கள் எல்லாரும் அகோரசிவாசாரிய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள். சைவ வேளாண் குருமார்கள் எல்லாரும் அகோரசிவாசாரிய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள். திருவண்ணாமலை யாதீனத்தார் சிதம்பர வாதீனத்தார் காஞ்சீபுர வாதீனத்தார் திருவக்கரை யாதீனத்தார்கள் எல்லாரும் அகோரசிவாசாரிய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள். தருமபுர வாதீனத்தாரும், சொக்கபுரவாதீனத்தாரும், அகோரசிவாசாரிய பத்ததிப்படி மொழிபெயர்க்கப்பட்ட

---

* இதுவும் மற்றைச் "சபாபதிக்குருக்கள் வினா" என்பதும் சபாபதிக்குருக்களவர்களால் எழுதப்பட்டு நாவலரவர்களால் திருத்தப்பட்டன.

நித்திய கன்மக்குறளைக் கைக்கொள்ளுகிறவர்கள். தொண்டைமண்டல வேளாளர்கள், கார்காத்த வேளாளர்கள் சோழிய வேளாளர்கள், வேளாண்செட்டிகள் முதலிய சைவர்களுள்ளே, சிலரொழிய மற்றவர்கள் எல்லாரும், மேலே சொல்லப்பட்ட ஆதிசைவர் முதலானவர்களுக்குச் சிஷர்கள். இப்படியாகவே, இவர்களெல்லாரையும் நீர் பிசாசுகளென்று சொல்லிவிட்டீர். இனி நீர் யாவர்? சற்றே சொல்லும்.

உமக்குச் சமயதீக்ஷை செய்தவர், விசேஷதீக்ஷைசெய்தவர், கலியாண ஓமஞ்செய்தவர், வேதாரணியத்துச் சைவ வேளாண் குருமார்களன்றோ! அவர்கள் கைக்கொள்வது அகோரசிவாசாரிய பத்ததியன்றோ! அவர்கள் உமக்கு அந்தக் கிரியைகள் செய்தது அகோரசிவாசாரிய பத்ததிப்படியன்றோ! இப்படியாகவே, நீரும் பிசாசு தானே. நீரும் நரகத்துக்குப் போவீர் தானே. ஓகோ! நீர் தப்ப வழியெங்கே!

"நான் முன்பு பிசாசு தான், பின்பு சித்தாந்த சைவராகிய திருவாவடுதுறையாதீனத்துப் பண்டார சந்நிதியை யடைந்து தீக்ஷை பெற்றுச் சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டேன். இப்பொழுது நான் பிசாசல்லேன். மோக்ஷஞ் சேர்வேன்" என்பீராயின், உம்மைத் திருவாவடுதுறைப் பிரசாதத்துக்கு அனுப்பிவிட்டது அகோரசிவாசாரிய பத்ததியன்றோ? "நன்றிமறப்பது நன்றன்று," உம்முடைய மனைவி முதலானவர்களையும் திருவாவடுதுறைப் பண்டாரசந்நிதியிடத்தே தீக்ஷை பெறுவித்தீரா? இல்லையே. இல்லையாகவே, பிசாசுகள் சமைத்தது புசிக்கிற நீர் பிசாசு தானே. இன்னும் உம்முடைய பிதா மாதாக்கள் இறந்தால் நீர் அவர்களுக்கு எந்தக் குருவைக்கொண்டு எந்தப் பத்ததிப்படி அந்தியேட்டி செய்விப்பீர்? வேறு பத்ததியும் அப்

பத்ததியைக் கொள்ளுங் குருவும் இங்கில்லையே. பின்பு நீர் பிசாச குருவைக்கொண்டு பிசாச பத்ததிப்படிதான் அந்தி யேட்டி செய்விப்பீர். பின் நீர் எப்படித் "தப்புவீர்? அது நிற்க; இனிச் சற்றே மேலே போவோம்.

திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டார சந்நிதிகள் நீர் பிசாசுகளென்கிற ஆதி சைவர்களாலே பூசிக்கப்படுகிற மூர்த்திகளை நமஸ்கரிப்பதும், அந்த ஆதி சைவர்களைக் கும்பிடுவதும், அவர்கள் கையினாலே விபூதி வாங்கித் தரிப்பதும், அவர்கள் தொட்டு நிவேதித்த அன்ன முதலியவற்றைப் புசிப்பதும், நீர் காணவில்லையா? திருவாவடுதுறையாதீனத்துப் பண்டார சந்நிதிகள், நீர் பிசாசுகளென்கிற சைவ வேளாளர்களை வேளாண் செட்டிகளைத் தீண்டியணைத்து விபூதி தரித்துவிடுவதும், அவர்களை எதிரிருத்திப் புசிப்பதும், அவர்கள் வீட்டிலே புசிப்பதும் நீர் காணவில்லையா? திருவாவடுதுறையாதீனத்துத் தம்பிரான்கள், நீர் பிசாசுகளென்கிற அந்நியாதீனத்துப் பண்டார சந்நிதிகளையும், தம்பிரான்களையும் நமஸ்கரிப்பதும், சிற்சில பொழுது தங்கள் ஆன்மார்த்த பூசையை அந்தத் தம்பிரான்மார்களைக் கொண்டு செய்விப்பதும் நீர் காணவில்லையா? இவையெல்லாங் கண்ட உமக்குத் திருவாவடுதுறையாதீனத்தார்கள் எப்படித் தோன்றுகிறார்கள்! சற்றே வாய் திறவும். உமக்கு அன்னமிட்டுக் கல்வி கற்பித்து உம்மை "வித்துவான்" ஆக்கிவிட்ட ஆதீனத்தார்களைப் பிசாசுகளென்று பேசாது பேசித் திரிவது, பிள்ளாய்! உமக்கு அடாது.

மகாவித்துவானாகிய மீனாக்ஷி சுந்தரப்பிள்ளை, திருவாவடுதுறை யாதீனத்திலே நிருவாணதீக்ஷை பெற்று உடையவர்பூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டவரே யாகவும், திருவாவடுதுறையிற்றானே மடத்துக்கெதிரே இறந்துவிட,

அவ்வாதீனத்துப் பண்டாரசந்நிதிகள், நீர் பிசாசுகளென்கிற சைவவேளாளர் குருமாருளொருவரை அங்கே வருவித்து, அவரைக்கொண்டு அகோரசிவாசாரிய பத்ததிப்படி தமது ஆதீனத்துப் பொருள்கொண்டே அப்பிள்ளைக்கு அந்தியேட்டி செய்வித்தது நீர் அறியீரா? இஃதறிந்தும், ஏன் நீர் துள்ளுகிறீர்! உமக்குக் கதி யாது! நாளை நீர் இறந்தால், உமக்கும் இப்படி ஒரு பிசாசுதானே வந்து அந்தியேட்டி செய்துவிடும்.

உமது பிரசங்கத்துக்கு இம் மாவிட்டபுரக் கந்தசுவாமிகோயிலை இடந்தந்த குருக்கள் எந்தப் பத்ததிகைக் கொள்ளுகிறவர்? அவரையும் பிசாசு என்று சொல்லிவிட்டீர். உம்மாலே பிசாசு எனப்படாதவர் யாவர்?

அகோர சிவாசாரியர் பிசாசு என்ற நீர், அவர் பத்ததிப்படியே சௌசவகவல் அநுட்டானவகவல் சூரியபூசையகவல் சிவபூசையகவல் போசனவகவல்கள் செய்த திருவாரூர் ஞானப்பிரகாசதேசிகரும் பிசாசு, அவரிடத்தே ஞானோபதேசம்பெற்றுச் சிவபோகசாரஞ் செய்த தருமபுரவாதீனத்து ஆதிகுருவாகிய ஞானசம்பந்ததேசிகரும் பிசாசு, அவர் மரபில் வந்த மாசிலாமணி தேசிகரும் பிசாசு, அவர் சீஷராய் அவரைப் பண்டார மும்மணிக்கோவையினுலே துதித்த குமரகுருபரசுவாமிகளும் பிசாசு, அவர் பாடிய முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழை நித்தமும் பாராயணஞ் செய்த திருவாவடுதுறைச் சுப்பிரமணியதேசிகரும் பிசாசு, அவர் சீஷராகிய அம்பலவாணதேசிகரும் பிசாசு, அவர் சீஷராகிய இப்பொழுதைச் சுப்பிரமணியதேசிகரும் பிசாசு என்றுவிட்டீரே. எனவே, இந்தச் சுப்பிரமணியதேசிகரிடத்தே தீக்ஷைபெற்ற நீரும் பிசாசு என்றுவிட்டீரே.

ஒகோ! எந்தவகையாலும் நீர் தப்பவழியில்லையே! பேச அறியாது பேசி அகப்பட்டுக்கொண்ட உம்மைப்போல விவேகி யாவர்?

இனி முன்போலப் பதர்வார்த்தைகள் பேசித்திரியாது அடங்கி ஒழுகக் கடவீர்.

இங்ஙனம், மாவிட்டபுரக் கந்தசுவாமிகோயிலில் அருச்சகருள் ஒருவராகிய,

வெகுதானியஹு<br>
ஐப்பசிமீ கஙு உ — கா. சபாபதிக்குருக்கள்.

# உக. சபாபதிக்குருக்கள் வினா

கோப்பாய்ச் சபாபதிப்பிள்ளேயே !

நீர் அகோரசிவாசாரிய பத்ததியைத் தூஷித்தமையால், அக்குருநிந்தையைப் பொறுக்கலாற்ருது மனம் வருந்திய நான் "அகோரசிவாசாரிய பத்ததி தூஷண கண்டனம்" என்னும் பத்திரிகையை வெளிப்படுத்தினேன்.

நீர் தூஷித்ததில்லேயாயின், அக்கருத்தை நேரே வெளிப்படுத்தலாமே. ஏன் மௌனஞ் சாதிக்கிறீர்?

நுஞ்செயல் அப்படியாக, நம் பக்கவாதி யொருவர் "ஐயர் வஞ்சச் சூழ்ச்சி சால நன்று" என்கிருர். இங்ஙனமாதலால், இவ்வுண்மையின்மைகளைத் துணிந்துகொள்ளுதற்பொருட்டு, நான் இங்கே வினவும் வினுக்களுக்குப் பக்கவாதிகளாலன்றி நேரே உத்தரந்தரும்படி உம்மையே கேட்டுக்கொள்ளுகிறேன்.

க. நீர் இக் கந்தசுவாமிகோயிலிலேதானே என்னேடு கலந்து பேசியபோது, அப்பத்ததிப்படி கிரியைகள் செய்தல் குற்றமென்று சொல்லியது மெய்யா பொய்யா?

உ. அப்பொழுதே "வேறெந்தப் பத்ததிப்படி கிரியைகள் செய்தல் வேண்டும்" என்று நான் கேட்க "சோமசம்பு பத்ததிப்படி செய்யலாம்" என்றும், அது "உம்மிடத்துள்ளதா" என்று நான் கேட்க "அது இங்கே கிடையாது ஆதீனத்துள்ளது" என்றும், நீர் சொல்லியது மெய்யா பொய்யா ?

ங. பின்னர்ப் பிரயாசத்தாற் சோமசம்புபத்ததி புத்தகமொன்று தேடிக்கொண்ட நான் அகோரசிவாசாரியர் கருத்தே அதிலுமிருக்கக் கண்டு, இக்கோயிலிற்ருனே பல

சன சமூகத்திலே அப்புத்தகத்தோடும் உம்மெதிரே வெளிப்பட்டுக் கேட்டபோது, நீர் யாதுமுத்தரங் கூறுதிருந்ததும், உமது சாமிக்குருக்கள் "இங்குள்ள புத்தகங்களெல்லாம் நான் அறிவேன் யாரடா இவனைப் பிடித்து வெளியிலே விடடா முருகா!" என்று பகட்டியதும் பொய்யா மெய்யா?

ச. நீர் சிலமாசங்களின் முன்னே ஸ்ரீலஸ்ரீ. நபிண்டிற் சதாசிவக் குருக்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ. கோபபாய் வேதக்குட்டிக் குருக்களுக்கும் எனக்குச சொல்லியபடியே அகோரசிவாசாரிய பத்ததிமீது குறறமேற்றியதுண்டா இல்லையா?

ரு. உம்முடைய திருவாவடுதுறைச் சிவஞானமுனிவர் தருமபுரவாதீனத்தாரை விளித்துச செய்த மறுப்பிலே "அகோரசிவாசாரியரை யுள்ளிட்ட ஆதுனிகர் மூலவசனமின்றித் தாமே படைத்திட்டுக்கொண்ட பத்ததிகளையே கைப்பற்றி" என்று கூறியது மெய்யா பொய்யா?

சு. சிவஞான முனிவர் சொல்லியபடி முன் சொல்லித் திரிநத நீர், என் கண்டனம் வெளிப்பட்ட பின்னர் மறுக்கலாற்றாது, பக்கவாதிகளான் மறுப்பித்தல் "வித்துவான்" என்னும் உமக்கு நியாயந்தானா?

எ. ஒரு பத்ததிப்படி தீக்ஷை பெற்றவர் சிவபூசை முதலியவை அப்பத்ததிப்படியே செய்துகொள்ளாது பிறிது பத்ததிப்படி செய்துகொள்வதும், ஒருபத்ததிப்படி தீக்ஷை பெற்று அப்பத்ததிப்படியே சிவபூசை முதலியன செய்துகொண்டு வந்தவருக்கு அந்தியேட்டி முதலியன பிறிது பத்ததிப்படி செய்வதுங் கிரமமா?

அ. நாங் திருவாவடுதுறையாதீனத்தாரிடத்தே வருணபத்ததிப்படி தீக்ஷை பெற்றவர்கள் சிவபூசை முதலியன

பிற குருமார்களிடத்தே அகோரசிவாசாரிய பத்ததிப்படி பழகிககொண்டு செய்வதும், நும மாதீனததாரிடததே பூசை பழகிக்கொண்டவர்களுக்கும் அநதியேட்டி முதலிய வை அகோரசிவாசாரிய பத்ததிப்படி பிற குருமார்கள் செய்வதும் உண்டா இல்லையா?

கூ. நுந் திருவாவடுதுறை யாதீனத்தார் தம்மிடத்தே தீக்ஷை பெறறவர்களுக்கு அந்தியேட்டி முதலியவை தம் பத்ததிப்படியே செய்யும்பொருட்டுச சிலரைத் தம் பதத திப்படியே குருத்துவங் கொடுத்து ஏற்படுத்தியிருககின் றாரா?

க0. நுந் திருவாவடுதுறை யாதீனத்தார் தம்மாலே நடாத்தப்படுகின்ற கோயில்களில் உள்ள அருச்சகர்களாகிய ஆதிசைவர்களை, அகோரசிவாசாரிய பத்ததியைத் தள்ளித் தீக்ஷை ஆசாரியாபிஷேகம் பிறிது பத்ததிப்படி பெறுவித்து, சிவபூசை முதலியன அப்பத்ததிப்படியே செய்யும்படி பண்ணியிருக்கின்றாரா?

கக. மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியர், உமாபதிசிவாசாரியர் என்னும் இவர்கள் எவ்வளவு எவ்வளவு வருஷத்துக்கு முன்னிருந்தவர்கள்? அகோரசிவாசாரியர் இவர்களுக்கு முன்னிருநதவரா பின்னிருந்தவரா?

கஉ. நீலகண்டசிவாசாரியர் கொள்கையும், அகோர சிவாசாரியர் கொள்கையும், தம்முள் ஒத்தனவா மாறுபட் டனவா?

கக. நுந் திருவாவடு யாதீனத்தார் கொள்கையும், சூரனார்கோயிற் சிவாக்கிரயோகிகள் கொள்கையும், தம்முள் ஒத்தனவா மாறுபட்டனவா?

கச. திருவாவடுதுறையாதீனத்தாரிடத்தே நீர் சமய தீக்ஷை விசேஷ தீக்ஷை மாத்திரம் பெற்றீரா? நிருவாண தீக்ஷையும் பெற்றீரா? நீர் பெற்ற தீக்ஷைக்கு விதித்த ஆசௌசந்தான் என்னை?

கரு. மாதாப் பிதாத் தமையன் வித்தியாகுரு தீக்ஷா குரு முதலிய பெரியோர்களைப் பெயர் சொல்லி அழைக்கலாகாது என்பதற்கு "பெயரைத் தனியேசொல்லி அழைக்கலாகாது உயர்ச்சியுடைய முறைப்பெயரோடு கூட்டி அழைக்கலாம்" என்பதுதான் உமக்குங் கருத்தா? அப்படியாயின் இனி நும்பிதாவைச் சயம்பு அப்பூ! என்றும், நுந் தமையனாரை வல்லிபுர ஐயரே! என்றும், நும் வித்தியாகுரவர்களை இருபாலைச் சைவ முத்தையரே! அராலிச் செகநாதையரே! இணுவில் வேங்கடாசலையரே! அஸ்பரி உபாத்தியாயரே! என்றும், நுந்தீக்ஷா குரவர்களைக் கோப்பாய்ச் சின்னையரே! சுன்னுகம் நமசிவாய பண்டாரமே! சிதம்பர முத்துச்சாமி பண்டாரமே! திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகரே! என்றும் அழைப்பீரா?

நீர் திருவாவடுதுறை யாதீனஞ் சேர்ந்து பன்னிரண்டு வருஷம் அங்கிருந்து, உண்மைநூலுணர்ச்சியும் மெய்யுபதேசமும் பெற்று இவ்வியாழ்ப்பாணத்துச் சைவசமயிகளெல்லாம் உய்யுந் திறங்கருதி மீண்டுவந்து இங்கே சித்தாந்த சைவப் பிரசங்கஞ் செய்யத் தலைப்பட்டீராதலால், என்மீது கோபியாது, என் வினுக்களுக்குத் தடையின்றி விடைதருவீர் என்று நம்பி எதிர்பார்த்திருக்கின்றேன்.

மாவிட்டபுரம்,<br>வெகுதானியஹு<br>மார்கழிமீ உஉ

இங்ஙனம்,<br>கா. சபாபதிக்குருக்கள்.

# உஉ. கைவிளக்கு.*

இலங்கை நேசனே!

கோயிலினுள்ளே உன்னததானத்திருத்தல் ஆசனத் திருத்தல்கள் குற்றம் என்று விலக்கப்பட்டன; பூசை அக்கினிகாரியம் தீட்சை சிவசாஸ்திரப்பிரசங்கம் சிவபுராணப் பிரசங்கம் செய்யும்போது அவை செய்வோர் உன்னததானத்திருத்தல் ஆசனத்திருத்தல்கள் கோயிலினுள்ளும் குணம் என்று விதிக்கப்பட்டன.

ஆசாரியரைச் சிவனடியாரைக் கோயிலினுள்ளே நமஸ்கரித்தல் குற்றம் என்று விலக்கப்பட்டது; பிரதிட்டை தீட்சை சிவசாஸ்திரப் பிரசங்கம் சிவபுராணப் பிரசங்கம் செய்யப்பட்டபொழுது அவை செய்தாரை நமஸ்கரித்தல் கோயிலினுள்ளுங் குணம் என்று விதிக்கப்பட்டது.

கோயில்வீதியிலே வாகனத்தேறிப் போதல் குற்றம் என்று விலக்கப்பட்டது; மகோற்சவ முடிவிலே உற்சவாசாரியரும், நூலரங்கேற்ற முடிவிலே நூலாசிரியரும், சிவசாஸ்திர சிவபுராணப் பிரசங்க முடிவிலே போதகாசிரியரும், வாகனத்தேறிக் கோயில் வீதியிலே திருவுலாப்போதல் குணம் என்று விதிக்கப்பட்டது.

பூசைக்கு உபயோகப்படும் சந்தனம் புட்பம் முதலியவற்றைப் பூசை முடியுமுன் ஒருவன் தனக்கு உபயோகப்படுத்திக்கொள்வது சிவத்துரோகம் என்று விலக்கப்பட்டது;

---

* இவ்விஷயம் இலங்கைநேசன் பத்திரிகையில் உள்ளது. அப்பத்திரிகை சிதைந்துபோயிற்று. இது கையெழுத்துப்பிரதியொன்றைப்பார்த்து அடிக்கப்பட்டது.

பூசையிடையிலே, சிவலிங்கபூசைக்கு முன்புதானே பூசகன் தன்காற்கீழும் தன் மார்பிலும் தன் சிரசிலும் புட்பமும், தன் நெற்றியிற் சந்தன திலகமும் மந்திரத்தோடிடுவது ஆன்மபூசையாகிய சிவபுண்ணியம் என்று விதிக்கப்பட்டது. சிவபூசையிலே சிவபெருமானைப் பூசிக்கும் ஆதாரங்கள், சூரியன், ஆன்மா, சிவலிங்கம், தீட்சாகுரு, சிவாகமபுத்தகம், சிவாக்கினி என ஆறும் என்பது சிவாகமநூற்றுணிபு.

கோயிலினுள்ளே தீவர்த்தி கைவிளக்குப் பிடிப்பித்தல் குற்றம் என்று விலக்கப்பட்டது; தேவாரத்திருக்கூட்டத் தலைவரும் சைவசமய போதகரும் தீவர்த்தி கைவிளக்கு முதலிய பிடிப்பித்துக்கொள்வது குணம் என்று விதிக்கப்பட்டது. சுவாமிக்கு ஸ்நபநகும்பம் நைவேத்தியங் கொண்டுபோகும் பரிசாரகர்களுக்குங், காவடி கொண்டு போகுஞ் சாமானிய சனங்களுக்கு முன்னுஞ் செய்யப்படும் மரியாதைகள் அந்தக் கும்பம் முதலியவைகளுக்கல்லது அவை கொண்டுபோவார்க்கல்லவே. அதுபோலவே தேவாரத் திருக்கூட்டத்தார்க்கு முன்னுஞ் சைவசமய போதகர்க்கு முன்னும் செய்யப்படும் மரியாதைகள் தேவாரத்துக்கும், சிவசாஸ்திரத்துக்குமல்லது அவர்களுக்கல்லவே. கட்புலப்பட்டொழிவனவாகிய கும்பம் தாம்பாளங் காவடிகட்கு மரியாதை செயப்படலாம், செவிப்புலப்பட்டு ஆன்மாக்களுக்குப் பத்தி வைராக்கிய ஞானங்களை விளைவித்து எக்காலமும் நிலைபெறுவிக்குந் தேவாரவொலி சிவசாஸ்திரவொலிகட்கு மரியாதை செயப்படலாகாது என்பது முழுமூடர் கருத்து. இதற்கு நியாயம் யாதோ? இங்கே அவை வழக்கம் இவை வழக்கமல்ல என்பது நியாயமோ?

அல்லது அவை செய்து மரியாதை பெறுதல் எல்லாராலுங் கூடாததுதான் என்பது நியாயமோ?

கைக்கோளர்கள் சூரசங்காரோற்சவத்துக்கு வெகுமரியாதைகளோடு வருவது குற்றம் என்றமைக்குக் காரணம் யாதோ? அம்மரியாதைகள் வீரவாகுதேவர் முதலிய நவவீரர்களைச் சார்வனவல்லது அக்கைக்கோளர்கள் கள்ளுணல் புலாலுணல் முப்பதுநாள் ஆசௌசம் என்பன உடையர்களாதலால் அவர்களைச் சாரமாட்டா என்னுந் துணிவுதான் காரணமோ? தேவாரத் திருக்கூட்டத்தார் கைவிளக்கு மரியாதை ஒன்றோடுதானும் வருவது குற்றம் என்று புறம்பழித்தற்குக் காரணம் யாதோ? அம்மரியாதை திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சமயாசாரியரைச் சென்றடைவது யார் கண்டார். *அத்திருக்கூட்டத்தார் கல்வியறிவொழுக்கமுஞ் சமயாசாரமுஞ் சிவதீட்சையுஞ் சிவபூசையும் பொறாமைதான் காரணமோ.* நவவீரர் வேடத்துக்குக் கைக்கோளர் யோக்கியர். சமயகுரவர் வேடத்துக்குச் சைவர் அயோக்கியர் என்பதுதான் யாழ்ப்பாணத்தவர் கருத்தோ.

கைவிளக்கு, அரசனுக்கும் வித்துவானுக்கும் மடாதிபதிக்கும் உரிய விருதுகளுள் ஒன்று. கைவிளக்கு இவரொழிந்த பிறர் பிடித்துக்கொள்ளத் தக்கதன்று. இது தமிழரசரேற்பாடு. இரட்டைக் கைவிளக்கு விசேஷவிருது. இலக்கணம் இலக்கியம் நீதிநூல் அங்ககணிதம் வீசகணிதம் பூகோளசாத்திர முதலியவை கற்றறிந்தவர் சாமானிய வித்துவான்; இவைகளோடு முத்திநூலாகிய சைவசித்தாந்த

* இந்த இடங்களில் கையெழுத்துப் பிரதியிலும் ஒரு சிதைவு இருக்கின்றது.

முங் கற்றறிந்தவர் விசேஷ வித்துவான்; சைவசித்தாந்தமெனினும் சிவவித்தையெனினும் விசேஷ வித்தையெனினும் பொருந்தும். மடத்துக்குத் தலைவர் மடாதிபதி. துறவிகளுடைய உறைவிடத்துக்கும் முத்திநூல் கற்குமிடத்துக்கும் மடம் என்று பெயர். சைவர்களுக்கு முத்திநூல் சைவசித்தாந்தம். சைவசித்தாந்தம் நிருவாண தீட்சைக்குப் பின் கற்கத்தக்கது. அதற்கு முன் கற்பது சாத்திரத்துக்கு விரோதம். நிருவாண தீட்சைக்கு முன் ஒருதலையாக அடைதற்பாலனவாகிய கல்வியறிவொழுக்கமுஞ் சமயாசாரமும் இல்லாதவராகிய நிருவாண தீட்சை செய்யப்படும்பொழுது அதனுடைய சொரூபம் இன்னதென்று அறிந்துகொள்ளுந் தன்மை இல்லாதவராகியும் நிருவாண தீட்சைக்குப் பின் ஒருதலையாக ஈட்டற்பாலதாகிய சைவசித்தாந்தநூலறிவென்னும் ஒப்பருஞ் செல்வத்தை ஒரு சிறிதும் ஈட்டாதவராகியும் உள்ளவருடைய நிருவாண தீட்சை விளையாட்டுப்பெண்களுடைய மணற் சோறு கறிபோலும். இவ்வகை நிருவாண தீட்சை யார்தான் பெறமுடியாது. எல்லாரும் பெறலாம் பெறலாம்.

சாமானிய வித்தைகளோடு விசேஷவித்தையும் உடன் கற்றதனால் விசேஷ வித்துவான் எனவும் வித்தியாசாலைகளாலும் புத்தகங்களாலும் பிரசங்கங்களாலும் கல்வியறிவொழுக்கங்களோடு சைவசமயமுந் தழைப்பித்தலாற் சைவபரிபாலகர் எனவும், சைவ மடாதிபதிகளாலும் இனிது பாராட்டப்படும் இயல்புடையவர்கள் இரட்டைக் கைவிளக்கு முதலிய விருதுகளோடு புறப்படுவது யாரால் ஆட்சேபிக்கத்தக்கது! விருதோடு செல்வது வித்துவான்களுக்கடாது என்பர்கள் மூடர்கள். வித்துவான்கள் விருதோடு செல்வதே தகுதி என்பதறிவித்தற்கன்றோ சிவபெருமா

னும் வித்துவான் வேடங்கொண்டு பாண்டியனுடைய சபைக்கு எழுந்தருளும்பொழுது உபயசாமரை முதலிய விருதுகளோடு எழுந்தருளினரென்க. சுப்பிரீங்கோட்டு நீதிபதி, அப்புக்காத்து முதலாயினோர் தத்தம் தொழில் குறித்துச் செல்லும்பொழுது தத்தமக்குரிய சின்னத்தோடு செல்வதே தகுதியாமாற் போலச், சைவபரிபாலகரும் தந் தொழில் குறித்துச் செல்லும்பொழுது தமக்குரிய சின்னத்தோடு செல்வதே தகுதி. சைவபரிபாலகர் தொழில்களாவன:—தேவாரத்திருக்கூட்டத்தலைமை, சைவப்பிரசங்க முதலியன. தேவாரபாராயணமுஞ் சைவப்பிரசங்கமும் இல்லாத கோயில் கோயிலன்று. "ஓர் மாணாக்கன் வினாவிய ஓராறியர்வினா"வுக்கு விடை இனியமையும்.

இங்ஙனம்,

கஅளஎ - புரட்டாதிமீ கூ0உ. நிட்பக்கவாதி.

ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு

முதலாம்பாகம்

முற்றிற்று.

---

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ங | அ | கின்றார்கன் | கின்றார்கள் |
| ச | ங | யஞராகிய | யஞராகிய |
| ,, | கஉ | ஆபத்லுக் | ஆபத்துக் |
| அ | உஅ | கள் | கிகள் |
| ,, | ஙO | சமயயிகளு | சமயிகளு |
| கக | சு | சமபிகள் | சமயிகள் |
| கங | உ | பாதகங்ளென்று | பாதகங்களென்று |
| ,, | கஎ | சைமசமயி | சைவசமயி |
| உஉ | கO | பிள்ளை, யே! | பிள்ளையே!' |
| ஙரு | கஎ | மிதாச் | பிதாச் |
| சO | ங | கட்டடங்கவ் | கட்டடங்கள் |
| சக | ங | வேலைப்குப் | வேலைக்குப் |
| சரு | உஎ | மின்பு | பின்பு |
| ருஉ | உஉ | பதிப்பிது | பதிப்பித்து |
| அரு | எ | தாதுணர் | ஓதாதுணர் |
| கூச | கக | தொரடக்கை | தொடக்கை |
| கOக | உசு | தர்ருக்கு | தாருக்கு |
| கOஎ | உரு | ஒதுவோர் | ஓதுவோர் |
| கஉஉ | உஅ | மாளிகையா? | மாளிகையா?" |
| கஉசு | உO | காணப்பட்ப | காணப்பட்ட |
| ,, | உஎ | கரி" | சரி" |
| கசO | கங | கலக்கட்டர் | கலக்டர் |
| கசஎ | கக | Interpretor | Interpreter |
| கசுஅ | கக | இல்லாதவராகிய | இல்லாதவராகியும் |

☞ உஉ-ம் பக்கம் குமாரநாயகரலங்காரத்திலிருந்து நல்லறிவுச்சுடர்கொளுத்தல் வரையும் விஷய இலக்கங்கள் பிழைத்திருப்பதால் அவற்றை ஏற்றபடி திருத்திக்கொள்க.

உ

கணபதிதுணை

# ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு.

இது

நல்லூர்

த. கைலாசபிள்ளையால்

திரட்டப்பட்டது.

## இரண்டாம்பாகம்.

யாழ்ப்பாணம்

வித்தியாநுபாலனயந்திரசாலை.

கலி: ௫௦௨௬.

உ

கணபதிதுணை.

# ஆறுமுகநாவலர்

# பிரபந்தத் திரட்டு.

(இரண்டாம் பாகம்.)

## க. நல்லூர்க் கந்தசுவாமிகோயில்.

யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளே!

நாம் உங்களுக்கு எழுதும் இப்பத்திரிகையை நீங்கள் நன்றாக வாசித்து, இதில் உள்ளவைகள் சைவசாத்திரத்துக்கும் யுத்திக்கும் அநுபவத்துக்கும் ஒத்தவைகளோ அல்லவோ என்று சாவதானமாக ஆராய்ந்து, ஒத்தவைகளாயிற் கொள்ளுங்கள், ஒவ்வாதவைகளாயிற் றள்ளுங்கள்.

உ. நீங்கள் வழிபாடுசெய்யுங் கோயில்களெங்கும் வருஷந்தோறும் படிக்கப்பட்டும் படிப்பிக்கப்பட்டுங் கேட்கப்பட்டும் வருகிற நூல் கந்தபுராணமன்றோ! நீங்கள் வியாதி இராசபயம் முதலியவைகளினாலே பீடிக்கப்படும்பொழுதும், உங்களுக்குப் புத்திரபாக்கியங் கிடையாதபொழுதும், கந்தபுராணங் கேட்டால் உங்கள் கருத்துச் சித்திக்கும் என்றன்றோ, உங்கள் பொருளையுங் காலத்தையுஞ் செலவிட்டு அதை நியமமாகப் படிப்பித்துக் கேட்கிறீர்கள். கந்தபுராணஞ் சைவசமயத்துக்கு முதனூலோ வழிநூலோ?

இதற்கு விடை கந்தபுராணங்கொண்டே ஆராயுங்கள். கந்தபுராணத்திற் பாயிரப்படலத்திலே "ஏற்றமதாகியமறைக்கும் யாமுனஞ் சாற்றிய வாகமந்தனக்குமாங்கது வீற்றுறவருவது மன்று மேன்மையா லாற்றவு நமதிய லுறையுநீரதே. என்பெய ரதற்கெனி லினிது தேர்ந்துளோர் துன்பமதகற்றிடுந் தொல்புராணமாம்" என்பதினாலே வேதஞ் சிவாகமம் இரண்டும் முதனூல், புராணம் வழிநூல் என்றறிவீர்கள். கலியுகவரப்பிரதர் என்று நீங்கள் வழிபடும் மூர்த்தி கந்தசுவாமியன்றோ! கந்தசுவாமி சிவபெருமானைத் திருச்சேய்ஞலூரிலுந் திருச்செந்தூரிலுஞ் செருத்தணிமலையிலும் பூசைசெய்தார் என்று உங்களுக்குக் கந்தபுராணமே அறிவிக்கிறதன்றோ! சிவபூசை கந்தசுவாமி எந்தநூல் விதிப்படி செய்தார்? கந்தபுராணங்கொண்டே ஆராயுங்கள். குமாரபுரிப்படலத்திலே "அவ்வக் காலையி லாறுமாமுகனுடையடிகள் தெய்வக்கம்மியற் கொண்டொரு சினகரமியற்றிச் 'சைவத் தந்திர விதியுளி நாடியே தாதை எவ்வெக்காலமு நிலைத்ததோருருவு செய்திட்டான்". மீட்சிப்படலத்திலே "முழுதொருங்குணர்ந்திடு முருகன் யாவருந் தொழுதகுமிறைவனூற்றொடர்புநாடியே விழுமிய கண்ணுதல் விமலன்றண்மலர் வழிபடல் புரிந்தனன் மனங்கொள் காதலால்" வள்ளியம்மை திருமணப்படலத்திலே "இவ்வரையொருசார்தன்னி லீராறுதோளுடைய வெந்தை மைவிழியணங்குந் தானு மாலய னுணராவள்ளல் ஐவகையுருவி லொன்றை யாகமவிதியா லுய்த்து மெய்வழிபாடு செய்து வேண்டியாங்கருளும் பெற்றான்" என்னும் பாட்டுக்களினாலே, சிவபூசை கந்தசுவாமி சிவாகம விதிப்படி செய்தார் என்றறிவீர்கள். உங்கள் வழிபடு கடவுளாகிய கந்தசுவாமியே சிரமேற்கொண்ட சிவாகமங்களை நீங்கள் அவமதிக்கலா

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41



மோ? அவமதிக்கும்பொழுது கந்தசுவாமிமேல் அறியாமை ஏற்றுகிறீர்களன்றோ! அப்படிச் செய்யிற் கந்தசுவாமியே, உங்களைத் தண்டிப்பாரன்றோ! கந்தசுவாமிக்கு எந்நூல் விதிப்படி பூசை திருவிழா முதலியவை செய்தல்வேண்டும்? அதுவுங் கந்தபுராணங்கொண்டே ஆராயுங்கள். மீட்சிப்படலத்திலே "எந்தை யுமை தேர்ந்திட வியம்பிய குமார-தந்திரமுறைப்படி தவாதறுமுகற்கு-முந்திய குடங்கர் முதல் மூவகையிடத்தும்-புந்திமகிழ் பூசனை புரிந்தனர் பரிந்தே." என்னும் பாட்டினாலே, குமாரதந்திர விதிப்படி என்றறிவீர்கள். தேவர்கள் செய்த பூசையைக் கந்தசுவாமி பிரதிமை வாயிலாக நின்றேற்றாரா? நேரே நின்றேற்றாரா? நேரே நின்றேற்ற கந்தசுவாமி, குமாரதந்திரந் தமக்கு உவப்பன்றுயின், குமாரதந்திர விதியை விலக்கி உங்கள் மனம் போனபடியே பூசியுங்கள் என்று கட்டளையிட்டு, அப்படிச் செய்விப்பாரே இப்படியிருக்க, நீங்கள் குமாரதந்திரத்தை அவமதிக்கலாமோ?

௬. இதுவரையுஞ் சொல்லப்பட்டவைகளினாலே, கந்தபுராணத்தை மெய்ந்நூலென அங்கீகரிப்பவர்கள், அதற்கு முதனூலாகிய வேதசிவாகமங்களை அங்கீகரித்தல்வேண்டும் என்பதும், கந்தசுவாமியை வழிபடுகிறவர்கள் அவர் தம்முடைய தந்தையாராகிய சிவபெருமானை வழிபடுதற்குப் பிரமாணமாகக் கொண்ட சிவாகமங்களையும் அக்கந்தசுவாமியை நேரே தேவர்கள் வழிபடுதற்குப் பிரமாணமாகக் கொண்ட குமாரதந்திரத்தையுமே தங்கள் வழிபாட்டுக்குப் பிரமாணமாகக் கொள்ளல்வேண்டும் என்பதும், நன்றாகத் துணியப்படுமே. இப்படியெல்லாமிருக்க, நீங்கள் சிவாகமங்களுக்கும், குமாரதந்திரத்துக்கும், கந்தபுராணத்துக்

கும், கந்தசுவாமிக்கும் விரோதமாகவே நடக்கின்றீர்கள். ஆதலினாலே, நீங்கள், கந்தசுவாமியுடைய அநுக்கிரகத்துக் கன்றி, நிக்கிரகத்துக்கே பாத்திரராவீர்கள். இவ்வுண்மை மை நாம் இங்கே நன்றாகக் காட்டுவோம், வாசித்தறியுங்கள்.

௪. இவ்வியாழ்ப்பாணத்திலே முக்கியமாகிய கோயில் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலே என்று நீங்கள் உங்கள் வழி பாட்டை அங்கே செய்கிறீர்கள். உங்கள் பொருளை மிகுதி யாக அங்கே செலவழிக்கிறீர்கள். அக்கோயிலும், அங்கே நடக்கும் பூசை திருவிழா முதலியவைகளும், சிவாகமங்க ளுக்குங் குமாரதந்திரத்துக்கும் முழு விரோதம். அவ்வா கம விரோதங்களையே உங்களுடைய மற்றைக் கோயில்க ளுக்குப் பிரமாணமாகக் கொள்ளுகிறீர்கள்.

௫. எந்தக் கோயிலுக்குந் தூலலிங்கஞ் சூக்குமலிங்கம் பத்திரலிங்கம் என்னும் மூன்றும் அமைந்திருத்தல்வேண் டும். தூலலிங்கமாவது தூபி. சூக்குமலிங்கமாவது கர்ப்பக் கிருகத்துள் இருக்கிற மூலமூர்த்தி. பத்திரலிங்கமாவது பலிபீடம். இந்நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குத் தூபி யில்லையே; தூபியில்லாதது கோயிலாகாதே. இக்கோயில் ஒரு சிறிதேனும் விதிப்படி கட்டப்பட்டிருக்கவில்லை; இதனை ஆகமம் வல்லவரிடத்துஞ் சிற்பநூல் வல்லவரிடத் துங் கேட்டறியுங்கள்.

௬. மூலமூர்த்தி இல்லாத கோயில் கோயிலாகாது. மூலமூர்த்தியாவது சிலைவடிவினதாய் அட்டபந்தனஞ் செய் யப்பெற்று அசைவில்லாததாய் உள்ள மூர்த்தி; இது அசல மூர்த்தி எனப்படும். அசைவுடைய மூர்த்தி சலமூர்த்தி எனப்படும். இந்நல்லூர்க்கந்தசுவாமிகோயிற் கர்ப்பக்கிரு

கத்தினுள்ளே இருக்கிற மூர்த்தி வெள்ளியினாலே செய்யப்பட்டதாய் அட்டபந்தனஞ் செய்யப்பெறாததாய் அபிஷேகமுதலியவைகளின் பொருட்டுத் தன்னிடத்தினின்றும் பிறிதிடத்துக்குப் பெயர்வதாய் உள்ள சலமூர்த்தி. இது மூலமூர்த்தியாகுமா?

௭. இக்கோயிலுக்குப் பெயர் யாது? கந்தசுவாமிகோயில். இங்கிருக்கிறமூர்த்தி கந்தசுவாமியா? இல்லை: வேலாயுதம். கந்தசுவாமிக்கு வடிவம் வேலாயுதமா? அது அவர் கைப்படைக்கலம்; அவரேவல் செய்யும் அடிமை. அவ்வுண்மை, விடைபெறுபடலத்திலே "ஆயதற்பின்னரேவின், மூதண்டத் தைம்பெரும் பூதமுமடுவ-தேயபல்லுயிரு மொருதலைமுடிப்ப தேவர்மேல் விடுக்கினு மவர்தம்-மாயிருந்திறலும் வரங்களுஞ் சிந்தி மன்னுயிருண்ப தெப்படைக்கும் - நாயகமாவ தொருதனிச்சுடர்வேல் நல்கியே மதலைக்கொடுத்தான்" வள்ளியம்மை திருமணப்படலத்திலே "சேவலுங் கொடிமான்றேருஞ் சிறைமணிமயிலுந் தொன்னூண் - மேவருந்தகரும் வேலும் வேறுளபடைகள் யாவும் - மூவிருமுகத்துவள்ளல் மொழிந்திடு பணிகளாற்றிக் - கோவிலின்மருங்கும் முன்னும் குறுகிவீற்றிருந்தமன்றே." என்னும் பாட்டுக்களினால் அறிவீர்கள். நாயகனையேயன்றி அவனுடைய படைக்கலத்தையும் அவனுடைய அடிமையையும் அவனெனப் பாவித்து வழிபடலாமே எனின், நாயகனுடைய மனைவியரை அவனுடைய அடியானுக்கு மனைவியராக நிறுத்தி வழிபடுவது அந்நாயகனுக்கு உவப்பாகுமா? கந்தசுவாமியினுடைய தேவிமாராகிய தெய்வயானையம்மை வள்ளிநாயகியம்மை இருவரையும் அவரடிமையாகிய வேலாயுதத்துக்குத் தேவிமாரெனக்கொண்டு அதனிருபக்கத்தும் நிறுத்தி வழிபடுவது அக்கந்தசுவாமிக்கு உவப்பாகுமா? இன்னும்,

நாயனும் அடிமையும் இருக்கிற ஓரிடத்திலே நாயனைப் பார்க்கினும் அவனடிமையை மிக நன்குமதித்து வழிபடலாமா? ஆறுமுகசுவாமியும் அவரடிமையாகிய வேலாயுதமும் இருக்கிற ஒரு கோயிலிலே ஆறுமுகசுவாமியைப் பார்க்கினும் வேலாயுதத்தை மிக நன்குமதித்து வழிபடலாமா? அடியான் தானே தலைவனாய் உள்ளே வீற்றிருந்துகொண்டு பலருக்கு அருள்செய்யும்பொருட்டுத் தன்னுயனை வெளியே செலுத்துவதுதான் நீதியா? ஆறுமுகசுவாமி உள்ளிருந்துகொண்டு வேலாயுதத்தை வெளியே செலுத்துவதொழிய வேலாயுதம் உள்ளிருந்துகொண்டு ஆறுமுகசுவாமியை வெளியே செலுத்துவதுதான் நீதியா? இன்னும், சுப்பிரமணியப் பிரதிட்டைக்கும் அவருடைய வேலாயுத வடிவமாகிய சத்திப் பிரதிட்டைக்குங் குமாரதந்திரத்தில் வெவ்வேறு விதி விதிக்கப்பட்டிருக்க, இக்கோயிலிலே சுப்பிரமணியப் பிரதிட்டா விதியை வேலாயுதத்துக்கு வழங்கலாமா? இன்னும் குமாரதந்திரத்திலே சத்திப் பிரதிட்டை விதித்தது அத்திரதேவராகக் கொள்வதற்கா? மூலமூர்த்தி உற்சவமூர்த்திகளாகக் கொள்வதற்கா? இன்னும், இக்கோயிலிலே தாபிக்கப்பட்டுள்ள மூலமூர்த்தி உற்சவமூர்த்தியாகிய ஆயுதவடிவம் அம்புவடிவமா? கந்தசுவாமிகையில் வேலாயுதவடிவமா? கந்தசுவாமிகை வேலாயுதவடிவம் எத்தனை பத்திரமுடையது? எந்தெந்தப்பத்திரம் எந்தெந்தச் சத்தி வடிவம்? அவ்வேலாயுதத்தின் எந்தெந்தத் தானத்தில் எந்தெந்தத்தேவர் பாவிக்கப்படுவர்? ஆராயுங்கள். இக்கோயிலில் மூலமூர்த்தி உற்சவமூர்த்தியாகிய நாயன் அம்பு, அவ்வம்புக்குப் படைக்கலமும் அடிமையுமாகிய அஸ்திரதேவர் கந்தசுவாமி கையில் வேலாயுதம், அவ்வித வேலாயுதத்

தைத் தன்கைப்படைக்கலமாகக் கொண்டது இங்குள்ள ஆறுமுகசுவாமி விக்கிரகம்; அவ்வாறுமுகசுவாமிக்கு முற் பூசை கொள்வது 'அ வ் வ ம் பு; நீங்களெல்லாம் ஆகமவிதி யெனச் சிரமேற்கொண்டது இவ்வம்பு.

அ. இங்கே மூலமூர்த்தியெனக் கொண்ட வெள்ளிவே லாயுதஞ் சலமூர்த்தியாயபொழுதே, அதனையே உற்சவங் கொண்டருளப் பண்ணலாமே; உற்சவத்துக்கு வேறு வே லாயுதம் வேண்டுவதில்லையே. எப்படியும் மூலமூர்த்தியெ னக் கொண்டதை உற்சவமூர்த்தியெனக் கொள்ளலாமா எனின், மூல வேலாயுதத்தோடு மூல விக்கிரகங்களெனக் கொண்டு பூசிக்கப்படுந் தாமிரவடிவமாகிய தேவிமாரை உற் சவவேலாயுதத்தோடு உற்சவங் கொண்டருளப் பண்ணுவ தென்னையோ?.

க. இக்கோயிலார் இங்கே கர்ப்பக்கிருகத்தினுள்ளே முன்னுள்ள வெள்ளிவேலாயுதத்தோடு இப்பொழுது மற்று மொரு வெள்ளிவேலாயுதந் தாபித்துக்கொண்டது என்னை யோ! "முந்திய வேலாயுதம் முறிந்துபோனல் யாது செய் யலாம்; பிந்திய வேலாயுதம் இருக்குமே" என்பதுதான் இவர் சொல்லும் விடை. நல்லது: முந்திய வேலாயுதம் முறிந்துபோனல், அதில் ஆவாகித்துப் பண்டுதொண்டுப் பூசிக்கப்பட்டு வந்த சுவாமியை இனி எங்கே கிருகித்துத் தாபிப்பார்கள்? சில வருஷத்துக்கு முன் ஒரு மகோற்சவ காலத்திலே தாமிரத்தாலாகிய உற்சவவேலாயுதம் முறிந் துபோக, அதில் ஆவாகித்துப் பூசிக்கப்பட்டு வந்த சுவாமி யைக் கிருகித்து யாதொன்றினுந் தாபியாது, அதை உரு க்கி வார்க்கும்பொருட்டுக் கன்னனிடத்திற் கொடுத்து விட்டு, அவ்வேலாயுதத்துக்குச் சாத்தும் அங்கியை வேறு யாதோ ஒன்றிலே மாட்டிச், சிலநாள் உற்சவநடாத்தி, உல

கத்தாரை வஞ்சித்துப் பொருள் பறித்த இக்கோயிலார்: "இவ்வெள்ளிவேலாயுதமும் ஒருபொழுது முறியுமே; இதற்கு அங்கி இல்லையே; முறிந்தால் யாது செய்யலாம்! உலகத்தாரை வஞ்சிக்க வழியில்லையே. வேலாயுதமோ முறிந்துவிட்டது; இனி என்னை! விக்கிரகமே தாபித்துவிடுங்கள் என்று வித்துவான்கள் நெருக்குவார்களே; மறுக்கவோ ஒரு வழியுமில்லையே" என்று நினைந்து முன்புதானே பிறிது வேலாயுதஞ் செய்வித்துத் தாபித்துக்கொண்டது புத்தி புத்தி. இந்தப் புத்தி வேறு யாருக்கு வரும்! நல்லது. இனி முந்திய வெள்ளி வேலாயுதம் முறிந்தால், தாமிர வேலாயுதத்தைத உருக்கிச் செய்வித்ததுபோல அதை உருக்கிச் செய்விக்கவேண்டுவதில்லையே. பின் அதை யாது செய்வாரோ! முன் பருத்தித்துறையார் ஒருவர் கொடுத்த மயில் வெள்ளியைத் தம்மாமனர் எப்படிச்செய்தாரோ, இவரும் அவ் வேல் வெள்ளியை அப்படிச்செய்வார்போலும்! உற்சவவேலாயுதம் முறிந்தபொழுது அதில் ஆவாகிக்கப்பட்ட மூர்த்தியைக் கிருகித்துப் பிறிதொன்றில் ஆவாகித்தார்களா? மகோற்சவத்தை நிறுத்தினார்களா? பிராயச்சித்தஞ் செய்தார்களா? பிந்திய வேலாயுதம் வந்தபின் பிரதிட்டை செய்தார்களா? பின்பு துசாரோகணஞ் செய்து மகோற்சவம் நடத்தினார்களா? விசாரியுங்கள் விசாரியுங்கள். இக்கோயிலார் செய்கையெல்லாஞ் சிறுபிள்ளை விளையாட்டு.

க0. எந்தக்கோயிலுக்குஞ் சண்டேசுரர் கோயில் வேண்டுமே. இங்கே சண்டேசுரர்கோயில் இருக்கின்றதா? சண்டேசுர விக்கிரகந் தாபிக்கப்பட்டதா? முடிவிலே சண்டேசுரபூசையில்லாத பூசையும், முடிவிலே சண்டேசுர தரிசனமில்லாத தரிசனமும் பயன்படாவே. சண்டேசுரர்பொருட்டும் ஒரு சிறுவேலாயுதந் தாபிக்கப்பட்டிருக்கின்றது

என்பீர்கள் போலும்! கெட்டி கெட்டி!!! குமாரதந்திரத்தில் விதிக்கப்பட்ட சுமித்திரசண்டேசுர ரூபம் இவ்வம்பு வடிவமா?

கக. வைரவர்கோயில் இருக்கவேண்டிய தானம் எது? வைரவர் எந்தத் திக்குமுகமாகப் பிரதிட்டை செய்யப்படல்வேண்டும்? வைரவர் பொருட்டு விக்கிரகந் தாபியாது சூலாயுதந் தாபிக்க விதி என்னை? இரும்பினாலே விக்கிரக முதலியவை செய்து வழிபட எங்கேனும் விதியுண்டோ? விசாரியுங்கள். விதியுண்டாயின் வேலாயுதமுதலியவைகளும் இரும்பினாற் செய்துகொள்ளலாமே.

கஉ. இக்கோயிலார் இப்பொழுது விக்கினேசுரவிக்கிரகந் தாபித்தது என்னையோ? சுப்பிரமணியர்பொருட்டு அவர்கை வேலாயுதமும் வைரவர்பொருட்டு அவர்கைச் சூலாயுதமுந் தாபித்துவிட்ட தம்முன்னோர் கருத்துக்கொப்ப, இவரும் விக்கினேசுரர்பொருட்டு அவர்கைத் தோட்டி தாபித்துவிடலாமே. தோட்டியும் வெள்ளி செம்பினாற் செய்யவேண்டாம்; இரும்பினாற் செய்துகொள்ளலாம். இருப்புச் சூலத்தைப்பற்றி ஆக்ஷேபித்தவர் யாவர்? ஓகோ! இன்னும் ஓரிருப்புச் சூலமாயினும் இருப்புக்கோடாலியாயினுந் தாபித்துவிட்டாற் சிவப்பிரதிட்டையுமாய்விடும்; சுப்பிரமணியாலயத்துக்குக் குமாரதந்திரத்தில் விதிக்கப்பட்ட பிரதிட்டைகளெல்லாம் எளிதில் இப்படி முடித்துக்கொள்ளலாம். குறையென்! இங்கே இவர் செய்பவைகளெல்லாம் விதியாமே! ஏன் செய்தாய் எனக் கேட்பார் யார்! இக்கோயிலிற்போல இணுவில் முதலிய ஊர்களில் உள்ள கந்தசுவாமிகோயில்களினும் மூலமூர்த்தி உற்சவமூர்த்தி வேலாயுதம்; ஆறுமுகசுவாமி விக்கிரகம் இங்கு வார்த்தமை கண்ட

பின் இணுவிற்கோயிலினும் வார்க்கப்பட்டது; சிலாவிக்கிரகம் ஏற்றலும், கோயில் பிரித்துக் கட்ட உடன்படலும், நெருங்கல் வந்தபின் உடன்படாது மறுத்துக் கலகம் விளைத்தலும், பிறவும் இப்பொழுது இங்கே கண்டாரன்றோ! இனி அங்கும் நடக்கும் நடக்கும். நடவாதொழிந்தால், அது கந்தசுவாமிகோயிலாகுமா? ஆகாதாகாது. இக்கோயிலுக்கு மாறுபடலாமா?

கஙு. ஆலயப்பிரதிட்டை, பூசை திருவிழா முதலியவை செய்தற்கு அதிகாரிகள் சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவர்களேயென்று ஆகமங்கள் விதித்திருக்கவும், சிவதீக்ஷையோடு குகதீக்ஷையும் பெற்றவர்களே சுப்பிரமண்ணியாலயப் பிரதிட்டை முதலியவை செய்தற்கு அதிகாரிகளென்று குமாரதந்திரம் விதித்திருக்கவும், இக்கோயிலிலே நெடுங்காலஞ் சமயதீக்ஷைதானும் இல்லாத அசைவப்பிராமணர்களே விம்பபூசை செய்துகொண்டு வந்தார்கள். இப்பொழுது சைவப்பிராமணரும், அசைவப் பிராமணரும், அநுமார் பரம்பொருளென வணங்கும் மாத்துவப் பிராமணருங் கலந்து விம்பபூசை செய்கிறார்கள். இப்படியாகக், கும்பபூசை, தம்பபூசை இரண்டுக்குஞ் சமயதீக்ஷை முதலிய நான்கும் பெற்ற ஆசாரியரைத் தேடுவதென்னையோ! மகோற்சவகாலத்திலே கும்பந் தம்பம் இரண்டும் பூசிக்கும் ஆசாரியரால் விம்பம் பூசிக்கப்படாமைக்குக் காரணம் என்னையோ? விம்பத்தைத் தீண்ட அவ்வாசாரியருக்கு யோக்கியதை இல்லையோ! ஆசாரியராலே தீண்டப்பட அவ்விம்பத்துக்கு யோக்கியதையில்லையோ! அக்காலத்தில் விம்பஸ்பரிசத்துக்குக் கன்னன் யோக்கியன்போலும்? இங்கே பிரதிட்டை முதலியவை செய்யும் ஆசாரியர்கள் குகதீக்ஷை

பெற்றவர்களோ? ஆராயுங்கள். குகதீக்ஷை இல்லாதவர்கள் செய்யுங் குகப்பிரதிட்டை முதலியவைகளிலே குகர் எப்படிச் சாந்நித்தியராவார்? மாத்துவப் பிராமணர் கைக்கூலி கொடாதவிடத்து, அவர் வடதேசத்திலே போனபோது கரிக்கோடு தரிக்கக் கண்டோம் என்று அவரைத் தள்ளுகிறார்கள். கைக்கூலி கொடுத்தவிடத்து அவர் சிவபூசை எழுந்தருளப்பண்ணிக்கொண்டார் என்று அவரைச் சேர்க்கிறார்கள். அவர் தாம் இப்பொழுது வடதேசத்திலே சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டாரென்றதை நம்பும் இக்கோயிலார், அவர் முன் இத்தேசத்தில் வந்து விவாகஞ்செய்தபோது, தாம் ஸ்மார்த்தப்பிராமணர் என்று விபூதியினாலும் தாம் பிரமசாரியென்று ஒற்றைப் பூணூலினாலுங் காட்டிய காட்டை இப்போதும் நம்புகிறார்களா? இந்தப் பிராமணர் திரும்பவுந் தமது சென்மதேசத்துக்குப் போகின், விபூதி தரித்துக்கொண்டு போவாரா? இவர் தம்முடைய தாயார் இறக்கின், அந்தியகருமம் எந்தச் சமயநூல் விதிப்படி செய்வார்? மாத்துவசமயநூற்படியா? சைவசமய நூற்படியா? கேளுங்கள். மாத்துவநூற்படி செய்யப் புத்திரர் மாத்துவரா? சைவநூற்படி செய்யத் தாயார் சைவரா?

கச. சுப்பிரமணியசுவாமிக்கு மகோற்சவம் மூன்றுநாள் ஐந்துநாள் ஏழுநாள் ஒன்பதுநாள் பன்னிரண்டுநாள் நடத்துக என்று குமாரதந்திரம் விதித்திருக்க, இங்கே இருபத்துநான்குநாள் மகோற்சவம் நடத்துவதென்னையோ! இன்னும், இங்கே மகோற்சவத்திலே பகல் இரவு இரண்டிலும் வெளிப்பிராகாரத்திலே அஸ்திரதேவரை எழுந்தருளப்பண்ணிப் பலிபோடாது உட்பிராகாரத்திலே பலிபோடுதற்கும், பகலிலே உட்பிராகாரத்திலே மாத்திரஞ்

சுவாமியெழுந்தருளப்பண்ணுதற்கும், இரவிலே முதன் மூன்றுநாண் மாத்திரஞ் சுவாமி யாகங் கண்டு மற்றை நாட்களில் யாகங் காணாது வெளியில் எழுந்தருள்வதற்கும், பலி போடாத வீதியிலே சுவாமியெழுந்தருள்வதற்கும் விதியுண்டா? இல்லையே!

கரு. இங்கே நவராத்திரியிலே வேலாயுதத்தையுந் தேவிமாரையும் மேலே எழுந்தருளப்பண்ணிக் கீழே கும்பஸ்தாபனஞ்செய்து பார்வதிதேவியாரைப் பூசிக்கிறார்களே. இது நீதியா? தாயார் கீழிருப்பக் குழந்தை மேலிருப்பது குற்றமாகாது எனின், குழந்தை மனைவியரோடு மேலிருப்பதுங் குற்றமாகாதுபோலும்!

கசு. "விதி இருக்கினும் இல்லாதொழியினும் இக்கோயிலிலே ஆதியில் வழங்கிய வழக்கப்பிரகாரமே எல்லாம் நடத்தல்வேண்டும். அவ்வழக்கத்துக்கு மாறாக ஒன்றும் செய்யலாகாது" என்கிறார்கள். ஆதி வழக்கப்பிரகாரம் நடத்தல்வேண்டும் என்றே நாம் போதிக்கிறோம். அவ்வழக்கத்துக்கு விரோதமாகவே இக்கோயிலார் நடக்கிறார்கள். எப்படியெனிற் பேசுவோம். இக்கோயில் இருக்கிற தானத்திற்றான், இத்தானத்துக்குச் சமீபத்திற்றான், இக்கோயிலுக்கு முன் ஒரு கந்தசுவாமிகோயில் கட்டப்பட்டு, நெடுங்காலம் பிரசித்தி பெற்றிருந்து, பறங்கிக்காரரால் இடிபட்டொழிந்தது; அதற்குப் பின் இக்கோயில் உலாந்தர்காலத்திலே கட்டப்பட்டது. இக் கோயில் வழக்கம் முன்னைக் கோயில் வழக்கத்துக்கு ஒத்ததா? மாறுபட்டதா? மாறுபட்டது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு வழக்கமுங் கொள்ளத்தக்கனவா? அல்ல: அவைகளுள் ஒன்று

கொள்ளத்தக்கது; ஒன்று தள்ளத்தக்கது. நல்லது: முன்னைக்கோயில் வழக்கம் இக்கோயில் வழக்கம் என்னும் ரண்டினுள்ளும் எது கொள்ளத்தக்கது எது தள்ளத்தக்கது? ஆராய்வோம். முன்னைக்கோயில் வழக்கம் எப்படிப்பட்டவராலே தாபிக்கப்பட்டது? வேதசிவாகம வழக்கம் பெரிதுடைய தமிழ்நாட்டினின்றும் வந்த பிராமணகுலோத்தமரும், சைவராசாவாகிய சிங்கையாரியசக்கிரவர்த்திக்கு முதன் மந்திரியாரும், வேத முதலிய நூல்களில் அதிசமர்த்தருமாகிய புவனேகவாகுவினாலே தாபிக்கப்பட்டது. இக் கோயில் வழக்கம் எப்படிப்பட்டவராலே தாபிக்கப்பட்டது? ஒருவரேனுஞ் சைவசமயத்தை வெளிப்பட அனுட்டிக்க இயலாத உலாந்தர் காலத்து அசற் சூத்திரரும், அவ்வுலாந்தர் கச்சேரியிற் சிருப்புவும், கல்வியறிவில்லாதவருமாகிய இரகுநாத மாப்பாணராலே தாபிக்கப்பட்டது. ஆகவே, எவ்வழக்கங் கொள்ளத்தக்கது எவ்வழக்கந் தள்ளத்தக்கது? நீங்களே சொல்லுங்கள். முன்னைக்கோயில் வழக்கம் எந்தப்பிரகாரம் அமையப்பெற்றது? கட்டடம், விக்கிரகப்பிரதிட்டை, பூசை திருவிழா முதலிய எல்லாவற்றுள்ளும் சிவவாக்காகிய ஆகமத்துக்கும், அவ்வாகமத்தைச் சிரமேற்கொண்ட தேவர்கள் முனிவர்கள் முதலாகிய பெரியோர்கள் வழக்கத்துக்கும் ஏற்ப அமையப்பெற்றது. இக் கோயில் வழக்கம் எந்தப்பிரகாரம் அமையப்பெற்றது? கட்டட முதலிய எல்லாவற்றுள்ளும் அவ்வாகமத்துக்கும் அப்பெரியோர்கள் வழக்கத்துக்கும் விரோதமாக அற்ப மனுஷருடைய மனம் போனபடியே அமையப்பெற்றது. ஆகவே, எவ்வழக்கங் கொள்ளத்தக்கது எவ்வழக்கந் தள்ளத்தக்கது? நீங்களே சொல்லுங்கள். "முன்னைக்கோயிலுக்கும் இக்கோயிலுக்குஞ் சம்

பந்தமில்லை. இக்கோயிலில் ஆதிவழக்கமே கொள்ளத்தக்கது" என்பீர்களாயிற் பேசுவோம். "முன்னைக்கோயில் வழக்கத்துக்கும் இக் கோயில் வழக்கத்துக்குஞ் சம்பந்தமில்லை என மறுத்து அதனைத் தள்ளி, இதனையே கொள்வேம்" என்னும் இக்கோயிலார்கள், இக்கோயின் மகோற்சவகாலத்திலே முன்னைக் கோயிற்குருபகராகிய புவனேகவாகு பெயரை முன்னும், இக்கோயிற்குருபகராகிய இரகுநாத மாப்பாணர் பெயரை அதன்பின்னும் உச்சரிப்பிப்பது உலகறியுமே. ஆகவே, முன்னைக்கோயிலுக்கும், இக்கோயிலுக்குஞ் சம்பந்தமுண்மை பெறப்படும்; படவே, அக்கோயில் வழக்கமே ஆதிவழக்கம் என்பது பெறப்படும்; படவே, அவ்வழக்கத்துக்கு ஒத்த வழக்கம் உண்டாயின், அதுவே கொள்ளத்தக்கது என்பதும், அதற்கு மாறுபட்ட இவ்வழக்கந் தள்ளத்தக்கது என்பதும், பெறப்படும். இன்னும், புவனேகவாகு வழக்கப்பிரகாரம் நடப்பவருக்கு, அவ்வழக்கம் ஆகமசம்மதமாதலால், அவ்வாகமத்தை அருளிச்செய்த கடவுள் பயன் கொடுப்பார். இரகுநாதமாப்பாணர் வழக்கப்பிரகாரம் நடப்பவருக்குப் பயன் கொடுப்பவர் யாவர்? இரகுநாத மாப்பாணரோ? அவரால் அவமதித்து விலக்கப்பட்ட ஆகமத்தை அருளிச்செய்த கடவுளோ?

கஎ. "எப்படியாயினும் ஆகட்டும் இரகுநாதமாப்பாணர்கோயில் ஆதிவழக்கமே வழக்கம் அவ்வழக்கப் பிரகாரமே நாம் நடத்தல் வேண்டும்" என்று இக்கோயிலார்கள் சொல்வார்களாயின், இரகுநாதமாப்பாணர் வழக்கந்தான் தவறுது நடைபெற்றுவருகின்றதா என்று நீங்கள் ஆராயுங்கள். முன் புலையர்கள் அறையும் பறையொலியோடு குமிழுஞ்சூள் வெளிச்சத்திலே திருவிழா நடத்திய இக்கோயி

விலே, பின்பு நானாவித வாத்தியவொலியோடு தீவர்த்திவெளிச்சத்திலே திருவிழா நடத்துவதென்னையோ! இங்கே முன் விக்கினேசுரப்பிரதிட்டை இல்லையாகவும், வடதேசத்தினின்றும் இங்கு வந்தாரொருவர் இங்கே விக்கினேசுரப்பிரதிட்டை இல்லாமையைக் கண்டு வடதேசத்துக்குப் போய் ஒரு விக்கினேசுர விக்கிரகம் அனுப்ப, ஆறுமுகமாப்பாணர் முன்னை வழக்கத்துக்கு விரோதமாக விக்கினேசுரப்பிரதிட்டை செய்யலாகாது என்று அவ்விக்கிரகத்தைப் பிறருக்கு விற்றுவிட்டாராகவும், இப்பொழுது இக்கோயிலதிகாரி விக்கினேசுரப்பிரதிட்டை செய்வித்துக்கொண்டதென்னையோ! முன்பு மகோற்சவகாலத்திலன்றி மற்றநாட்களிலே இரவிலும், தேர்த்திருவிழாவொன்றிலன்றி மற்றைநாட்களிலே பகலிலும், சுவாமி வெளிப்பிராகாரத்தில் எழுந்தருளுதல் இல்லையாக, இப்பொழுது வைகாசிவிசாகம் கந்தசஷ்டி திருக்கார்த்திகை மார்கழித் திருவாதிரை தைப்பூசம் முதலியவைகளிலே வெளியில் எழுந்தருள்ப்பண்ணுவது என்னையோ! சிலகாலத்துக்கு முன்னே வண்ணார்பண்ணையிற் சில வேளாளப் பிரபுக்கள், இக் கோயிலிற் சுவாமி விசயதசமியிலே வீரமாகாளியம்மன்கோயிலுக்கு எழுந்தருளி அங்குநின்றும் விக்கினேசுரமூர்த்தியோடும் சிவன் கோயிலுக்கு எழுந்தருளி, அங்குநின்றும் சிவபெருமானோடு பிடாரிகோயிலுக்கு எழுந்தருளி அம்பு போடல்வேண்டும் என்றும், அவ்வுற்சவத்துக்குத் தாங்கள் முதற்பொருள் ஏற்படுத்துவார்கள் என்றும் பேசியதற்கு, ஆறுமுகமாப்பாணர் மறுத்துவிட்டாராகவும், இப்பொழுது கந்தையமாப்பாணர் காலத்திலே சுவாமி கைக்கோள தெருவுக்குப் போய் அம்பு போட்டு, கள்வர் பிறமதத்தவர்கள் முதலாயினோர் உள்ள தெருவழியாகத் திரும்புவது என்னையோ! சில வருஷத்துக்கு முன் ஒருவர் தாமிரத்தாலாகிய சுப்பிர

மணிய விக்கிரகமுந் தேவிமார் விக்கிரகமுங் கொண்டு வந்து இவைகளைத் தாபித்தல் வேண்டும் என்று கேட்டதற்குத் தம்பு என வழங்கிய இரகுநாத மாப்பாணர் அது வழக்கத் துக்கு விரோதம் என்று மறுத்துவிட்டாராகவும், இப்பொழுது கொக்குவிலாரொருவர் ஆறுமுகவிக்கிரகப் பிரதிட்டை செய்வித்ததற்குக் கந்தையமாப்பாணர் உடன்பட்டது என்னையோ! இவையெல்லாம் வழக்கத்துக்கு விரோத மல்லவா?

கஅ. "எவ்வழக்கத்தைத் தள்ளினுந் தள்ளலாம்; நெடுங்காலம் பூசிக்கப்பட்டுவந்த வேலாயுதத்தைத் தள்ளலாகாது; தள்ளின் எப்படியாமோ" என்கிறார்கள். உற்சவவேலாயுதமுறிந்தபோது அதைத் தள்ளிப் பிறிது வேலாயுதம் வைத்தவர்கள், கந்தசுவாமியுற்சவ விக்கிரகந் தாபித்துவிடலாகாதா? வெள்ளிவேலாயுதமும் முறியும் முறிந்தாற் றள்ளப்படுமென்றே பக்கத்திலே பிறிது வெள்ளிவேலாயுதந் தாபித்தவர்கள், கந்தசுவாமி மூலவிக்கிரகந் தாபித்துவிடலாகாதா? தடிப்புள்ளதாய் எப்பொழுதாவது அரிதின் அபிஷேகிக்கப்படுவதாயுள்ள தாமிரவேலாயுதமே முறிந்ததென்றால், மிகமெல்லியதாய் நித்தமும் அபிஷேகிக்கப்படுவதாய் உள்ள வெள்ளிவேலாயுதம் முன்னும் முன்னும் முறிந்து தள்ளப்பட்டிராதா? தள்ளப்படத் தள்ளப்பட இரகசியம் இரகசியமாகப் பிறிது பிறிது வெள்ளிவேலாயுதந் தாபிக்கப்பட்டிராதா? இக்கோயிலார் திருவிளையாடல் யாவர் அறியாதார்! "எப்படியாயினும் ஆகட்டும் இங்கே அருள் விளக்கம் இருக்கிறதே" என்கிறார்கள். ஆகமத்தில் விதிக்கப்பட்ட பிரதிட்டை முதலிய கிரியைகள் இன்றி இடையிடையே நேர்ந்த நேர்ந்தபடியே வைக்கப்படும் அம்பாகிய இவ்வேவாராயுதமாத்திரத்தில் இவ்வளவு அருள்விளக்கங்

காண்கிறவர்கள், ஆகமவிதிப்படியே வேலாயுத முதலிய பலவாயுதத்தோடுங் கூடிய கந்தசுவாமி விக்கிரகம் பிரதிட்டை செய்து பூசைபண்ணிக்கொண்டுவந்தால், அதில் எவ்வளவு அருள்விளக்கங் காண்பார்கள்!!! சர்க்கரைப்பந்தரிற் றேன்மாரி பெய்தாற்போன் முடியாதா?

கக. நீங்கள் இக்கோயிலிலே அடுத்தடுத்துப் பொருள் கொடுத்து உருத்திராபிஷேகம் என்று ஒன்று செய்விக்கிறீர்களே. சுப்பிரமணிய சுவாமிக்கு ஸ்நபனக்கிரமம் எப்படி? இது தானா? எத்தனை கும்பந் தாபிக்கவேண்டும்? எந்தெந்தக் கும்பத்திலே எந்தெந்தத் தேவரைப் பூசித்தல் வேண்டும்? அக்கினிகாரியக் கிரமம் எப்படி? வேதத்தில் எந்தெந்தச் சூக்தம் ஓதல்வேண்டும்? அபிஷேகக்கிரமம் எப்படி? சிவதீட்சை பெறாத அசைவப்பிராமணரும், பில்லிசூனியஞ் செய்வோரும், ஆடு கோழிகளைக் கொன்று பேயோட்டப் புகுவோரும், சங்கரசாதிப் பிள்ளைகளுக்குப் பூணூல் போட்டுப் பிரமகாயத்திரியுபதேசஞ் செய்துவிடுவோருமாகிய இராமேசுரத்தார், கும்பபூசையும் அபிஷேகமுஞ் செய்ய யோக்கியரா? வேட்டியைத் தோய்த்துப் பிழிந்து வைத்துவிட்டு ஸ்நானஞ் செய்து திருமஞ்சனத்தையும் அவ்வேட்டியையும் எடுத்துக்கொண்டு போகும் இவ்விராமேசுரத்தார் கும்ப பூசையும் அபிஷேகமுஞ் செய்ய யோக்கியர் யோக்கியர் !!! இவருக்கு ஸ்நானம் ஏனோ !!! ஒரு கால பூசையிலே பல ருத்திராபிஷேகங் கூடுமா? எல்லாங் குமாரதந்திரமறிந்தவரிடத்துக் கேட்டறியுங்கள். சாத்திரவிரோதமாகிய வயிற்றுப் பிழைப்புச் செய்கைகளுக்கு நீங்கள் வருந்திச் சம்பாதித்த பொருளை இறைத்ததனால் யாது பிரயோசனம் அடைவீர்கள்? நீங்கள் ஒரு ருத்திராபிஷேகத்துக்குப் பன்னிரண்டு ரூபாக் கொடுக்கிறீர்கள். அந்தத்

தொகையிற் பாதிதானுஞ் செலவழிக்கப்படவில்லையென்று நீங்களே பேசிக்கொண்டு திரிகிறீர்கள். பின் ஏன் பொருள் கொடுக்கிறீர்கள்! ஒரு கால பூசையிற்றானே பொருளாசையினாலே பல ருத்திராபிஷேகஞ் செய்யப் புகுந்து, அக்கால பூசையை அகாலத்திலே நடத்துவது நீதியா? இன்னும், பலரிடத்தே தனித்தனியே பன்னிரண்டு பன்னிரண்டு ரூபா வாங்கிக்கொண்டு, ஒரு நேரத்திற்றானே பல கும்பம் ஒருமிக்கத் தாபித்து, ஒரு கும்பத்தின்பொருட்டுச் செயப் படுஞ் செபமே எல்லாக் கும்பத்துக்கும் ஆக்கிவிட்டுச், சில ரூபா ஒழிய மற்ற ரூபாவெல்லாம் இக்கோயிலார் தங்களுக் குந் தங்கள் தாசிகளுக்கும் உபயோகப்படுத்திவிட, நீங்கள் "நாம் நினைத்த காரியஞ் சித்திபெறவில்லை. கந்தசுவாமியார் நமது பொருளை ஏற்றுக்கொண்டு நமக்கு மோசஞ் செய்தா ரே" என்று கந்தசுவாமியாரைத் திட்டுகிறீர்களே! உங்கள் பொருளை உபயோகப்படுத்திக்கொண்ட கோயிலாரையும், அவர் தாசிகளையும் ஒருவருந் திட்டக் காணேமே! ஏகாதச ருத்திரம் பதினொரு பிராமணர் இருந்து முதற்றொடுத்து முடிவுபோகும் வரையும் விதிப்படி செபஞ் செய்தே தக்ஷிணை வாங்கக் காண்கிறீர்களா? அவர்களுக்குக் கொடுக் கப்படுந் தக்ஷிணை அரிசி முதலியவை தாம் என்னை! நீங்கள் காணவில்லையா! கொடுமை! கொடுமை!!!

உ0. இங்கே பூசகர்கள், சுவாமிக்கு அன்னம் பலகா ரம் முதலியவைகளை எல்லாச் சாதியாருங் காண நிவேதிக் கிறார்களே. இது குற்றம் என்பது, பலசாதியாருங் காணப் பலசாதியாரோடும் இருந்து பலசாதியாருந் தொட்டது புசிக்கும் இக்கோயிலதிகாரிகளுக்குத் தெரியாது; பூசகர்க ளுக்குத் தெரியாதா! பூசகர்கள் தங்களிற் றாழ்ந்த சாதி யார் கண்டதைத் தாங்கள் புசிப்பார்களா? தாங்கள் புசிக் கத் தகாததைத் தங்கள் சுவாமிக்கு நிவேதிக்கலாமா!

உக. இங்கே சாயங்காலபூசை இரண்டாங் கால பூசை அர்த்தயாமபூசை என்னும் மூன்றுக்கும் அரிசி ஒருங்கே உலையிலே போட்டு, முழுதும் வேவுமுன் சாயங்கால பூசையிலே சிறிது எடுத்துக்கொண்டுபோய் விக்கினேசுராருக்கு நிவேதித்துவிட்டுத், திரும்பக் கொண்டுவந்து அவ்வுலையிற்றானே போட்டுச், சிறிதுநேரஞ் சென்றபின் சிறிது எடுத்துக்கொண்டுபோய் வேலாயுத முதலியவைகளுக்கு நிவேதித்து விட்டு, அந்நிருமாலியத்தையுங் கொண்டுவந்து அவ்வுலையிற்றானே போட்டு, வெந்தபின் இறக்கி, மற்றையிரண்டு கால பூசையினும் நிவேதிக்கிறார்களாம். இச் சமாசாரம் இக் கோயிற் பிராமணராற்றானே பல ரெதிரே பேசப்படுதல் இக்கோயிலதிகாரிக்குந் தெரியுமே. பிராமணர் சொல்வது பொய்யாயின், அவரைக் கோயிலதிகாரி கண்டியாதது என்னையோ! சுவாமிக்குச் சமைத்த அன்னத்தில் ஒருபாகங் கோயிலதிகாரி புசித்தபின், மற்றப் பாகஞ் சுவாமிக்கு நிவேதிக்க விதியுண்டோ ? அநியாயம் அநியாயம் !!! ஆராயுங்கள்.

உஉ. கோயிற் பிரசாதம் எவருக்காயினும் பரிசாரகப் பிராமணரிடத்திற் கொடுத்தனுப்புவதே கிரமம். நெடுங்காலம் அப்படியே செய்துகொண்டு வந்த இக்கோயிலார்கள், இப்பொழுது மதுமாமிச பக்ஷணஞ் செய்யுங் கைக்கோளச் சிறுவர்களிடத்தே கொடுத்தனுப்புவதும், அச் சிறுவர்கள் கொண்டுபோம்பொழுது தெருவிலே சிறிது சிறிது எடுத்து எச்சில் பண்ணிப் புசிப்பதும், சில பிரபுக்கள் வீட்டுவாயில் சேர்ந்த பொழுது மாத்திரம் பரிசாரகப் பிராமணர் வாங்கிக் கொண்டுபோய், உள்ளே கொடுப்பதும், எச்சிற்றும்பாளங்கள் பின்பு கோயின் மடைப்பள்ளியுள்ளே சேர்க்கப்படுவதும், பலரும் அறிவார்கள். இப் பிரசாதம் புசித்தவர்

கள் "என்னையொழிய யாழ்ப்பாணத்திலே சாதிமான் இருக்கிறானே? நான் அவரிடத்திலே போசனஞ் செய்வேனோ? இவரிடத்திலே போசனஞ் செய்வேனோ?" என்று தனித் தனியே அகங்கரித்துப் பேசும் பேச்சுப் பறையருக்குஞ் சிரிப்பை விளைவிக்கின்றது. தாங்கள் புசிக்க உடன்படாத வீட்டார்களுடைய எச்சிலன்னம் புசிக்குஞ் செட்டிவேளாளர்களைப் பறையர்கள் சிரியார்களா? தாம்பாளப் பிரசாதத்தைத் தங் குடும்பத்தோடும் ஒருங்கு சுற்றியிருந்து எச்சில்பண்ணிப் புசிக்குங் கீழ்மக்கள் கோயிலதிகாரிகளாம்! இவ்வெச்சிற் றும்பாளங்களைத் தீண்டிக் கோயிலில் உபயோகப்படுத்துங் கீழ்மக்கள் பிராமணர்களாம்!

உஙு. இங்கே பரிசாரகப் பிராமணர்கள் கோயின் மடைப்பள்ளியினுள்ளே போசனஞ் செய்கிறார்கள். இது நீதியா? போசனஞ்செய்துவிட்டு, இலை வெளியிலே கொண்டுவந்து எறிகிறார்களா! வெளியிலே வந்து வாய்கொப்பளித்துக் கை கால் கழுவுகிறார்களா! விசாரியுங்கள். இலை வெளியிலே கொண்டுவந்து எறியாதபொழுது உள்ளே போசனஞ்செய்யும் பாத்திரம் யாதாமோ! வாய்ச்சுத்தி கைச்சுத்தி வெளியிலே செய்யப்படாதபொழுது வேறெங்கே செய்யப்படுமோ? ஆலோசியுங்கள். திருவனந்தற்பூசை நைவேத்தியம் பூசகர்களே வைக்கிறவர்களன்றோ! அவர்கள் ஸ்நானஞ் செய்துகொண்டு வந்து, இவ்வசுத்த மடைப்பள்ளியினுள்ளே புகுந்து, இவ்வசுத்தப் பரிசாரகர்கள் வைத்த அசுத்தப் பற்றுப் பாத்திரத்தைத் தொட்டு, நைவேத்தியம் வைத்துச், சுவாமியைத் தீண்டிப் பூசிக்கிறார்களே!

உச. பலகால ருத்திராபிஷேகங்களின் பொருட்டுப் பலகாரவர்க்கம் ஒருகாலத்திற்றானே ஒருங்கே செய்வித்துக்

கொண்டு, அதில் ஒருபாகம் முதற்காலத்திலே நிவேதிப்பித்து, அதை அக்காலத்து ருத்திராபிஷேகஞ் செய்வித்த அம்பட்டர், நளவர், வண்ணார் முதலாயினோருக்குக் கொடுத்து விட்டுச், சேஷத்தை மற்ற ருத்திராபிஷேகத்தில் நிவேதிக்கின்றார்கள். இவைகளைக் கண்டுங் கேட்டும், இங்கே ருத்திராபிஷேக முதலியவை செய்விப்பது புண்ணியமோ பாவமோ? சொல்லுங்கள். ஒரு பிராமணருக்காயினுஞ் சைவருக்காயினும் அன்னங் கொடுத்தல் புண்ணியம் என்பது மெய். பிறருடைய சேஷத்தைக் கொடுத்தல் புண்ணியமாமோ பாவமாமோ? ஆராயுங்கள். சேஷமும் அவரோடு சமத்துவமுடையாரது சேஷமாகாது, மிகமிகத் தாழ்ந்தார் சேஷமாயிற் சொல்லவேண்டுவதென்னை!

உரு. இங்கே சுவாமிக்குச் சந்தனம் இழைப்பவர்கள், மது மாமிச பட்சணஞ் செய்பவர்களாய், ஸ்நானஞ் செய்யாதவர்களாய், ஒருபொழுதுந் தோயாத அழுக்குவேட்டி தரித்தவர்களாயுள்ள சங்கர சாதியார்களன்றோ! இங்கே தீபங்களுக்கு இடப்படுந் திரி நூற்றிரியா? உடுத்த பழஞ்சீலைத்திரியன்றோ! தீபங்களைத் தீண்டித் திரியிடுவோர்கள் இச் சங்கரசாதியார்களன்றோ! எல்லாரும் நேரே பார்த்தறியலாம்.

உசு. மதுமாமிச பக்ஷணஞ் செய்யும் நானா சாதியாரோடும் போசன முதலியவைகளிலே கலத்தல் புகையிலைச் சுருட்டுப் பிடித்தல் முதலிய அநாசாரங்களையுடைய அசற் சூத்திரர் முதலானவர்கள், இங்கே திருவாபரண மெடுத்துக்கொடுத்தல் உற்சவமூர்த்தியையுந் துசத்தம்பத்தையுந் தீண்டுதல் முதலியவை செய்கிறார்கள். பூசையும் இவர்களே செய்து அருச்சனை வரவையுந் தாங்களே பெற்றுக்கொள்ளலாமே.

௨௭. இங்கே அருச்சனைக்கு எடுத்த வில்வம் ஒழிய ஒழிய, முன் அருச்சனை செய்த நிருமாலிய வில்வத்தையே எடுத்தெடுத்து அருச்சனை பண்ணுவதையும், கர்ப்பூரம் அவித்தவித்தேற்றுவதையும், நீங்கள் காணவில்லையா? காணாதவர்கள் இனியாயினும் பார்த்தறியக்கடவர்கள்.

௨௮. இங்கே, மாமிசபோசனஞ் செய்கிறவர்களும், எந்தச்சாதியாரிடத்தும் புசிக்கிறவர்களும், எச்சிற்குற்றம் ஆசௌசக்குற்றம் பாராதவர்களும், பூசைச் சோற்றைக் கொண்டுபோய் நளவரிடத்திற் கொடுத்துவிட்டுக் கள்ளுவாங்கிக் குடிக்கிறவர்களுமாகிய பண்டாரங்கள் எடுத்துக்கொண்டுவந்த புஷ்பத்தைச், சுவாமிக்குச் சாத்துகிறார்கள். இந்தேசத்து மூடர்கள் அநேகர், புண்ணியகாலங்களிலே இந்தப் பண்டாரங்களைப் பூசைசெய்து, இவர்களுக்கு அன்னங் கொடுக்கிறார்கள். தங்களைக் கண்டு எழுந்து கும்பிடும் விலைப்பெண்களாகிய தாசிகளாலே கும்பிடப்படுதற்கு யோக்கியதையில்லாதவர்கள் என்று தங்களால் விலக்கப்பட்ட சாதியார்களிடத்தே புசிக்கும் பண்டாரங்களைத் தாங்கள் சிவனடியார்கள் என்று நினைத்துப் பூசை செய்கிறார்கள். இவர்களைப் பார்க்கினும் மூடர்கள் உலகத்தில் உண்டோ! இவர்கள் பெறும் பயன் யாதோ!

௨௯. இக்கோயிலிலே நாய்கள் அடுத்தடுத்துக் கர்ப்பக்கிருகத்தினுள்ளும் மடைப்பள்ளியினுள்ளும் புகுந்து புகுந்து, அசுத்திசெய்துகொண்டு வருவது பலருக்குந் தெரியும். இக்கோயிலார் இதற்கு யாதாயினும் பிராயச்சித்தஞ் செய்வித்து, மீட்டும் நாய்கள் புகாவண்ணங் காவல் செய்கின்றார்களா!

௯0. இக்கோயிற் பூசகர்களுள்ளே, இன்னார் சலமோசனஞ் செய்துவிட்டு ஸ்நானஞ் செய்யாது கைகால்களுங் கழுவாது உள்ளே போய்த் தீபாராதனைசெய்தார் என்றும், இன்னார் திருவனந்தற் பூசையிலே நைவேத்தியமில்லாமற் பூசைசெய்துவிட்டுப் பலிபீட பூசையிலே தாமரைப்பூவையே பலியுண்டையாகப் பாவித்துப் போடக் காகம் வந்து கௌவி வெட்கமுற்றது என்றும், இன்னார் அபிஷேகத்துக்கு வைக்கப்பட்ட பஞ்சாமிர்தத்தையும் இளநீரையும் எடுத்து உட்கொண்டார் என்றும், இன்னார் இன்னார் அபிஷேகத்துக்கு வந்த பாலைத் திருடிக்கொண்டுபோய்விட்டார்கள் என்றும், இக்கோயிலதிகாரிகளே பற்பலருக்குஞ் சொல்கின்றார்கள். இவை மெய்யாயின், இவை செய்தவரை விலக்காதது நீதியோ? பொய்யாயிற் குற்றமில்லாதவரிடத்தே குற்றமேற்றுவது நீதியோ? சலமோசனஞ் செய்துவிட்டு ஸ்நானஞ் செய்யாது தீபாராதனை செய்தமை என்னுங் குற்றமேற்றப்பட்டவர் "நான் அது செய்தாற் கோயிலதிகாரிகள் என்னை ஏன் விசாரித்து விலக்கவில்லை? துசாரோகணஞ் செய்தபின்பு தாங்கள் துசத்தம்பத்தைத் தீண்டினமையும் ஆசௌசத்தோடு தாங்கள் கோயிலுட் புகுதலும் பிறவும் நான் சொல்வேன் என்று பயந்தார்களோ"? என்கிறார். தாமரைப் பூவைப் பலியுண்டையாகப் போட்டமை என்னுங் குற்றமேற்றப்பட்டவர் "என்னிடத்தே கோயிலதிகாரி இக்குற்றமேற்றி இருபதுரூபா வாங்கிக்கொண்டாரே! சுவாமிக்குப் பிராயச்சித்தஞ் செய்வித்தாரோ"? என்கிறார். பஞ்சாமிர்தம் உண்டமை என்னுங் குற்றமேற்றப்பட்டவர் "நான் கோயிலதிகாரிக்கு ஐம்பது ரூபாக் கைக்கூலியிறுத்தும் எனக்குப் பூசை கிடைக்கவில்லையே" என்கிறார். அபிஷேகப்பால் திருடினமை என்னுங் குற்றமேற்றப்பட்டவர்கள்

"அபிஷேகப்பாலைக் கோயிலதிகாரிகள் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம்; தாசிகளுக்குக் கொடுக்கலாம்; தங்கள் வீட்டுச் சிராத்தத்துக்குத் தயிரின்பொருட்டு அபிஷேகப்பாலை எடுப்பிக்க, நாங்கள் அதிலே கர்ப்பூரத்தைப் பொடிபண்ணிப் போட்டுவிடத், தாங்கள் காய்ச்சிப் பிரையிட்டுத் தயிராக்கிச் சிராத்தத்திலே பிராமணர்களுக்குக் கொடுக்க, அவர்கள் கர்ப்பூரமணம் வீசக் கண்டு கீழே கொட்டத் தாங்கள் தலை குனியலாம்; பூசகர்களாகிய நாங்கள் மாத்திரம் பாலெடுத்துக் குடிக்கலாகாதாம்" என்று சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறார்கள். இக்கோயிலதிகாரிகள் இப்பூசகர்களை எப்படித் திருத்துவார்கள்!

௩௧. இக்கோயிலிலே, அங்கப் பிரதக்ஷிணஞ் செய்யப் புகுந்து, தென்மேற்கில் விக்கினேசுரருக்கும், வசந்தமண்டபத்தில் உற்சவமூர்த்திக்கும், யாகசாலையில் அக்கினிக்கும், பங்களுக்குங் காலை நீட்டும் பாவிகளையும், கர்ப்பக்கிருகத்துக்குப் பின்னும் இருபக்கத்தும் நமஸ்காரஞ் செய்து, சுவரைத் தலையினுலே முட்டும் மூடர்களையும், திருவிழாத் தீவர்த்தியிலே புகையிலைச் சுருட்டுப் பற்றுவிக்குங் கீழ்மக்களையும், மகாமண்டபத்தினுள்ளே பிரவேசிக்கிற பெண்கள் அசற்சூத்திரர் சங்கரசாதியார் முதலானவர்களையும், அப்படிச் செய்யாமல் இக்கோயிலார் தடுக்கின்றார்களா?

௩௨. இங்கே சுவாமி உள்ளே நின்று தேருக்கு எழுந்தருளும்பொழுதும், சுவாமிக்கு அசற்சூத்திரர்களைக்கொண்டு பனிநீர் தெளிப்பிக்கிறார்கள்; இது குற்றம். சுவாமியைத் தீண்டுதற்குரிய பிராமண குருமாரே வேதமந்திரங் கொண்டு சுவாமிக்குப் பனிநீர் தெளிப்பது நீதி. பிராமண குருமார் சுவாமிக்குப் பனிநீர் தெளிக்க என்றால் உடன்ப

டாரோ! இங்கிலிசுகாரருக்குத் தெளிக்க என்றால் மனமகிழ்ந்து முகமலர்ந்து மிகவிரைந்து உடன்படுவார்போலும்!

௩௩. சுவாமி எழுந்தருளப்பண்ணுந் தேரின் உருளையிலே ஆடு வெட்டுவது வைரவருக்குப் பிரியம் என்று இக்கோயிலார் வெட்டுவிக்கின்றார்கள். தரிசனத்துக்கு வந்த பிறர் மனைவியரோடுந் தாசிகளோடுங் கோயிலினுள்ளே வியபிசாரஞ் செய்துவிட்டுச் சுவாமிக்குக் குடை பிடிப்பதும், வாகனக் கொம்பு பிடிப்பதும், தங்கள் தாசிகள் பிரசவித்த காலத்திலும் இராப் பகல் அங்கே கிடந்துவிட்டுக் கோயிலிற் புகுவதும், சுவாமிக்கு அபிஷேகத்தின் பொருட்டுப் பற்பலர் கொண்டுவரும் பால் முதலியவைகளைத் தங்களுக்குந் தாசிகளுக்கும் உபயோகப்படுத்துவதும் பிறவுமாகிய பெருங் கொடும் பாவங்களினாலே தங்களுக்குந் தங்கள் குடும்பங்களுக்கும் கேடு விளையாதாம். ஓகோ! சுவாமி எழுந்தருளப்பண்ணுந் தேரினுருளையிலே ஆடு வெட்டா தொழிதலாகிய புண்ணியத்தினாலே தங்களுக்குந் தங்கள் குடும்பத்துக்குங் கேடு விளையுமாம். எத்தனையோ ஆயிரம் பேர் ஏறிய பிரமாண்டப் புகைக்கப்பல்கள், பலி கொடாதொழியவுஞ் சமுத்திரத்திலே நெடுந்தூரம் ஓடி இடையூறு ஒரு சிறிதும் அடையாது திரும்புகின்றனவாம். திருவாரூர் திருவிடைமருதூர் முதலிய தலங்களினுள்ள மகா ரதங்கள், பலி கொடாதொழியவும், ஓடி நிலைக்கு வருகின்றனவாம். இவ்வியாழ்ப்பாணத்தில் இவ்வொரு சிறுதேரோ பலி கொடாதொழியின் ஓடி நிலைக்கு வராதாம்.

௩௪. கோயிலிலே பூசை திருவிழா முதலியவைகளில் வேதமுந் தேவார முதலிய அருட்பாவுந் தவறாமல் ஓதப்படல் வேண்டும் என்பது சாத்திர சம்மதமேயாகவும், இக்

கோயிலாரும் இங்குள்ள மற்றை எக்கோயிலாருந் தங்கள் தங்கள் கோயிலிலே அப்படிச் செய்வித்துப் பத்தியை ஒரு சிறிதும் வளர்க்காது, ஆகமத்திலே பேசப்படுந் தேவதாசியி லக்கணம் ஒரு சிறிதும் இல்லாதவர்களாய், மது மாமிச பக்ஷணம் வியபிசாரம் முதலிய தீயொழுக்கங்களை உடைய வர்களாய், நித்தியாசௌசிகளாய் உள்ள பொதுப் பெண்க ளைத் தேவதாசிகள் என நியோகித்துக், கோயிற்றிரவியங் களை அவர்களுக்கு உபயோகித்துக், காமம், கோபம், பொ றாமை, மதுபானம், கலகம், சண்டை, வழக்கு, மேகவியா தி, சந்ததிநாசம், வறுமை முதலிய தீமைகளையே வளர்க்கி ன்றார்கள்.

௩௫. இங்கே உற்சவகாலத்திலே வசந்தமண்டபத் திலே உற்சவநாயகருக்குத் தீபாராதனை முடித்து விபூதி கொடுத்தவுடனே, உற்சவங்கொண்டருளப்பண்ணாது, நெ டுநேரந் தாமதிப்பித்து, இக்கோயிலார்கள் சனக்கூட்டத்தி னுள்ளே புகுந்து பார்த்துப் பார்த்துத் தங்கள் தங்கள் பிரியர்களை அழைத்துக்கொண்டு வந்து சந்நிதானத்திலே நிறுத்தி, அவர்களுக்குக் காளாஞ்சியுபசாரஞ் செய்வித்து, அவர்கள் மனசிலே செறுவத்தையும், அங்கே நிற்கிற மற்ற வர்களை அவமதித்து அவர்கள் மனசிலே பொறாமை கோ பங் கவலை முதலியவைகளையும், சுவாமியுடைய திருவுள்ள த்திலே "நமது சந்நிதானத்தில் நம்பத்தர்களுக்கு அவமா னமும் நம்பத்தரல்லாதவர்களுக்கு உபசாரமும் நடக்கின்ற னவே" என்று தோன்றுங் கோபத்தையும் வளர்த்துவிடுகி றார்களே. சுவாமி சந்நிதானத்திலே உபசரிக்கப்படத்தக்க வர் யாவர்? உபசரிக்கப்படத்தகாதவர் யாவர்?

௩௬. இங்கே ஆடவர்கள் கூட்டத்தினுள்ளே பெண்க ளும், பெண்கள் கூட்டத்தினுள்ளே ஆடவர்களும் புகுந்து,

நெருக்குதலும், சந்நிதானங்களிலே ஆடவர்களெல்லாருக் கும் முந்திப் பெண்கள் வந்து நிற்றலும், இக்கோயிலார்கள் அப்பெண்களை விலக்கும்போது அவர்கள் மார்பிலே கை போட்டுத் தள்ளியுங் கேட்கத்தகாத மிக இழிவாகிய துர் வார்த்தைகளைப் பேசியும் விலக்குதலும், இவைகளெல்லா வற்றையும் நேரே கண்டுங் கேட்டும் அறிந்த ஆடவர்களுந் தங்கள் வீட்டுப் பெண்டிர்களை இக்கோயிலுக்கு அனுப்புத லும், பெருங்கேடு பெருங்கேடு! கோயிலிலே ஆடவர்கள் இன்ன இடத்திலே நிற்றல்வேண்டும்; பெண்கள் இன்ன இடத்திலே நிற்றல்வேண்டும்; பெண்கள் கோயிலுக்கு இன்ன பிரகாரம் இன்ன சமயத்திலே போதல் வேண்டும் என்னும் நியமம் இல்லையாயின், யாது நடக்கும்! பெண் கள் வீடுகளிலே தங்கள் சுற்றத்தார்களாகிய ஆடவர்களுந் தங்களைத் தூரத்திலுங் காணலாகாதாம்; அது நல்லதே. தாங்கள் சோறுகளுக்கு அழைக்கப்பட்டபோது போகா தொழியின் எவ்வளவு பொருட்கேடு வரினும் போகலாகா தாம்; அதுவும் நல்லதே. கோயிலிலோ, தாங்கள் ஆடவர்க ளாலே தீண்டப்பட்டும், நெருக்கப்பட்டும், மார்பிலே பிடித் துத் தள்ளப்பட்டும், துர்வார்த்தைகள் பேசக் கேட்டும், அவமானமடையலாமாம்; இதுவும் நல்லதோ! வெட்கம் வெட்கம்!!! அறிவும் ஆண்மையும் உள்ளவர்கள் இங்கே பெண்களை அனுப்புவார்களா!

௩எ. ஒருகோயிலிலே யாவராயினும் ஒருவர் ஒரு திருப்பணி தம்பொருளினாலே தாமே நேர் நின்று செய்விக் கப் புகின், அக்கோயிலார் மிக்க மகிழ்ச்சியோடும் அதற்கு உடம்பட்டு, அத்திருப்பணி முற்றியபின், அவர் பெயரை வெட்டுவித்தல்வேண்டும்; இதுவே இந்தியாவில் உள்ள கோயில்களின் வழக்கம். ஒரு திருப்பணி பலர் பொருள்

கொண்டு செய்விக்கின், பொருளுதவி செய்தவர்கள் பெய ரும், அவரவர் உதவிய பொருட்டொகையும், வரவு செலவு கணக்கும் அச்சிற்பதிப்பித்து எங்கும் வெளிப்படுத்தல்வே ண்டும்; இது இங்கிலிசுகாரர் வழக்கம். இப்படிச் செய்யின் பொருளுதவி செய்தவர்களுக்குத் திருப்தியும், மற்றவர்களு க்குப் பொருளுதவி செய்தலினிடத்தே உள்ளக் கிளர்ச்சி யும் உண்டாகும்.

௩அ. இக்கோயிலிலே செங்கற்சுவரெழுப்பி மரத்தூ ண் நாட்டிப் பனைமரம் போட்டு ஓடு வேய்ந்த நிருத்தமண்ட பத்தைப் பல வருஷத்துக்கு முன் இடித்தொழித்துவிட்டுக், கல்லினாலே கட்டுவித்தல்வேண்டும் என்று பலவிடங்களி னும் பல காலங்களினுந் தண்டிய பணம் எங்கே? சிறிது கா லஞ் சென்றபின், ஒருவர் இருபக்கத்துங் கல்லினாலே சுவ ரெழுப்புவித்தார். ஒரு கல்லிலே வெட்டுவிக்கப்பட்ட அவர் புத்திரி பெயரையும் வெளிப்படாமல் இக்கோயிலார் மறை த்துவிட்டார்களே. இவர்கள் கோயிலிலே திருப்பணிசெய்ய யாருக்கு ஊக்கமுண்டாகும்! அதன்பின், கற்றூணட்டிப் பாவுகற்போடல் வேண்டும் என்று பலதரமும் பலவூரினும் பணந் தண்டினார்களே! திருப்பணி நிறைவேறியதா? அப் பணம் எங்கே?

௩௯. ஏறக்குறைய முப்பத்தொருவருஷத்துக்கு முன் னே தேர்முட்டிக்குக் கிழக்கே ஒருவர் ஒரு திருக்குளந் தோண்டுவிக்கப் புகுந்து, அது நிறைவேறு முன் இறந்து விட்டார். அக்காலந் தொடங்கி இக்காலம் வரையும் இத் திருக்குளத் திருப்பணிக்கு என்று பலவூர்களினும் பணத் தண்டல் செய்யப்பட்டு வருகின்றதாமே. இதன் முடி வென்னை?

சo. தேர்க் கொட்டகைக்கு ஓடு போடும் பொருட்டு ஒருவர் கறுo ரூபாக் கொடுத்தாராமே! அப்பணங் கொண்டு அத்திருப்பணி நின்றவேறியதாயின், இப்பொழுது தேரை நெருப்புத் தீண்டுமோ! அதற்கு யாது பிராயச்சித்தஞ் செய்யப்பட்டது! நெருப்புத் தீண்டப்பெற்ற தேரிலே சுவாமி எழுந்தருளப்பண்ணலாமா! குறைக்கொள்ளி அடுப் பெரிக்கவுங் கூடாது என்பது பெண்களுக்குந் தெரியுமே.

சக. சில வருஷத்துக்கு முன்னே ஒருவர் பலரிடத் துந் திரிந்து பணந்தண்டி இத்தேரைத் திருத்துவித்தாரே. அதன் பின், இக்கோயிலிலே அர்த்தயாமபூசையேற்பாடு செய்து அப்பூசை நைவேத்தியத்தை வடதேசத்துக் கோயில்களிலே போலப் பரதேசிகளுக்கு உபயோகப்படுத்தல் வேண்டும் என்று பலரிடத்துந் திரிந்து பணந் தண்டி, நிலம் வாங்கிவிட்டாரே. இவர் இவ்விரண்டு தருமத்துக்கும் பொருளுதவி செய்தவர்களுடைய பெயர்களையும் அவரவர் உதவிய பொருட்டொகையையும் உலகறிய வெளிப்படுத்தினா ரா!! வெளிப்படுத்தாமைக்குக் காரணம் என்னையோ! யாவராயினும் ஒருவர் இக்கோயிலிலே தம்பொருள் கொண்டேனும் பிறர்பொருள் கொண்டேனும் ஒரு தருமத்தை நடத்தும் பொழுது, இக்கோயிலதிகாரிகள் அத்தருமந் தங்களாலே நடத்தப்படுகிறது என்று சிலசனங்களுக்குச் சொல்லி, அவர்களை வஞ்சித்து, அவர்களிடத்தே பணந்தண்டித் தங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்வது வழக்கம்; இவரும் இது பேசித் திரிகிறார். தேருக்குத் தாம் பணத்தண்டல் செய்தபோது இக்கோயிலதிகாரியாயிருந்த தம்புவுந் தேருக்கென்று சொல்லிப் பலரிடத்தும் பணந் தண்டல்செய்து தேர்ச்செலவின்பொருட்டுத் தம்மிடத்து ஒப்பியாது, எடுத் துக்கொண்டார் என்று இவரே சொல்லித் திரிகிறார். இவர்

தமது கணக்கை உலகறிய வெளிப்படுத்தியிருந்தாராயின், தம்மிடத்தே குறையுண்மையும் தம்பியிடத்தே குற்றமுண்மையும் உலகத்தாருக்கு இனிது விளங்கும்; விளங்கவே, உலகத்தார்கள் தங்கள் பொருளை வீணாக இழவார்கள்; அவர்கள் இழந்ததற்குக் காரணர் இவர். இனி, அர்த்தயாமபூசை யன்னம் இவர் சொல்லிக்கொண்டபடி பரதேசிகளுக்குக் கொடுக்கப்படுகின்றதுதானே! அது செய்யப்படவில்லை என்று இவரே பலருக்குச் சொல்கின்றாரே. இவர் கோயிலாரைக் கண்டியாதொழிந்ததென்னையோ! பணங் கொடுத்தவர்கள் காலத்திற்றானே பணந் தண்டல்செய்த இவர்காலத்திற்றானே, இவர் வாங்கிவிட்ட நிலத்தை ஏற்ற இவர் பிராணசிநேகராகிய கோயிலதிகாரிகாலத்திற்றானே, இத்தருமம் நடக்கவில்லையென்றால், பின் எவர்காலத்தில் நடக்குமோ! இவர் தாந்தருமசிந்தையுடையார் என்பது சத்தியமேயாயின், இக்கோயிலதிகாரியைக் கண்டித்துப் பரதேசிகளுக்கு அன்னங் கொடுப்பியாரா! இவர், தாந் தேவாரத்தில் விருப்புடையர் என்பதும், மாமிசபோசனம் பாவம் என்று விடுத்தார் என்பதுஞ் சத்தியமேயாயின், தேவாரநிந்தையும் ஆட்டுக்கொலையுஞ் செய்த அதிபாதக சிரோமணியாகிய இக்கோயிலதிகாரியை வெறுத்து அவர் நட்பை விடுக்காது, அவர்பக்கஞ் சார்ந்து "தேருக்கு ஆடு வெட்டினால் என்ன! எந்த ஆடு வயசு முதிர்ந்து சாகிறது" என்று பற்பலரிடத்தும் பிதற்றிக்கொண்டும், தேவாரநிந்தையையும் ஆட்டுக்கொலையையுஞ் சகிக்கமாட்டாது கண்டித்தோரை வாயில் வந்தபடியே தூஷித்துக்கொண்டுந் திரிவாரா! இவர் கோயிலதிகாரி பக்கஞ் சார்ந்தொழுகாவிடின், அவரை அடுத்துக் கோயிலுக்குக் கோயிலுக்கு என்று

பணந் தண்டி, ஆறுமாசத் தவணைக்குப் பத்துக்கிரண்டு வட்டி முன் எடுத்துக்கொண்டு, கடன் கொடுத்தும், வியாபாரத்தில் விடுத்தும், பொருள் சம்பாதிக்க இயலாதே! பரிதாபம் பரிதாபம்! யாது செய்வார்! வேறு வழியில்லையே. இவர் தாங் கோயிலுக்கு இறுப்பது இந்த வட்டி தானோ? தேர் எரிந்தபொழுது "கந்தையா, பயப்படாதே! சீக்கிரந் தேர் திருத்தித் தந்துவிடுவேன்" என்று அபயஹஸ்தங் கொடுத்த இவர் இன்னும் பணத்தண்டலுக்கு ஏன் புறப்படவில்லையோ! அர்த்தயாம பூசைக்குப் பணங்கொடுத்தவர்கள் பரதேசிச்செலவு நடவாமையைச் சுட்டித் தம்மைச் செவிபிடித்துக் கண்டிப்பார்களென்று பயந்துவிட்டாரோ! பரதேசிச் செலவு நிற்க, அர்த்தயாம பூசை கிரமப்படி நடக்கின்றதா! அர்த்தயாம பூசைக் கிரமம் திருவனந்தற் பூசைக் கிரமம் இவர் அறிவாரா? அவைகளை அறிவிக்க வல்லது பணமா? கல்வி கேள்வியா? இவர் கல்வி கேள்வியின் மணமேனும் வீசப்பெற்றிருப்பாரா? "அறிவுடையாரெல்லா முடையா ரறிவிலா—ரென்னுடையரேனு மிலர்." "புண்ணறிவின்மை வறுமையஃதுடைமை—பண்ணப்பணைத்தபெருஞ்செல்வம்." அறிவுடையவர் பணமில்லாவிடத்தும் புண்ணியந்தேடிக்கொள்வர்; பணமுடையவர் அறிவில்லாவிடத்துப் பாவமே தேடிக்கொள்வர். அர்த்தயாமபூசையன்னம் பரதேசிகளுக்குக் கொடுக்கவில்லையென்று இக்கோயிலதிகாரியை முன் குறைபேசிக்கொண்டு திரிந்த இவர், இப்பொழுது "நிலத்தின் விளைவு திருவிளக்குக்குத் தானும் போதாதே! கோயிலதிகாரி யாது செய்வார்? இன்னும் பணந் தண்டிக் கொடுத்தாற்றான் பரதேசிச்செலவு நடக்கும்" என்கிறார். ஓகோ! இவர் கருத்தென்னே! நீங்களே சற்றே ஆலோசித்தால், எல்லாங் கண்டுபிடித்துக்கொள்ள

லாம். இவர் இக்கோயிற் கருங்கற்றிருப்பணிச் சபையிலே தாமும் ஒருவராய் நுழைந்தார்; இங்கே பிரதிட்டையின் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சிலாவிக்கிரகங்கள் ஒருவருடையவைகள் எனப்படுதல் தகாது; அவைகளின் விலையைப் பொதுப்பணத்தில் எடுத்து, உடையவருக்குக் கொடுத்துவிட்டு, அதைத் திருப்பணிக்கென்று வாங்கிக்கொள்ளல்வேண்டும்" என்றொரு வார்த்தை தொடுத்தார்; அது சித்திபெறுமை கண்டபின் "அவைகள் தட்டானுடையவைகள் எனப்படலாமா! கந்தசுவாமிகோயிலுக்குப் போகும் பெண்டிர்களெதிரே இவர் எங்கள் சுவாமியன்றோவென்று தட்டாத்தியாருந் தலையெடுக்கவிடலாமா? அவ்விக்கிரகங்களைத் தள்ளிவிடல்வேண்டும்; வேறு விக்கிரகங்கள் நான் அதிக விலையிற் செய்வித்துத் தருகிறேன்" என்று தங் கருத்தை வெளியே விடுத்தார்; அதற்குஞ் சபை உடன்படாமை கண்டு, சமயம் பார்த்துக்கொண்டிருந்தார், "திருப்பணியைச் சபையார் நிறைவேற்றினால் நீ உன் அதிகாரம் இழந்துவிடுவாய்; பின் யாது செய்வாய்" என்ற சில துட்டர் வார்த்தையால் இக்கோயிலதிகாரி மருண்ட சமயம் அறிந்து, திருப்பணிக்குடன்படாவண்ணம் இக்கோயிலதிகாரியைப் பிரித்தெடுத்தார்; சபைவேண்டாம் தாமுங் கோயிலாரும் ஊரிலே புகுந்து பணந் தண்டித் திருப்பணியை முடிக்கலாமென்று ஊரிலே புறப்பட்டார்; ஊரவர்கள் தம்மை நம்பிப் பணங்கொடுக்க உடன்படாமைகண்டு, பெருமூச்செறிந்து, மனம் புழுங்கிக்கொண்டுகிடந்து, துடித்தார். "ஊரவர்கள் பணந்தராதிருந்தால் என்னை! நான் என் பணங்கொண்டு திருப்பணி நடத்தமாட்டேனா" என்று தலை மிதத்தினார். ஆகா! அப்படிச்செய்தால், நமக்கேதும் வருத்தமோ! கோயிற் பணத்தைக் கோயிலுக்கே சேர்த்துவிட்டால் நமக்

கெல்லாம் சந்தோஷந்தானே. ஓகோ! ஏன் இன்னுந் தொடங்கவில்லையோ! கைப்பட்ட பணத்தைத் திருப்பணியில் விட்டாற் கிழப்பருவத்திலே தமக்கு வீட்டிலே சோறு கிடையாதென்று எண்ணிவிட்டாரோ! நல்லது நல்லது: விட்டார் ஓட்டிவிட்டாற் கோயில் வாயிலில் ஒரு புற்கைக் கட்டி கிடையாதோ என்று துணியினுந் துணிவார். ஒரு பொழுது இனி வேறேதேனுந் தடையெடுப்பாரோ! எடுக்கினும் எடுப்பார் எடுப்பார். "நான் கோயிற் பணத்தை என்பேராலே பத்திரங்களெழுதுவித்து வாங்கிக்கொண்டு வட்டிக்குக் கொடுத்திருக்கிறேனே; என் மனைவியோ இறந்துவிட்டாளே; எனது தேட்டத்தில் அவளுக்குப் பாதியுண்டு அது தங்களுரிமை என்று என் மக்களும் மருமக்களும் வழக்குத் தொடுத்தால், நான் யாது செய்யலாமோ! திருப்பணி என்ன திருப்பணி" என்று கிடந்து மினுமினுப்பினும் மினுமினுப்பார். கெட்டி கெட்டி! கோயிற் பணம் படும் பாடு இதுவாமோ! ஒருபொழுது இப்பத்திரிகை கண்டவுடனே, "இப்படியெல்லாம் நான் ஏச்சுக்கேட்கவோ" என்று கோயிற்பணத்தைக் கோயிலுக்குச் சேர்த்துவிடினுஞ் சேர்த்துவிடுவார். ஏன் சேர்த்துவிடாரோ! எல்லாக் காரியத்திலும் இவரைக் குறை பேசிப்போடலாமோ! சில காரியத்திலே நல்லவர்தாமே.

சஉ. "இக்கோயிலதிகாரிகள், ஒருற்சவத்துக்கே இவ்வுற்சவம் உம்முடையது உம்முடையது என்று பலரிடத்தே தனித்தனியே சொல்லி, அவரெல்லாரிடத்தும் பணம் வாங்கிக்கொள்கின்றார்கள்" என்று பலர் தூற்றித் திரிகின்றார்கள். இப்படித் தூற்றுகிறவர்களுந் திரும்பத் திரும்பப் பொருள் கொடுத்து இங்கே உற்சவஞ் செய்விப்பதென்னை

யோ? கைக்கோளச் சிறுவர்களுடைய எச்சிற்பிரசாதம் புசிக்கவோ? தங்கள் தங்கள் வீடுகளிலே சித்திரான்ன வகைகள் பலகாரவகைகள் சுசியோடு செய்வித்துப் புசிக்கலாமே. அவைகளுக்கு இவைகளின் சுவையில்லையோ? ஆசாரம் இல்லையோ? அது மரியாதையாகாதோ! காளாஞ்சிப் பெரும்பேறு கிடையாதுபோலும்! உயர்ந்த சாதியார் இழிந்த சாதியார், செல்வர் வறியவர், நல்லவர் தீயவர், படித்தவர் படியாதவர், சைவர் அசைவர், பிராமணர் அப்பிராமணர், என்னும் பேதமின்றி எவ்வெவருக்குஞ் சமமாகச் செயப்படும் உபசாரத்தினாலே மயங்கி, ஒன்று செய்பவர் யாவர்! சற்றே சிந்தியுங்கள்! அன்றியும் இக் கீழ்மக்களுடைய மதிப்பு என்னை! "அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு— மிகைமக்க ளான்மதிக்கற் பால" இங்கே ஒருவர், தாஞ் செய்வித்துக்கொண்டுவந்த ஒருற்சவத்திலே, இக் கோயிலதிகாரி பிறரிடத்தும் அவருற்சவமென்று பொருள் வாங்கிக் கொண்டு, அவருக்கு ஆசீர்வாதஞ் செய்வித்ததை அறிந்து, பின் அவ்வுற்சவத்துக்குப் பொருள் கொடாது, நிறுத்திவிட்டார்; இன்னுமவர், இங்கே திருவனந்தற் பூசைக்கு நெடுங்காலம் நெற்கொடுத்து வந்து, அது கிரமமாக நடவாமையை அறிந்து துக்கித்துப், பின் நிறுத்திவிட்டார்.

சக. இக் கோயில் கட்டப்பட்டுள்ள நிலம், இக் கோயிற் கட்டடம், திருமதிற் கட்டடம், இக் கோயிலுக்குரிய விளைநிலங்கள், தோட்டங்கள், வாகனங்கள், மஞ்சம், சப்பிரம், தேர், வெள்ளி பித்தளை வெண்கலப் பாத்திரங்கள், திருவாபரணங்கள் முதலானவைகளெல்லாம் வெகு சனங்களால் உபகரிக்கப்பட்டனவன்றோ! இங்கே பண்டுதொட்டு நடந்து வரும் அபிஷேகம் பூசை நைவேத்தியந் திருவிழா முதலியவைகளெல்லாம், இத்தேசத்தார்களும், நாட்டுக்

கோட்டையார்களும், உதவும் பொருள்கொண்டே, நடந்து வருகின்றனவன்றோ! இக்கோயிலதிகாரிகள் பண்டுதொட்டு இன்றுவரையும் இங்கே காவடிக்காரர்களிடத்தில் வாங்கிய பணம் எங்கே? மாவிளக்கிடுவோர்களிடத்தில் வாங்கிய பணம் எங்கே? உண்டிவைத்து வாங்கிய பணம் எங்கே? திருப்பணிக்குத் திருப்பணிக்கென்று ஊர்தோறும் பலதரந் திரிந்து வாங்கிய பணம் எங்கே? ஒவ்வொரு உற்சவத்திலும் பற்பலரிடத்தும் அவரவருற்சவம் என்று வஞ்சித்து வாங்கிய பணத்திலே உற்சவச் செலவு போக மிச்சப் பணம் எங்கே? உருத்திராபிஷேகங்களுக்கென்று வாங்கிய பணத்திலே உருத்திராபிஷேகச் செலவு போக மிச்சப் பணம் எங்கே? இப் பணத்திலே இக்கோயிலதிகாரிகள் தாங்களாக இக்கோயிலுக்கு யாதாயினுந் திருப்பணி செய்திருக்கின்றார்களா? யாதாயினுந் திருவாபரணஞ் செய்து வைத்திருக்கின்றார்களா? யாதாயினும் நிலம் வாங்கி விட்டிருக்கின்றார்களா? இக்கோயிற் பூசகர்களுக்குச் சம்பளம் உண்டா? பரிசாரகர்களுக்குச் சம்பளம் உண்டா? இனிப் பூசகர்களையும் பரிசாரகர்களையும், அடிக்கடி தள்ளியுஞ் சேர்த்தும் வாங்குங் கைக்கூலிப் பணம் எங்கே? கொடியேற்றக் குத்தகைப் பணம் எங்கே? வடதேசத்துக் கோயில்களிலே பூசகர்களுக்கு நாடோறுஞ் சாதங் கிடைக்கின்றது; அர்ச்சனைப் பணம் முழுவதும் அவர்களுக்கே; மாசந்தோறும் நெற்சம்பளங் கிடைக்கின்றது; அம்மட்டோ, அவர்களுக்குச் சர்வமானிய நிலங்களும் விடப்பட்டிருக்கின்றன; அவர்களுக்குச் செத்தவீட்டுச் செலவு முழுதுங் கோயிற் செலவே; உபநயனங் கல்யாண முதலியவைகளுக்கும் இயன்ற பொருள் உபகரிக்கப்படுகின்றது. இந் நல்லூர்க் கோயிலிலோ, பூசகர்களுக்குச் சனங்களாலே கிடைக்கும் அர்ச்ச

லைப் பணம் ஒன்றேயன்றி வேறில்லையே; அவ்வர்ச்சனைப் பணத்தையும் இப்பொழுதைக் கோயிலதிகாரி தாம் அபகரிக்கத் தலைப்பட்டுக்கொண்டாரே. இவர் பூசகர்கள் செய்யுங் குற்றங்களைக் கண்டித்துத் தண்டிப்பது எப்படி? இப்படித்தானோ! பலவழியாலும் கோயிற் பணத்தொகை முழுதும் இக் கோயிலதிகாரிக்கே சம்பளமாய்விடுகின்றது. இவர் இப் பணத் தொகைதானும் போதாது என்று ஊரெங்கும் கடன்பட்டுக்கொண்டலைகின்றாரே! இக் கோயிற் பணம் எவைகளுக்கு உபயோகப்படுகின்றது? நீங்கள் அறிவீர்கள். இன்னும் இவர் கோயிலுக்கென்று ஊரிலே பனைமரங்கள் தறிப்பித்துத் தம்முடைய தாசிவீட்டு வேலைக்குச் சேர்ப்பிக்கிறாராம்.

௪௪. இக் கோயில் யாருடையது? இக் கோயிலதிகாரியுடையதா? சனங்களுடையதா? மேற்காட்டிய வகையினாலே சனங்களுடையது என்பது எல்லாருக்குந் தெரியுமே. வேறு சீவனோபாயம் ஒன்றுமின்றி இக் கோயிலதிகாரியாகிச் சனங்கள் கைப்பொருள் கொண்டு சீவிக்கிறவர் கடவுளுக்கு மாத்திரமோ, அச் சனங்களுக்கும் வேலைக்காரரன்றோ! இவ் வேலைக்காரர் இக் கோயில் வேலைகளைக் கடவுள் அருளிய சாத்திரத்துக்குஞ் சனங்களுடைய திருப்திக்கும் ஏற்ப நடத்தித், தம்முடைய வேலைக்குத் தக்க சம்பளம் பெற்றுக்கொண்டு, வரவு செலவு இருப்புக் கணக்கு அச்சனங்களுக்கு ஒப்பித்தல் வேண்டுமே. அப்படிச் செய்கின்றாரா? இவர் சாத்திரமென்பது ஒரு சிறிதாயினுங் கற்றறிந்து, இக் கோயிலை நடத்துகிறாரா? அல்லது கல்வியறிவொழுக்கமுடையவர் என்று சனங்களாலே நன்கு மதிக்கப்படுவோர் யாவரிடத்தாயினுங் கேட்டறிந்து நடத்துகின்றாரா? யாவ

ருடைய கூட்டுறவு இவருக்குள்ளது? கோயிலை நடத்துங் கிராமங்களை இவருக்கு உபதேசிக்க வல்லவர் யாவர்? இக் கூட்டுறவினர்தாமா? நீங்களே ஆராய்ந்து அறிந்துகொள்ளுங்கள்.

௪௫. ஒருவர் தம்பொருள் கொண்டு சென்னபட்டணத்தினின்றும் வருவித்த சிலாவிக்கிரகங்களை இக் கோயிலதிகாரி இங்கே பிரதிட்டை செய்விக்க உடன்பட்டு, ஆங்கிரச வருஷ மகோற்சவ காலத்தில் இக் கோயிலினுள்ளே ஏற்றுக்கொண்டதும், இவரே கடிதங்கள் அச்சிடுவித்தனுப்பி அவ்வருஷந் தைமாசம் ஏழாந் தேதி யிராத்திரி இக் கோயிற் சந்நிதானத்திலே வெகுசனங்களைக் கூட்டி, இக் கோயிற் கிரியைகள் ஆகம விரோதம் என்பதையும், இக் கோயிலைப் பிரித்து ஆகம விதிப்படி கட்டுவித்து விக்கிரகப் பிரதிட்டை செய்வித்தல் வேண்டும் என்பதையும், நம்மைக் கொண்டு சனங்களுக்கு விரித்துப் பிரசங்கிப்பித்ததும், அதன்பின் சனங்கள் கையொப்பம் வைத்ததும், இத் திருப்பணியை நடத்தும்பொருட்டு ஒரு சபை ஏற்படுத்தப்பட்டதும், கையொப்பக்காரர்களுள்ளே சிலர் உதவிய பொருள் கொண்டு திரிசிராப்பள்ளிக்கு மேற்கே உள்ள கருவூரினின்றும் உயர்வாகிய கருங்கற்கள் வருவிக்கப்பட்டதும், சேர்ந்த பணங் கருங்கற்களுக்குப் போதாமை கண்டு இச் சபையாருள் ஒருவர் வட்டிக்குப் பணம் எடுத்துக் கொடுத்ததும், உங்களுக்குத் தெரியும். சென்ற வருஷ மகோற்சவத்திலே சனங்களுக்குப் பத்தியை விளைவிக்கும் பொருட்டுச் சில புண்ணியவான்கள் திருவாவடுதுறையாதீனத்தினின்றுஞ் சில ஓதுவார்களை வருவித்து, இக் கோயிற் றெற்கு வீதி மடத்திலே மாகேசுர பூசை நடாத்தித், தேவாரத் திருக்கூட்டத்தினால் உற்சவத்தைச் சிறப்பித்துக்கொண்டு

வரும்பொழுது, அது பொதுப்பெண்களுடைய நடன சங்கீதங்களுக்கு இடையூறுதல் கண்டு, இக் கோயிலார்கள் தேவாரபாராயணத்துக்கு இடையூறு விளைத்ததும், நாம் போதித்தபடி ஸ்ரீமுக வருஷ ரதோற்சவத்திலே நிறுத்தப்பட்ட ஆட்டுக் கொலை மீட்டுந் தொடங்கினதும், அம் மகா பாதகங் கண்டு இடபவாகனோற்சவத்திலும் ரதோற்சவத்திலுந் தீர்த்தோற்சவத்திலுந் தேவாரபாராயணம் ஒழிந்ததும், உங்களுக்குத் தெரியும். தேவாரத் திருக்கூட்ட மாகேசுரபூசை செயப்பெற்ற மடத்திலே இக் கோயிலாரிற் சிலர், அம் மடங் கட்டுவித்த புண்ணியவான்களுடைய குடும்பங்களுக்கு விரோதமாகிய துர்வார்த்தைகளைச் சுவரிலே எழுதுவித்ததும், அம் மடத் தறைகளுள் ஒன்றைப் பூட்டு முறித்துத் திறந்து உள்ளே மலங் கழித்தும் சவரஞ் செய்வித்தும் அசுத்திப்படுத்தினதும், உங்களுக்குத் தெரியும். முன்பு கோயில் பிரித்துக் கட்டுவிக்கவும் விக்கிரகப் பிரதிட்டை செய்விக்கவும் உடன்பட்ட இக் கோயிலதிகாரி பின்பு தாம் இவைகளுக்கு உடன்படுவதில்லையென்று மறுத்து நிற்பதும், முன் பணங் கொடாத கையொப்பக் காரர்கள் இதனையறிந்து பணங் கொடுக்க உடன்படாததும், முன் பணங்கொடுத்த கையொப்பக்காரர்களுள்ளே சிலர் திருப்பணியில்லையாயில் தங்கள் பணத்தைத் தங்களுக்குத் தந்துவிடல் வேண்டும் என்று சபையாரை நெருக்குவதும், சபையார் எழுதுங் கடிதத்துக்கு ஒரு விடையுங் கொடாது இக்கோயிலதிகாரி இறுமாந்து திரிவதும், உங்களுக்குத் தெரியும். இவையெல்லாம் இப்படியிருக்க, இக் கோயிலதிகாரியைச் சார்ந்தவர் சிலர் தூரங்களிலே போய்த் திருப்பணி நடக்கும் நடக்கும் என்று சனங்களை வஞ்சித்து நெல்லும் பணமுந் தண்டுதலும், உங்களுக்குத் தெரியும். மிக

அரிதின் வருவிக்கப்பட்ட கருங்கற்கள் வெய்யிலிற் கிடந்து பழுதுபடுகின்றன. பண்டு தொட்டுப் பரம்பரையே இக் கோயிலுக்குப் பற்பல உதவிகளைச் செய்த பிரபுக்களுடைய உறுதிமொழிகளும் இக் கோயிலதிகாரி செவிக்கேறவில்லை. இக் கருங்கற்களெல்லாம் பழுதுபட்ட பின்புதான் பொருளுதவிக்காரர்கள் இதைக் குறித்துச் சிந்திப்பார்கள் போலும்!

௪௬. சைவசமயிகளே! நீங்கள் சுப்பிரமணியக் கடவுளினிடத்தும் ஆகமத்தினிடத்துங் கந்தபுராணத்தினிடத்துஞ் சிரத்தையுடையீர்கள் என்பது சத்தியமேயாயின், இக் கோயிலதிகாரியைக் கண்டித்துத் திருத்தி இக்கோயிலை ஆகமப்பிரகாரம் நடத்தும்படி செய்யக் கடவீர்கள். அது கூடாதாயின், நீங்களெல்லாந் திரண்டு மகா சபையாயாகக் கூடிக் கலந்து ஆலோசித்து, இக் கோயிலதிகாரிமீது கோட்டிலே வழக்குத் தொடுத்துத் தீர்ப்புப் பெற்று இக் கோயிலதிகாரியை நீக்கி, உங்களுள்ளே பெரும்பான்மையோர்களுடைய சம்மதப்படி ஒரு சபை ஏற்படுத்தி, இக் கோயிலை அச் சபையின் பரிபாலனத்துக்கு உட்படுத்தக் கடவீர்கள். அதுவுங் கூடாதாயின், நீங்கள் வருந்திச் சம்பாதித்த பொருளை இங்கே வீணாகச் செலவழியாது, எந்தக் கோயில் ஆகமவிதிப்படி நடக்கின்றதோ அந்தக் கோயிலிலே செலவழித்து, அதையே உங்கள் வழிபாட்டுக்கு இடமாகக் கொள்ளக்கடவீர்கள்.

௪௭. "நீர் ஏன் ஒருவரைப் பெயர் சுட்டி இப்படியெல்லாங் கண்டிக்கிறீர்? இப் பத்திரிகையைக் கண்டு யாவர் திருந்தப்போகிறார்! திருந்தாவிடத்து உமக்குக் குறைவு தானே. ஊர்ப்பகையும் எச்சுந்தான் உமக்குப் பயன். வேறு

பயன் என்னை" என்று சிலர் பேசுவார்கள். இக் கோயில் சைவசமயிகள் எனப்படுவோர்கள் எல்லாருக்கும் உரிய பொதுத்தானம். இதை இக்கோயிலதிகாரி உங்களுடைய பேடிமையினாலே தமக்கே உரிய சிறப்புத்தானம் எனத் துணிந்து தமக்கு வர்த்தகசாலையாக்கிக்கொண்டார். இக் கோயில் தன்னிடத்தே வருஞ் சனங்களெல்லாருக்குங் காமங் கோப முதலிய அசுத்தங்களெல்லாவற்றையும் போக்கித் தேவபத்தி முதலிய சுத்தங்களை வளர்க்கவேண்டிய பரிசுத்த ஸ்தானம்; இதை இக் கோயிலதிகாரி உலகத்தாரெல்லாரையுங் கெடுத்தற்குரிய அசுத்த ஸ்தானமாகிய காமசாலையும் போர்க்களமுமாக்கிவிட்டார். இக் கோயிலுக்குப் போகிறவர்களுள்ளே பெரும்பான்மையோர்கள், காளாஞ்சியுபசாரம் பெற விரும்பியும், வாணவேடிக்கை பார்க்க விரும்பியும், பொதுப் பெண்களையும் அழகினையுடைய பிறர் மனைவியரையும் பார்த்து மோகிக்க விரும்பியும், சிநேகர்களோடு கூடி, வெற்றிலைபாக்குத் தின்று புகையிலைச் சுருட்டுப் பிடித்துக் கஞ்சாலேகியம் உட்கொண்டு தூற்றிடப வார்த்தைகள் பேசிக் களிக்க விரும்பியும், தங்கள் தங்கள் கற்பைப் பாதுகாக்க விரும்பாது ஆடவர்கள் கூட்டத்தை நெருக்கி உள்ளே நுழைந்து தங்கள் தங்கள் ஆடைகளும் ஆபரணங்களைக் காட்ட விரும்பியும் போகிறார்கள். ஆடவர்களுள்ளும் பெண்களுள்ளுஞ் சிலர், புண்ணியத்தை விரும்பிக் கோயிலுக்குப் போனவிடத்தும், குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்பவர்கள் போலப் பாவங்களையே சம்பாதித்துக்கொண்டு, திரும்புகிறார்கள். ஐயையோ! பரஸ்திரீகளைப் பரபுருஷர்களை மனசினால் இச்சித்தலும் வியபிசாரம் என்னும் உண்மையைச் சிந்திக்கிறார்களில்லை. இக்கோயிலதிகாரியையும் இக் கோயிலையுங் கண்டு, மற்றக் கோயில

திகாரிகளும் தங்கள் தங்கள் கோயிலை இப்படியே கெடுத்துவிடுகிறார்கள். பாதிரிமார்கள் தங்கள் நற்கொடை என்னும் பத்திரிகையிலே "கந்தசுவாமிகோயிற்றிருவிழா" எனப் பெயர்கொண்ட ஏழாஞ் சங்கியையிலே "சண்டை சலஞ் சாதித்தல் தாசி சதுர் சங்கீதம் பரஸ்திரிகூட்டம் வாத்திய முழக்கம் வாணவிளையாட்டு முதலிய வேடிக்கைகள் யாவுந் திருவிழாவில் உண்டு. அவை கந்தருக்குங் காமுகரும் வாய்ப்பு" என்று பேசுகிறார்கள். சிவதருமோத்தரம் என்னும் ஆகமத்திலே பிறர் மனைவியரை இச்சித்தல் வேசியரை இச்சித்தல் முதலிய பாவங்களெல்லாவற்றையும் எடுத்துக் காட்டி அவ்வவைகளுக்கு நரகத்துன்பம் விதித்தருளினவர் கந்தசுவாமியேயாகவும், அவர் உங்கள் தீச் சார்பினாலே அநியாயமாக இகழப்படுகிறார். நாம் இவைகளெல்லாவற்றையும் அறிந்து, இக்கோயிலதிகாரிக்கு நல்ல புத்திகள் சொல்லி, இக்கோயிலைத்திருத்துவிக்க நெடுங்காலம் பலவழியாலும் முயன்றும், சித்திபெறாமை கண்டு, பொது நன்மையை விரும்பி இப் பத்திரிகையை வெளிப்படுத்துகின்றோம். நங்கடனை நாம் நிறைவேற்றுகின்றோம். பணிக்கும் ஏச்சுக்கும் பயந்து இது செய்யாதொழிவேமாயின், கடவுளுடைய கோபாக்கினிக்குப் பாத்திரராவேம். தக்கனும் அவன் யாகசாலையில் இருந்தவர்களுந் ததீசி முனிவருடைய உறுதிமொழிப்படி நடவாமையினால், அம்முனிவருக்குக் குறைவு வந்தால், நமக்குங் குறைவு வரட்டும். ததீசி முனிவர் தங் கடனை நிறைவேற்றினார்; கேட்டவர்கள் தங்கள் கடனை நிறைவேற்றாமையினாலே, தண்டிக்கப்பட்டார்கள். இது கந்தபுராணத்தினால் உங்களுக்குத் தெரியுமே. இராசாவுடைய கட்டளையைக் குடிகளுக்குப் பறையறைந்து தெரிவித்த பறையன், அக் கட்டளைக்கு அக் குடி

கள் அமையாதவிடத்தும் குறைவடையாது பயனேயடைத லேயும், அமையாத குடிகள் தண்டிக்கப்படுதலேயும், நீங்கள் நேரே காண்கிறீர்களே!

சஅ. நாம் இப்பத்திரிகை எழுதியது குற்றம் என்று சிலர் பேசுகின்றார்கள். அவர்கள் இப்பத்திரிகையிலே கண்டிக்கப்பட்ட செய்கைகள் சிவாகம விரோதமல்ல என்றாயினும், இச்செய்கைகள் இக் கோயிலினிடத்தும், இக்கோயிலார்களிடத்தும் இல்லையென்றாயினும், முன்னர்ச் சாதித்து விட்டன்றோ, பின்னர் நம்மீது குற்றமேற்றல் வேண்டும். அப்படிச் சாதிக்கவல்லவர் உண்டாயின், வெளியே புறப்படட்டும். நாம் இப்பத்திரிகையை இக்கோயிலதிகாரிமேற் கோபத்தினால் எழுதினோம், ஆதலால் இது குற்றம் என்று சிலர் பேசுகின்றார்கள். நாம் யாது சொல்கின்றோம்! கோபத்தினாற்றான் எழுதினோம் என்கின்றோம். நல்லது: அவர்கள் நம்மீது குற்றமேற்றுவது யாதினாலோ! நம்மேற் கோபத்தினாற்றானே. ஆகவே, நம்போலஅவர்களுங் கோபமுடையவர்கள் தாமே. கோபமெனப்பட்டதெதுவுந் தீமை பயக்குமோ!நன்மை பயக்குங் கோபமும் உண்டன்றோ! நம்முடைய கோபம் யாது பற்றிய கோபம்? ஆராயட்டும். இக் கோயிலதிகாரி நமக்குக் கோயிற் பிரசாதம் அனுப்ப வில்லை என்ற கோபமோ? நமது கலியாண வீட்டுக்குப் பெரிய மேளஞ் சின்ன மேளம் அனுப்பவில்லை என்ற கோபமோ? நாங் கேட்டது யாதாயினுந் தரவில்லை என்ற கோபமோ? நமக்கு இக்கோயிலிலே உபசாரஞ் செய்யவில்லை என்ற கோபமோ? இக் கோயில் சிவாகம விரோதமாக நடத்தப்படுகின்றது என்ற கோபமோ? முன் நின்ற வினாக்களுக்கெல்லாம் "இல்லை" என்ற விடையும், இறுதியில் நின்ற வினாவுக்கு மாத்திரம் "ஆம்" என்ற விடையுமே சிறுவருஞ் சொல்லுவர். ஆகவே,

நம்முடைய கோபம் புண்ணியமோ பாவமோ! இனி நம்மைக் குறைகூறுவோர்களுடைய கோபம் யாது பற்றியகோபம்? ஆராய்வோம். நம் பத்திரிகையிலே பேசப்பட்டவைகள் எல்லாமேனும் அவைகளுள்ளே சிலவேனும் ஒன்றேனும் பொய்யென்ற கோபமோ? இப்பத்திரிகையிலே கண்டிக்கப்பட்ட தீயொழுக்கங்கள் தங்களிடத்தும் உள்ளன என்பது பற்றியும், இக்கோயிலதிகாரியிடத்தே தங்களுக்கு உள்ள நட்புப் பற்றியும் எழுந்த கோபமோ? முன்னை வினவுக்கு "இல்லை" என்ற விடையும் பின்னை வினவுக்கு "ஆம், ஆம்" என்ற விடையுஞ் சிறுவர் வாயினுந் தடையொரு சிறிதுமின்றித் தோன்றும். ஆகவே, அவர்களுடைய கோபம் புண்ணியமோ பாவமோ? வாய் திறக்கட்டும். ஈதறியாதார் மற்றேதறிவார்!!! "இக் கோயில் சிவாகம விரோதம் என்பது இவர் முன் அறியாரா? அறிந்திருந்தால் இவர் இக்கோயிலுக்கு முன் போனதென்னை? போய்விட்டு இப்பொழுது கண்டிப்பதென்னை" என்று சிலர் புறங்கூறுகின்றார்கள். நாம் இக்கோயிலுக்கு இக்கோயிலார்களால் அழைக்கப்படாதே போனோமா? அழைக்கப்பட்டே போனோமா? அழைக்கப்படாதே போனோம் எனின், நமது சிறு பிராயந் தொடங்கி எக்காலமும் போனோமா? இடையிலே சிலகாலம் போகாதிருந்து போனோமா? இடையிலே எத்தனை வருஷம் போகாதிருந்தோம்? இருபத்தைந்து வருஷகாலம் போகாதிருந்தமை யாது பற்றியோ? இவர்கள் நம்மைக் கோயிலுள்ளே புகவொட்டார்கள் என்றோ? கந்தசுவாமி கடவுளல்லர் என்றோ? பாதிரிமார்களுக்குப் பயந்தோ? நாம் போகாத காரணம் உலகறியப் பிரசங்கிக்கவில்லையோ? அழைக்கப்பட்டே போனோம் எனின், எதன் பொருட்டு அழைக்கப்பட்டோம்? தங்கள் சொல்வழியே நம்மை ஒழுகுவிக்கவோ? நஞ்சொல்வழியே தாங்கள் ஒழுகவோ? நாம்

இங்கே போனது இக்கோயில் சிவாகம சம்மதம் என்று நம்பயன் குறித்து வழிபடல் கருதியோ? சிவாகமவிரோதம் என்று பிறர் பயன் குறித்துத் திருத்துதல் கருதியோ? இக்கோயிலைத் திருத்தும் பொருட்டு வேண்டிக்கொள்ளப் பட்ட நாம் இங்கே நடப்பவைகளைப் போய் நேரே பாராது திருத்துவது எப்படியோ! இக்கோயிற்குற்றங்களெல்லாம் இங்கே நாம் போகுமுன்பே அறியப்பட்டனவோ? இங்கே போக்கு வரவு செய்கிறபொழுது கண்டறியப்பட்டன சில இல்லையோ? போகாது விடுத்தபின்பு கேட்டறியப்பட்டன சில இல்லையோ? நாம் இக்கோயிற் செய்கைகளை இப்பொழுது இங்கே போகாது விடுத்த பின்புதான் கண்டிக்கிறேமோ? போகத் தொடங்கு முன்பு கண்டிக்கவில்லையோ? போய் வருகிற காலத்திலே கண்டிக்கவில்லையோ? அக்காலத்திலே வெளியிலே மாத்திரந்தான் கண்டித்தோமோ? இக் கோயிலின் உள்ளே கண்டிக்கவில்லையோ? இவர்கள் புறத்தே மாத்திரந்தான் கண்டித்தோமோ? இவர்களெதிரே கண்டிக்கவில்லையோ? நமது கண்டனம் நீதி என்று உடன்பட்டார்களோ? உடன்படவில்லையோ? உடன்பட்டார்கள் எனின், திருத்தமடையாததென்னையோ? உடன்படவில்லையாயின், சிலாவிக்கிரகங்கள் ஏற்றல் ஆட்டுக்கொலை விலக்கல் கோயில் பிரித்துக்கட்டச் சம்மதித்தல் முதலியவை ஏன் செய்தார்களோ? பின் ஏன் மறுத்தார்களோ? நங் கண்டனம் அநீதி என்று பின்பு தேறினார்களோ? தேறினார்கள் எனின், அதற்கு ஆகமப்பிரமாணங் காட்டினார்களோ? இனிக் காட்டுவார்களோ? இவைகளுக்கெல்லாம் விடை நன்முக அறிந்திருந்தும், பொறாமை கூடாநட்புப் பொய்யுபசார விருப்பு முதலிய பல காரணங்களினாலே மனச்சான்றுக்கு விரோதமாகப் புறம்பழித்துப் பேசுங் கீழ்மக்க

ளோடு பேச்சேதிருக்கின்றது! அம்மூடர்கள் இவ்வியாழ்ப் பாணமாகிய மரத்தைப் பிடித்த புல்லுருவிகள்; அப்புல்லு ருவிகள் ஒழியும் வரையும் இம்மரந் திருந்தாது திருந் தாது!!!

௪௯. எந்தப்பொருளும் எல்லாருக்கும் நல்லதுமன்று; எல்லாருக்கும் பொல்லாததுமன்று; இப்பத்திரிகையும் அப் படியே. சிவசாத்திரத்தில் விசுவாசம் இல்லாதவர், சைவா சாரம் இல்லாதவர், ஒரு சமயநடையுஞ் சாராதவர், கள் ளுச் சாரங் குடிப்பவர், இறைச்சி தின்பவர், கஞ்சாவெறி யர், பிறர்மனைவியரைக் கற்பழிப்பவர், தாசிவீடு தூங்கு வோர், தேவத்திரவியங் கவர்பவர், பிராமணத் திரவியங்க ளைக் கவர்ந்து பிராமணப் பெண்களைக் கற்பழிப்பவர், கைக் கூலி வாங்குங் கோயிலதிகாரிகள், கல்வியறிவொழுக்கம் ஒரு சிறிதும் இல்லாது கைக்கூலி கொடுத்துக் குருத்துவஞ் செய்பவர், திருவிழாக் காலங்களிலே தெருத்திண்ணைகளில் இருந்துகொண்டுஞ் சந்திகளில் நின்றுகொண்டும் பிறர்மனை வியரை இச்சித்துப் பார்த்துத் துர்வார்த்தைகள் பேசி வாய் புலம்பித் திரிபவர், பொய்யுபசாரத்தில் விருப்பமு டைய போலிப்பிரபுக்கள், தத்தம் பகையைக் கோயிலிலே சாதிக்குஞ் சண்டாளர், கோயிலதிகாரிகளுக்குப் பொய் மரி யாதை காட்டிப் பலகாரம் வாங்கித் தின்பவர் முதலிய பாவிகளுக்கு இப்பத்திரிகை மிகப்பொல்லாது பொல்லாது தானே. இப்பத்திரிகை புறந் தூற்றப்படும்போது, யாவரும் அவர்களைக் கண்டு பிடித்துக்கொண்டு, அவரவர் செய்கை களை ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம்.

௫0. சனங்களுடைய இறையைப் பெற்றுக்கொண்டு அவர்களைப் பாதுகாக்கும் இயல்புடைய துரைத்தனத்தாரி

டத்தே வேதனம்பெற்று அவருக்குஞ் சனங்களுக்கும் உப யோகப்படும் வேலைகளை நடாத்துதலின்றியே ஆ!சிற் கால முழுதும் போக்குவது துரைத்தன உத்தியோகத்தர்கள் கடன். இவ்வியாழ்ப்பாணக் கச்சேரி உத்தியோகத்தர்க ளிற் சிலர், இக்காலத்து ஏசண்டு காலத்திலே அதனை மற ந்து, அங்கே தங்காலத்திலுந் தங்கீழுத்தியோகத்தர் கால த்திலும், அங்கே தங்கள் தங்கள் கருமமுடிக்க வருஞ் சனங்கள் காலத்திலுஞ் சிறிது சிறிது பாகம் பரதூஷண வார்த்தைகளைத் தாங்கள் பேசியும் அவர்களைக் கேட்பித் துங் கொள்ளை கொள்வது வழக்கம். இனி, இப்பத்திரிகை வெளிப்பட்டபின், நம்மேலே தொடுக்கப்படுந் தூஷணைக் கூட்டங்களினாலே அங்கே அவர்கள் காலம் பெரிது கொள் ளை கொள்ளப்படும் போலும்! அதனாலே நமக்கு விளையுங் கேடு ஒரு சிறிதும் இல்லை; துரைத்தனத்தாருக்குஞ் சனங்க ளுக்கும் விளையுங் கேடு பெரிது பெரிது!!! அதற்கு நாம் யாது செய்வோம்; அது நங்குற்றமன்று; கச்சேரித் தலைவன் குற்றம்!

இங்ஙனம்,

உங்கள் நல்வாழ்வை யதார்த்தமாகவே
விரும்பி எதிர்பார்க்கிற,
**சைவப்பிரசாரகர்.**

வண்ணார்பண்ணை }
யுவஹூ ஆடிமீ. }

# உ. நல்லூர்க் கந்தசுவாமிகோயில்.

## இரண்டாம் பத்திரிகை.

நாம் உலகத்தாருக்குப் பயன்படும்பொருட்டு எழுதி அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்திய நல்லூர்க் கந்தசுவாமிகோயில் என்னும் பத்திரிகையை வாசித்தவர்களுள்ளே, தக்கவைகள் தகாதவைகள் பகுத்தறியும் அறிவும் மனச்சான்றுக்கு ஒரு சிறிதும் விரோதமறப் பேசும் பேச்சும் உடைய மேன்மக்களொழிய, மற்றவர்களுள்ளே பலர் உண்மை அறிந்தும் பொறாமை துரபிமான முதலிய காரணங்களினாலும், வேறு பலர் இன்னும் உண்மை அறியமாட்டாமையினாலும், அப்பத்திரிகையை வாசியாதவர்கள் பலர் இவர்கள் கற்பித்த பொய்வார்த்தைகளால் விளைந்த மயக்கத்தினாலும், அநியாயமாகவே நம்மைத் தூஷித்துக்கொண்டு திரிகிறார்கள். எல்லாரும் அப்பத்திரிகையோடு இவ்விரண்டாம் பத்திரிகையையுஞ் சித்தசமாதானத்தோடு பலமுறை வாசித்து, உண்மை தெளிந்து, அடங்கியொழுகக் கடவர்கள்.

---

நல்லூர்க் கந்தசுவாமிகோயிலார்களே!

க. உங்கள்கோயிற் கட்டடமும், அங்கே விக்கினேசுரப் பிரதிட்டை இல்லாமையும், மூலமூர்த்தி உற்சவமூர்த்திகள் சுப்பிரமணிய விக்கிரகங்களாகாது வேலாயுதங்களாய் இருத்தலும், வேலாயுதங்களுக்குத் தேவிமாராகப் பக்கங்களிலே தெய்வயானையம்மை வள்ளியம்மை விக்கிரகங்கள் வைக்கப்படுதலும், தீக்ஷை பெறாத பிராமணர்களே பூசை செய்தலும், இறவுஞ் சிவாகம விரோதம் என்றும், இக்குற்றங்களைத் திருத்தல் வேண்டும் என்றும், நாம் உங்கள் கோயிலதிகாரியாய் இருந்த தம்பு என்னும் வழக்கப்பெயரையுடைய இரகுநாதமாப்பாணருக்குப் பலமுறை அறிவித்த

தும், கஅஎஎ-ம் ௵க்குச் சமமாகிய பிலவங்க௵ ஆடி மீ" விளைவேலி வேதக்குட்டிக் குருக்கள் உங்கள் கோயிற் றிரு விழா நடத்த வந்திருந்தபோது அவர்களெதிரே அவ்விரகு நாதமாப்பாணருக்குப் போதித்ததும், நீங்கள் அறிந்ததில் லையா? அப்பொழுது அறிந்திலாத பிறந்திலாத உங்கள் பிள்ளைகள் உங்கள்வாய்க் கேட்டறிந்ததில்லையா?

உ. நாம், நமது போதனைக்குத் தம்பு உடன்படாமை கண்டபின், பொதுநன்மையை விரும்பி, அப் பிலவங்க௵ தைமீ" வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலிலே வெகுசனக் கூட்டத்திலே உங்கள் கோயிற் குற்றங்களை எடுத்துச் சாத் திரப் பிரமாணங் காட்டிக் கண்டித்துப் பிரசங்கித்ததும், நீங்கள் அப்பிரசங்கஞ் சுப்பிரமணிய தூஷணம் என்று நம் மீது அநியாயமாகவே குற்றம் ஏற்றிக்கொண்டும், நாம் விரைந்து கெடுவேம் என்று அங்கங்கே சாபம் இட்டுக் கொண்டுந் திரிந்ததும், உங்கள் கோயிலிலே கீலக௵ ஆடிமீ" நடந்த திருவிழாவிலே நம்முடைய பிரசங்கத்தைக் கண்டித்து ஒரு பிரசங்கஞ் செய்யப்படும் என்று நீங்கள் விளம்பரம் விடுத்ததும், பிரசங்கஞ் செய்ய உடன்பட்ட உங்கள் கோயிற் பிராமண பண்டிதர்கள் பின் பயந்து மறுத் துவிட, அவர்களுக்கும் உங்களுக்குஞ் சனங்களால் அவ மானம் விளைந்ததும், நீங்கள் நினைத்திருக்கிறீர்களா மறந் துவிட்டீர்களா?

ங. நம்முடைய உருத்திராக்ஷப் பிரசங்கத்தைக் கேட் டவர்கள் சிலர் தலையிலுங் கழுத்திலும் உருத்திராக்ஷமாலை தரித்துக்கொண்டு உங்கள் கோயிற் றிருவிழாவில் வந்து நின்றபொழுது, சில பிள்ளைகளைத் தலையிலுங் கழுத்திலும் பனங்காய்ப் பணிகாரமாலை தரித்துக்கொண்டு அவர்கள்

கூட்டத்தினுள்ளே நிற்கும்படி செய்த உங்களுள்ளும் உங்கள் பிராமணர்களுள்ளுஞ் சிலர் இப்பொழுது உருத்திராக்ஷந் தரிக்கவில்லையா?

ச. தீக்ஷை பெற்ற பிராமணர்களே உயர்ந்தவர்கள் என்ற நமது பிரசங்கத்தைத் தூஷித்த உங்கள் பிராமணர்களுள்ளும் மற்றப் பிராமணர்களுள்ளும் பலர் பின்பு தீக்ஷை பெறவில்லையா? முன்பு அவர்களோடு கூடி நம்மைத் தூஷித்துக்கொண்டு திரிந்த நீங்களே, பின்பு உங்கள் பிராமணர்களுள்ளே தீக்ஷை பெருதவர்களைத் தீக்ஷை பெறும்படி ஏவவில்லையா?

ரு. உங்கள் கோயிலிலே விக்கினேசுரப் பிரதிட்டை இல்லாமை குற்றம் உற்சவவிக்கிரகப் பிரதிட்டை இல்லாமை குற்றம் என்ற நமது பிரசங்கத்தைச் சுப்பிரமணிய தூஷணம் என்று இகழ்ந்து நமக்குச் சாபம் இட்டுக்கொண்டு திரிந்த நீங்களே, பின்பு விக்கினேசுரப் பிரதிட்டையும் ஆறுமுகசுவாமியுற்சவ விக்கிரகப்பிரதிட்டையுஞ் செய்வித்துக்கொள்ளவில்லையா?

சு. உங்கள் கோயில் சிவாகம விரோதம் என்பதையும் அதனைத் திருத்துதற்கு நீங்கள் உடன்படாமையையும் அறிந்து, பிலவங்க௵ ஆடிமீ முதலாக இருபத்தைந்து வருஷ காலம் அக் கோயிலுக்கு வராது விடுத்த நாம் ஆங்கிரச௵ ஆனிமீ உங்கள் கோயிலுக்கு வரத் தொடங்கியது உங்களால் அழைக்கப்பட்டா அழைக்கப்படாதேயா? நீங்கள் நம்மை அழைத்தது நம்பொருட்டா? உங்கள் பொருட்டா?

எ. உங்கள் கோயிலிலே உங்கள் கோயிற் பிராமணரல்லாத மற்றொருவரும் புராணத்துக்கு அருத்தஞ் சொல்

லக்கூடாது என்னும் நியமத்தை நீங்களே நீக்கிப், பிராமண சாதியேமல்லாத நம்மை வலிந்து பிரார்த்தித்து, விசேஷ காலங்களில் அழைத்துக்கொண்டு போய் அருத்தஞ் சொல் வித்தது எதன்பொருட்டோ?

௮. நாம் உங்கள் கோயிலிலே முதல் அழைக்கப்பட்டுத் தெய்வயானையம்மை திருக்கல்யாணத்திற்குப் பொருள் சொல்லி முடிந்தவுடனே, அக்கோயிலில் வேலாயுதப்பிரதிட்டை ஆகமவிரோதம் என்றுஞ் சிலாவிக்கிரகந் தாபித்தல் வேண்டும் என்றுஞ் செய்த பிரசங்கத்தை நீங்கள் மகிழ்ந்து கேட்டதும், நமது போதனை கேட்டு நல்லூர்ப் பொன்னம்பல பத்தர் சென்னபட்டணத்தினின்றும் வருவித்த சிலாவிக்கிரகங்களை நீங்கள் உங்கள் கோயிலிலே பிரதிட்டை செய்விக்க உடன்பட்டே திருவிழாக்காலத்தே உபசாரத்தோடு உலகறிய உங்கள் கோயிலினுள்ளே சேர்த்ததும் இல்லையா?

௯. உங்களுள்ளே கந்தையமாப்பாணர் ஆயிரங் கடிதம் அச்சிற் பதிப்பித்துப் பரப்பி, ஆங்கீரச ௵ தை ௴ ௭௳ சனிக்கிழமை இராத்திரி உங்கள் கோயிற் சந்நிதியில் ஒரு சபை கூட்டவில்லையா?

௧0. அந்தச் சபையிலே எல்லாரும் அறியக் கந்தையமாப்பாணர் செய்துகொண்ட வேண்டுகோளின்படி, நாம் சுப்பிரமணியக் கடவுளுடைய இலக்கணங்களை விரித்துப் போதித்து, அதன்பின் உங்கள் கோயிற் கிரியைகள் ஆகமவிரோதம் என்றும், அக்கோயிற் கருப்பக்கிரகமுதலியவைகளைப் பிரித்து ஆகமப்பிரகாரங் கருங்கல்லினாலே கட்டுவித்து விக்கிரகப் பிரதிட்டை செய்வித்தல்வேண்டும் என்றும், பிரசங்கிக்கவில்லையா?

கக. பிரசங்க முடிவிலே கையொப்பஞ் சேர்க்கப்படும் பொழுது, கையொப்பப் பணத்தை யேற்றுத் திருப்பணி நடத்துதற்கு, இ. சம்பந்தநாத முதலியார், சு. மாணிக்க வாசகமுதலியார், கு. கதிர்வேற்பிள்ளை, மு. கந்தையமாப் பாணர், பெ. லெ. வைரவஞ்செட்டியார் என ஐந்துபேர் ஒரு சபையாக ஏற்படுத்தப்படவில்லையா?

கஉ. இச்சபையார் பெயர் கேட்டவுடனே, கையொப் பம் வைத்தவர்கள் "நாவலர் இச்சபையில் ஒருவராய் இரு ந்தாற்றான் நாங்கள் இக் கையொப்பப் பணந்தருவேம்" என்றும், கையொப்பம் வையாதவர்கள் "நாவலர் இச்சபை யில் ஒருவராய் இருந்தாற்றான் நாங்கள் கையொப்பம் வைப் பேம்" என்றும் இரைந்து பேசவில்லையா?

கங. உடனே திருப்பணிச்சபையாருள் ஒருவர் நமது சமீபத்தில் வந்து "தாங்கள் இச்சபைக்கு அக்கிராசனாதிப தியாய் இருந்தாற்றான் இத்திருப்பணி நிறைவேறும்; அல் லது நிறைவேறாது" என்று பலமுறை வலிந்து பிரார்த்தித்த பின்னன்றோ, நாம் அதற்கு உடன்பட்டோம் என்பது யா வர் அறியாதார்?

கச. உங்கள் கோயிற் சந்நிதியிலே திருப்பணிச்சபை கூடிய இராத்திரிகளுட் சிலவற்றிலே, நாம் வீட்டிலே ஆரோக்கியம் இல்லாதேமாய்ச் சயனித்ததற்குப் பின்புதா னும், நீங்கள் வந்து வலிந்து பிரார்த்திக்க, நாம் மறுக்காது உங்களுக்கு எளிவந்து உதவி செய்ததை நீங்கள் அற்பகா லத்துள்ளே மறந்துவிட்டதென்னையோ? வெல்லாத வழக் கையும் வெல்லுமென்று வஞ்சித்து உங்கள் கைப்பொருளை மிகப் பற்றிக்கொண்ட ஒரு பிறக்கிராசியார்தாமும், நீங்கள் உங்களால் ஒரு பைசாவேனும் பெறாத பெற விரும்பாத

நம்மை வந்தெழுப்பிய நேரத்திலே, தம்மை வந்தெழுப்பி ஞல், தாம் ஆரோக்கியமுடையரேயாயினும், உங்களுக்கு யாது செய்வாரோ? ஒரு நல்வார்த்தை பேசினுற் போதா தோ? ஒருநாளோ இரண்டுநாளோ! இதை ஒரு சிறிது நீங் கள் ஆலோசிக்கலாகாதோ? புத்தி மழுங்கிவிட்டதோ! இப் படியெல்லாம் நாம் செய்தது பொதுநன்மைக்கன்றோ?

கரு. நீங்கள் பிலவங்கஞு ஆடிமீ உங்கள் கோயிற் றிருவிழா நடத்த வந்திருந்த விளைவேலி வேதக்குட்டிக்கு ருக்களை நோக்கி, "இந்தக்கோயில் கிலமாயிருக்கின்றது; இதைப் பிரித்துப் புதிதாகக் கட்டுவித்தல்வேண்டும்" என்று வேண்டிக்கொண்டதும், அவர்களும் நீங்களும் பற்பலரிடத் தே கையொப்பங்கள் சேர்த்ததும், கையொப்பஞ் சேர்ந் தும் பணஞ்சேராமையால் உங்கள் கருத்துப் பயன்படா தொழிந்ததும், நீங்கள் மறந்துவிட்டீர்களா?

கசு. நீங்கள் பழைய வெண்கற்களோடு இத்தேசத் தில் அகப்படும் புதிய வெண்கற்கள் கொண்டு உங்கள் கோ யிலை முன்னே கட்டுவிக்கப் புகுந்த கருத்து ஒரு சிறிதுஞ் சித்தியாதொழிந்ததேயாகவும், தென்னிந்தியாவின் கீழ்த் திசையில் உள்ள திருக்கோயிற் றிருப்பணிகளுக்குங் கிடை த்திலாத உயர்வாகிய கருங்கற்கள் மேற்றிசையினின்றுஞ் சுப்பிரமணியக்கடவுள் யாவர் வாயிலாக உங்கள் கோயிற் றிருப்பணிக்குக் கிடைப்பித்தருளினர்?

கஎ. நாம் உங்கள் கோயிலிலே நடக்குங் குற்றங்கள் பலவற்றையும் உங்களெதிரும் உங்கள் பிராமணர்களெதி ருங் கண்டிக்கவில்லையா? நீங்கள் "இக்குற்றங்களுள்ளே இப்பொழுது திருத்தக்கூடியவைகளை இப்பொழுது திருத் துவோம்; மற்றவைகளைப் புதுப்பிரதிட்டைக்குப் பின்பு

திருத்துவோம்" என்று உறுதிமொழி சொல்லிக்கொண்டே நம்மை உங்கள் கோயிலுக்கு அழைக்கவில்லையா?

கஅ. உங்கள் கோயிற் பிராமணகுருமார் செய்யும் அநாசாரங்கள் சிலவற்றை நீங்களே நமக்கு வந்து தெரிவித்து, அவைகளைத் திருப்பணிப் பிரசங்கத்திலே கண்டிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்ளவில்லையா?

கசு. ஸ்ரீமுக வரு த்துப் புரட்டாதி மாசத்தில் ஒரு சுக்கிரவாரத்திலே அத்தியடிக் கதிர்வேலர் உங்கள் கோயிலிலே செய்விக்கப் புகுந்த சுப்பிரமணியகலசஸ்நபனம் அவர் வேண்டுகோளின்படி, நாம் வந்திருந்து நடத்துவிக்கக் கண்ட சனங்களெல்லாம்: "இதுபோல முன்னொருபோதும் நடக்கவில்லை" என்று பாராட்டவில்லையா? சுப்பிரமணியாலயத்திலே. செய்யத்தக்கது உருத்திரகலசாபிஷேகமா சுப்பிரமணியகலசாபிஷேகமா? உங்கள் கோயிலிலே நெடுங்காலங் கலசாபிஷேகஞ் செய்துகொண்டு வந்த இராமேசுரத்தார் சுப்பிரமணியகலசாபிஷேகத்துக்கு இன்றியமையாத கந்தசூக்தம் அறியாதவர் என்பது நம்மால் அன்றே வெளிப்படவில்லையா? சுப்பிரமணிய கலசாபிஷேகக் கிரமம் யாது? நடுவே சுப்பிரமணியர் பொருட்டு ஒரு கும்பமும் அதற்கு இருபக்கத்திலுந் தெய்வயானையம்மை வள்ளியம்மைபொருட்டு இரண்டு வர்த்தனியும், கிழக்கு முதல் எட்டுத் திக்கிலும் அட்டவித்தியேசுரர்பொருட்டு எட்டுக் கலசமுங் குமாரதந்திர விதிப்படி தாபித்துப் பூசித்து அக்கினிகாரிய முடித்து அபிஷேகிப்பதன்றோ சுப்பிரமணிய கலசாபிஷேகக் கிரமம்? நீங்கள் வாங்கும் பன்னிரண்டுரூபா இக்கிரமப்படி செய்யும் அபிஷேகத்திற்குப் போதாதுதானோ? குமாரதந்திரத்துக்கு மாறாக நீங்கள் செய்யும் விளையாட்டுக்குப் பணந்தந்தவர்கள் யாது பயன் அடைவார்களோ?

௨0. பவனித் திருவிழாவிலே நாம் திருவாவடுதுறையினின்றும் நம்மால் வருவிக்கப்பட்ட ஓதுவார்களுக்கும் இங்குள்ள சைவர்களுக்குந் தெற்குவீதி மடத்திலே சில புண்ணியவான்களைக்கொண்டு மாகேசுரபூசை நடத்துவித்துச் சுவாமிக்குப் பின்னே தேவாரபாராயணஞ் செய்வித்தது நன்மையா தீமையா?

௨௧. சுவாமிக்கு முன்னே பொதுப்பெண்கள் செய்யும் நாட்டியத்தைப் பார்த்துக் காமாதிகளினாலே கெடுகிற சனங்களுள்ளே சிலராயினுஞ் சுவாமிக்குப் பின்னே சிவபூஜாவர்ன்களாகிய சைவர்கள் ஓதுந் தேவாரத்தைக் கேட்டுச் சிவபத்தி ஒரு சிறிதாயினும் அடையும்படி நாஞ் செய்யத் தலைப்பட்டது நன்மையா தீமையா?

௨௨. சாயங்கால பூசைக்கும் இரண்டாங்கால பூசைக்கும் இடையே வசந்தமண்டபத்தின் எதிரே பொதுப் பெண்கள் தங்கள் நடன சங்கீதங்களினாலே சனங்களுக்குக் காமத்தைச் சொலிப்பிக்கும் வழக்கத்தை நீக்கி, ஓதுவார்மூர்த்திகள் தேவாரம் ஓதியும் அதனைச் சாரங்கியில் அமைத்து வாசித்துஞ் சனங்களுக்குச் சிவபத்தியை வளர்விக்கும் வழக்கத்தை ஏற்படுத்தும்பொருட்டு நாந் தொடங்கியது நன்மையா தீமையா?

௨௩. வசந்தமண்டபத்தினெதிரே மது மாமிச பட்சணம் வியபிசாரம் முதலிய தீமைகளெல்லாம் நிறைந்த பாத்தையர்களுடைய நடன சங்கீதங்களுக்கு ஐந்தாறு நாழிகைநேரம் மிக்க உவப்போடு கொடுக்கும் நீங்கள், திருவிழாச் செலவிறுக்குங் கொடையாளருடைய வேண்டுகோளின்படியே அவ்வசந்தமண்டபத்தினெதிரே ஓதுவார்கள்

சாரங்கி வாசிக்கவுந் தேவாரம் ஓதவுந் தொடங்கிய உடனே தானே, தங்கள் நேரத்தைத் தேவாரங் கொள்ளை கொள்ளத் தொடங்குகின்றது என்று பொறுமை கொண்ட பரத்தையர்கள் இட்ட கட்டளையை உங்கள் சிரமேற்கொண்டு, நைவேத்தியமெடுக்கும்படி வாத்தியத்தை முழக்குவித்துத் தேவாரத்துக்கு இடையூறு ஒரு சிறிதேனும் அஞ்சாது விளைத்த உங்கள் துர்ப்புத்தி எப்படி வந்து முடிந்தது?

உச. நீங்கள் ஸ்ரீமுகவருஷத் தேர்த்திருவிழாவுக்கு நம்மை வந்தழைத்தபொழுது, நாம் "உங்கள் கோயிலிலே கிராமசாந்தியிலுந் தேர்த்திருவிழாவிலும் வைரவபூசையிலும் ஆடு வெட்டுகிறபடியால் நாம் அங்கே வரோம்" என்று மறுக்க, நீங்கள் "இனி ஒருபொழுதும் அப்படிச்செய்யோம்" என்று உறுதிமொழி சொல்லி நம்மை வருவிக்கவில்லையா? நீங்கள் அவ்வுறுதிமொழிப்படியே அவ்வருஷத் தேர்த்திருவிழாவிலும் வைரவபூசையிலும் பவவருஷக் கிராமசாந்தியிலும் ஆட்டுக்கொலையை உலகறிய நீக்கிவிடவில்லையா? இப்படிச் செய்த நீங்கள், நாம் இருபத்துநான்குநாளும் நியமமெனக்கொண்டு தொடங்குவித்த தேவாரபாராயணத்தினாலே பொறுமை கொண்ட உங்கள் தாசிகள் "நாங்கள் பணஞ்செலவிட்டு நெடுங்காலம் பிரயாசப்பட்டுக் கற்ற நடன சங்கீதங்களைக் கோயிலிலல்லாமல் வேறெங்கே காட்டுவோம்! நாங்கள் பெரும்பணத்தொகை கொடுத்து வாங்கிய ஆடையாபரணங்களைக் கோயிலிலல்லாமல் வேறெங்கே காட்டுவோம்! இனி எப்படி ஆடவர்களை மோகிப்பித்துப் பணம் பறிப்போம்!" என்று உங்களெதிரே செய்த முறையீட்டினாலே மயங்கி, இனி ஆடுவெட்டினால் நாங் கோயிலுக்கு வரேமெனவும் நாம் வராதொழிந்தால் தேவார

பாராயணம் நடவாது எனவும் ஆலோசித்துக்கொண்டு, ஆடு வெட்டி இடபவாகனத் திருவிழாவுக்குந் தேர்த்திருவிழாவுக்குந் தீர்த்தத் திருவிழாவுக்குந் தேவாரபாராயணம் நடவாவண்ணஞ் செய்து, தாசிகளைப் பிரீதிப்படுத்திவிட்டீர்களே.

௨௫. சுப்பிரமணியாலயத்திலும் வீதியிலும் மனிதராயினும் மிருகமாயினும் இறந்தாற் கிராமத்திலே வாந்திபேதி உண்டாகும் எனவும், அதற்குப் பிராயச்சித்தஞ் செய்து சம்புரோக்ஷணஞ் செய்ய வேண்டும் எனவும், விதித்த குமாரதந்திரத்தையும், அதனை அருளிச்செய்த சிவபெருமானையும், அக்குமாரதந்திர விதிப்படியே திருச்செந்தூர் முதலிய தலங்களிலே பூசை, திருவிழாக்களை ஏற்றருளிய சுப்பிரமணியக்கடவுளையும் அவமதித்து, விலைப்பெண்களுடைய வாக்கை நன்குமதித்து, நீங்கள் தேவாரபாராயணத்தை அகற்றச் செய்த ஆட்டுக்கொலைப் பாவம் உங்களுக்குஞ் சனங்களுக்கும் எப்படிவந்து முடிந்தது?

௨௬. "சுப்பிரமணியக்கடவுள் வழிபாட்டின்பொருட்டு ஆடறுத்தல் திருமுருகாற்றுப்படையிலே சொல்லப்பட்டிருக்கின்றதே! இக்கோயிலில் ஆடறுத்தல் ஆகாதா" என்று நீங்களுஞ் சனங்களும் புறத்தே பேசிக்கொண்டு திரிகின்றீர்கள். திருமுருகாற்றுப்படையிலே ஆடறுத்தல் யாவர் தொழிலாகச் சொல்லப்பட்டது? வேடர் தொழிலாகவன்றோ! வேடர்கள், முருகக்கடவுள் என்றொருவர் இருக்கின்றார் அவரை வழிபட்டாற் றாங்கள் விரும்பியபயன் கிடைக்கும் என்னும் பொதுவறிவுமாத்திரமே யுடையவர்களாய்த், தாங்கள் சூடும் பூக்களைச் சூட்டுதலும் தாங்கள் உட்கொள்ளுந் தினைமா தேன் மாமிசம் முதலியவைகளை நிவேதித்தலுஞ் செய்து, வழிபடுவார்கள். அவர்கள் குன்ற

வாசிகளாய்க் கல்வி கேள்வி ஒருசிறிதும் இல்லாதவர்களா தலாற் சுப்பிரமணியக்கடவுளுடைய இலக்கணங்களையும் அவரை வழிபடுங் கிரமங்களையும் புண்ணியபாவப் பகுப்பையும் அறியார்கள். அவர்கள் தங்கள் மனசிற்றோன்றிய படியே பத்திசெய்து ஒருபிரகாரம் வழிபட, முருகக்கடவுள் அவ்வழிபாட்டுக்கேற்ப அருள் செய்வர். நீங்கள் வேடர்களா? உங்கள் நிலம் வேதசிவாகம புராணாதிகள் வழங்காத மலைநிலமா? கந்தபுராணம் அறியீர்களா? அப்புராணம் வாயிலாகக் குமாரதந்திரம் என்பதொன்றுண்டு அதில் விதித்தபடியே முருகக்கடவுளை வழிபடல் வேண்டும் என்பதறியீர்களா? நீங்கள் இவையெல்லாம் அறியாத வேடர்களேயானால், சிவாகமத்தில் விதிக்கப்பட்ட தீக்ஷை, அநுட்டானம், அந்தியேட்டி, சிராத்த முதலிய கிரியைகள் உங்களுக்கேன்? உங்கள் கோயிலிலே நீங்களே மாமிச முதலியவை நிவேதித்துப் பூசை திருவிழாச் செய்யாது, பிராமணர்களைக்கொண்டு பூசை திருவிழாச் செய்விப்பதென்னை? வேடருருத் தரித்து வில்லும் அம்புங்கொண்டு திரிந்து,மிருகங்களையும் பறவைகளையுங் கொன்று சீவியாது, கோயிற்றிரவியங்களைக் கொள்ளைகொண்டு சீவிப்பதென்னை? இனி நீங்களும் உங்களைச் சார்ந்த சனங்களும் இப்பொழுதுள்ள அறிவெல்லாம் இழந்து வேடர்களாய் விடுங்கள், அப்பொழுது பேச்சொன்றுமில்லை.

௨௭. "நாம் உற்சவங்கொண்டருள்வது ஆன்மாக்கள் நம்மேலே பத்திசெய்துய்யும்பொருட்டு, அப்பத்தி வளர்ந்தோங்கும்படி சிறப்பாக இருபத்திரண்டுநாள் நடந்த தேவாரபாராயணம் அதிமுக்கியமாகிய தேர்த்திருவிழாவிலே நடவாதொழிந்தது. இனி இந்தத்தேர் நமக்கேன்" என்பதன்றோ சுப்பிரமணியக்கடவுளுடைய திருவுள்ளக்கிடக்கையென்பது, பயனால் விளங்கவில்லையோ?

உஅ. தேரை நெருப்புத்தீண்டியவுடனே: "இது எவ வகைப்பட்ட குற்றத்தினலே சம்பவிப்பது? இதனலே கோயிலதிகாரிக்குங் கிராமத்துக்கும் யாது கேடு விளையத்தக்கது? இதற்கு யாது பிராயச்சித்தஞ் செய்யத் தக்கது? இனித் திருவிழாவுக்கு யாது பண்ணத்தக்கது?" என்று நீங்கள் எந்தச் சிவாகமபண்டிதரிடத்தே எந்தச் சைவாசாரியரிடத்தே போய் விசாரித்தீர்கள்? உங்களுக்குச் சிவாகமவிதிவிலக்குக்களை அறிவிக்க வல்லவர்கள் வேறு யாவரோ?

உகூ. நெருப்புத் தீண்டப்பெற்ற தேர் முதலியவைகளிலே சுவாமி எழுந்தருளப்பண்ணினுற் கோயிலதிகாரிக்குங் கிராமத்துக்குங் கேடு விளையும் என்ற சிவாகம விதிக்கு ஒரு சிறிதாயினும் அஞ்சாது, வயிற்றுப்பிழைப்பே பெரும் பயனுக நினைத்து, நீங்கள் திருவிழாச் செய்யத் தொடங்கிய கருத்து: "அரசனுஞ் செய்வ தீச னருள்வழி" என்று சிவஞானசித்தியாரிலே திருவாய்மலர்ந்தருளிய பிரகாரந் துரைத்தனத்தாருடைய கட்டளையினல் எப்படி வந்து முடிந்தது?

௩0. வாந்திபேதி பரவுங்காலத்தில் வெகுசனக்கூட்ட நெருக்கம் அவ்வியாதி விருத்தியாதற்கு ஏதுவாகும் என்றஞ்சித் துரைத்தனத்தார் சனங்களுடைய ஆரோக்கியத்தை அவாவி, இப்பொழுது திருவிழாவை நிறுத்தும்படி செய்த கட்டளை, தேசகலகம் இராசயுத்தம் பஞ்சம் மகாரோக முதலியன சம்பவித்த காலத்திலே திருவிழாவை நிறுத்துதல் குற்றமாகாது என்ற சிவாகம விதிக்கு ஒத்ததேயாகவும், பொருளாசைமேலீட்டினலே அக்கட்டளையை எதிர்த்து இப்பொழுது நடத்தத் தொடங்கிய உங்கள் துர்ப்புத்தி எப்படி வந்து முடிந்தது?

௩௧. உங்கள் கோயிலிலே வருஷத்திருவிழா ஆடியமாவாசை இறுதியாகவே நெடுங்காலம் நடந்துவந்ததன்றோ! ஆவணியமாவாசை இறுதியாக நடப்பது இப்பொழுது முப்பது வருஷகாலந்தானே. நீங்கள் இப்படிச் செய்யத் தொடங்கியது யாது பற்றியோ? உங்கள் கோயிலிலும் மாவிட்டபுரக் கோயிலிலுந் திருவிழா ஒருகாலத்திற்றானே நடத்தலால், உங்களுக்குப் பொருள்வரவு குறைகின்றது என்பது பற்றியன்றோ? இது நாமறியாததோ! ஒருமாசத்திலே செயற்பாலதாகிய திருவிழாவை அம்மாசத்திலே செய்யாது விடுத்துப் பிறிது மாசத்திலே செய்வது குற்றம் எனவும், அதற்குப் பிராயச்சித்தஞ்செய்தல் வேண்டும் எனவும் விதித்த குமாரதந்திரவிதிக்கு மாறாக உங்கள் பொருட்பயன் குறித்து முன்மாசத் திருவிழாவை நிறுத்திப் பின்மாசஞ் செய்யத் தலைப்பட்ட நீங்கள், பொதுப்பயன் குறித்துப் பிறந்த இராச விதிக்கு அமைந்து திருவிழாவை இப்பொழுது நிறுத்திப் பிறிதுமாசஞ் செய்யாது, அவ்விதிக்கு மாறாக இப்பொழுதே செய்யத் தொடங்கி ஏன் அவமானமடைந்தீர்கள்?

௩௨. மதுரைத் திருவிளையாடற்புராணத்திலே இடைக்காடனார் பிணக்குத்தீர்த்த படலம் நீங்கள் கேட்டதில்லையா? மதுரைச் சொக்கநாதசுவாமி, தமதடியாருள் ஒருவராகிய இடைக்காடர் பாண்டியன்மீது பொருட்பயன் கருதிப் பாடிய பாட்டை அவன் சபையில் அரங்கேற்றியபொழுது அதனை அவன் புறத்தே ஒருசிறிதவமதித்தமை பொறுக்கமாட்டாது, திருக்கோயிலைவிட்டகன்று உத்தரமதுரையிலே போய் எழுந்தருளியிருந்த சரித்திரஞ் சத்தியமேயானால், சுப்பிரமணியக்கடவுள், சிவாநுபூதிச் செல்வர்களாகிய சமயகுரவர்கள் தமது தந்தையாராகிய சிவபெருமான்மீது

பாடிய தேவாரத்தைத் தமதடியார்கள் தமது சந்நிதியில் ஓதும்பொழுது, அதனை நீங்கள் புறத்தும் அகத்தும் பெரி தவமதித்தமை பொறுக்கமாட்டாது, உங்கள் கோயிலைவிட் டகலாரா? சொக்கநாதசுவாமி, தமக்கு அதிவிசித்திரமாகிய ஆலயங்கள், மண்டபங்கள், கோபுரங்கள், திருமதில்கள், இரத்தினாபரணங்கள், விளைநிலங்கள், தோட்டங்களெல் லாஞ் சமர்ப்பித்த மகாராஜாவாகிய பாண்டியனையும், தமத டியவர் ஒருவர்பொருட்டு வெறுத்தது சத்தியமேயானால், சுப்பிரமணியக்கடவுள், தம்மிடத்தே பத்தி ஒரு சிறிதுமி ன்றித் தம்முடைய திரவியங்களெல்லாங் கொள்ளை கொள் ளுகிற் உங்களைச், சமயகுரவர்கள் பொருட்டுந் தேவாரத் தின்பொருட்டுந் தமது தந்தையார்பொருட்டும், அத்தேவா ரத்தைக் கேட்டுச் சிந்தித்து அவரை வழிபடுதற்குரிய அடி யார்கள்பொருட்டும், வெறுப்பது ஆச்சரியமா?

௩௩. நமது போதனைக்குப் பின்பு தேர்த்திருவிழா முதலியவற்றிலே ஆட்டுக்கொலையை நீக்கி, நம்மீது கோபந் தோன்றிய பின்பு மீட்டும் ஆட்டுக்கொலை செய்யவும், நமது போதனைக்குப் பின்பு சிராத்தத்திலே அதீக்ஷிதப்பிராமண ரை நீக்கி, நம்மீது கோபந்தோன்றிய பின்பு மீட்டும் அதீ க்ஷிதப்பிராமணரை வரிக்கவுந் தலைப்பட்ட நீங்கள், உங்கள் கோயிலில் நமது போதனைக்குப் பின் பிரதிட்டை செயப் பட்ட விக்கினேசுர விக்கிரகத்தையும் ஆறுமுகசுவாமி விக் கிரகத்தையும் இப்பொழுது நீக்கிவிடாத தென்னையோ? சுவாமிதரிசனம் நமஸ்காரம் புராணசிரவண முதலியன செ ய்யுங் காலத்திலே நமது போதனைக்கு உடன்பட்டுத் தள் ளிய தலைக்கட்டை இப்பொழுது கொள்ளாததென்னையோ? நமது போதனைக்கு உடன்பட்டுத் |தீக்ஷைபெற்ற பிராமண ரை இப்பொழுது தள்ளிவிட்டு, எல்லாரும் அதீக்ஷிதப்பிரா

மணாராகவே வைத்துக்கொள்ளாததென்னையோ? உருத்தி ராக்ஷமாலை தரிக்கும் உங்கள் பிராமணரை, அது நீக்கிப் பனங்காய்ப் பணிகாரமாலை தரித்துக்கொள்ளும்படி செய் யாததென்னையோ?

கச. நாம் நெடுங்காலம் உங்கள் கோயிற் குற்றங்களைக் கண்டித்துப் பிரசங்கித்ததும், உங்களால் அழைக்கப்பட்ட பொழுது உங்கள் கோயிலுக்கு வந்ததும், அவ்வப்பொ ழுது கண்டுங் கேட்டும் அறிந்த குற்றங்கள் சிலவற்றை உங்களெதிரே கண்டித்ததும், நீங்கள் ஒழித்த குற்றங்கள் சிலவற்றைப் பின்னுஞ் செய்யத் தலைப்பட்டமைகண்டு, நாம் உங்கள் கோயிலை விட்டகன்று ஒருவருக்குங்காறும் பிறரைக் கொண்டு உங்களுக்குப் போதிப்பித்ததும், அது சித்தி பெறாமை கண்டபின் ஒரு பத்திரிகை யெழுதி அதின் ஒரு கையெழுத்துப் பிரதி ரூபம் உங்களுக்கு அனுப்பியதும், அதுவுஞ் சித்திபெறாமை கண்டபின், அதனை அச்சிற்பதிப் பித்து வெளிப்படுத்தியதும், இவ்வியாழ்ப்பாணத்துள்ள சைவசமயிகள் எல்லாருக்கும் பயன்படும்வண்ணம் உங்கள் கோயிலைத் திருத்தும்பொருட்டே என்பது, உங்கள் மனச் சான்றுக்கும் இன்னும் பற்பலர் மனச்சான்றுக்குந் தெரி யுமே.

கரு. உங்கள் கோயிலிலே நமக்குச் செய்யப்பட்ட உபசாரம், அக்கோயில் தோன்றிய காலந்தொடங்கி எந்தப் பிரபுக்களுக்கும் எந்த வித்துவான்களுக்கும் எந்தப் பிரா மணர்களுக்கும் எந்தச் சைவகுருமார்களுக்குஞ் செய்யப் படவில்லையென்பது உங்கள் துணிவு. நமக்கு அவ்வுபசாரத் திற குறைவுபாடு ஒரு சிறிதும் நிகழவில்லையென்பது எல் லாருக்கும் விளங்குமே. அப்படியாகவும் நாம் உங்கள்

கோயிலை விட்டகன்றமையால், நாம் முன் உங்கள் கோயி லுக்கு வந்தது உபசாரத்தில் ஆசைபற்றியன்று என்பதும் எல்லாருக்கும் விளங்குமே. நீங்கள் செய்த் தேவார நிந்தை யும், உயிர்க்கொலையும் பொறுக்கமாட்டாமைபற்றியே உங் கள் கோயிலை விட்டகன்றேம் என்பது எல்லார் மனச்சான் றுக்கும் இனிது விளங்கும். அப்படியாகவே, நாம் முன் உங்கள் கோயிலுக்கு வந்தது நீங்கள் அக்கோயிலைத் திருத் துவீர்கள் என்று உங்கள் வாக்கை நாம் விசுவாசித்தமை பற்றியே என்பதும், எல்லார் மனச்சான்றுக்கும் இனிது விளங்கும். சிவனடியார்களுக்கு ஆவசியகம் வேண்டப்படும் முதலிலக்கணம் "மறைகளிந்தனை சைவநிந்தனை பொறு மனம்" என்பது உண்மைநூலறிவுடையவருக்கு இனிது விளங்கும். அஃதறியாத பேதைகளுக்கு யாது செய்யலாம்.

௩௬. "இவர் இக்கோயிலில் வந்து கும்பிடவில்லையா? இப்பொழுது ஏன் கண்டிக்கிறார்" என்று நீங்களும் உங்க ளைச் சார்ந்த பிறரும் நம்மைப் புறம்பழித்துப் பேசுகின்றீர் களாம். ஓகோ! நீங்கள் நம்மை யாது சொல்லியழைத்தீர் கள்? மறந்துவிட்டீர்களோ? உங்கள் வேண்டுகோளுக்கு உடன்பட்டும், "இவர்கள் வேண்டுகோளின்படி செய்தால் இக்கோயில் சிவாகமநெறிப்படி திருத்தப்படும். திருத்தப் படிற் சைவசமயிகளெல்லாருக்கும் பயன்படும்" என்று சில விவேகிகள் செய்த வேண்டுகோளுக்கு உடன்பட்டும் வந்த நாம், அங்குள்ள குறிகளுங் கிரியைகளுஞ் சிவாகம விரோ தமேயாயினும், மேலே சிவாகம சம்மதமாகிய குறிகளுங் கிரியைகளுந் தொடங்கப்பட்ட பின் சனங்கள் வழிபடு முறை இது என அறிந்து வழிபடும்பொருட்டு, வழிபாடு செய்து காட்டினேம்: அது, நீர்வேலிச் சோமசுந்தரக்குருக் கள், உங்கள் கோயில் உற்சவாசாரியர் பின்பு துசத்தம்ப

பூசை செய்யுமுறை இது என அறிந்து பூசைசெய்யும்பொ ருட்டுத் தாம் ஒரு கமுகமரத்தைத் துசத்தம்பம் எனப் பாவித்துப் பூசை பண்ணிக் காட்டியது போலும். நாம் புறத்தே காட்டிய இவ்வழிபாடு, ஆதியிலே புவனேகவாகுவி னாலே கட்டிச் சிவாகமநெறி வழுவாது நடாத்தப்பட்ட திவ் வியாலயம் இருந்த தான விசேடத்தை நினைந்து, சுப்பிரம ணியக்கடவுளைத் தியானித்து: "இத்தானம் பண்டுபோலச் சிவாகமசம்மதமேயாகிய கோயிலுங் குறிகளுங் கிரியை களும் உடைத்தாய்ப் பயன்படல்வேண்டும்" என்று அகத் தே தோன்றியசிந்தனைவடிவாகிய வழிபாடுபெற்றிப் புறப்பட் டது என்பது, உயிர்தொறும் ஒளித்த கள்வராகிய சுப்பிரம ணியக்கடவுளுக்கும் நம்மனச்சான்றுக்கும் இனிது விளங் கும். நீங்கள் அறியாமையாற்கொண்ட குறிகளையுங் கிரி யைகளையும் பொறுத்தாற்போல, நீங்கள் அறிந்துஞ் செய்த தேவார நிந்தையையும் உயிர்க்கொலையையும் நாம் பொ றுக்கமாட்டேம்; சுப்பிரமணியக்கடவுள் தாமும் பொறுக்க மாட்டார்.

௯௪. நீங்கள் இவ்வருஷத் திருவிழாவை நிறுத்தும் பொருட்டுப் பிறந்த இராசகட்டளையை ஆடிமீ' உ௯உ பெ ற்றும் அதற்கு விரோதமாக உசஉ திருவிழா ஆரம்பித்த தும், நீங்கள் திருவிழா நடத்துதலை அறிந்த கவர்ண் மெண்டு ஏசண்டு ௯0உ உங்கள் கோயில் வாயிலில் வந்து செய்த தடைக்கும் அமையாது திருவிழா நடத்தியதும், பின்பு ௯கஉ கச்சேரியிலே உங்களை அவ்வேசண்டு தடுக்க வும் அதற்கும் அமையாது திருவிழா நடத்தியதும், பின்பு இவ்வாவணிமீ' உஉ "இனித் திருவிழா நடத்துவீர்க ளாயிற் றப்பாது தண்டிக்கப்படுவீர்கள்" என்று

அவ்வேசண்டு அச்சுறுத்தினமை கேட்டு அஞ்சி அன்றி ராத்திரியே கொடியிறக்கிவிட்டதும் மறந்துவிட்டீர்களா! செப்டம்பர்மீ கடைவரையுந் திருவிழா நடத்தலாகாது என்று விதித்த துரைத்தனத்தார், வாந்திபேதி நீங்காமையால் இன்னுஞ் சிலகாலம் அக்கட்டளையை நீட்டுதற்கு, அதிகாரம் இல்லாதவர் என்று நினைந்துவிட்டீர்களா! நீங்கள் முன் நடத்திய திருவிழாக் குமாரதந்திரத்தில் விதித்த காலவெல்லையில் முற்றியதும், நெருப்புத் தீண்டிய தேரிலே சுவாமி எழுந்தருளாமையுங் கடவுளுக்குத் திருவுளப்பாங்கென்றே நினைந்து அடங்காது, திரும்பவும் இம்மாசம் உஉவ கொடியேற்றித் திருவிழா ஆரம்பித்து இடையிடையே நிறுத்தியும் நடத்தியும் அவமானம் அடையும்படி உங்களை ஏவிய உங்கள் துர்ப்புத்தியுஞ் செருக்கும் பொருளாசையும் எப்படி முடியுமோ!!!

இனி யாழ்ப்பாணத்துள்ள மற்றச் சைவசமயிகளை எதிர்முகமாக்கிச் சில பேசுவோம்.

## யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளே!

க. நீங்கள் நமது முதற்பத்திரிகையை வாசித்து, அதிலே சொல்லப்பட்டவைகளெல்லாம் ஒருவராலும் மறுக்கப் படாத சத்தியம் என்பது தெளிந்தீர்கள்; தெளிந்தும், உங்களுள்ளே பலர், நாம் சுப்பிரமணிய தூஷகர் என்றும், நம்முடைய பத்திரிகையும் பிரசங்கமும் புறச்சமயிகள் செய்யுஞ் சைவதூஷணத்துக்குத் துணையாய் முடியும் என்றும், இப்படி எழுதலாமா எழுதலாமா என்றும், இவைகளெல்லாம் உண்மையேயாயினும், இவைகளை வெளியிலே கொட்டலாமா என்றும், நம்மைப் புறம் பழித்துப் பேசுகின்றார்களாம்.

௨. சுப்பிரமணியக்கடவுளுக்குச் சரீரமெனப்படுவது முற்றறிவு வரம்பிலின்பம் இயற்கையறிவு தன்வயமுடைமை குறைவிலாற்றல் வரம்பிலாற்றல் என்னும் ஆறுகுணங்களும் ஆறு திருமுகங்களாகவும் மற்றை யருட்குணங்கள் மற்றை அவயவங்களாகவும் அமையப்பெற்ற அருட்டிருமேனி எனவும், அவர் கையின் மூன்றுபத்திரமுடைய வேலாயுதமெனப்படுவது அவர் ஆன்மாக்களுக்கு முத்தியின்பங் கொடுக்க விரும்பும் விருப்பமெனப்படும் இச்சாசத்தியும் அதற்கு வேண்டுமவைகளை அறியும் அறிவெனப்படும் ஞானசத்தியும் அறிந்தவைகளைச் செய்யுஞ் செயலெனப்படுங் கிரியாசத்தியுமாகிய மூன்று சத்திகளின் அடுக்கு எனவும், அவருக்குத் தேவிமார் எனப்படுவார் ஞானசத்தி கிரியாசத்திகள் எனவும், உண்மை தெளிந்து அவ்வுண்மையைப் பிறருக்குப் போதிக்கிற நாமும் நம்போல்வாருமா சுப்பிரமணிய தூஷகர்? சுப்பிரமணியக்கடவுளுடைய திருமேனியைத் தோல் இரத்தம் இறைச்சி முதலிய தாதுக்களாலாகிய நமது சரீரம்போலும் எனவும், அவர் கைவேலாயுதத்தைக் கொல்லனுலையிற் செய்யப்பட்டு உயிர்வதை செய்து இரத்தந்தோயும் நமது கையாயுதம்போலும் எனவும், அவர் தேவிமாரை நமக்குச் சிற்றின்ப அநுபவத்தை விளைவிக்கும் நமது மனைவியர் போல்வார் எனவும், அவரைக் கொலை களவு பொய்ச்சான்று சொல்லல் பொய்வழக்குத் தொடுத்தல் வீடு சுடுதல் கற்பழித்தல் முதலிய பெருங்கொடுந் தீமைகளைச் செய்து நீதித் தலத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களிடத்தே கைக்கூலி வாங்கிக்கொண்டு அவர்களைத் தப்புவிக்கு நம்போல்வார் எனவும், அம்மட்டோ, இன்னுந் தம்மால் இச்சிக்கப்பட்டு அவ்விச்சைக்கு உடன்படாதவளொருத்தியைத் தமது தமையனாராலே தம்மோடு கூட்டுவித்தவர் அதனால் ஒருவாறு நம்மினும் இழிந்தவர்

எனவுங் கொண்ட நீங்களா சுப்பிரமணிய தூஷகர்? புறச்ச மயிகள் செய்யுஞ் சைவசமய தூஷணத்துக்குத் துணையாய் முடிவது நம்முடைய கோட்பாடா உங்களுடைய கோட்பாடா? இவைகளுக்கு விடை நீங்கள் அறிந்திலீர்களாயின், அப்புறச் சமயிகளிடத்தே கேட்டறிந்துகொள்ளுங்கள்.

௩. திருப்பணிச் சபையிலே நாஞ் செய்த பிரசங்கங் கேட்டபொழுது, "நாங்கள் கந்தசுவாமி தரிசனம் நெடுங் காலம் நியமமாகச் செய்துகொண்டு வருகின்றோமாயினும், கந்தசுவாமி இப்படிப்பட்டவர் என்பது இப்பொழுதுதான் அறிந்தோம்; இப்படி முன்னே நாங்கள் ஒருபொழுதும் எண்ணியிருக்கவில்லை" என்று பாராட்டித் திரிந்தவர்களும் இப்பொழுது நம்மைச் சுப்பிரமணியதூஷகர் என்று இகழ்கின்றார்கள். கந்தசுவாமியைத் தங்களுக்கு யதார்த்தமாக வே அறிவித்துத் தாங்கள் புறச்சமயிகளுடைய தூஷணத் தினாலே மயங்காவண்ணஞ் செய்த நம்மையா சுப்பிரமணிய தூஷகர் என்கிறார்கள்!

௪. செட்டிச்சியும் புறச்சமயத்தவளுமாகிய கண்ணகி பரம்பொருள் எனவும், விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்க டவுள் இருவரும் அவளிற்றாழ்ந்தவர் எனவும், மயங்கி, அவளுக்குக் கோயில் கட்டுவித்து, அவ்விருவர் விக்கிரகத் துக்கும் நடுவே அவள் விக்கிரகந் தாபிப்பித்து வழிபடும் அதிபாதகர்களும், அவளுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்து அவளெச்சில் புசிக்கும் அதிபா தக சிரோமணிகளாகிய பிராமணர்கள் சைவகுரு மார்களும், அவர்களை நமஸ்கரித்துங் கும்பிட்டும் அவர்க ளுக்குத் தக்ஷிணை கொடுத்தும், அவர்களைக்கொண்டு தீக்ஷை அந்தியேட்டி சிராத்தங் கலியாணச் சடங்கு விரதோத்தி யாபனம் முதலியவற்றையுஞ் சிவாலய விக்கினேசுராலய

சுப்பிரமணியாலயப்பிரதிட்டை பூசை திருவிழாக்களையுஞ் செய்விக்கும் நீங்களுமா சைவசமய நிந்தகர்கள்? உங்களுக்கிரங்கி இவையெல்லாம் பாவம் பாவம் என்று போதிக்கும் நாமும்நம்போல்வார்களுமா சைவசமய நிந்தகர்கள்? விசாரியுங்கள். பொருளாசையினால் உங்கள் சொல்வழியே நடக்கும் உங்கள் பிராமணரும் குருமாரும், தங்களுள் இருவர் நடுவே தங்களிற்றாழ்ந்த சாதியாளும் அன்னியசமயத்தாளுமாயுள்ளவள் ஒருத்தியை இருத்தி நீங்கள் நமஸ்கரிக்கப் புகின், அதற்கு உடன்படுவார்களோ? சற்றே பரீக்ஷை செய்து பார்த்துவிடுங்கள்.

௫. உங்கள் கோயில்களிலே விலைப்பெண்களை தேவதாசிகள் என ஏற்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதும், அப்பெருங் கொடுந் தீமை வாயிலாகவே, உங்கள் கோயில்களெல்லாம் ஈசுரபத்திக்கு ஒருசிறிதேனும் இடங்களாகாது, காமம் வியபிசாரங் கோபம் பொறாமை கெறுவஞ் சண்டை கலகங் களவு முதலிய எல்லாத் தீமைகளுக்கும் இடங்களாய்விட்டன என்பதும், கடவுளிலக்கண முதலியவைகளை உள்ளபடி அறியும் அறிவு ஒருசிறிதேனும் உங்களிடத்தில்லை என்பதும், நீங்கள் பலரையுங் கடவுள் எனக்கொண்டு வணங்கும் அநேகேசுரவாதிகள் என்பதும், பாதிரிமார்கள் அறியாதவர்களா? இவையெல்லாம் பாதிரிமார்கள் அறிந்தவர்கள் என்பது, அவர்கள் பிரசங்கங்களாலும் பத்திரிகைகளாலும் புத்தகங்களாலும் நீங்கள் அறிந்ததில்லையா? உண்மை பேசுங்கள். பொய்யேன்? உங்கள் கோயில்களினிடத்தும் உங்களிடத்துங் காணப்படும் அசுத்தக் கிரியைகளும், உங்களிடத்தே காணப்படும் மயக்கவறிவும், சிவாகமசம்மதம்போலும் என நினைந்து, அச்சிவாகமத்தையும் அதனை அருளிச்செய்த சிவபெருமானையும் குற்றம் பே

சம் பாதிரிமார்களுக்கும், அவர்கள் சொற்கேட்டு மயங்கி விடுஞ் சைவசமயிகளுக்கும், உங்கள் அசுத்தக்கிரியைகளும் மயக்கவறிவுஞ் சிவாகமசம்மதங்களல்ல இவையெல்லாம் உங்கள் கோயிலதிகாரிகள் பிராமணர்கள் குருமார்களுடைய அறியாமையால் விளைந்த கேடுகள், சிவாகமக்கருத்தோ வேறு என்னும் உண்மையை அறிவிக்கவும், உங்களால் எச்சுக் கேட்டுங் கேட்டும் இவ்வுண்மையை உங்களுக்கு அறிவித்து உங்களைத் திருத்தி உய்விக்கவும், பரங் கருணைத் தடங்கடலாகிய சிவபெருமானுடைய ஆஞ்ஞையைச் சிர மேற்கொண்டு அவர் திருவருளை முன்னிட்டு நிற்கும் நம்முடைய பிரசங்கங்களும், பத்திரிகைகளும், புத்தகங்களுமா, புறச்சமயிகள் செய்யுஞ் சைவதூஷணங்களுக்குத் துணையாய் முடிவன? நன்று நன்று. சிறுவர்களும் உங்களை நகையாடார்களா?

௬. இக்கந்தசுவாமிகோயிலில் ஆயுதப்பிரதிட்டை முதலியவை குற்றம் என்று நாம் நமது பத்திரிகையிலே பேசியது சுப்பிரமணியதூஷணம் எனவும், நம்மைச் சத்துருசங்கார வேலாயுதந் தண்டித்தே விடும் எனவும், புறம் பேசித்திரிகின்றீர்களே! சிவாகமவிதிக்கு ஒரு சற்றும் மாறுகாது பிறந்த நமது சொல்லளவிற்கே வேலாயுதம் நம்மைத் தண்டித்தேவிடும் என்பது உங்களுக்கும் உங்கள் கோயிலார்களுக்குந் துணிவேயாமாயின், அக்கோயிலார்கள், தாங்களே அச் சத்துரு சங்கார வேலாயுத சந்நிதியிற்றானே உங்களுள்ளே பிராமணகுருமார் பிரபுக்கள் முதலிய பலரையும் ஒருங்கு கூட்டிக் கீழிருத்திவிட்டு, நம்மையோ உயர்ந்த ஆசனத்திருத்திக்கொண்டு அவ்வேலாயுத விரோதமாகிய நஞ்சொல்லைக் கேட்டல் கேட்பித்தல் செய்து மகிழ்ந்து பாராட்டிய

தும், நெடுங்காலம் அவ்வாயுதத்துக்கு உரித்தாயேயுள்ள இடத்தை நஞ்சொல்லினது நிறைவேற்றத்தின் பொருட்டே ஒப்பித்துவிட உடன்பட்டதும், அதன்பொருட்டே கடல் கடந்து கருங்கற்கள் கொண்டுவந்து சேர்த்ததும் பிறவுமாகிய தங்கள் செய்கைகளுக்கு அவ்வேலாயுதந் தங்களை எவ்வளவு தண்டிக்குமோ என்று, ஆலோசியாது விட்டதேனோ? இனி நீங்கள், நஞ்சொல்லை மகிழ்ந்து பாராட்டி அச்சொல்லையே நிறைவேற்றிவிடும்பொருட்டுக் கையொப்பம் வைத்ததும், பணங் கொடுத்ததும் பிறவுமாகிய உங்கள்செய்கைகளுக்கு அவ்வேலாயுதம் உங்களை எவ்வளவு தண்டிக்குமோ என்று, ஆலோசியாது விட்டதேனோ? "இவர்மாத்திரம் அகப்பட்டுக்கொண்டார்; நாங்களும் எங்கள் கோயிலதிகாரிகளுந் தப்பிவிட்டோம்" என்றெண்ணமோ? இப்பொழுது தான் நமது சொல்லை நிறைவேற்றுங் கருத்து உங்களுக்கு இல்லாதே போய்விட்டதோ? "தங்கள் பிரசங்கங் கேட்ட பின் இக்கோயிலிலே நாங்கள் அருவருத்துக் கும்பிடுகிறோம்; தங்கள் சொல்லின்படியே புதுக்கோயிலும் விக்கிரகப்பிரதிட்டை முதலியனவுஞ் சீக்கிரம் நிறைவேறத் தரிசிக்கும் பெரும்பேறு எங்களுக்குக் கிடைக்குமோ" என்று நம்மெதிரே பேசிய சிலர் இப்பொழுது நம்மைச் சுப்பிரமணிய நிந்தகர் என்று இகழ்கின்றார்களாம். ஓகோ! இகழ்ந்தும் என்னை? அவர்கள் நாஞ் சென்னபட்டணத்திற்குச் சென்ற பின் கோயிற்கட்டடமும் விக்கிரகப்பிரதிட்டை முதலியனவுஞ் செய்துவிடல் வேண்டும் என்று பேசுகின்றார்களாம். நமது தொடக்கம் புகழ்ப்பொருட்டாயினும் ஆகுக; புண்ணியப்பொருட்டாயினும் ஆகுக. எப்படியாயினும், பிறர் சொல்லாலன்றி நஞ்சொல்லாற் பிறந்த நமது கோட்பாடு நிறைவேறிவிட்டாற் புகழும் புண்ணியமும் நமக்குத்தானே.

நமக்கு வருத்தமேன்! தங்கள் கருத்து இது என்பதனை நமக்கு நேரே அறிவித்துவிட்டால், நாம் இத்தேசத்தை விரைந்து விட்டகன்றுவிடுவோம். அகன்றுவிட்டால், இங்கே நமது கோட்பாடு நிறைவேறிவிடுதல் ஒருபயன், எச்சுக் கேளாமை ஒருபயன், போகும் வழிகளில் எதிர்ப்படுங் குருலிங்கசங்கமங்களை வழிபடுதல் ஒருபயன், அங்கங்குள்ள பெரியோர்களை அடுத்து அவரவரிடத்துள்ள உண்மை நூல்களைக் கையகப்படுத்திக்கொள்ளல் ஒருபயன், சென்னபட்டணஞ் சேர்ந்து பலநூல்களையும் உரைகளையுந் திருத்தியும் புதிய நூல்கள் சில செய்தும் உலகத்தாருக்குப் பயன்படும்பொருட்டு அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தல் ஒருபயன், பற்றற்ற மெய்ஞ்ஞானிகளுக்கும் வேண்டற்பாலனவேயாகிய அன்னவஸ்திரங்களுக்கு முட்டற அப்புத்தகங்களால் வரும் ஊதியங்கொண்டு வாழ்தல் ஒருபயன், எஞ்சிய ஊதியம் நாம் எடுத்த தருமங்களுக்காயினுஞ் சிவாலயங்களுக்காயினும் பயன்படல் ஒருபயன், இவை பல முற்றியபின்னராயினும் இடையிலாயினுந் தேவாரம்பெற்ற சிவஸ்தலம் யாதேனும் ஒன்றில் இறத்தல் ஒருபயன் ஆகிய இப்பயனெல்லாம் நமக்கெய்துமே! குறையென்னை! "சிதம்பரத்திலே தீக்ஷிதர்களுக்குப் பயந்தோடி வந்தவர் இனி அங்கே போவார்தாமோ" என்று பேசுவோருஞ் சிலர் உளர்; அவர் அங்கே நம்மோடு உடன்வந்து பார்த்துவிடலாமே.

எ. பதியினது விளக்கம் அறிவொரு சிறிதும் இல்லாத கல் வெள்ளி செம்புகளிலே அதிகமா? அப்பதியினது இலக்கண முதலியவைகளை யதார்த்தமாகவே அறிவிக்கும் பேரறிவே வடிவாகிய தேவார திருவாசகங்களிலே அதிகமா? முன்னையவைகளிலும் பார்க்கப் பின்னையவைகளில் அநந்த

கோடிமடங்கதிகம். இன்னும், கல் வெள்ளி செம்புகளிலே பதியினது விளக்கம் மந்திரநியாசத்துக்குப் பின்னன்றி முன்னில்லையே; தேவார திருவாசகங்களோ, பஞ்சாக்ஷர மந்திரத்தையும் அப்பஞ்சாக்ஷர முதலிய சகல மந்திரப் பொருள்களையும் உள்ளடக்கி நின்று சித்தி முத்தி சித்திப் பிக்கும் மகாமந்திரவடிவமேயாதலால், அவைகளிலே பதியினது விளக்கம் நித்தியம் என்பது சத்தியமாமே. இன்னும், எத்தனையோ அளவிறந்த காலம் எத்தனையோ அளவிறந்த மகான்களாலே மந்திரநியாசஞ் செய்யப்பட்டு, அவ்வப் போழ்து அவ்வவருக்குப் பதிவிளக்கம் பெரிது சித்திக்கப் பெற்ற சுயம்புலிங்க காணலிங்க தைவிகலிங்க ஆரிடலிங்கங் களுள்ளும், எவை விசேடமுடையன? தேவார திருவாசக மேறப்பெற்ற இலிங்கங்களன்றோ! இவ்வுண்மை, சிவபுரா ணங்களாலும், தேவார திருவாசகம் பெற்ற சிவஸ்தலங்க ளில் விசேட வழிபாடு காட்டும் பெரியோர்களுடைய அநு ட்டானத்தினாலும், இனிது விளங்கும். இன்னும், மதுரை முதலிய திருப்பதிகளிலே இலிங்க முதலிய திருமேனிகள் இருந்தும் என்னை! ஆலயம் மண்டபங் கோபுரந் திருமதி லாதிகள் இருந்தும் என்னை! திருவாபரணாதிகள் இருந்தும் என்னை! பூசை திருவிழாக்களுக்கு விளைநிலந் தோட்டங் கள் இருந்தும் என்னை! மடங்களும் ஆசாரியர்களுஞ் சந்நி யாசிகளும் இருந்தும் என்னை! எத்தனையோ லக்ஷப்பிரா மணர்கள் விலாப்புடைக்க அன்னம் புசிக்குஞ் சத்திரங்கள் இருந்தும் என்னை! அந்தப் பிராமணர்களாலே வேதபாரா யணம் நிகழ்ந்தும் என்னை! அருகசமயமும் புத்தசமயமும் எங்கெங்குந் தலைப்படத் தலைப்படச் சைவங் குன்றிய குன் றியபொழுது, இவைகளெல்லாங் கூடியும் அப்புறச் சமயங் களை யோட்டிச் சைவத்தை நாட்டினவா? இல்லையே. பின்பு அது செய்தவை யாவை? தேவார திருவாசகங்களன்றோ!

இவ்வுண்மை நீங்கள் அறியீர்களா? பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள்புராணங் கேட்டதில்லையா? இவை படிக்கப்பெறாத கோயில்களுங் கோயில்களா? இவை படிக்கப்பெறாத மடங்களும் மடங்களா! இவையறியாத கோயிலதிகாரிகளுங் கோயிலதிகாரிகளா! இவை அறியாத பிராமணர்களும் பிராமணர்களா! இவை அறியாத சைவாசாரியர்களுஞ் சைவாசாரியர்களா! இவை அறியாத சைவர்களுஞ் சைவர்களா!

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரே, னீறெங்கே! மாமறைநூ றானெங்கே!
எந்தைபிரா னஞ்செழுத் தெங்கே!"

அ. நீங்கள் சைவசமயிகள் என்பது சத்தியமேயானால், அச்சைவசமயத்தை நாட்டிய இத்துணைப் பெருஞ் சிறப்பினவாகிய தேவார திருவாசகங்களிலே உங்களுக்கு விசுவாசம் இராதா? விசுவாசம் இருப்பது சத்தியமேயானால், இக்கந்தசுவாமிகோயிலிலே இக்கோயிலதிகாரியினாலே இத்தேவாரத்துக்கு அவமானமும் தேவாரபாராயணம் நடவாமைக்கு ஏதுவாகிய உயிர்க்கொலையுஞ் செய்யப்பட்டபொழுது, நீங்கள் மனம் பதைபதையீர்களா? மனம் பதைபதைத்தது சத்தியமேயானால், நீங்களெல்லாங் கூடி, உங்கள் பொருள்கொண்டுதானே சீவிக்கிற இக்கோயிலதிகாரியைப் பார்த்து: "நீ இவ்வதிபாதகமாகிய சிவத்துரோகஞ் செய்ததனால், இனி நாங்கள் ஒருபொழுதும் இச்சிவத்துரோகத்துக்கு இடமாகிய இக்கோயிலுக்கு வரோம்; இங்கே பூசை திருவிழா ருத்திராபிஷேகஞ் செய்வியோம்; உண்டியிலே பணமிடோம்; காவடியெடோம்; அருச்சனை செய்வியோம்;

மாவிளக்கிட்டுப் பணிந்தோம்; எல்லாரும் உதவிய எல்லா வகைப் பொருளுங் கொண்டு நடத்தப்படும் இக்கோயிலே வழுவற நடத்துதற்கு நீ யோக்கியையல்லை என்று உன்மீது வழக்குத் தொடுப்போம்" என்று பத்தியாவேசங் கொண்டு கண்டித்து, இவையே கடைப்பிடியாகக் கொள்வீர்களா? கொண்டீர்களானால், வயிற்றுப்பிழைப்புக்கு ஊறு வருகின்றதே என்று பயந்தாயினும், இக்கோயிலதிகாரி திருத்தமடையானோ? விளைந்த குற்றங்களெல்லாம் உங்களிடத்தனவே.

கூ. இவ்வியாழ்ப்பாணத்திலே, நீங்கள் முன்னொருபொழுதுங் காணாத தேவாரத் திருக்கூட்டக் காட்சியும், முன்னொருபொழுதுங் கேளாத தேவாரக் கேள்வியும், முன்னொருபொழுதும் பெறாத சிவபத்தியும், போனவருஷத் திருவிழாவிலே உங்களுக்குக் கிடைத்தது நன்மையா தீமையா? இது நன்மை என்பது சத்தியமேயானால், அத் திருக்கூட்ட வாசத்துக்கும், அதற்குச் செயற்பாலதாயும், "மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும் அண்ணலா ரடியார்தமை யமுது செய்வித்தல் கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல் உண்மையாமெனி னுலகர் முன் வருகென வுரைப்பார்" என்னும் பெரியபுராணத் திருவிருத்தத்திலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எலும்பைப் பெண்ணாக்கிய திருப்பதிகத்தில் அருளிச்செய்தபடி திருவிழாவோடு முதற்கண் உடனெண்ணப்பட்டதாயும், உள்ள மாகேசுர பூசைக்கும் இக்கோயிற்றெற்குவீதி மடம் இடமாயது நன்மையா தீமையா? இது நன்மையென்பது சத்தியமேயானால், இம்மடந் தங்கள் வியபிசாரத்துக்குங் காகித விளையாட்டுக்கும் இடமாகாது பிறவற்றிற்கு இடமாயிற்றே என்று பொறாமையினாலும், திருவிழா முடிந்த

பின்னரும், அம்மடத்தறைகளைத் தங்கள் வியபிசாரத்துக்கு இடமாகாவண்ணம் அம்மடமுடையார்கள் பூட்டிக்கொண்டு போய்விட்டார்களே என்ற கோபத்தினாலும், அம்மடச் சுவரிலே அம்மடமுடையார்களுடைய குடும்பத்துக்கு விரோதமாகிய கெட்ட வார்த்தைகளைக் கரியினால் எழுதுவிக்கவும், அறைப் பூட்டை முறித்து உள்ளே புகுந்து மலங் கழிக்கவுஞ் சவரம் பண்ணுவிக்கவும் அம்மடத் திண்ணையிலே ஒன்றுக்கும் பற்றாத கீழ்மக்களைக் கூட்டியிருத்தி அம்மடமுடையார்களையுஞ் சிவசாத்திர போதகர்களையுஞ் சிவனடியார்களையுந் தூஷிக்கவும், காகிதம் விளையாடவுந் தலைப்பட்ட இக்கோயிலார்களை நீங்கள் கண்டியாது விடுவீர்களா? "சிவஞான நூல்களை ஓதல் ஓதுவித்தல் கேட்டல் கேட்பித்தல் சிந்தித்தல் என்னும் ஞானயாகஞ் செய்யும் மடாலயத்தைக் கட்டுவித்தவர் பெறும் பலம், கோடி தேவாலயங் கட்டுவித்த பலத்துக்கும், மூவாயிரகோடி யாகஞ் செய்த பலத்துக்குஞ் சமமாகும்" என்பது சிவாகமத்துணிவேயாகவும், இம்மடத்தில் இத்தீமைகள் செய்தவரைச் சுப்பிரமணியக்கடவுள் தண்டியாதொழிவாரா?

கO. மேற்காட்டிய "மண்ணினிற் பிறந்தார்" என்னுந் திருவிருத்தத்திற் கூறிய மாகேசுரபூசை திருவிழா என்னும் இரண்டனுள்ளும், பின்னையதாகிய திருவிழாவுக்கு இவ்வருஷம் ஊறு வந்ததே என்று பதை பதைக்கும் நீங்கள் மாகேசுர பூசையோ முன்னையதாகவும், அம்மாகேசுரபூசையை ஏற்கும் அடியார் திருக்கூட்டந் திருவிழாவுக்கு இன்றியமையாச் சிறப்பினது என்பது புலப்படுத்தற்கே அப்பூசையை முற் கூறினாராகவும், அத்திருக்கூட்டம் இல்லாத விழாக காமாதிகளையே பயந்துவிடுந் தீவிழா என்று அதனை நீக்குதற்கே "நல்விழா" என்று அடை கொடுத்தாராகவும், இத்

துணைச் சிறப்பினதாகிய அம்மாகேசுர பூசைக்கு ஊறு வந்ததே என்று பதைபதையாதது என்னையோ? "உருத்திர பல்கணத்தார்க் கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்" என்னும் அருமருந்தன்ன தேவாரம் நீங்கள் கேட்டதில்லையா? (உருத்திர பல்கணத்தார் என்றது மாகேசுரர்களை. அட்டு - சமைத்து. இட்டல் - கொடுத்தல்.)

கக. இவ்வருஷந் திருவிழா நிறுத்தப்பட்டதே என்று பதைபதைக்கிற ஆடவர்களும் பெண்களும் யாது காரணம் பற்றிப் பதைபதைக்கிறார்களோ! தங்கள் தேவ வழிபாட்டுக்கு ஊறு வந்துவிட்டது என்று தானே! "பற்பல ஊர்களினின்று வந்து கூடும் வெகு சனக்கூட்டத்தில் வியாபாரஞ் செய்து பிழைக்கும் பிழைப்பை இவ்வருஷம் இழந்தோமே" என்று பல வியாபாரிகளும், "தாசிகளுடைய அலங்காரக் காட்சியை இழந்தோமே" என்று பல தூர்த்தர்களும், "வாண வேடிக்கைக் காட்சியை இழந்தோமே" என்று பல நாடோடிகளும், "பிறர் மனைவியரைப் பார்த்துஞ் சனக்கூட்டத்தினுள்ளே தீண்டியுங் களிக்குங் களிப்பை இழந்தோமே" என்று பல மகா பாதகர்களும், "நாங்கள் கால் அலிக்க எத்தனையோ மாசந் தட்டார் வீடு சென்று செய்வித்துக் கொடுத்த ஆபரணங்களையும், வாங்கிக் கொடுத்த பீதாம்பரங்களையும், எங்கள் மனைவியர்கள் வெகு சனக்கூட்டத்திலே காட்டி, இவள் இன்னார் மனைவி இவள் இன்னார் மனைவி என்று பலராலே பாராட்டப்படுதலைக் கேட்டுக் கேட்டு, அடையுஞ் செருக்கை இழந்தோமே" என்று பல புதுச் செல்வர்களும், "வெகு சனக் கூட்டத்திலே தாசிகளெதிரே சந்தனங் காளாஞ்சி பெறும் பேற்றை இவ்வருஷம் இழந்தோமே" என்று பலருணபாதகர்களும், "எங்கள் முன்னோர் காலத்திலாவது எங்கள் காலத்திலாவது இக்கோயிலுக்கு

எங்களால் ஒரு செம்புச் சல்லியுஞ் சேராதிருந்தாலும், நாங்கள் எங்களுக்கு ஆசாரம் இல்லை தீக்ஷை இல்லை அநுட்டானம் இல்லை சிராத்தம் இல்லை சனனசௌச மரணசௌசம் இல்லை விபூதிதானும் இல்லை ஒரு சமயமும் இல்லை சரீரத்தின் வேறாக ஆன்மா என்பதொன்றில்லை என்றுகொண்டு சும்மா வீட்டில் இருந்தாலும், எங்கள் உத்தியோக அதிகாரத்துக்காகத் திருவிழாவில் இடையிடையே வருங் கோயிற் பிரசாதம் இவ்வருஷம் இழந்தோமே" என்று சில உத்தியோகத்தர்களும், "அப்பம் பிட்டு முறுக்குத் தேன்குழல் பனங்காய்ப்பணிகாரம் விற்றுப் பிழைக்கும் பிழைப்பை இவ்வருஷம் இழந்தோமே" என்று பல பெண்களும், "எங்கள் புருஷமாரை அதட்டி அதட்டி வாங்குவித்த ஆடையாபரணங்களை இனி எங்கே காட்டுவோம்" என்று பல பெண்களும், "திருவிழாத் திருவிழா என்று ஆபரணம் பழுக்கச் சுடுவித்தோமே; சுடுவித்தும் பலனில்லையே" என்று பல பெண்களும், "புருஷமாரை வீட்டுக்குக் காவல் வைத்துவிட்டுத் திருவிழாத் திருவிழா என்றோடுகிற நாங்கள் இவ்வருஷம் என் செய்வோம்" என்று பல பெண்களும், "எங்கள் புருஷமார் கிறிஸ்தவர்களேயாகவும், தங்கள் சமயத்துக்குந் தங்கள் கோயிலுக்கும் வரும்படி பலமுறை எங்களைக் கேட்கவும், வராவிட்டாற் றங்கள் உத்தியோகம் போய்விடும் போய்விடும் என்று அழுதழுது பலமுறை கெஞ்சவும், நாங்கள் உடன்படாதது இந்தத் திருவிழாக் கொண்டாட்டத்தின்பொருட்டன்றோ! இனி யாது செய்வோம் யாது செய்வோம்" என்று சில பெண்களும், "எங்களை அடுக்கும் பாலியர்கள் எங்களுக்கு விலை தந்துவிட்டு வாங்கிக் கொண்டு போய்க் காட்டும் மேக வியாதிகளைப் போக்கி வைத்தியர்கள் பெறும் பொருளும்

எங்களைத்தானே சேரும்வண்ணம் வாழும் இப்பெருவாழ்வை இழந்தோமடி இழந்தோமடி" என்று சில தாசிகளும் பதைபதைத்தல் யாவர் அறியாதார்! பதைபதைக்கிறவர்களுள்ளே "கடவுள் வழிபாட்டுக்கு ஊறு வந்ததே" என்று பதைபதைக்கிறவர்கள் சிலராயினும் இல்லையா என்பீர்கள் போலும்! கடவுள் வழிபாட்டில் விருப்பமுங் கடவுளுடைய ஆஞ்ஞைக்குப் பயமும் யதார்த்தமாகவே உடையவர், நமது முதற்பத்திரிகையை வாசித்துங் கேட்டும் அதிலே பேசப்பட்டவைகளெல்லாம் மெய்யென்றறிந்த பின்னரும், இக்கோயிலுக்கு அடியெடுத்து வைக்க நினைப்பாரா! அப்பத்திரிகையை வாசித்தவர்களுள்ளுங் கேட்டவர்களுள்ளும், அறிவு ஒழுக்கஞ் சாதியாசாரஞ் சமயாசாரம் ஈசுரபத்தியுடையவர் யாவராயினும் இக்கோயிலுக்குப் போகக் காண்கிறீர்களா!

கஉ. இதுவரையும் இவ்வியாழ்ப்பாணத்திலே திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்கள் எவையோ! வாணங்கள் பட்டு வீடுகள் எரிந்ததும், பந்தல்கள் எரிந்ததும், கோயில்கள் எரிந்ததும், பலருக்குத் தலை உடைந்ததும், கை ஒடிந்ததும், கால் ஒடிந்ததும், குடல் சரிந்ததும், மரணங் குறுகியதுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! பல பெண்டிர்கள் சனநெருக்கத்திலே சோரர்கள் கைப் பட்டுத் தங்கள் ஆபரணங்கள் இழந்ததும், இரவலாபரணங்கள் இழந்து "போன முயல் பெருமுயல்" என்றாற்போல உடையவர்கள் விதித்த விலைப்படி இருமடங்கிறுத்ததும், தூர்த்தர்கள் கைப்பட்டுக் கற்பழிந்ததுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! பற்பலர் இராத்திரியிலே குடும்பத்தோடு வீடு விட்டு நீங்கிவிட, அவர்கள் வீடெரிந்ததுங், களவுபோயதுந்

திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! பல சிறுபிள்ளைகள் சனநெருக்கத்திலே தங்கள் கைப்பற்றிய பிதா மாதாக்களைப் பிரிந்து அழுதழுது தங்கள் கால் கை கழுத்துக்களில் உள்ள ஆபரணங்களைப் பறிகொடுத்துத் தேம்பித் தேம்பி வீடு சேர வழியறியாது மயங்கித் திரிந்ததும், அவர்கள் பெற்றார்கள் தலை முட்டியும் மாரடித்தும் அவர்களைத் தேடித் தேடி அலைந்ததுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! பற்பலர் கல்லெறியுண்டு தடியடியுண்டு கத்திவெட்டுண்டு தலையுடைந்து காலொடிந்து கைமுறிந்து கோட்டுக்குத் திரிந்ததும், தாங்கள் வருந்தித் தேடிய பொருளைப் பிறக்கிராசிமாருக்கு வலிந்து போய் இறைத்துவிட்டு, அவர்கள் கைப்பற்ற வேண்டியதெல்லாங் கைப்பற்றிக்கொண்ட பின், முடிவிலே "நீங்கள் சமாதானமாய்விடுங்கள்" என்று தங்களுக்கு விதிக்கத் தாங்கள் மறுக்க, அவர்கள் மூலரோக கயரோக சலரோகங்களினாலே தங்கள்மேலே நாய் போல் விழுந்து சள்ளிடத், தாங்கள் எதிர்பேசப் பயந்து மொறுமொறுத்துக்கொண்டு திரும்பி வெளியில் வந்து, மனம் புழுங்கி மண்ணாள்ளித் திட்டித் திரிந்ததுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! தமிழ்ப்பள்ளிக்கூடங்களிலும் இங்கிலிசுப்பள்ளிக்கூடங்களிலும் படிக்கப் புகுந்த பற்பல மாணாக்கர்கள் இராத்திரியிலே திருவிழாத் திருவிழா என்றோடிச் சனக்கூட்டத்திலே நெருக்குண்டு தள்ளுண்டு அடியுண்டு நுழைந்து தாசிகளுடைய நாட்டிய கீதங்களைப் பார்த்துங் கேட்டுங் கெட்ட வார்த்தைகளுங் கெட்ட செய்கைகளும் பழகிக்கொண்டதும், அவர்கள் இராப்பாடமும் இழந்து இருபது இருபத்தைந்து நாழிகைவரையும் நித்திரையும் இழந்து மற்றநாட் பள்ளிக்கூடங்களிலே பாடம் ஒப்பியாது

பிந்தியுந் தூங்கி விழுந்துங் கல்வியை இழந்ததும், அவர்கள் வீட்டுவேலை தோட்டவேலை வயல்வேலைகளும் பழகாது படிக்கிறோம் படிக்கிறோம் என்று எத்தனையோ வருஷம் புத்தகந் தூக்கிக்கொண்டு வித்தியாதக்ஷிணை இறுத்துக்கொண்டு பெருமுயற்சியுடையவர்கள்போல் ஓடித் திரிந்துங் கல்வித்தேர்ச்சி பெறாது திரும்பியதும், அவர்கள் உத்தியோகம் உத்தியோகம் என்று கேட்டபொழுதெல்லாம் ஒரு வசனந்தானும் பிழையறத் தொடுக்கத் தங்களால் இயலாமையினாலே பிறரிடத்தே பலமுறை அலைந்து திரிந்து விண்ணப்பம் எழுதுவித்துக்கொண்டு கச்சேரி கோடுகளுக்கு ஓடியும் உத்தியோகங் கிடையாமையினாலும் வேளாண்மை வேலை முன் பழகிக்கொள்ளாமையினாலும், ஒரு பிழைப்புமின்றி நடைப்பிணங்களாய்த் திரிவதும், அவர்கள் "வேலையில்லாதவருக்குப் பிசாசு வேலை கொடுக்கும்" என்றபடி கையொப்பமில்லாக் கடிதங்கள் எழுதித் தபாற்பெட்டியிலே போட்டுக்கொண்டும், வசைப்பத்திரங்கள் எழுதியெழுதி ஒட்டிக்கொண்டும், கைதடியிலே திருவிழா, வேரக்கையிலே திருவிழா, சுதுமலையிலே திருவிழா, மூத்தநயினார் கோயிலிலே திருவிழா, இணுவிலிலே திருவிழா, நயினார்தீவிலே திருவிழா, மாவிட்டபுரத்திலே திருவிழா, பெருமாள்கடவையிலே திருவிழா, வேலம்பராயிலே திருவிழா, மாதகலிலே திருவிழா, புன்னாலையிலே திருவிழா, துன்னாலையிலே திருவிழா, மருதடியிலே திருவிழா என்று சொல்லிச் சொல்லிக் கூட்டங் கூட்டிக் கஞ்சாலேகியம் உட்கொண்டு தாசிகளுடைய வண்டிகளுக்குப் பின்னை ஓடிக்கொண்டும், சேணியதெருவிலே இரணிய நாடகம், கள்ளியங்காட்டிலே அரிச்சந்திரவிலாசம், கந்தர்மடத்தடியிலே தமயந்திவிலாசம், நெல்லியடியிலே ஏதோ

ஒரு கூத்து, பறங்கித் தெருவிலே ஏரோதுநாடகம், சங்குவேலியிலே இராமநாடகம், மானிப்பாயிலே தருமபுத்திரநாடகம் என்று கேட்ட கேட்டவுடனே கஞ்சாலேகியந் தின்று வீராவேசத்தோடு ஈட்டி வளைதடி கருங்காலித்தண்டு கைப்பற்றி நடந்து நித்திரை விழித்து, உலைந்துகொண்டும், நாடோடிகளாய்த் திரிந்து கெடுவதுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! செல்வர்கள் உத்தியோகத்தர்கள் பிராமணர்கள் குருமார்கள் வித்துவான்கள் முதலியவர்களுள்ளே அநேகர் தாசிகளை அடுத்துத் தங்கள் கைப்பொருளும் இழந்து முதுசொமும் இழந்து தங்கள் மனைவியர்கள் கொண்டுவந்த சீதனமும் இழந்து தங்கள் சாதியாசார சமயாசாரங்களும் இழந்து தாங்கள் கற்ற கல்வியும் இழந்து அலைந்து திரிவதும், அவர்களுள்ளே பலர் வெட்டை கிரந்தி அரையாப்புப் பகந்தரம் இலிங்கப்புற்றுச் சலரோக முதலிய பெருங்கொடு வியாதிகளினாலே பீடிக்கப்பட்டும், வைத்தியர்களிடத்தே பலமுறை அலைந்து பொருள் செலவிட்டு மருந்து வாங்கிப் புசித்தவிடத்துங் காமப்பற்றினாலே திரும்பத் திரும்பப் பத்தியங் கெடுத்தும், நல்லிரத்தம் இழந்து சரீரம் வெளுவெளுத்து எலும்பு வெளியே தோன்ற மெலிந்து தள்ளாடித் திரிந்து ஆயுசு குறுக மரணத்துக்கு ஆளானதும், இன்னும் அவர்கள் தங்கள் வியாதிகளைத் தங்கள் மனைவியர்களுக்குங் கொடுத்துத் தங்கள் பிள்ளைகள் பிறக்கும்பொழுது வியாதியோடுதானே பிறந்து கிடந்து வருந்தத் தாங்கள் கண்ணீர் வார மனம் புழுங்கப் பெருமூச்செறிந்து வைத்தியர்வீடு திரிந்து மருந்துசெய்வித்து எஞ்சிய பொருளும் இழந்து சந்ததியும் இழந்து வாடி நடைப்பிணங்களாய்ச் சஞ்சரிப்பதும், இன்னும் அவர்களுள்ளே பலர் சொக்கட்டானாடவுங், காகிதமாடவுங்,

கஞ்சாத் தின்னவும், அவின் தின்னவும், தாசிகள் வீட்டிலே புசிக்கவும், உவைன் விறண்டி சாராயங் குடிக்கவும், பிதா மாதா தமையன் மாமன் உபாத்தியாயர் முதலிய பெரியோர்களை எதிர்க்கவும் பழகிக்கொண்டதும், தாசிகளுக்குக் கொடுக்கப் பொருளில்லாமைபற்றிப் பொய்பேசவுங் களவெடுக்கவும் நம்பிக்கைத்துரோகஞ் செய்து பிறர் குடிகெடுக்கவும் பொய்வழக்குத் தொடுக்கவுந் தலைப்பட்டுக்கொண்டதும், தாசிகளுக்கு வாக்குத்தத்தஞ் செயப்பட்ட ஆபரணாதிகள் கொடுக்க இயலாவிடத்துத் துப்பாக்கி முதலியவைகளினாலே கண்டவர் கேட்டவரெல்லாம் பதைபதைக்கத் தற்கொலை செய்துகொண்டதுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! கலியாணவீடுகளுக்குப் பெரும் பொருள் செலவிட்டுத் தாசிகள் அழைக்கப்படுவதும், அங்கே சதுரிலே தாசிகள் மதிக்கும்வண்ணம் புறப்பல ஆடவர்கள் தங்கள் கைப்பொருளும் இழந்து காமாக்கினியினால் வெந்து துச்சொப்பன முதலியவைகளினாலே தங்கள் சரீர பெலமும் இழந்து வருந்துவதும், அந்தந்தக் கலியாணவீட்டில் உள்ள பிள்ளைகள், தாசிகளெதிர்ப்பட்டு நெருப்பெதிர்ப்பட்ட வெடிமருந்துபோலாகிக் கூடியும், பின்பு பிரிவாற்றாது தாசிகள் வீட்டுக்கு மறைவாகப் போயும், அம்மறைவொழுக்கம் வெளிப்பட்ட பின்பு "நாம் நமதிஷ்டப்படி செய்வோம்: நம்மைக் கண்டிப்பவர் யாவர்! தண்டிப்பவர் யாவர்!" என்று பலருங் காணும்படி போயுங் கெட்டுலைவதும், அந்தந்தக் கலியாணவீட்டில் உள்ள பெண்கள் தாசிகளோடும் அளவளாவிக் கெட்டவார்த்தை பேசிக் கெட்ட பழக்கம் பழகிக்கொள்வதுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனங்களன்றோ! இத்தேசத்துப் பிரபுக்களும் உத்தியோகத்தர்களும், தாங்கள் கவர்ணரை அழைத்து உபச

ரிக்குஞ் சபைகளிலே தாசிகளை வருவித்து, அவர்களுடைய நாட்டியத்தைக் காட்டி, கததோலிக் குருமார்கள், பாதிரிமார்கள், துரைமார்கள் எல்லாருக்குந் தங்கள் அறியாமையையுந் தீயொழுக்கத்தையுந் தங்கள் கோயிற் றுராசாரங்களையும் வெளிப்படுத்தி, அவர்களால் இகழப்படுவதுந் திருவிழாக்களால் விளைந்த பிரயோசனமன்றோ! பற்பல ஆடவர்கள், தாங்கள் பிள்ளைகள் பேரர்கள் பேர்த்திகள் கண்டு நரை திரை அடைந்த கிழவர்களேயாயினும், திருவிழாக்களிலே தாசிகளையும் பிறர்மனைவியரையுங் காணும்பொழுது தங்கள் மனம் படும்பாடு தங்கள் மனச்சாட்சியே சொல்ல அறிந்திருக்கின்றார்களே! அறிந்திருந்தும், தங்கள் தங்கள் வீட்டுப் பெண்டிர்களையும் பிள்ளைகளையுந் திருவிழாக்களுக்கு அனுப்புதற்குக் காரணம் யாதோ! தங்கள் மனம் போல அவர்கள் மனம் வேறுபடாது என்ற துணிவு காரணமோ? தாங்கள் அடைந்த இன்பத்தை அவர்கள் அடையாதிருக்கலாமா என்ற இரக்கங் காரணமோ? தாங்கள் மாத்திரங் கெட அவர்கள் கெடாதிருக்கலாமா என்ற பொறாமைதான் காரணமோ? தங்கள் மனைவியர்களைத் தங்கள் சொல்வழியே அடங்கி ஒழுகுவிக்கும் ஆண்மை இல்லாது தங்கள் மனைவியர்கள் சொல்வழியே தாங்கள் பயந்து நடுநடுங்கி ஒழுகும் பேடிமைதான் காரணமோ? தாங்கள் பிறர் குடி கெடுத்துச் சம்பாதித்த பொருள் அழியாது தங்கிவிட்டால் அப்பொருள் கொண்டு சீவிக்கும் பிள்ளைகளுக்குத் தப்பாது கேடு வரும் என்ற பயங் காரணமோ? அறியேம் அறியேம்!

கரு. சிவாகமத்திலே புண்ணியம் என்று விதிக்கப்பட்ட திருவிழாவைக் குற்றம் பேசலாமா என்பீர்கள் போலும்! பிறருக்கு அன்னபானீயங் கொடுப்பது புண்ணியந்தான் அது எதினாலே புண்ணியமாயது? பசி தாகங்களைப்

போக்கி அவருயிரை உடம்பிலே நிலைபெறச் செய்தலினலை ன்றே? உடம்பினின்றும் உயிரைப் பிரிக்கும் விஷத்தோடு கலந்த அன்னபானீயங் கொடுப்பது புண்ணியமாகுந்தானே? திருவிழாச் செய்வது புண்ணியந்தான். அது எதினலே புண்ணியமாயது? காமமுதலிய தீமைகளைப் போக்கி ஆன்மாக்களுக்கு ஈசுரபத்தியை வளர்த்தலினலன்றே! முன்னுள்ள ஈசுரபத்தியையுங் கெடுக்கும் விலைப்பெண்கள் கூட்டமுதலியவற்றோடு கலந்த திருவிழாச் செய்வது புண்ணியமாகுந்தானே? உலர்ந்த விறகுகளேயாயினும், தனித்தனி கிடக்கும்பொழுது அதிலே நெருப்பு விரைந்து பற்றிச் சுவாலிப்பதரிது; அவ்விறகுகள் பல ஒருங்கு கூடிய கூட்டத்திலே நெருப்பு விரைந்து பற்றி மிகச் சுவாலிக்கும்; அக்கூட்டத்திற் புகுந்த பச்சை விறகுகளும் நெருப்புப் பற்றி எரியும்: அதுபோலவே, ஈசுரபத்தி பண்ணுதற்கு யோக்கியர்களாயுள்ளவர்களுந் தனித்தனி இருக்கும்பொழுது அவரவரிடத்தே பத்தி விரைந்து தோன்றி வளர்வதரிது; அவர்கள் ஒருங்குகூடுங் கூட்டத்திலே பத்தி விரைந்து தோன்றி மிக வளரும்; அக்கூட்டத்திற் புகுந்த அயோக்கியர்களும் பத்தி தோன்றப் பெறுவர்கள். இக்கருத்துப்பற்றியன்றே பத்தர் கூட்டத்தின் பொருட்டுத் தேவாலய மடாலய முதலியன சிவாகமங்களில் விதிக்கப்பட்டன; இதுபற்றித் தானே ஒளவையார் "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்று திருவாய்மலர்ந்தருளினர். தமது உடம்பின் அழுக்கைக் குளத்து நீரின் மூழ்கிப் போக்க விரும்புவோர், முன் உள்ள அழுக்கோடு பின்னும் ஆயிரமடங்கதிகமாகிய அழுக்கை ஏற்ற வல்ல சேறு மல மூத்திர முதலியவை செறிந்த குளத்திற் போய் இறங்க, நினைப்பாரா! தமது மனசின் உள்ள பாவத்தைத் ஆலயத்து மெய்யடியார் கூட்டத்திற் கல

ந்து அன்பு செய்து போக்க விரும்புவோர், முன் உள்ள பாவத்தோடு பின்னும் ஆயிரமடங்கதிகமாகிய பாவத்தை ஏற்ற வல்ல பொதுமகளிர் கூட்டந் தூர்த்தர் கூட்டங் கலககாரர் கூட்ட முதலியவை செறிந்த ஆலயத்திற் போய்ப்புக, நினைப்பாரா? நல்ல குளம் அகப்படாவிடத்துத் தமது கிணற்று நீர் மொண்டு ஸ்நானஞ் செய்வதுபோல, நல்ல ஆலயம் அகப்படாவிடத்துத் தமது வீட்டிலிருந்து தியான செப தோத்திரங்களால் அன்பு செய்துகொள்ளலாமே! சைவசமயிகளே! நீங்கள் தேவவழிபாட்டில் யதார்த்தமாகவே விருப்பம் உடையீர்களாயின், உங்கள் உங்களால் இயலும் பொருள் கொண்டு உங்கள் உங்கள் ஊரிலுள்ள ஆலயத்தை இயன்றமட்டுஞ் சிவாகமப் பிரகாரந் திருத்தி நல்லொழுக்கமும் ஈசுரபத்தியும் வளர்தற்கேற்ற சைவப்பிரசங்கமுந் தேவார திருவாசக பாராயணமும் ஏற்படுத்தி, அங்கங்கே வழிபட்டு, அன்புசெய்து, உய்யக்கடவீர்கள்.

இங்ஙனம்,

சைவப்பிரசாரகர்.

வண்ணார்பண்ணை, யுவ௵ ஆவணி௴ ௨௯௳.

## பரிசேடம்.

(ஒருவர் எழுதியனுப்பியது.)

௧. கோயிலருச்சகர்கள் விதிப்படி ஸ்நானமும் வைதிக சந்தியாவந்தனமுஞ் சைவசந்தியாவந்தனமும் ஆன்மார்த்த பூசையும் முடித்துக்கொண்டே, பின்பு பரார்த்தபூசையாகிய கோயிற்பூசை செய்தல்வேண்டும் என்பது சிவாகம சம்மதம். இக்கோயில் அருச்சகர்களுள்ளே, சிலர், அவை செய்

யாது, கோயிற் பூசை செய்கின்றார்கள். அவர்களுள்ளே சிலர் பழையது புசித்துவிட்டு வந்து, காலைப்பூசை செய்கின்றார்கள்.

௨. வடதேசத்தில் உள்ள கோயில்களிலே, அபிஷேகம் அலங்காரம் நைவேத்தியஞ் செய்யுங் காலங்களிலன்றி, மற்றக்காலங்களிலே எல்லாருஞ் சுவாமிதரிசனஞ் செய்துகொள்ளும்படி திரையை நீக்கி விடுகின்றார்கள். இக்கோயிலிலே அருச்சகர்கள் இடையிடையே திரையையிடுகின்றார்கள். இப்படிச் செய்வது யாது காரணத்தினாலே? தாங்கள் சனங்களிடத்தே அருச்சனையின் பொருட்டுப் பணம் வாங்கிக்கொண்டு உள்ளே போய்த் திரைமறைவிலே நின்று வாய் மந்திரஞ் சொல்லக் கையினாலே சந்தனங் குழைத்தலும், தாங்கள் அருச்சனை செய்யாது சும்மா நிற்றலும், தாங்கள் திருவிளக்கையுங் கர்ப்பூரவிளக்கையும் வாயினால் அவித்தலும், அச்சனங்களுக்குத் தெரிந்துவிடும் என்னும் பயத்தினாலே.

௩. விம்பத்தை ஸ்நானவேதிகையில் இருத்தி, நாலங்குல வுயரத்தினின்றும் பசுவினது நுனிக்கொம்பின் பருமைபோலச் சிறுக விழுந் தாரையினால் அபிஷேகஞ் செய்தல் வேண்டும்; அபிஷேக முதலியன செய்யுங் காலத்திலே விம்பம் ஒரு சிறிதும் அசைதலாகாது; அசைந்தாற் பிராயச்சித்தஞ் செய்தல் வேண்டும் என்பது சிவாகம சம்மதம். இங்கே அருச்சகர்கள் அபிஷேக காலத்திலே மூலவேலாயுதத்தை ஸ்நான வேதிகையில் வைத்துப் பாலபிஷேகஞ் செய்தாற் பால் கீழே சிந்திவிடும் என்று நினைந்து, அவ்வேலாயுதத்தைப் பாலண்டாவிலே தோய்த்துவிட்டு, அப்பாலேத் தாங்கள் எடுத்துக்கொள்ளுகின்றார்கள்; கோயிலதிகாரி, தமது வீட்டுச் சிராத்தத்துக்காயினுந் தமது சுற்றத்

தார் சிநேகிதர் வீட்டுச் சிராத்தத்துக்காயினும் பாலை அனு ப்பும்படி கட்டளையிடும்பொழுது, முன் சொல்லிய பிரகார மே செய்து, அனுப்பி விடுகின்றார்கள். அபிஷேகஞ் செய் தற்குரிய காலங்களிலன்றி மற்றக்காலங்களினும், தாங்கள் விரும்பிய பொழுதெல்லாம் அபிஷேகஞ் செய்கின்றார்கள்.

ச. இக்கோயிலருச்சகர்கள், இக்கோயிற் பரிசாரகர் கள் தங்களிற் றாழ்ந்தவர்கள் என்றும், ஆதலினால் அவர் கள் பாகஞ்செய்த அன்னம் பலகார முதலியவைகளைத் தாங்கள் உட்கொள்வதில்லை என்றும், வாய்ப்பறையறைகி ன்றார்களே. தாங்கள் புசித்தற்கு யோக்கியதை இல்லாத வை என்று தாங்களே விலக்கும் அன்னம் பலகார முதலிய வைகளைத், தாங்கள் பூசித்து வணங்குங் கடவுளுக்கு, நிவே திக்கலாமா? அக்கடவுள் தங்களிற் றாழ்ந்தசாதியார் என்று நினைந்துவிட்டார்களா! தங்களிற் றாழ்ந்தவர் தொட்ட அன்ன முதலியவைகளைத் தாங்கள் தொட்டு நிவேதிக்கலா மா? தொட்டு நிவேதித்தால் ஸ்நானஞ் செய்யாதே தாங்கள் புசிக்கலாமா! ஸ்நானஞ் செய்தால் தாங்கள் முன் செய்த பூசை யாதாய் முடியுமோ! அக்கடவுளுந் தங்களாலே தொடத்தகாத அசுத்தர் என்றன்றோ முடிந்தது.

ரு. இங்கே உற்சவ வேலாயுதத்துக்கு, உற்சவதினங் களிலன்றி, மற்றத்தினங்களிலே யாதாயினும் நைவேத்தி யஞ் செய்கின்றார்களா? இல்லை இல்லை.

சூ. இவ்வருச்சகர்களுள்ளே சிலரன்றி மற்றவர்கள் உருத்திரம் சமகம் அறியார்கள். அறிந்தவர்களும் உருத்தி ராபிஷேகத்திற்கு நியமமாக வருவதுமில்லை; ஓதுவதுமில்லை; வந்திருக்கினும், இடையிடையே எழுந்து பிறிது கருமத் திற் செல்வார்கள்; செல்லாதிருக்கும் நேரத்திலும், ஓதாது

தங்களுள்ளே கதை பேசுவார்கள்; உருத்திராபிஷேகஞ் செய்விக்குங் கருத்தாவைக் கண்டால் "நமோ நமோ சமே சமே" என்று ஓதுபவர்கள் போல மினுமினுப்பார்கள். உருத்திர சமகம் அறியாதவர்களை அறிய விரும்புகிறவர்கள், மேளமடித்தலை ஒழித்து விட்டு, ஒவ்வொருவரையுந் தனித்தனியே ஒவ்வொருமுறை ஓதும்படி செய்தால், அறிந்துகொள்ளலாம். உருத்திர சமகம் அறிந்தவர்களுள்ளே சிலரை "நீங்களாயினுங் கிரமமாக ஓதலாகாதா" என்று கேட்டவர்களுக்கு, அவர்கள் "கோயிலார் தருகிற தவிடுங் கல்லும் உமியும் நெல்லும் நிறைந்த முக்காற்படி உக்கலரிசிக்கும், வாடற் கத்தரிக்காய்க்கும், காற்சதங் குறைந்த ஒருபணத்துக்கும் இப்படி ஓதுதலே தகுந் தகும்" என்கின்றார்கள். இப்படி நடந்துகொண்டு வருகிற உருத்திராபிஷேகத்துக்குத்தான் சனங்கள் பன்னிரண்டு பன்னிரண்டு ரூபா இறுக்கின்றார்கள்.

எ. இக்கோயிலருச்சகர்களுள்ளே சிலர், சுவாமி வெளிவீதியிலே உற்சவங் கொண்டருளுங் காலத்திலே சுவாமியை எழுந்தருளச்செய்து வாகனத்தில் வைத்துவிட்டுத், தாங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்ப் போசனம்பண்ணித், தாம்பூலதாரண முதலிய அநாசாரங்களைச் செய்து, அவ்வநாசாரத்தோடு வந்து சுவாமியை வாகனத்தினின்றும் உள்ளே எழுந்தருளச் செய்து, அலங்கார தீபாராதனை செய்கின்றார்களே. "இக்கோயிலதிகாரியைச் சார்ந்த அசற்சூத்திரர் சிலர் சற்றும் அஞ்சாது ஒவ்வோர் காலத்திலே சுவாமியைத் தீண்டிக் கச்சுச் சாத்துகின்றார்களே! பிராமணர்களாகிய நாங்கள் போசன முதலியன செய்துவிட்டுச் சுவாமியைத் தீண்டுதல் மாத்திரங் குற்றமாய் விடுமோ" என்றெண்ணினார்கள் போலும்.

அ. இவ்வருச்சகர்களுள் ஒருவர் சிலமாசத்துக்கு முன் கருப்பக் கிருகத்தினுள் இருந்து இளநீர் குடிக்க முயன்று, முகிழ் திறக்கக் கருவி இல்லாமையால், அஸ்திரதேவர் எனப்படும் வேலாயுதத்தினாலே முகிழைத் திறந்து குடித்தாரே. இவர் அவ்வேலாயுதத்தை இளநீர் குத்தும் உல்லென்று நினைத்தார் போலும்! "வருஷந்தோறும் தட்டாராலே தீண்டப்பட்டுஞ் சம்புரோக்ஷணஞ் செய்யப்படாதிருக்கிற இவ்வேலாயுதத்தைப் பிராமணனாகிய நான் உல்லெனக் கொண்டாலாகாதா" என்று நினைத்தார்போலும்!

கூ. சென்ற மூன்றாம் வருஷத்தில், இவர்களுள் ஒருவர் மகோற்சவத்திலே உற்சவமூர்த்திக்கு அபிஷேகஞ் செய்தால் அவ்வேலாயுதத்தை எடுக்கும்போது திருவாபரணம் குழம்பிவிடும் என்று நினைந்து, அபிஷேகஞ் செய்யாது, அம்மைமாருடைய முகங்களை மாத்திரம் புளியிட்டுத் தேய்த்துத் தமது முறை முடிவாகிய சனிக்கிழமை காலை விழாவில், மற்ற முறைகாரர் வந்து முன்னே தாம் அபிஷேகஞ் செய்யாதொழிந்ததை அறிந்துவிடுவர் என்று கருதி, எல்லாமூர்த்திக்கும் அபிஷேகஞ் செய்துவிட்டாரே.

க0. இவ்வருச்சகர்களுள் ஒருவர், சில காலத்துக்கு முன் உற்சவ வேலாயுதத்தையும் அம்மைமாரையுந் தனித்தனியே கையிலெடுத்து வசந்தமண்டபத்துக்குக் கொண்டுபோம்பொழுது, "ரீரி ரீரி காக காகா" என்று வேடிக்கையாகக் கொண்டுபோனாரே. நல்லது; இவர்களுடைய செய்கைகளெல்லாம் வேடிக்கையே.

கக. திருநெல்வேலியில் உள்ள ஓரசற்சூத்திரன் தீண்டிய வைரவசுவாமியைச் சம்புரோக்ஷணஞ் செய்யாது இவர்கள் பூசிப்பதென்னோ! "மகாமண்டபத்துக் கீழைச் சுவ

ரிலே மேற்குமுகமாக வைக்கப்பட்டுள்ள அசற்சூத்திர மாப்பாணர் பிரதிமையையும் அவர் மனைவி பிரதிமையையும் புதிதுண்ணும் தினத்திலே பூசிக்கிற நாங்கள் இவ்வைரவ சூலத்தைப் பூசிக்கலாகாதா" என்றெண்ணினார்கள் போலும்.

கஉ. சிலவருஷத்துக்கு முன் இவ்வருச்சகர்கள் திருக்கார்த்திகையிலே காலைப்பூசைக்கு முன் இருபத்தெட்டுச் சகச்சிரநாமார்ச்சனை நடத்தினார்கள். இவர்கள் எப்படி நடத்தினார்கள் எனின்; ஒவ்வொருவரையுந் தனித்தனியே சங்கற்பஞ் செய்வித்து, இங்கே நடக்கும் அருச்சனை உன்னுடையது உன்னுடையது என்று சொல்லி, வஞ்சித்துவிட்டார்கள். இப்புரட்டர்கள் பூசிக்கும் விம்பத்திலே கடவுள் சாந்நித்தியராய் இருப்பாரா! இதைச் சற்றே சிந்தியுங்கள். தீபாராதனைக்கு முன் அருச்சனை செய்யலாமா? காலைப்பூசைக்கு முன் இருபத்துநாலாயிர மந்திரம் முடிந்துவிடுமா!

கங. சிலவருஷத்துக்கு முன் மண்டபக் கதவைச் சார்த்திவிட்டுக் கன்னானைக்கொண்டு தெய்வயானையம்மை வள்ளியம்மை என்னும் அம்மைமார் இருவர் விக்கிரகங்களையுந் தீண்டிச் செடிபந்தனஞ் செய்வித்துச், சம்புரோக்ஷணஞ் செய்யாது, அவைகளை வைத்துப் பூசிக்கின்றார்களே. இதற்கு விதி யாதோ அறியேம்!

கச. இக்கோயிற் பரிசாரகர் ஒருவருடைய குமாரன் சென்ற மூன்றாம் வருஷத்திலே மாமிசம் புசிக்கிற ஒரு சங்கரசாதிப் பெண்ணுடைய வீட்டிலே தான் செய்த விளையாட்டு விசய தசமித் திருவிழாவுக்கு, இக்கோயிலில் உள்ள சண்டேசுர வேலாயுதத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அதை யறிந்த இக்கோயிற் பிரதியதிகாரி அவ்வே

லாயுதத்தை வாங்கிக்கொண்டு போய்த் தம்முடைய வீட்டில் வைத்திருந்துவிட்டு, மற்றவருஷத் திருவிழாவின் இறுதித் தினத்திலே கொண்டுவந்து தர, இவ்வருச்சகர்கள் வாங்கிச் சம்புரோக்ஷணமின்றி வைத்துத் திருவிழா நடத்தினார்களே. "கள்ளன் செய்துகொண்டு வந்த கந்த வேலாயுதத்துக்குப் பிரதிட்டையின்றிப் பூசை திருவிழா நடத்துகின்ற இந்தக் கோயிலிலே, சூத்திரன் தொட்ட சண்டவேலாயுதத்துக்கா சம்புரோக்ஷணம் வேண்டும்" என்றெண்ணினார்கள் போலும்.

௧௫. இக்கோயிலில் உள்ள மூலவேலாயுதத்தை எலிகள் இழுத்துத் தள்ளி விழுத்திக் கோமுகை முதலிய இடங்களுக்கு இழுத்துக்கொண்டு போவதும், அருச்சகர்கள் தீபங்கொண்டு தேடி எடுத்து வைப்பதும் வழக்கம். இதையறிந்து, "இவ்வேலாயுஞ் சிறிதும் இலேசுமாய் இருத்தலினாலன்றோ எலி இழுத்தற்கு எளிதாயிற்று; இதற்கு யாது செய்யலாம்!" என்று நெடுங்காலம் ஆலோசனை செய்துகொண்டு வந்து, முடிவிலே எலியினால் அசைக்கப்படாத பாரமுள்ள வேலாயுதத்தைத் தாபித்துவிட்ட இக்கோயிலதிகாரியுடைய புத்தி எவ்வளவு வியக்கப்படத்தக்கது! எப்படியும் ஒரு புது வேலாயுதந் தாபித்து விட்ட இவர் ஒரு சிலாவிக்கிரகமா தாபித்துவிடலாகாது! அது உயர்திணைப் பொருளாலும் அசையாதே. அசைவில்லாததன்றோ மூலமூர்த்தி.

௧௬. பகற்றிருவிழாச் சூரியோதயந் தொடங்கி ஒரு யாமத்துள்ளும், இராத்திருவிழா அத்தமயனத்துக்குமுன் ஒரு யாமமும் பின் ஒருயாமமுமாகிய இரண்டு யாமத்துள்ளும் முடித்தல் வேண்டும்; இக் காலவெல்லையின் மேற்படத

திருவிழாச் செய்வது குற்றம்; ஓரோர் பொழுது இக்கால வெல்லை கடந்துவிட்டால், அக்குற்றம் போம்படி பிராயச்சித்தஞ் செய்தல்வேண்டும் என்று குமாரதந்திரம் விதிக்கின்றது. குமாரதந்திரத்தை ஒருபொருட் படுத்தாது அவமதி செய்துவிட்டு, இவர்கள், பகலிலே பதினெட்டு இருபது நாழிகைவரையும், இரவிலே இருபது இருபத்தைந்து நாழிகைவரையுந் திருவிழா நடத்துகின்றார்களே. ஸ்நானஞ்செய்துகொண்டு வந்த அருச்சகர்களும் உற்சவாசாரியரும், திருவிழா அர்த்தயாமபூசை நிறைவேறும் வரையும் மலசலம் அடக்க இயலுமா? மலசலங் கழித்தால் ஸ்நானஞ்செய்கிறார்களா? போசனஞ்செய்யாதிருக்கிறார்களா?

கஎ. இக்கோயில் உற்சவாசாரியர் தேர்த்திருவிழா முதலியவற்றிற்கு ஆட்டுப்பலி கொடுக்க உடன்பட்டது என்னையோ? அதற்கு ஆகமவிதி கண்டாரோ? கண்டாற் சிவாகமபண்டிதர்களெதிரே காட்டுவாரோ? உற்சவத்துக்கு முன் கிராமசாந்தி ஆவசியகஞ் செயத்தக்கதோ? செயத்தக்கதாயின், ஆகமவிதி காட்டுவாரோ? "நாம் யாது செய்வோம்! கோயிலதிகாரிக்குப் பிரியம் இது" என்கிறார். இவர் கோயிலதிகாரியின் பிரீதிப்படி நடப்பவரானால், தமக்கு வந்த பொருளில் ஏதாயினும் அவர் கவர்ந்தபொழுதெல்லாம், அவரோடு வீர்போட்டுச் சண்டையிட்டு வாங்காது அவர் பிரீதிப்படியே விட்டுவிடுகிறாரோ? இவர் கருத்தும் மற்றவர்கள் கருத்தும், பொருளினிடத்தனவல்லது, சிவாகமவிதியினிடத்தனவல்ல என்பது சிறுவருக்கும் இனிது விளங்கும்.

கஅ. இவ்வுற்சவாசாரியர், சில வருஷத்துக்கு முன் ஒரு சூத்திரன் கச்சேரிக்கு இட்டுக்கொண்டுபோன கஞ்சிப்பசை நீங்காத இஸ்திரிக்கைபோட்ட உத்தரீயத்தை அநாசாரமென்பது நோக்காது, தாம் இட்டுக்கொண்டு வந்து,

தம்பபூசை முதலியன செய்தாரே. இம்மட்டோ, சலவைக் காசாலைத் தோய்த்துலர்த்திஞல் அழகாயிராது கஞ்சிப் பசை போனால் மடிப்புக்களில்லா என்று நினைந்து தரித் துக்கொண்டு, அநாசாரத்தோடு வந்து யாகபூசை முதலி யன செய்கின்றாரே. தலை முதலிய மேலுறுப்புக்களைத் தீண்டினுங் கை கழுவாது பூசைத்திரவியங்களைத் தானும் தீண்டலாகாது என்று சிவாகமம் விதித்திருக்கவும், இவ் வாசாரியமூர்த்தி, வடவாமுகாக்கினியிலே போட்டாலும் எரியாததாய்க் கீழே தொங்குகிற கௌபீனத்தைத் தொட் டகையினாலே சுவாமியைத் தீண்டி ரக்ஷை சாத்துகிறாரே. இவைகளைப் பார்த்துச் சிரியாதவர் யாவர்!

கக. சில வருஷத்துக்கு முன் "இவ்வுற்சவாசாரியர் கொடிப்புடைவையை அழகாகக் கட்டவில்லை; நீர் அவிழ்த் துக் கட்டிவிடும்" என்று இக்கோயிலதிகாரி கட்டளையிட, ஒரு சூத்திரர் இரண்டாந் திருவிழா நடந்த இராத்திரியில் அவிழ்த்துக் கட்டிவிட்டார். அதை ஆசாரியர் அறிந்து, கோயிலதிகாரியைக் கேட்க; அவர் "நான் அறியேன் இதை வெளியே பேசாதிரும்" என்றார். ஆசாரியர், தாங் கொடிம ரக் குத்தகை வாங்கிப் பொய்ப்புகழ் பெற வந்தவராதலால், ஒன்றும் பேசாதொழிந்தார்.

௨0. துசபடம் எழுதுஞ் சீலை சலவை செய்யாவிட் டாற் காவி நன்றாகப் பிடியாது என்று, வண்ணானுடைய கஞ்சிப்பசையோடு படம் எழுதி ஆரோகணஞ் செய்தார்க ளே. முதல் வருஷம் உபயோகித்த கயிற்றையே மற்ற வரு ஷம் உபயோகிக்கிறார்கள்.

௨க. இக்கோயிற் பிரதியதிகாரி, தமது கருத்துக்கு இசையாத அருச்சகர் ஒருவரை அவர் சந்தியாவந்தனஞ் செய்கிறாரில்லை என்று கோயிற்பூசையினின்று நீக்கிவிட்டு,

அவர் கைக்கூலி தந்தபின் சேர்த்துக்கொண்டார்; அதன் பின் அவர் விறண்டி குடிக்கிருரென்று கோயிற் பூசையினின்று நீக்கிவிட்டு அவர் கைக்கூலி தந்த பின் சேர்த்துக்கொண்டார். இப் பிரதியதிகாரி இவ்வருச்சகர் விறண்டி குடித்தது மெய்யேயானல், தாம் அவரோடு மற்றப் பிராமணர்களைப் போசன முதலியவைகளிலே கலக்கவிட்டதென்னையோ? போசன முதலியவைகளில் அவரோடு கலந்து அசுத்தர்களாய் விட்ட மற்றை அருச்சகர்களைச், சுவாமியைத் தீண்டிப் பூசை செய்ய, விட்டதென்னையோ? அசுத்தர்களாய் விட்ட இவ்வருச்சகர்கள் தீண்டிய விம்பத்துக்கு யாது பிராயச்சித்தஞ் செய்வித்தாரோ? தாம் வாங்கிய கைக்கூலி, விறண்டி குடித்தல் என்னுங் குற்றமேற்றப்பட்ட அருச்சகருக்கும், அவரோடு போசன முதலியவைகளிலே கலந்து அசுத்தர்களாய்விட்ட மற்றை அருச்சகர்களுக்கும் அவர்கள் தீண்டிய சுவாமிக்கும், பிராயச்சித்தமாய்விட்டதோ? இவ் வருச்சகர் சந்தியாவந்தனஞ் செய்கிறரில்லை என்று குற்றமேற்றப்பட்டாரே! அக்குற்றம் இவ்வருச்சகர் ஒருவரிடத்து மாத்திரந்தான் கண்டாரா? மற்றை அருச்சகர்களுள்ளே சிலர் சந்தியாவந்தனஞ் செய்யாமை அறியாரா? அவர்கள் சந்தியாவந்தனம் மந்திரக் கிரியா பாவனை வழுவாமற் செய்வார்களா? இவ்வருச்சகர் மேல் இவ்வதிகாரி குற்றமேற்றியது பொருள் பறித்தற்கே என்பது யாவர் அறியாதார்!

உஉ. அருச்சனைக்கு வில்வங் கொடுக்கும்படி இக்கோயிலதிகாரி பரிசாரகர்களை ஏற்படுத்திவிட்டாரே. அவர்கள் சுவாமிக்குச் சாத்திய மாலைகளை எடுத்துப் பூவை வேருக்கிக் கொடுக்கின்ருர்களே. இன்னும் அப்பரிசாரகர்கள் சுவாமிக்கு நைவேத்தியத் தளிகை வட்டிக்கிற கல்லிலே போச

னஞ் செய்கின்றார்களே. இங்கே அருச்சகர்கள், திருவிழா விலே முன்னேரஞ் சாத்திய மாலை வாடாதிருக்கின், அம் மாலையையே மீட்டுஞ் சாத்துகிறார்களே. இங்கே பலகாரத் துக்கு மா இடிப்பவளுடைய இலக்கணம் எல்லாருக்குந் தெரியுமே.

௨௩. சில வேளாளர்கள் இவ்வருச்சகர்களுள்ளே சில ரை நோக்கி: "நீங்கள் கோபுரவாயிலிலே வந்து நிற்கிற நள வர் நளத்திகளிடத்தே அருச்சனைக்குப் பணம் பிறரால் வாங்குவித்துக்கொண்டு விபூதி முதலியன கொடுப்பிக்கின் றீர்களே! இது குற்றமன்றோ" என்று கேட்க இவ்வருச்ச கர்கள்: "வெகு சனங்கள் அறிய நளவர் நளத்திகளோடு கல ந்துகொண்டு ஆமை பன்றி முதலியன புசிக்குஞ் சில சூத் திரர்கள் சூத்திரிச்சிகள் கோயிலினுள்ளே வந்துவிடுகின்றா ர்களே! நாங்கள் ஸ்நானஞ் செய்துகொண்டு பூசைக்குப் போம்பொழுது, விலகு விலகு என்றாலும் விலகாது பனைம ரக்குற்றிபோல் நிற்கின்றார்கள்; வண்ணாத்திகள் தூரஸ்திரீ கள் மகாமண்டபத்தினுள்ளே வந்துவிடுகின்றார்கள்; பறங் கித்தெருவார் திருவிழாவிலே நளவர் நளத்திகளெல்லாம் உள்ளே வந்துவிடுகிறார்கள்; இவர்களையெல்லாம் நேரே தீண்டி விபூதி கொடுக்கிற நாங்கள், சில தலைமுறையாகக் கள்ளுச் சாராயங் குடியாதவர்களாய் ஆசாரத்தோடு வந்து கோபுரவாயிலிலே ஒதுங்கி நிற்கிற நளவர் நளத்திகளுக் குப் பிறரைக்கொண்டு விபூதி கொடுப்பிப்பதுதான் குற்ற மாய் முடிந்ததோ!" என்று அதட்டிவிடுகின்றார்கள்.

௨௪. இக்கோயிலின் உள்ளே உள்ள சுவர்களுக்கும் பலிபீடக் குறடு முதலியவைகளுக்கும் வருஷந்தோறும் புற ச்சமயிகளாகிய கடையர்களைக்கொண்டு சுண்ணாம்பு பூசுவி க்கின்றார்களே. திருவிழாத் தொடக்கத்துக்கு முன் சுண்

ணுப்பு பூசிய கடையன் ஒருவன் இங்கே கோமுகைத் தீர்த்தத்திலே மூத்திரம் பெய்துவிட்டான் என்று இக்கோயிலைச் சார்ந்தவர்கள் சிலர் பேசுகின்றார்கள். இதற்கு யாது பிராயச்சித்தஞ் செய்யப்பட்டதோ! இம் மூத்திரங் தலையிலே தெளிக்கப்பட்டாற் சகல பாவமும் நீங்குந்தானே.

இங்ஙனம்,

சனோபகாரி.

20th September 1875.

# ௩. மித்தியாவாத நிரசனம். *

கந்தமடப் பிரபுவே!

௧. சைவப்பிரசாரகர் எழுதி அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்திய நல்லூர்க் கந்தசுவாமிகோயிற் பத்திரிகை யிரண்டும் சைவசமயிகளெல்லாருக்கும் எதிரே இருக்கின்றன. அவைகள் மிக வெளிப்படையாகிய வசனநடையில் எழுதப்பட்டிருக்கின்றன; ஆதலினாலே, படித்தவர்களுக்கு மாத்திரமன்றிப் படியாதவர்களுக்கும் எளிதிலே பொருள் விளங்கக் கிடக்கின்றன. அப்பத்திரிகைகள் சிவாகமத்துக்குச் சம்மதமோ அசம்மதமோ என்று சந்தேகிக்கிறவர்கள் எவர்களோ, அவர்கள் தங்கள் சந்தேகத்தை யாவர் வாயிலாக நீக்கிக்கொள்ளல்வேண்டும்? இவ் வினாவுக்கு விடை சிறுவர்களுக்குந் தெரியும். இவ்வியாழ்ப்பாணத்திலே பிராமணகுருமார்கள் இல்லையோ! வேளாளகுருமார்கள் இல்லையோ! அவர்களுள்ளே சிவாகமம் படித்தவர் ஒருவரேனும் இல்லையோ! உனக்குத் தீக்ஷை அந்தியேட்டி முதலியவை செய்யுங் குருமார் வினைவேலி நவிண்டில்களிலுள்ள பிரா

---

* தூஷணைகளின்றி நியாயத்தோடும் சாத்திரவிதியோடும் எழுதப்பட்ட "நல்லூர்க் கந்தசுவாமிகோயில்" என்னும் இரண்டு பத்திரிகைகளுக்கும் மாறாகத் தூஷணைகளே மிகவும் பொதிந்த "பிரதிகண்டனம்" முதலிய நான்கு பத்திரிகைகள் ஷை கோயிலாரால் எழுதுவித்து அச்சிடப்பட்டன. இவைகளை மறுத்து "வஜ்ரூஉக்கலை வச்சிரகுடாரம்" முதலிய சில பத்திரிகைகள் சிலரால் வெளிப்படுத்தப்பட்டன. இம் மித்தியாவாத நிரசனம் ச. விசுவலிங்கபிள்ளை என்பவர் பலமுறை வேண்டிக்கொண்டதினால் நாவலரவர்களால் எழுதப்பட்டது. இதன்பின் கலகங்கள் ஒழிந்துவிட்டன.

மணகுருமாரன்றோ! உன் சிநேகனாகிய நல்லூர்க் கந்தசுவாமிகோயிலதிகாரிக்குத் தீக்ஷை அந்தியேட்டி முதலியவை செய்யுங் குருமார் கரணவாயிலுள்ள வேளாள குருமாரன்றோ! நீயேனும், உன் சிநேகனேனும், சைவப்பிரசாரகருடைய பத்திரிகைகளைக் கண்டிப்பிக்க விரும்பினால், இக்குருமாரைக்கொண்டு கண்டிப்பிக்கலாகாதோ! நீயேனும், உன் சிநேகனேனும், இப்பத்திரிகைகள் சிவாகமசம்மதமோ சிவாகமவிரோதமோ என்று இக்குருமாரிடத்தே எப்போதாயினுங் கேட்டதுண்டோ! சிவாகமவிரோதமென்று இவர்கள் சொன்னார்களானால், இவர்களைக்கொண்டு நியாயப்பிரகாரங் கண்டனம் பதிப்பித்துவிடலாமே. சிவாகமசம்மதம் என்று இவர்கள் சொன்னார்களானால் இவர்கள் வாக்குக்கு அடங்கி நடத்தல்வேண்டுமே. இவர்கள் வாக்கும் அநியாயம் என்று கண்டால், இவர்களைக்கொண்டு தீக்ஷை அந்தியேட்டி முதலியவை செய்வியாது, இவர்களை உலகறிய நீக்கிவிடல் வேண்டுமே.

௨. நீ பிரதிகண்டனம், பரிகண்டனம், சம்பாஷணை, வச்சிரகுலிசம் என நான்கு தூஷண பத்திரிகைகள் பதிப்பித்துவிட்டாயே. இப்பத்திரிகைகளை உன் குருமார்களுக்குக் காட்டினாயோ? சைவப்பிரசாரகருடைய பத்திரிகைகளுக்கு இவைகள் கண்டனமேயாம் என்று அவர்கள் ஏற்றுக்கொண்டார்களோ! சைவநூலுணர்ச்சியும், சைவநூற்பொருளைச் சைவசமயிகளுக்குப் போதிக்குந் திறமையும், நல்லொழுக்கமும், சைவாநுட்டானமும் உடையவர்களென்று உன்னாலும் உன் சிநேகனாகிய கோயிலதிகாரியாலும், நம்பப்பட்டவர்கள், இப்பத்திரிகைகளை உனக்கு எழுதித் தந்தவர்கள்தாமோ! அவர்கள் பெயர்தாம் என்னையோ! வெளிப்படுத்தலாகாதோ! நீ வெளிப்படுத்தாதொழியினும்,

ஒரு கனியைக்கொண்டு, அதனைத் தந்த மரத்தினியல்பு அறியப்படுதல்போல, இப்பத்திரிகைகளைக்கொண்டு,இவை களை எழுதினவர்களுடைய இயல்பு, எல்லாராலும் நன்றாக அறியப்படும். இப் பத்திரிகைகளை ஏற்றுப் பதிப்பித்து வெளிப்படுத்திவிட்டு மகிழ்ந்து கொண்டாடிக்கொண்டிருக் கிற உன்னியல்பும் இத்தன்மைத்தென்று இனிது தொனிக் கும்.

ங. உன் பிரதிகண்டனபத்திரிகை சிவன் எல்லாரினும் மிகுந்த காமமுடையவர் என்று பேசுகின்றது; சைவசமய த்தைத் தூஷித்த சப்பிரதீபம் உத்தரக்கும்மி என்னும் பத்திரிகைகளையுஞ் சைவதூஷகர்களாகிய பாதிரிமார்களை யும் மற்றக் கிறிஸ்தவர்களையும் பாராட்டுகின்றது. உன் பரி கண்டன பத்திரிகை பதி பசு பாசம் என்னும் மூன்றும் அநாதி நித்தியம் என்று போதிக்கிற சைவசித்தாந்தத்தை இகழ்ந்து, சைவதூஷணங்களே பொதிந்த கிறிஸ்தோப காரி என்னும் பத்திரிகையைப் புகழ்கின்றது. உன் சம்பா ஷண பத்திரிகை சிவலிங்கமெனப்படுவது சிவனுடைய அழு கியற்று விழுந்த மற்றப்படியான் என்று வாய் கூசாது இக ழ்ந்து, கிறிஸ்துசமயமே மெய்ச்சமயம் என்று துதிக்கின் றது. சிவன்கோயிற் பணமுங் கந்தசுவாமிகோயிற் பணமும் இப்பத்திரிகைகளுக்குத் தானு உபயோகிக்கப்பட்டன.

ச. எந்தச் சமயத்துக்கும் போதகர் வேண்டும் என் பது உன் முதற்பத்திரிகைக்குஞ் சம்மதமாயிற்றே. ஆயின், சைவசமயத்தைப் போதித்தற்குச் சைவப்பிரசாரகர் ஒரு சிறிதும் யோக்கியரல்லரென்று உன் பத்திரிகைகள் பேசுகி ன்றனவே. பின், சைவசமயத்தைப் போதிக்க ஒருவர் வேண் டுமே. போதிப்பவர் அவரையொழியப் பிறரைக் காணே

மே. அதற்கு அவர் யோக்கியரல்லரென்று கடிந்து உன் வேண்டுகோளின்படி கண்டன பத்திரிகைகள் பதிப்பித்த மகாபண்டிதர்களை, நீயும் உன் சிநேகனும், சைவப்பிரசங்கிகளாக ஏற்படுத்தி, உன் பள்ளிக்கூடத்திலும், நல்லூர்க் கந்தசுவாமிகோயிலினுஞ் சைவப்பிரசங்கஞ் செய்விக்கலாமே. அப்படிச் செய்வியாதது நீதியா! இனியாயினும் அப்படிச் செய்விக்கலாகாதா? செய்வித்தால், இவ்வியாழ்ப்பாணத்துச் சைவசமயிகள் பலர் சைவப்பிரசாரகருடைய பிரசங்கங்களைக் கேட்டுக் கெட்டுப்போகாது உன் குருமாருடைய பிரசங்கங்களைக் கேட்டு வாழ்வார்களே. இனியாயினும் இரக்கம் வையாயா!

நி. சிவலிங்கமாவது சிவனுடைய அழுகி யற்று விழுந்த மற்றப்படியான் என்று சிவதூஷணஞ் செய்வித்த நீதானே "மகாத்மி." நுங்கருத்திலே பரம்பொருளெனப் பதிந்தது சிவலிங்கமன்றோ! பின் யாதோ! கதிர்வேலா! மயிலா! விஷ்ணுவினுடைய முதன் மூன்றவதாரங்களையும் பேராசையோடு சதாகாலமும் உட்கொள்ளும் "மகாத்மி" ஆகிய நீ, வைஷ்ணவர் கற்பித்த கதையை நம்புவாய்தானே! ஓகோ! நீ விஷ்ணுபத்தியுடையையாயின், உன் சம்பாஷணை பத்திரிகையிலே, விஷ்ணுவை நேர்ந்தபடி தூஷித்ததேனோ! அழுகி விழுந்த மற்றப்படியான் தான் சிவலிங்கம் என்று அருவருத்துத்தானோ நுங் குலசேகரர் தம்மார்பிலே தொங்கிய சிவலிங்கத்தை அறுத்து விழுத்திவிட்டார்? நல்லது; சங்கத்தை ஏன் கைவிட்டாரோ! அது சிவலிங்க கீர்த்தித்தொனி செய்வதென்று வெறுத்தோ! நல்லது நல்லது; உடுக்கை ஏன் கைவிட்டாரோ! நம்மாட்டிலே கண்டுகொள்க என்பாய் போலும்! இலிங்கதாரணம் இழிவு என்று நீக்கிய நீ, இலிங்கதாரிகளுடைய வயிற்றுச்சோற்றுக்குச் சை

வப்பிரசாரகராலே கேடு விளைந்தது என்று, பத்திரிகைதோறும் ஏன் புலம்புகிறாய்? உனக்குச் சமயாபிமானம் நீங்கியவிடத்துஞ் சாதியபிமானஞ் சற்றும் நீங்கவில்லைபோலும்! நல்லது; அதுதான் யாரைவிடும்! நல்லது, இப்பொழுது நீ நல்ல பிரபுவாயிருக்கின்றாயே! அவர்களுக்கு நீ சோறிட்டாலாகாதோ! "இனத்தை இனங்காக்கும்" என்ற பழமொழி மறந்தாயோ? இனியாயினும் நினையாயோ! உன் சாதியார் சமயத்தாருக்கு வேறு சாதியார் சமயத்தார் பொருட்செலவு செய்து அன்னமிட, நீ பார்த்து மகிழ்ச்சியடைந்துகொண்டு, உன் பொருளைப் பெருக்க நினைந்தாயோ! அம்மம்ம!!! உன் புத்தி என்னை புத்தி! கோடி பொன் பெறுமே!

௬. ஏகோத்திட்டப்பொருளை நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்குக் கொடுக்கும்பொருட்டுச் சைவப்பிரசாரகர் செய்த ஏற்பாடு தவறு என்றும், ஏகோத்திட்டங் கொடுப்பவர் இறந்தவரை ஏகோத்திட்டம் ஏற்பவரிடத்தே ஏற்றிப் பூசித்தலால், அவ்வேற்பவர் அவ்விறந்தவரேயாவர் என்றும், நல்லூர்க் கந்தசுவாமியார் ஏகோத்திட்டம் ஏற்றலால், அவ்விறந்தவராயினார் என்றும், ஆகவே அவரைத் தரிசித்தல் வணங்கல் பாவம் என்றும், உன் முதற்பத்திரிகை கூச்சலிட்டதே. நல்லது; நீ இறந்த உன் மனையாள்பொருட்டு ஏகோத்திட்டம் யாருக்குக் கொடுத்தாய்! நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்கன்றோ! உன் மனையாளை எங்கே ஏற்றினாய்! ஏகோத்திட்டத்தில் வரித்துப் பூசிக்கப்படுதற்குச் சற்பிராமணர் இல்லாவிடத்துக் கூர்ச்சத்தில் ஏற்றிப் பூசித்தல்வேண்டும் என்பது நூற்றுணிபு. சற்பிராமணன் தானேற்ற ஏகோத்திட்டப்பொருளை ஓராலயத் திருப்பணிக்கு உதவுவது நன்மைதானே. அவ்வாறே, கூர்ச்சமேற்ற ஏகோத்திட்டப்பொருள் ஓராலயத் திருப்பணிக்கு உதவப்

படுவது நன்மைதானே. எப்படியும் ஏகோத்திட்டப்பொருள் ஏற்றது வேலாயுதமேயாதலால், அது பிரேத ரூபமேயாம் என்பாய் போலும். அப்படியாயின், உன் மனையாளது, பிரேதரூபமாய்விட்ட வேலாயுதத்தை நீ நித்தமும் போய் வணங்குவதேனோ! உன் சிநேகனாகிய கோயிலதிகாரி தன் மனையாளுடைய பிரேதரூபமாய்விட்ட வேலாயுதத்தைத் தான் வணங்குவதேனோ! ஒருபோது மாறிப் பாவித்து வணங்குகிறோம் என்பீர்களோ! சைவப்பிரசாரகரேற்பாடு நன்று நன்று என்று பாராட்டித் திரிந்து, பற்பலரிடத்தும் கோயிலதிகாரி ஏற்ற ஏகோத்திட்டப்பொருள், தேர்ப்பணம் போல உனக்கும், உருத்திராபிஷேகப்பணம்போலக் கோயிலதிகாரிக்கும், உபயோகிக்கப்படாது, சைவப்பிரசாரகரா லே திருப்பணிக் கருங்கல்லுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட பின்னே அவரேற்பாடு நமக்குத் தவறெனத் தோன்றியது! அப்படியானாற் சரி சரி.

எ. சைவப்பிரசாரகர் பலராலும் பகைக்கப்பட்டார் என்று பத்திரிகைதோறுந் துள்ளுகிறாய். "காணிற் குடிப் பழியாங் கையுறிற் கால்குறையும்-மாணின்மை செய்யுங்காலச்சமாம்-நீணிரயத்-துன்பம் பயக்குமாற் றுச்சாரீ நீகண்ட-இன்பமெனக் கெனைத்தாற் கூறு" என்றபடி எல்லாக்கேட்டிற்கும் மூலமாகிய பரஸ்திரீகமனத்துக்கு ஒருவன் புகுந்தானேயாகவும், இவன் புகுந்த இடமோ பிறன்குடிசையேயாகவும், இவன் புகுந்த காலமோ அர்த்தராத்திரியேயாகவும், அத்தாரமுடையானோ கொலைக்கஞ்சா நீசனேயாகவும், அவன் கையிலுள்ளதோ அறக்கூரிய பாளைக்கத்தியேயாகவும், அவனோ, இவனைக் கொன்றான் கொன்றான் எனப்படாது, காத்தான் காத்தான் எனப்பட்டுத், தானும் இவன் வீடு புகுந்து, அளைந்து கலந்து கொண்டாடுவது உலகறி

யுமே. தீமை செய்தவனுக்கே முன்னை நல்லூழினாலே பகை
வனும் உறவனும் விடும்போது, கல்விவிருத்தி சமயவிருத்தி
முதலியன செய்துகொண்டு சிவபெருமானுடைய திருவ
ருள் வழிப்பட் டொழுகுவோருக்குப் புல்லறிவாளருடைய
பகைதான் யாது செய்யுமோ! இவ்வுண்மையை நீ சிந்தித்
துப் பேசாததேனோ! இது உனக்குத் தோன்றாதபோது
வேறு யாருக்குத் தோன்றுமோ! சொல்லு சொல்லு. மௌ
னஞ் சாதிக்கிறாயே! ஏன்! என்னோடு பேசலாகாதோ!
பேசலாம்; பேசு பேசு. என் மகாப் பிரபுவே! சற்றே தலை
நிமிர், பார்ப்போம். நீ யாதுதான் செய்வாய்! உன்னை அற
நெருக்கலாகாது. அஃதிருக்க, இனி அப்பாற் செல்வோம்.

௮. உற்சவகாலத்திலே தேவாரத் திருக்கூட்டத் தலை
வராய்த் தோன்றிய சைவப்பிரசாரகருடைய சிவவேடத்தை
எவ்வளவேனும் வாய் கூசாதிகழ்ந்தாயே. பிரபுவே! உன்
னரிச்சந்திர நாடகத்திலே தோன்றிய பையனுடைய சந்திர
மதி வேடம்போலச், சிவவேடம், உன் கண்ணுக்கும் மனசுக்
குங் களிப்பைத் தந்து, உன்னை ஆனந்தக் கூத்தாடுவியாது
தானே.

௯. சைவப்பிரசாரகர் தமது சுற்றத்தார்களை முன்
னர்த் திருத்தியன்றோ பின்னர்ப் பரார்த்த காரியங்களிற்
றலையிடல்வேண்டும் என்றாய்., சைவப்பிரசாரகர், தமது சுற்
றத்தார்களுட் சிலர் தமது போதனைக்கு அமைந்து நடவா
மையினாலே, தாம் பிறருக்குப் போதிக்கலாகாது என்பாயா
யின், ஒரு வைத்தியர், தமது சுற்றத்தாருட் சிலர் தாங்
கொடுக்கும் மருந்தை உட்கொண்டு வியாதியைப் போக்கிக்
கொள்ளாமையினாலே தாம் பிறருக்கு வைத்தியஞ் செய்ய
லாகாது என்பாய்போலும்! ஓர் உபாத்தியாயர், தமது சுற்
றத்துப் பிள்ளைகள் சிலர் தமக்கமைந்து கல்வி கற்றுக்கொள்

ளாமையினாலே, தாம் பிற பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க லாகாது என்பாய்போலும்! ஒரு சமய போதகர், தமது சுற்றத்தாருட் சிலர் நிரீச்சுரவாதிகளாய் இருத்தலினாலே, தாந் தமது சமயத்தைப் பிறருக்குப் போதிக்கலாகாது என்பாய்போலும்! இராசாவுடைய கட்டளையைப் பிரசித்தி செய்வானொருவன், தன் சுற்றத்தாருட் சிலர் அக்கட்டளைக்கு அமையாமையினாலே, தான் அக்கட்டளையைப் பிறருக்குப் பிரசித்தி செய்யலாகாது என்பாய்போலும்! நல்லது: தமது சுற்றத்தாரைத் திருத்த இயலாத சைவப்பிரசாரகரைத்தான், உன் சிநேகன் தன்னையுந் தன் கோயிலையுந் தன்கோயிற் கிரியைகளையுந் தன்கோயிற் பிராமணர்களையுந் திருத்தல்வேண்டுமென்று, பலதரம் அடுத்துப் பிரார்த்தித்து, அழைத்துக்கொண்டுபோய், உபசரிக்க, நீ தடுக்காது பார்த்துக்கொண்டிருந்தனையே! வெகுசனங் கூடிய திருப்பணிச்சபையிலே, சைவப்பிரசாரகர் மறுக்க மறுக்க, நீ எதிர் நின்று: "நீங்கள் எங்களைக் கண்டித்துத் திருத்தும் பொருட்டு இச்சபைக்கு அக்கிராசனாதிபதியாய் இருத்தல் வேண்டும்" என்று திரும்பத் திரும்ப உச்சசுரத்தோடு பிரார்த்தித்து, உடன்படுத்தியதேனே! எந்தக் கற்பத்திலே, எந்த மனுவந்தரத்திலே, எந்தயுகத்திலே இனி எந்தக்கண்டத்திலே, எந்தத் தேசத்திலே, எந்த ஊரிலே, இனி எந்தச்சாதியிலே, எந்தக்குலத்திலே, எந்தக்குடும்பத்திலே, எல்லாரும் யோக்கியர்! சற்றே வாய் திற. ஒரு குடும்பத்திலே ஒருவருடைய அயோக்கியதை பற்றி மற்றவரையும் அயோக்கியர் என்று இகழத் தலைப்பட்டால், யோக்கியர் எனப்படுவோர் யாரோ! சற்றே பேசு. இராப் பகல் ஓயாது தாசி வீடு திரிகிறவர்களுள்ளே, தாசிக்குத் தம்பொருளைக் கொடுப்பவர் "அதிபாதகர்" ஆம்; கோயிற்பொருளைக் கவர்ந்து கொடுப்பவன் "புண்ணியசீலன்" ஆம்; இப்பேதங் கண்

டுபிடித்து எழுதுவிக்க, "மகாத்மி" ஆகிய நீயன்றி, வல்ல வர் யார்! காமிகளுள்ளே, பொதுப்பெண்ணைப் புணர்பவர் "அதிபாதகர்" ஆம்; நளத்தியை, தமையன் மனையாளை, தகப்பன் மனையாளை, சிறியதகப்பன் மனையாளை, தமையன் மகன் மனையாளை, மருமகன் மனையாளை, மகன் மனையாளை, சகோதரியைப் புணர்பவர் "மகாத்மிகள்" ஆம்; அடடா! இப்பேதமெல்லாம் இவ்வளவரிதின் இத்தனை நுணுக்கமாகக் கண்டுபிடித்தெழுத, உன்னைத் தங்கையில் அகப்படுத்திக்கொண்ட கஞ்சாவெறியரன்றி, வேறியார் வல்லவர்! பொதுப்பெண்ணோடு கூடிய மருமகனையுடையவர் "சைவப் பிரசாரகர்" ஆகாராம்; நளவனோடு கூடிய சகோதரியையுடையவர் "மகாத்மி" ஆவாராம். மாமனுக்கு மகன் ஆனவன் "புண்ணிய சீலன்" ஆம். "கண்டன மின்றியாங் கலியின் வண்ணமே" என்பது யார் சொல்லத்தக்கது! நீதானோ! "மகாத்மீ" சொல்லு.

௧0. சைவசமய விருத்திப்பொருட்டு எடுத்த கருமங்களுக்குஞ் சைவ சமயத்துக்கும் இடையூறு செய்வாரைக் கண்டிக்குஞ் சைவப்பிரசாரகரது கோபஞ் சண்டேசுரநாயனார் முதலாயினோர் கோபம்போலும் என்றுரைக் குறித்துச் "சண்டேசுரநாயனாராய் விடுவாரா இவர்! அவர் கோபமாய் விடுமா இவர் கோபம்" என்று பரிகாசஞ் செய்தாயே. சண்டேசுரநாயனாரது சிவபூசையிற் பாலை ஒருவன் காலினாலே சிந்தலாகாது; சைவப்பிரசாரகரது சிவபூசையிற் பாலை ஒருவன் காலினாலே சிந்தலாம்போலும்! அவர் அப்பதகனைக் கோபித்து விலக்கல்வேண்டும்; இவர் இப் பதகனைக் கோபித்து விலக்காது, இவன் இது செய்க எனச் சும்மாவிருத்தல்வேண்டும்போலும்! ததீசிமுனிவர் தம்மெதிரே சிவநிந்தை செய்த தக்கனைக் கோபித்துக் கண்டித்து அவ்விடத்

தினின்றும் நீங்கிவிட்டது புண்ணியம்; சைவப்பிரசாரகர் தம்மெதிரே சிவநிந்தை செய்தவரைக் கோபித்துக் கண்டியாது, மகிழ்ந்து பாராட்டுவதே புண்ணியம்போலும்! இனி நீ, இராமர் தம்முடைய தேவியாரைக் கவர்ந்து சென்ற இராவணனைக் கோபித்துத் தண்டித்தது நீதி எனவும் இக்காலத்தே ஒருவன் தன்மனையாளைக் கவர்ந்தானொருவனைக் கோபித்துத் தண்டித்து அவளை மீட்கப் புகின், அது அநீதியெனவும் இதுவும் நீதி என்பவருக்கு: "இராமனாய் விடுவானா இவன்! சீதையாய் விடுவாளா இவள்! இராமர் கோபமாய் விடுமா இவன் கோபம்" எனவும், ஒருபோது சொல்லத் தலைப்படுவாயோ! சொல்லினுஞ் சொல்லுவாய் சொல்லுவாய்!!! சீமானே! உனக்கென்ன! இராமர் கோபமும் அநீதிதான் என்பாய். நீ "மகாத்மி." கௌதமர் கோபமாத்திரம் அநீதியென்னாய். அவராலே கோபிக்கப்பட்டானது "நாகேந்திரன்" என்னும் பெயர்நினைவு வந்து தடுக்குமன்றோ! என் சீமானே! ஏன் உனக்குக் கண் சிவக்கின்றது! இந்தக் குளிரிலே உனக்குடம்பெங்கும் வேர்க்கிறதே னே! வேர்வையைத் துடை துடை! வேர்வை உள்ளடங்கினால் வியாதி உண்டாகும்! இந்தச் சனங்கள் என் பல்லைக் காட்டுகிறார்கள்! என். சீமான் நெடுங்காலம் வாழ்ந்திருக்க வேண்டும். என் சீமானிருந்தாலன்றோ என்போலிகளுக்கு நல்ல பொழுதுபோக்கு.

௧௧. உன் பத்திரிகைகளில், முன் பின் ஓரியைபுமின்றி இடையிடையே "அல்லா" ஒலி தொனிக்கின்றதேனே! நும் வீட்டார்கள், தம்மேல் வீழ்ந்த அப்பாக்கனி ரசச் சுவையினாற் புலம்பும் அல்லவொலி இடையிடையே செவிக்கேற ஏற, நும் பத்திரிகைகாரர்கள் கருத்து அங்கே பதிதலாயிலாக, அவ்வொலி நும் பத்திரிகையிலே பதிந்ததோ!

அப்படியானாற் சரிதான். நம் பத்திரிகைகாரர் யாது செய்வார் பாவம்! துலுக்கர்களுள்ளே விருத்தசேதனமில்லாத துலுக்கருங் கண்டுபிடித்தீரோ! நம் வீட்டார்கள் தாஞ் செய்த கலாசோதனையினாலே கண்டுபிடித்து உங்களுக்குக் காட்டிவிட்டார்களோ!

௧உ. சைவப்பிரசாரகர் அந்நியதேசத்திலே பிறந்து வளர்ந்து இப்பொழுது இங்கே வந்தவரா! அல்லது, இங்கேதானும் எட்டொன்பது மைல் தூரத்துக்கப்பாலே பிறந்து வளர்ந்து இப்பொழுது இங்கே வந்தவரா! அவர் வண்ணார்பண்ணை முதலிய இடங்களிலே சைவப்பிரசங்கஞ் செய்யவும், வித்தியாசாலை நடத்தவும், புத்தகங்கள் பத்திரிகைகள் பதிப்பிக்கவும், தமது கோட்பாட்டுக்கு மாறுபட்டவர்கள், சிநேகர்களாயினும், செல்வர்களாயினும், சுற்றத்தார்களாயினும், குருமார்களாயினும், அவர்களைத் தாக்ஷிணியமின்றிக் கண்டிக்கவுந் தலைப்பட்டு முப்பதுவருஷகாலமாயினவே. அவருடைய குணஞ் சொற் செயல்களெல்லாம் உனக்கும் உன்போலிகளுக்கும் இப்பொழுதுதான் தெரிந்தனவா? நீ வெகுசனக்கூட்டத்தில் எத்தனைதரம் அவராலே கண்டிக்கப்பட்டாய்! அவர் குணஞ் சொற் செயல்கள் தீயனவேயானால், நீ ஏன் அவரைப் பலதரம் போய் அடுத்தடுத்து வழிபட்டாய்! சைவப்பிரசாரகருக்கு நீ முதற் சிஷன் முதற்சிஷன் என்று சொல்லிக்கொண்டு திரிந்தாயே. சைவப்பிரசாரகருக்கு விரோதமாகக் கருங்குழி இராமலிங்கபிள்ளையும் அவர் மாணாக்கரும் பதிப்பித்த புத்தகங்களினுள்ள சில தூஷண வசனங்களை எடுத்து, உன் பத்திரிகையிலே பேசிக் களிப்புற்றாயே! அப் புத்தகங்களை இப்பொழுதுதான் கண்டாயா? சைவப்பிரசாரகர் இந்தத் தடவை இவ்வியாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு முன்புதானே, அப்

புத்தகங்கள் இங்கே வந்து, பலராலும் வாசிக்கப்பட்டனவே. இஃதறிந்தும், நீயும் உன்போலிகளும், போனவருஷத் திருவிழாவரையும் பாராட்டி வழிபட்டதேனோ! அவைகள் மெய்யென்று இப்பொழுதுதான் உங்கள் மனசிலே பதிந்தனவோ! இவ்வியாழ்ப்பாணம் ஒரு சிறுநூலேனும் ஒரு சிற்றுரையேனுஞ் செய்யப்பெறாத தேசம் என்றும், இங்கிருக்கிறவர்களெல்லாரும் பாணக்குடிகள் என்றும், இங்கிருக்கிறவர்களெல்லாருஞ் சான்றார்கள் என்றும், அப்புத்தகங்களுட் சிலவற்றிலே பேசப்பட்டிருக்கின்றதே! அவைகளையும் நீ நம்பவேண்டுமே! சைவப்பிரசாரகர் மாத்திரஞ் சான்றாரென்றாலன்றோ நீ மகிழ்ச்சியடையலாம். அப்படியென்றாலும், உனக்குங் குறைவுதானே! இழிந்தவிடத்திலே பிறந்தாலும், முத்தை யாரும் ஏற்றுக்கொள்ளலாம் என்பாய் போலும்! அப்படியாலுஞ் சரிதான். மாணிக்கமுத்தென்றால், யார்தாம் விடுவார்! ஆனாலுந்தானென்ன!. மாணிக்கத்தைக் கிணற்றில் வீழ்த்திவிட்டீர்களே!

௧௯. கருங்குழி இராமலிங்கபிள்ளையைச் "சன்மார்க்கர்" என்று பாராட்டினையே. "நாம் செத்தவர்களெல்லாரையும் உயிர்ப்பிப்போம்" என்று தேசமெங்கும் விளம்பரம் விடுத்து, இறந்த புருஷமாரை மீட்டும் பெற விரும்பி வந்து நெடுங்காலங் காத்துக்கிடந்த அமங்கலிகளெல்லாரையுங் குழந்தைகளோடு திருப்பிவிட்ட இராமலிங்கபிள்ளை "சன்மார்க்கர்" தாமே. இது "சன்மார்க்கம்" என்றாயானால் பிறன்மனைநயந்த நாகேந்திரன் தண்டிக்கப்பட்டதேனோ! "நாகேந்திரனுக்கு அது குற்றமாயிற்று; மயில்வாகனனானபின்னுங் குற்றமாமோ" என்பாய் போலும்! என் மகாப்பிரபுவே! அப்படியாலுஞ் சரி சரி. சுக்கில௵ ஆனி உத்திரத் தரிசனதினத்திலே, சிதம்பரத்துப்

பேரம்பலத்திலே, வெகுசனக்கூட்டத்திலே, சுவாமி சன்னி தானத்திலே, சைவப்பிரசாரகரை அவதூறாகப் பேசிய இராமலிங்கபிள்ளை, அடுத்த மார்கழித் திருவாதிரைத் தரிசனதினத்திலே, மஞ்சக்குப்பக் கோட்டிலே, வெகுசனக் கூட்டத்திலே, நியாயாதிபதியெதிரே, தாஞ் சைவப்பிரசாரகரை அவதூறாக ஒரு சிறிதும் பேசவில்லையென்று மறுத்து, எல்லாராலும் நகைக்கப்பட்டது அவ்வழக்குப் புத்தகம் பேசும்.

கச. சைவப்பிரசாரகர் சிதம்பரத்துத் தீக்ஷிதர்களோடும் எதிர்த்தது குற்றம் என்றிகழ்ந்தாய். இவ்வியாழ்ப்பாணத்தார் பலரைக் காணுந்தோறுந் தீக்ஷிதர்கள்: "எங்கள் முன்னோர்கள் உங்கள் முன்னோர்கள் வந்தபோது யாழ்ப்பாணத்துச் சாணாரப்பயல்களே! ஒத்தி நில்லுங்கள்" என்று சொல்ல, உங்கள் முன்னோர்கள்: "'நாங்கள் சிவகங்கையிலே தோய்ஞ்செளும்பியும், சபாபதியைக் கண்ணாரக் கண்டும், ஆடுந்தேவடியாளாடைபட்டும், குருக்களையரையுங் குருக்களையர் பெண்டாட்டியையுங் கூடவைச்சுத் திண்டும், இன்னுஞ் சாண்டாரோ இன்னுஞ் சாண்டாரோ' என்று சொல்லுகிறவர்கள்" என்று பேசிப் பேசி நிந்திக்கும் நிந்தையைச் சைவப்பிரசாரகர் நீக்கிவிட்டது இவ்வியாழ்ப்பாணத்தாருக்குத் தீமையாய் முடிந்ததோ! சபாநாயகருடைய அருமைத் திருவாக்காகியும், அவர் திருமேனியாகியுமுள்ள சிவாகமங்களை, வாயில் வந்தபடி தூஷித்துக்கொண்டு திரிந்த தீக்ஷிதர்களைச் சைவப்பிரசாரகர் சாத்திரப் பிரமாணங் காட்டிக் கண்டித்து விட்டது சபாநாயகருக்குச் சம்மதமோ அசம்மதமோ! சைவப்பிரசாரகர் கொள்கை தவறென்பது நின்கருத்தாமாயின், நீ சிராத்தாதிகளிலே முன்போலத் தீக்ஷையில்லாப் பிராமணர்களை வரியாது, தீக்ஷையுடைய பிராமணர்களை வரிப்பதேனோ!

௧௫. சைவப்பிரசாரகர் இக்காலத்துள்ள மடத்தார், ஆதீனத்தார் முதலாயினோரைத் தூஷிக்கின்றார் என்று பதைபதைக்கின்ற நீ, ஒரு சைவாசாரியர் ஒரு வைஷ்ணவரிடத்தே பணம் வாங்கிக்கொண்டு தமது சைவ சித்தாந்தத்தையும் இகழ்ந்து அவர் பெயரால் செய்துகொடுத்த பிரபந்தத்தினின்றும், மடத்தார் ஆதீனத்தார் முதலாயினோருக்கு விரோதமாகிய தூஷணைப் பாட்டுக்கள் சிலவற்றை, உன் பத்திரிகைகாரர் சைவப்பிரசாரகருக்கு எடுத்துக் காட்டி, அவரை இகழ்வதென்னையோ! இக்காலத்து மடத்தாராதீனத்தார்களைச் சைவப்பிரசாரகர் இகழ்வது குற்றம்; முற்காலத்து மடத்தாராதீனத்தாரைப் பண்டாரம் வைஷ்ணவரின் மறைந்து நின்று இகழ்ந்தது குணம்போலும்! சைவப்பிரசாரகர் இகழ்ந்தது தான் எங்கேயோ! அது சற்றே காட்டாயோ!

௧௬. கிறிஸ்தவர் வீடுகளுங் கிறிஸ்தவப் பிரேதம் அடக்கஞ் செயப்பெற்ற நிலங்களுமுடைய தெருவழியாகச் சுவாமி எழுந்தருளப்பண்ணலாமா என்றவருக்கு, ஒரு இங்கிலிசுப் பள்ளிக்கூடத்திலே ஒரு இங்கிலிசுகாரரை இங்கிலிசு உபாத்தியாயராக வைக்கலாமா என்று எதிர்வினா விடுத்தது மிக நன்று நன்று. இது அறிவிலாப் பெண்களாலும் நகைக்கப்படத்தக்கது. கிறிஸ்தவப் பிரேதம் உடைய தெருவழியாகச் சுவாமி யெழுந்தருளப்பண்ணலாம் என்பது, உனக்கும் உன் கோயிலாருக்குங் கருத்தாயின், கோயிலினுள்ளே செய்யப்படும் பூசைதானும் வீதியிலே பிராமணப் பிரேதங் கிடக்கும்போது செயப்படாது தடைப்படுவதேனோ! அது நீ அறியாயோ! உண்மைபேசு. நளவர் முதலாயினோர் இருக்குந் தெருவழியே சுவாமி எழுந்தருளப்பண்ணலாமென்றால், கோயில் வீதியிலே அந்நளவர் முதலாயி

னோர் இருக்கலாந்தானே! திருவிழாவிலே நளவர் முதலாயி னோரும் நெருங்கிச் சேவிக்கலாம் என்பது உன் கோயிலார் களுக்குக் கருத்தாயின், அவர்கள் முன்னொரு திருவிழா விலே தேர்முட்டிக்குச் சமீபத்தில் வந்து நின்ற நளவரை அடித்துக் கலகம் விளைத்ததேனோ! கேட்டுப் பார்! அம் பட்டர் நளவர் முதலாயினோருக்குச் சுவாமி அநுக்கிரகிப் பதில்லையோ என்ற நீ, அவர்கள் பொருட்டு உருத்திராபி ஷேகஞ் செய்யப்படுதலை மறைத்து, அது பொய் பொய்யெ ன்று குரைப்பதேனோ!

௧௭. விபூதி தரிக்கின்றவர்கள் எல்லாருக்கும் பொது வாகி, ஏறக்குறைய அவ்வெல்லாருங் கொடுக்கும் பொருள் கொண்டு நடத்தப்படுகிற ஒரு கோயிலைத் திருத்தும்பொரு ட்டு, ஒருவர் அங்கே நடக்கிற குற்றங்களை எடுத்துக் கண் டித்தால், அது தப்பென்று கண்டவர், அதற்கு நியாயந் தக்க மரியாதையோடு அடங்கி நின்று பேசுவதன்றி, பதர்வார் த்தைகள் பேசுவது வீரம் என்று, வீரமிழந்த சைவனே! உனக்குத் தோன்றியதென்னோ!

௧௮. சைவப்பிரசாரகருடைய சாதி, குலம், சமயம், நீயும் உன் பத்திரிகைகாரர்களுமா விசாரிக்கத் தலைப்பட்டீர் கள்! சைவப்பிரசங்கஞ் செய்ய அவர் யோக்கியரல்லரெ ன்று நீங்களா பேசத் தலைப்பட்டீர்கள்! இவையெல்லாம் உரைத்தறிய வல்லவர் நீங்கள்தாமோ! இவைகளிலே, சைவ ப்பிரசாரகர் குறைவுடையவராயின், வித்தியாசாலைகளி லும், நல்லூர்க் கந்தசுவாமிகோயிற் சந்நிதானத்திலுஞ் சை வப்பிரசாரகர் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்து பிரசங் கிக்க, அதனை அகமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடுங் கீழிருந்து கேட்ட பிராமண குருமார் சைவ குருமார்களு

டைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவர்களைக் கொண்டே ஆலயப் பிரதிட்டை ஆலய பூசை தீக்ஷை அந்தியேட்டி முதலியன செய்வித்துக்கொள்ளும் உன்போலிகள் நிறைவுடையவர்களோ! சைவப்பிரசாரகர் குறைவுடையவராயின், உங்கள் கந்தசுவாமிகோயிலிலே, அருச்சகர்கள் சைவப்பிரசாரகருக்கு, விபூதியைத் தட்டத்தில் வைத்து, உலகறிய இருகையாலுங் கொடுத்துவிட்டுப், பின்பு பிராமணர் முதலாயினோரெல்லாருக்கும் விபூதியை விரலாற் கிள்ளிக் கொடுக்கக் கண்ட உன்போலிகளோ நிறைவுடையவர்கள்! சைவப்பிரசாரகர்தாமோ குறைவுடையவர்! சைவப்பிரசாரகரை, வேதாரணியத்திலே கட்டியத்தத் வாத்தியந் தீவர்த்தி முதலியவைகள் அனுப்பிக் கோயிலுக்கழைத்துப், பிராமணர்கள் குருமார்கள் பிரபுக்கள் உத்தியோகத்தர்கள் எல்லாருங் கேட்கப், பிரசங்கஞ் செய்வித்தவர்களும், சைவப்பிரசாரகருடைய உறைவிடத்திலும் தங்கள் மடத்திலும் போசனதிகளில் அவரோடு சமத்துவமுடையவர்களுமாகிய வரணியாதீனத்துக் காணவாய்ச் சைவாசாரியர்களுடைய திருவடிகளில் வீழ்ந்து, அவர்களைக்கொண்டு தீக்ஷை அந்தியேட்டி முதலியன செய்வித்து, அவர்களிடத்தே வெளியிலிருந்து புசிக்கின்ற உன் கோயிலதிகாரிகள் தாமோ நிறைவுடையவர்கள்! இவ்வியாழ்ப்பாணத்திலே பழம்பிராமணர்கள் பழஞ் செட்டிகள் பழவேளாளர்களாலே சைவப்பிரசாரகர் பலவாற்றாலும் நன்குமதிக்கப்படுவது எல்லாருக்குந் தெரியுமே. புதுப்பிராமணர்கள் புதுச்செட்டிகள் புதுவேளாளர்கள் சைவப்பிரசாரகரை அவமதிப்பார்கள் தாமே.

ககூ. சைவப்பிரசாரகர் போனவருஷத் திருவிழாக் காலத்து மாகேசுர பூசையிலே விலாப்புடைக்கப் புசித்தார் என்று உன் பத்திரிகைகள் உளறுகின்றனவே. கந்தபுடப்

பிரபுவே! பொருள் செலவிட்டு மாகேசுரபூசை செய்வித்தவர்களுள்ளே நீயுஞ் சேர்ந்தனையோ! உன் கோயிலதிகாரிகளுஞ் சேர்ந்தவர்களோ! இல்லையே. பின் ஏன் உங்களுக்கு வயிற்றெரிச்சல்! மாகேசுரபூசைப் பிரசாதம் உனக்கு ஒரு நாளுங் கிடைக்கவில்லையோ? நீ நித்தமும் மடத்தை வளைந்துகொண்டு திரியக் கண்டேனே! உன்னை ஒருவருங் கூப்பிடவில்லையோ! இல்லையானால், உனக்கு வயிற்றெரிச்சல் உண்டாகுந்தானே! உன் கோயிலார்கள் அம் மாகேசுரபூசையிலே நித்தமும் போசனஞ்செய்து இலையெடுத்துக்கொண்டு போய் எறிந்துவிட்டுக் கை கழுவக் கண்டேனே. அவர்களுக்கு வயிற்றெரிச்சலேனோ! உட்பந்தியிலே படைக்கப்பட்ட விசேஷ பதார்த்தங்கள் சில வெளிப்பந்தியிலே படைக்கப்படவில்லையென்று, யாரேனும் வேடிக்கைக்கு வம்புவார்த்தை தொடுத்துவிட்டார்களோ! அப்படியானால், அவர்களுக்கும் வயிற்றெரிச்சல் உண்டாகுந்தானே. போசனஞ்செய்துவிட்டு மிஞ்சிய எச்சிற் சாதம், பலகாரம் கறி முதலியனவெல்லாம் இலையோடே மேல் வேட்டியில் வைத்துக் கட்டிக்கொண்டு போகிற உன் கள்ளுக்குடிப் பண்டாரிகளுடைய பூசையானால், "உட்பந்தி வெளிப்பந்திப் பேதமேயில்லை; நாமெல்லாம் ஒருமிக்க இருந்து புசிக்கலாம்; பதார்த்த விஷயத்திலோ சந்தேகமில்லை; வலக்கையாலே சோற்றையள்ளித் தின்னலாம்; இடக்கையாலே வடையை எடுத்துக் கடித்துத் தொன்னைப் பாயசத்தை எடுத்துக் குடித்துவிட்டு உடுத்த வேட்டியிலே துடைக்கலாம்; எச்சிற்பேதமோ இல்லை" என்று எண்ணிவிட்டார்கள் போலும்! அப்படியானாற் சரிதான். அம் மாகேசுரபூசையினாலே உன் பண்டாரிகளுடைய வயிற்றுச் சோற்றுக்கு கேடு விளைந்தது என்று, நீ உன் பத்திரிகைதோறும் புலம்புவது பொருந்தாது. அம்மா

கேசுரபூசை நடந்த நாள் இருபத்தைந்து. அம் மாகேசுர பூசை செய்வித்தவர் பத்துப்பேர். அவர்கள், முன்னரேதா னே சைவப்பிரசாரகரை, எத்தனையோ நாள் அடுத்தடுத்து வணங்கிப் பிரார்த்தித்து அநுமதி பெற்றுக்கொண்டு, மாகே சுரபூசை செய்வித்தவர்கள், அது நீ அறியாய்தானோ! பின்பு வேறெத்தனைபேர், தாங்கள் மாகேசுரபூசை செய்விக்கப் போய்ப் போய் அடுத்தும், அநுமதி பெறுமையினாலே, வரு த்தமடைந்து திரும்பினவர்கள், அது நீ அறியாய்தானோ! யாழ்ப்பாண மணியகாரராகிய மாணிக்கவாசகமுதலியார், தாம் ஒருநாள் மாகேசுர பூசை செய்விக்கும் பொருட்டு அநுமதி பெற்றுக்கொள்ளும் வண்ணம் பிரார்த்தித்துங் கூடாமையினாலே, முன்னரேதானே மூன்று நாள் மாகேசுர பூசைக்கு அநுமதி பெற்றுக்கொண்டு சாமான்கள் கொண்டு வந்து விட்ட ஒருவரிடத்தே கேட்டு, அம்மூன்றுநாண் மா கேசுர பூசையில் ஒரு நாண் மாகேசுரபூசை தாஞ் செய்விக் கப் பெற்றுக்கொண்டதும், அம் முன்னையோருடைய அந் நாளை மாகேசுரபூசைச் சாமான்கள் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டதும், நீ அறியாய்தானோ! இவையெல்லாம் அறிந்தும் உனக்கு ஏன் இந்த வம்புவார்த்தை! இனி அம் மாகேசுரபூசை செய்வித்த அப் பத்துப்பேரொழிய, வேறு செல்வர்கள் இவ்வியாழ்ப்பாணத்தில் இல்லையோ! அப்படி யில்லையானபடியாற்றான், உன் பண்டாரிகளுடைய வயிற் றுச் சோற்றுக்குக் கேடு விளைந்தது என்று அழுகிறாயோ! முன்னைவருஷங்களில் உன் பண்டாரிகளுக்குச் சோறிட்ட வர்கள் இந்தப் பத்துப்பெயர்களுந்தானோ! இவர்களுள் இரண்டுபேரொழிய, மற்றவர்கள், பிராமணர்களுக்குஞ் சைவர்களுக்கும், கூனர், முடவர், குருடர் முதலிய ஏழை களுக்குமேயன்றி, உன் பண்டாரிகளுக்கு எப்பொழுதே

னும் பூசை செய்திருக்கின்றார்களோ! முன்னே உன் கள்ளுக்குடிப் பண்டாரிகளுக்குப் பூசை செய்துகொண்டு வந்த இரண்டுபேரும், போனவருஷம் திருவாவடுதுறை யாதீனத்து ஒதுவார்மூர்த்திகளுக்கும், சிவபூசாவான்களாகிய சைவர்களுக்கும், பூசைசெய்வித்தது பாதகம் என்று அழுகிறாயோ! அது செய்விக்க அவர்கள் யோக்கியர்களல்லரென்று அழுகிறாயோ! இவ்வருஷ மாகேசுர பூசையில்லாமையினாலே சைவப்பிரசாரகர் அ ழு வா ர் தா மே என்றாய்! சைவப்பிரசாரகர் மறுக்காது உடன்படுவாராயின், அவருறைவிடத்தில் எந்நாளுமே மாகேசுரபூசை மிகச் சிறப்பாக நடக்குமென்பது நீ அறியாய்தானோ! சைவப்பிரசாரகர் தம் மன்பர்கள் தமதாச்சிரமநாடி வலிந்து வந்தடுத்துத் தமது திருவடியில் வீழ்ந்து பலகாற் பிரார்த்தித்து அநுமதி பெற்றுக்கொண்டு செய்யும் மாகேசுர பூசையை அவர்மாட்டிராங்கித் தமது திருக்கூட்டத்தோடு சிவப் பிரீதி செய்தேற்பது உன் கருத்துக்கு வசையாய் முடிந்ததோ! யாருக்காயினுங் கூலியாளாய் நித்தமும் ஆறுசல்லிக்குப் புகையிலைமுடிச்சவிழ்த்து அவருக்கு மீன்வாங்கிக் கொடுத்து நெடுநாட்சீவித்துப், பின்பு அவர் காரியகாரராகி, அவர் பொருளைக் கவர்ந்து அவருக்குத் துரோகஞ்செய்து நீங்கிப், பின்பு நாட்டுக் கோட்டையாரிடத்தே கடன்பட்டு அவருக்குந் துரோகஞ் செய்து, பின்பு பலகோயிற் பொருள்களை அபகரித்துக்கொண்டு வாழ்வதே உன்கருத்துக்கு இசையாய் முடிந்ததோ! "கண்டனமின்றியாங் கலியின்வண்ணமே" ஏன் கறுவிப்பார்க்கிறாய்! என்மீது கோபமோ! உன்னை யார் சொன்னார்! யாழ்ப்பாணந் தோன்றிய நாண் முதற் பரம்பரைப் பிரபு நீ. ஏன் பல்லாலே உதட்டை மடித்துக் கடிக்கிறாய்! நான் பரிகாசம் பண்ணுகிறேன் என்று நினைந்துவிட்டாயோ! பொறு பொறு.

உ0. கந்தமடப் பிரபுவே! வேலாயுதத்தை வணங்கலாகாது எனச் சைவப்பிரசாரகர் சொன்னாரென்று நீ ஏன் பிதற்றிக்கொண்டு திரிகிறாய்! எங்கே சொன்னார்! சுவாமிக்குக் கதிர்வேல் அடிமையாதல் பற்றிக் கதிர்வேலுஞ் சுவாமியாகப் பாவித்து நன்குமதிக்கப்படுமாயினும், சுவாமியுடைய மனைவியரைக் கதிர்வேலுக்கு மனைவியராகக் கொள்வது தருமமா? தருமமாயின், கதிர்வேலின் மனைவியை, அடிமையாதலின் ஒத்த மயில்வாகனம், தன் மனைவியெனக்கொள்வதுந் தருந்தானே. தருமமாயிற் கலகமேன்! இப்படியானால், கதிர்வேலுக்குக் கதிர் குறையுமே. குறையவே, கதிர்வேலனுக்குங் கதிர் குறையுமே. பின்னிகழ்வென்னை? வேலன் மனையாளையும் மயில்வாகனம் அஞ்சாது கொள்ளுந்தானே. இப்படியாமானால், வேலுக்கு வெற்றியெங்கே! வெற்றிவேல் வீணடையடுத்ததாய் முடியுந்தானே. பின்னிகழ்வென்னை! வெற்றிவேல் மயில்வாகனத்தால் மெலிந்து தன் வாழ்க்கையொழிந்தழியுந்தானே; அழியவே, மயில்வாகனம் தீரா வலியடைந்து,தன் கண்மயக்கான் மீறுந்தானே. பின்னிகழ்வென்னை! வெற்றிவேலுற்ற துணையெனக் கொண்ட இலங்கையர் பாடு யாதாய் முடியும்! இலங்கையருக்கு மயில்வாகனத்தோடு பகை விளையுந்தானே. ஏன் அழுகிறாய்! என் மகாப்பிரபுவே, அழாதே அழாதே. அழுங்காரணந் தெரியவில்லையே! "வேலாயுத தூஷகரல்லாதவரை வேலாயுத தூஷகரென்று சொன்னேனே! இந்தப் பாவம் எங்கே தொலைப்பேன்!" என்றழுகிறாயோ! விழுந்து சயனித்துவிட்டாய்; எழுந்திரு எழுந்திரு; எழுந்து, கண்ணீரைத் துடைத்துவிட்டு, அழாதே கேளு. இனி, உங்கள் கோயிலுக்குக் "குழந்தைவேல் அமையும்; முத்துக்குமாரர் வேண்டாம்" என்பாயாயின், முத்துக்குமாரரை ஏன் உள்

ளே ஏற்றீர்களோ! ஏற்ற நீங்கள், முத்துக்குமாரர் தமக்குரிய தானத்தினுள்ளே புக விட்டுவிடலாமே! "முத்துக்குமாரர் உள்ளே புகுந்தால், தமது தேவியார் குழந்தைவேலோடிருக்கக் கண்டு கோபித்துக்கொண்டு புறப்பட்டோடிவிடுவார்" என்பாயோ? முத்துக்குமாரரைக் கண்ட குழந்தைவேல் பயந்து நடுநடுங்கி எழுந்தோட, முத்துக்குமாரர் அஃதறிந்து வந்து கூடிவிடுவாரே. அப்பா! இது உனக்கு விளங்காதோ! செல்லப்பா நடுவில் நன்றாக விளங்கும். என் சொல்லைத் தட்டாது, அமைந்திருந்து ஒத்துப்பார்க்க, எல்லாருக்கும் நன்றாக விளங்கும். ஓகோ! முந்தியதற்கு அழுத நீ இதற்கு ஏன் உடம்பு குலுங்கச் சிரிக்கிறாய்? சொல்லு சொல்லு. ஒன்றுஞ் சொல்லுகிறாயில்லை! முடிவு இதுதானென் றெண்ணிச் சிரிக்கிறாயோ.

உக. உன் கடைப் பத்திரத்துக்கு வச்சிரகுலிசம் எனப் பெயரிட்டதேனோ! வச்சிரம் குலிசம் என்பன ஒரு பொருட் சொற்களையாகவும், வச்சிரகுலிசம் என்றதேனோ! ஓகோ! துர்வார்த்தைக்கு வச்சிரம் என்று பெயராதலினாலே துர்வார்த்தையாகிய குலிசம் வச்சிரகுலிசம் என்றாயிற்றோ! அல்லது, இணங்கா வார்த்தைக்கு வச்சிரம் என்று பெயராதலினாலே, சைவசாத்திரத்துக்கும் அறிவுடையோர்களுக்கும் இணங்கா வார்த்தையாகிய குலிசம் வச்சிரகுலிசம் என்றாயிற்றோ! அல்லது, மாணுக்கனுக்கு வச்சிரனென்று பெயராதலினாலே, சைவப்பிரசாரகர்மீது அவர்மாணுக்கருளொருவனாலே நீ தொடுப்பித்த குலிசம் வச்சிரகுலிசம் என்றாயிற்றோ! எங்ஙனம் பொருள் கொள்ளினும் ஒக்கும் என்பாய் போலும்.

உஉ. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே உள்ளவைகளெனச் சைவப்பிரசாரகருடைய பத்திரிகைகளிலே எடுத்

துக்காட்டப்பட்ட பற்பல குற்றங்களுள்ளே, சிலவற்றை, நீ உன் வச்சிரகுலிசத்தின் எட்டாம்பக்கத்தில் அநுவதித்து, அவைகள் பொய், பிறவும் அப்படியே பொய்யென்கிறாய். பொய்யோ மெய்யோவென்பதை, உலகத்தார் புலவரியாலும் நன்றாக ஆராய்ந்து நிச்சயித்துக்கொண்டு, தங்கள் தங்கள் மனச்சான்றுக்கு ஒப்ப நடக்கட்டும். இவ்வருஷத் திருவிழாவிலே பரிகாரி இராமுப்பிள்ளையினுடைய குதிரைக்காரப் பறையனாகிய முத்தனுடைய தம்பி உங்கள் கோயிலிலே சுவாமிக்குச் சந்தனமிழைத்ததும், ஊரவர்களுக்குக் கோயிற்பிரசாதங் கொண்டுபோய்க் கொடுத்ததும், அப்படியே பொய்தான் என்பாயோ? அவன் பறையனாயினும், கோப்பாய் நளத்தியைக் கலியாணஞ் செய்த முத்தனுக்குத் தம்பியாதலாலும், அங்கே புசித்ததனாலும், அதிசுத்தனானான் என்பாய்போலும். பறையனாயினும், பண்டாரியாயினும், நளச்சாதியோடு கலந்துவிட்டால் அதி சுத்தனாவான் என்பதுதான் உன் கருத்துப்போலும். அது நிற்க. உங்கள் கோயிலிலே தூபியில்லை என்றதும் பொய்தானோ! மூலத்தான வடிவஞ் சிலாரூபமன்று என்றதும் பொய்தானோ! சண்டேசுரர் வேல் என்றதும் பொய்தானோ! உருத்திராபிஷேகக் கிரமம் ஒரு சிறிதும் இல்லையென்றதும் பொய்தானோ! இருபத்துநான்குநாட்டிருவிழா என்றதும் பொய்தானோ! மாத்துவர் பூசைசெய்கிறார் என்றதும் பொய்தானோ! வைரவசூலம் இரும்பென்றதும் பொய்தானோ! தேருக்கு ஆடு வெட்டப்பட்டது என்றதும் பொய்தானோ! சுவாமிக்குக் கால் நீட்டி அங்கப்பிரதக்ஷிணஞ் செய்கிறார்கள் என்றதும் பொய்தானோ! பத்துநாளிலே கொடியிறக்கிப் பின்பு ஏற்றினார்கள் என்றதும் பொய்தானோ! தேரெரிந்தது என்றதும் பொய்தானோ! எரிந்த தேரிலே சுவாமி எழுந்தருளப்பண்ணினார்கள் என்றதும் பொய்தானோ!

குமாரதந்திரத்திற் கூறியபடியே மகாமாரி என்கிற வாந்திபேதி வந்து தலைப்பட்டுக்கொண்டதும் பொய்தானோ! இவைகளெல்லாம் மெய்யாயின், இவைகளை நியாயங்காட்டித் தாபித்திருப்பாய், பொய்யாதலாற்றான், "பிறவும் அவ்வாறேயாம்" என்றதில் அடக்கிவிட்டாய்.

உ௬. வச்சிரகுலிசம் உனக்கெழுதித் தந்தவர் யாரோ? கலட்டிச் சீனிவாசபிள்ளை என்கின்றார் சிலர். இது என்ன அநியாயம்!!! சைவப்பிரசாரகருக்குப் பரிசாரகராயிருந்து அங்கே போசனஞ்செய்துகொண்டு அவர் வித்தியாசாலையிலே படித்த சீனிவாசபிள்ளையா, இப்பொழுது சைவப்பிரசாரகருடைய சாதிமரபு சமயமரபு விசாரித்தெழுதுவார்! எழுதார் எழுதார்!! சைவப்பிரசாரகருக்குச் "சற்குருநாத சுவாமிகளே" "எம்பெருமானே" என்று விண்ணப்பங்கள் எழுதிக்கொண்ட விருத்த சீனிவாசபிள்ளை, இப்பொழுது சைவப்பிரசாரகரைக் "குரவன்" என்றும் "எம்பெருமான்" என்றும் எழுதிய நேற்றைப் பாலரிருவரை இவ்வளவு குரூரமாகக் கோபித்துக் கண்டித்து எழுதுவாரா! எழுதார் எழுதார்!! சீனிவாசபிள்ளை, உன்னிடத்தே பெற்ற பிள்ளையிற் சிறந்த பயபத்தி மரியாதைகளும், உன்னோடே பெண் தந்த மைத்துனனிற் சிறந்த கொண்டாட்டமும், ஒருங்குடைமையினால், உன் வேண்டுகோளை மறுக்கமாட்டாது எழுதித் தந்துவிட்டாரோ! உபாத்தியாயர்களுடைய கல்வித்திறமையைப் பரீட்சைசெய்து வைக்க நீக்கவும், பிள்ளைகளுடைய கல்வித்தேர்ச்சியைப் பரீட்சைசெய்து நிச்சயிக்கவும், பிள்ளைகளுக்குச் சைவாநுட்டானத்தோடு தமையன் மனையாளைச் சதாகால முந் தாயெனக்கொண்டு வழிபடுதல் முதலிய நற்பழக்கங்கள் பழக்கவும், வல்ல கார்த்திகேயபிள்ளையுடைய விசார

ணைக்குட்பட்ட வித்தியாசாலைக்கு முதலுபாத்தியாயரும் இருபக்க மடாதிபதியுமாகிய சீனிவாசபிள்ளை, எழுத்துப் பிழை, சொற்பிழை, வசனப் பிழை, தருக்கப் பிழை, மரியாதைப் பிழை, சைவசம்பிரதாயப் பிழைகளெல்லாம் பொதிந்த வச்சிரகுலிசம் எழுதுவாரா! எழுதார் எழுதார்! அப்பிழைப் பத்திரிகை எழுதினவர் அவராயின், அவரைக் கார்த்திகேயபிள்ளை சிச்சி என்று வெறுத்து, இதுகாறும் முதலுபாத்தியாய உத்தியோகத்தினின்றும் நீக்கிவிடாதிருப்பாரா! இவையெல்லாம் வீண்கலககாரர் வார்த்தை.

௨௪. கந்தமடப் பிரபுவே!

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை."

தேசாபிமானியே!

க. சைவப்பிரசாரகர் வேலாயுததூஷணஞ் செய்ய நீ எங்கே கண்டாய்!! அவர் பதிப்பித்த கந்தபுராணத்தின் இறுதியில் "வேலுமயிலுந்துணை" என்பது நீ காணவில்லையோ! சைவப்பிரசாரகர் "வேலாயுதங் கந்தசுவாமி கைப்படைக்கலம்; அவரேவல் செய்யுமடிமை" என்று கூறியதினால், அவ்வேலாயுதத்தை வழிபடல் தோஷம் என்பது சைவப்பிரசாரகர் கருத்து என்கிறாய். கடவுளது படைக்கலத்தையும் அடிமையையும் வழிபடல் தோஷம் என்று உனக்குச் சொன்னவர் யாரோ! வேலாயுதங் கந்தசுவாமி கைப்படைக்கலம் அவரடிமை என்றது பொய்யோ! "சேவலுங் கொடிமான்றேரும்" என்னுந் திருவிருத்தத்தில் "வேலும் வேறுள படைகள் யாவும்" என்றதனாலே வேல் "படைக்கலம்" என்பதும், "மொழிந்திடுபணிகளாற்றி" என்றதனாலே வேல் "அடிமை" என்பதும், நீ அறியாயோ! "வேலாயுதம்" என்ற நீதானே அது படைக்கலமன்று என்றது, மாதாத் தாயல்லள் என்றாற்போலும்! கந்தசுவாமி கோயிலுக்கு அஸ்திரதேவர் எனப்படுவது யாது! வேலாயுதமன்றோ! அஸ்திரதேவப்பிரதிட்டை பூசை முதலியன ஆகமசம்மதமெனத் தமது பத்திரிகையில் அங்கீகரித்துக் கொண்ட சைவப்பிரசாரகர் கருத்து வேலாயுததூஷணம் என்பது எப்படிப் பொருந்தும்! கருப்பக்கிருகத்திலுள்ள வெள்ளிப்படையும் உற்சவத்துக்குப் புறப்படுந் தாமிரப் படையும் அம்புவடிவம் என்று சைவப்பிரசாரகர் சொல்லியது வேலாயுததூஷணம் என்கிறாய். கந்தசுவாமி கைவேலாயுதம், சைவப்பிரசாரகர் சொல்லியபடியே "மூன்றுபத்திரமுடையது" என்றும், வீரவாகுதேவர் முதலாயினார் சொல்லியபடியே "அறுமுகம் படைத்த பண்பு" உடையது

என்றும், நீ ஏற்றுக்கொண்டாயே! ஏற்றுக்கொண்ட நீ, இம்முப்புத்திரமுடைமை அறுமுகமுடைமை என்னும் இலக்கணம், நீ வேலாயுதம் எனப் பேசிய வெள்ளிப்படை, தாமிரப்படைகளிலே கண்டாயா? இல்லையே! அஸ்திரதேவரிடத்தன்றோ இவ்விலக்கணம் நீ காண்கின்றாய்! ஆகவே, அஸ்திரதேவவடிவமே கந்தசுவாமி கைவேலாயுதவடிவம் எனவும், அதனின் வேறுபட்ட வடிவமுடைய மூலப்படை உற்சவப்படை இரண்டும் அம்புவடிவம் எனவும், அறியக் கடவாய். அறியவே, வேலாயுதத்துக்குச் சமமாகாதது எனவும், வேலாயுதம்போல வீரவாகுதேவர் முதலாயினோராலே வணங்கப்படாதது எனவும், நீ பேசிக் கழித்துவிட்ட அம்புக்கு, உன்னாலும் நம்மாலும் எவராலும் புகழப்படும் வேலாயுதத்தை, அஸ்திரதேவரெனக் கொண்ட கோயில் உனக்குஞ் சம்மதமாகாதுதானே.

௨. வீரவாகுதேவர் முதலாயினோரால் வணங்கப்பட்டமையால் வேற்படை பெருமையுடையது எனவும், வணங்கப்படாமையால் அம்பு முதலாயின பெருமையில்லாதன எனவும், பேசத் தலைப்பட்டாய். கந்தசுவாமி கைகளிலுள்ள தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்னும் பதினொன்றும் பதினொரு ருத்திரர் என்பதறியாயோ! வீரவாகுதேவர் முதலாயினோராலே வணங்கப்படுதற்குப் பதினொரு ருத்திரர் யோக்கியரல்லர் என்றுதான் நினைந்தாயோ! வீரவாகுதேவர் முதலாயினோராலே கந்தசுவாமியுடைய அடியாருள் ஒருவனாகிய முசுகுந்தன் சேவிக்கப்பட யோக்கியனானபோது, கந்தசுவாமி கையாயுதங்களாகிய பதினொரு ருத்திரர் சேவிக்கப்பட யோக்கியராகார்! சிவபூசை முதலியவைகளிலே

செய்யப்படும் பஞ்சாவரணபூசையில், ஐந்தாமாவரணத்தில், இந்திரன் முதலிய உலகபாலர் பதின்மர் கையாயுதங்களாகிய குலிசம் முதலிய தசாயுதங்களும் பூசிக்கப்படுவனவாகவும், சிவகுமாரராகிய முருகக்கடவுளுடைய கைகளினுள்ள தோமர முதலிய பதினொன்றும், பூசிக்கப்படா என்றுதான் நீ நினைந்தாயோ! முருகக்கடவுளுக்குப் பகைவனுகி அவரோடு பொருது அவர் கைவேலாற் றண்டிக்கப்பட்ட சூரனே, மயில்வடிவடைந்து அவருக்கு அடிமையாகி அவ்வேலோடொப்பப் பூசிக்கப்பட்டும், "வேலு மயிலுந்துணை" எனத் துதிக்கப்பட்டும் வருவது சத்தியமேயாகச், சிவாஞ்ஞையினாலே பதினொரு ருத்திரர் உருத்திரியப்பெற்ற பதினொரு படை பூசிக்கப்படா எனச் சொல்லவல்லவர் யாரோ! இவையெல்லாம் இங்ஙனமாகவும், வேலாயுதம் பூசிக்கற்பாலதன்று என்று சைவப்பிரசாரகர் சாற்றினர் என நீ அறிவிலாதவரை வஞ்சிக்கப் புகுந்தது மிக நன்று நன்று!!!

ஙூ. கந்தசுவாமிகையில் வேலாயுதம் அவருக்கு அபின்னசத்தி என்பது நீ யாதுபிரமாணத்தால் அறிந்தாய்! "குமரன் சத்தி யாலட நின்ற வெற்பனை யது" என்னுங் கந்தபுராண வாக்கால் அறிந்தேன் என்பாயாயின், அது பொருந்தாது; "அயில் சத்தி யெஃக ஞாங்க ருடம்பிடி யைந்தும் வேலாம்" என்னு நிகண்டாலும், வடமொழி நிகண்டு வடமொழியகராதிகளாலும், அக்கினிதேவன் முதலாயினோருடைய தியான சுலோகங்களில் அவர் கைவேலுக்குஞ் சத்தியென்னும் பெயருண்மையாலும், சத்தியென்பது அவர் கை வேலுக்கும் பெயராமாறு தெளியப்படுதலாலென்க. "குமரன் சத்தி" குமரன் வேலென்றே பொருள்படும். சூரன்: "ஆதிநாயக னெம்பெருஞ் சத்தியேயல்லா—லேதி

லார் வெலாரென்னினும்" என்றதனுலும்; அவனை வென்றது கந்தசுவாமி கைவேலாயுதமேயாதலாலும், அங்கே "சத்தி" என்றது கந்தசுவாமி கைவேலாயுதம் என்றும், அச்சூரன்: "சத்தியுமிறையும் பேதமோ" என்றதனுல் அவ்வேலாயுதங் கந்தசுவாமிக்கு அபின்னுசத்தி என்றும், அறிந்தேன் என்பாயாயின், அதுவும் பொருந்தாது; அச்சூரன் வாக்கு: "எத்திறத்தரு நுங்களை வெல்கில ரெமது—சத்தி வென்றிடு மென்றனன் கண்ணுதற்றலைவ—னத்திறத்தினு லல்லவோ வறுமுகக் குமர—னுய்த்த செய்ய வேலுண்டது தாரகனுயிரை" என்னுஞ் சிங்கமுகன் வாக்கை மூலமாகக்கொண்டு தோன்றினமையாலும், அச்சிங்கமுகன்வாக்கு: "தேவர் யாவருஞ் சென்று தொழப்படு—மூவராகி மொழிந்திடு நுங்களைத்—தாவிலாத நஞ்சத்தியொன்றே யலா—லேவர் வெல்பவர்" என்னுஞ் சிவபெருமான் வாக்கை மூலமாகக் கொண்டு தோன்றினமையாலும், சிவபெருமான் "நஞ்சத்தி" என்றது வேலாயுதத்தையன்றென்பது, மூவருள் ஒருவனுகிய சிங்கமுகனை வென்றது வேலாயுதமன்மை காரணமாகப் பெறப்படுதலாலுமென்க. வேலாயுதங் கந்தசுவாமிக்கு அபின்னுசத்தி என்பது பின் யாது காரணத்தால் அறிந்தாய்? "கந்தசுவாமி கையின் வேலாயுதமெனப்படுவது அவருடைய இச்சாசத்தியுங் கிரியாசத்தியும் ஞானசத்தியுமாகிய மூன்று சத்திகளினடுக்கு" என்ற சைவப்பிரசாரகர் வாக்கால் அறிந்தேன் என்பாயாயின், அதுவும் பொருந்தாது; "கற்றதெல்லாமறந்தவர்" என்றும், "கழுதை" என்றும், "பொய்யுரை" பகர்வோர் என்றும், உன்னுலே நிச்சயிக்கப்பட்ட சைவப்பிரசாரகர் உன்னுலே நம்பற்பாலரல்லாதலாலென்க. பின், யாது பிரமாணத்தால் அறிந்தாய்? "வேலாயுதம் முருகக்கடவுளுக்கு ஞானசத்தி" என்ற திரு

முருகாற்றுப்படை விசேட வுரையால் அறிந்தேன் என்பா யாயின், அதுவும் பொருந்தாது. அவ்வாக்கியஞ் சைவப்பிர சாரகருரையினன்றி நச்சினார்க்கினியர் முதலாயினோர் செய்த உரைகளிற் காணப்படாமையாலென்க. இனி, யாது பிரமாணத்தால் அறிந்தாய்! பிரபோத சந்திரோதயத்தாலோ! சுப்பிரதீபத்காலோ! உத்தரக்கும்பியாலோ! கிறிஸ்தோபகாரியாலோ! சொல்லு.

௪. வேலாயுத வணக்கங் கந்தசுவாமிவணக்கம்; அதனால், வேலாயுதந் தாபிக்கப்பட்ட நல்லூர்க் கோயில் கந்தசுவாமிகோயில் என்று வழங்கப்படுகின்றது என்றாய். பின்பு, அதனை மறந்து, வேற்படை ஓர் சத்தி, அம்மைமாராகிய தெய்வயானையம்மையார் வள்ளியம்மையார் என்னும் இரு சத்திகளும் வேலாயுத சத்தியோடு சமேதமாய் இருத்தலாற் கற்பிலக்கணங் குறைபடாதே என்றாய். வேலாயுதத்திற்குப் பிரதிட்டாவிதி பூசாவிதி முதலியன வேறு; கந்தசுவாமிக்குப் பிரதிட்டாவிதி பூசாவிதி முதலியன வேறு என்பது குமாரதந்திரம் அறிந்தவரிடத்தே ஆராய்ந்து பேசு. நீ சுட்டிய கோயிலிலே வேலாயுதத்துக்கு எந்தப்பிரகாரம் பிரதிட்டை பூசை செய்யப்படுகின்றன! அக்கோயிலருச்சகர்களை ஒருசபையிலே கேட்டாராய்ந்து பேசு. அந்தந்தக் கடவுளுடைய ஆயுதபூசை அந்தந்தக் கடவுட் பூசையாய் விடுமாயின், பஞ்சாவரணபூசையிலே உலகபாலர் பதின்மரையும் நான்காமாவரணத்திலும் அவர்கள் கையாயுதங்கள் பத்தையும் ஐந்தாமாவரணத்திலும் பூசிக்கும்படி சிவாகமம் விதிக்கவேண்டுவதில்லையே. வேலாயுதங் கந்தசுவாமிக்குச் சத்தியாதலால் வேலாயுதந்தாபிக்கப்பட்ட கோயில் கந்தசுவாமிகோயில் எனப்படும் எனவும், வேலாயுதத்துக்குப் பக்கத்தில் அம்மைமாரை வைத்துக் கஜவல்லீ மகாவல்லீ

சமேத ஸ்ரீசுப்பிரமணியசுவாமிநே நம என்று பூசிக்கலாமெனவும், அப்படிப் பூசித்தலாற் கற்பிலக்கணங் கறைபடாதெனவுங் கொண்ட நீ: "ஆதலினமது சத்தி யறுமுக னவனும் யாமும்—பேதகமன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்" என்ற சிவவாக்கின்படியே கந்தசுவாமி சிவபெருமானுக்குச் சத்தியாதலால், கந்தசுவாமி தாபிக்கப்பட்ட கோயில் சிவன்கோயில் என வழங்கப்படும் எனவும், கந்தசுவாமிக்குப் பக்கத்திலே உமாதேவியாரை வைத்து அக்கந்தசுவாமியை உமாபதயே நம என்று பூசிக்கலாம் எனவும், அப்படிப் பூசித்தலாற் கற்பிலக்கணங் கறைபடாதெனவுஞ் சொல்வாய்போலும்! சிவபெருமானுக்குச் சூரியன் இச்சாசத்தியெனவும், சந்திரன் ஞானசத்தியெனவுஞ் சிவாகமஞ் செப்புதலால், சூரியனையினுஞ் சந்திரனையினுந் தாபிக்கப்பட்ட கோயில் சிவன்கோயில் என வழங்கப்படும் எனவும், சூரியன்பக்கத்திலாயினுஞ் சந்திரன்பக்கத்திலாயினும் உமாதேவியாரை வைத்து அச்சூரியனையேனுஞ் சந்திரனையேனும் உமாபதயே நம என்று பூசிக்கலாம் எனவும், அப்படிப் பூசித்தலாற் கற்பிலக்கணங் கறைபடாதெனவுஞ் சொல்வாய்போலும்! விஷ்ணுவுஞ் சிவனுக்குச் சத்தியாதலால், விஷ்ணுதாபிக்கப்பட்ட கோயில் சிவன்கோயில் என வழங்கப்படும் எனவும், விஷ்ணுவின் பக்கத்தில் அவர்தங்கையாராகிய உமாதேவியாரை வைத்து, அவ்விஷ்ணுவை உமாபதயே நம என்று பூசிக்கலாம் எனவும், அப்படிப் பூசித்தலாற் கற்பிலக்கணங் கறைபடாதெனவுஞ் சொல்வாய்போலும்! சத்திகோயில் சத்தன்கோயில் எனப்படுமா! வள்ளிதெய்வயானைகோயில் கந்தசுவாமிகோயில் எனப்படுமா! சூரியசந்திரர் கோயில்கள் சிவன்கோயில் எனப்படுமா! விஷ்ணுகோயில் சிவன்கோயில் எனப்படுமா! படுமாயில், சாக்தேயராகிய வாமிகளையுஞ் சூரியப்பிரமவாதி சந்திரப்பிரமவாதி

களையும் வைஷ்ணவர்களையுஞ் சைவர்களென வழங்கலாம். சத்தனின்றிச் சத்தியில்லையாதலாலும், வேலாயுதம் அம்மைமார்போலச் சத்தியேயன்றிச் சத்தனன்மை உனக்குஞ் சம்மதமேயாதலாலும் சத்தனாகிய கந்தசுவாமியில்லாக்கோயில் கந்தசுவாமிகோயிலாகாது என்பது உனக்கும் ஒத்த துணிவேயாம். இன்னும் "வலப்பாற் கரதலத்திற் சத்தியபயஞ் சூல நீண்ட கட்டங்கந்தமருகமு மற்றவிடக்கரத்தின் வரதமுமாதுளுங்கபலம் போகி செபமாலை மணமலி நீலோற்பலமு முடையர்" என்று சிவதருமோத்தரத்திலே சொல்லியபடி சதாசிவமூர்த்தியுடைய முதல்வலக்கையில் இருப்பது வேலாயுதமாதலினால், வேலாயுதந் தாபிக்கப்பட்ட கோயில் சிவன்கோயிலெனப்படலாமே! அது விசேஷத்தின் விசேஷமாமே. அவ்வேலாயுதமோ இவ்வேலாயுதத்தாலே சேவிக்கப்படுங் கந்தசுவாமியாலுஞ் சேவிக்கப்படும்; கந்தசுவாமியைத் தோற்றுவித்த ஸ்ரீகண்டருத்திராலுஞ் சேவிக்கப்படும்; ஸ்ரீகண்ட ருத்திரரைத் தோற்றுவித்த மகேசுரராலும் சேவிக்கப்படுமே! நீ இவையெல்லாம் கற்றல் கேட்டல் செய்யாது, "கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தாற்-பெற்றதாம் பேதையோர் சூத்திரம்-மற்றதனை-நல்லாரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன்-புல்லறிவு காட்டிவிடும்" என்றபடியே உன்னறியாமையைக் காட்டிவிட்டாய்.

௫. சைவப்பிரசாரகர் "பூசினிக்காய்" என்றும், "தொண்டைமண்டலம்" என்றும் வரைந்தது பிழை எனவும், இராமலிங்கபிள்ளை "பூசுணைக்காய்" என்றும், "தொண்டமண்டலம்" என்றும் வரைந்ததே சரி எனவும் புகன்றாய். இதற்குத்தானோ பேயிலங்கையர் சிரிக்கிறார்! இங்கிலிசு மிக மலிந்த தற்காலத்திலே, இரண்டு பாலைமரக்குற்றி

என்று பொருள்படுகிற Two logs of iron wood என்றதற்கு இரண்டு இருப்புமரப் பூட்டு என்று கீழ்க்கோட்டிலே மொழிபெயர்த்து கைகையாடப்பட்டவர் ஒருவர் தமது உத்தியோகத்தினின்றுந் தள்ளப்பட்டாரோ! மேற்கோட்டிலே உயர்ந்த உத்தியோகம் பெற்றுச் செருக்கி நெளித்துத்திரிகிறாரே. இப்படிப்பட்ட மூடசிரோமணியினால் எத்தனையோ பேருடைய எத்தனைவழக்குகள் எவ்வளவு மோசம்போயிருக்குமோ! இதை விசாரிப்பாரில்லையே! அப்படியாகவும், தமிழ் விருத்தி கைம்மாறு கருதாது செய்யுஞ் சுவாதீனபதியாகிய சைவப்பிரசாரகரைத் தள்ளுகிறவர் யாரோ! வைக்கிறவர் யாரோ! இலங்கையரே! ஏன் கறுவுகிறீர்! பொறுத்துக்கொள்ளும். உம்மோடே பேசவில்லை. நான் தேசாபிமானியோடே பேசுகிறேன். தேசாபிமானீ! நீ பதார்த்தகுண சிந்தாமணி பார்க்கவில்லையோ! அடட நீ பாராததூலுண்டோ! "பித்தம்போ மேகம்போம் பேரா வனலும் போம், மெத்தவுடலங்குளிரு மேனியிடும் - இத்தலத்துள், ஆசினியொன்றில்லா வலர்ந்தவன சத்தனமே, பூசினிவித்தைத் தின்னும்போது" என்னும் வெண்பா நீ பார்த்திருப்பாயே. உன் பரிகாரிக்கும் இது தெரியாதோ. "சுகவளநிறைதரு தொண்டைநாடதனில்" என்று விசாகப்பெருமாளையருடைய இலக்கணச்சுருக்க வினாவிடைச் சிறப்புப்பாயிரத்திலும், "தொண்டைமானாடு தொண்டைநாடு என முடிந்தது" என்று மகாலிங்கையர் பதிப்பித்த தொல்காப்பிய நச்சினார்க்கினியருரையிலும், நீ காணவில்லையோ! இனி எது பிழை எது சரி? சொல்லு. ழகர ளகர பேதம் அறியாது ஒளி எனபதற்கு ஒழியென்றும், தில்லைவாழந்தணர் என்பதற்குத் தில்லைவாளந்தணர் என்றும் எழுதிய உன்னை வடதேசத்துப் பறைச்சிகளுஞ் சிரிப்பார்களே.

௬. ஒரு திருவிழாவுக்கிடையிலே தாமிரவேலாயுதம் முறிந்தது என்றதை ஏற்றுக்கொண்ட நீ, திருவிழா இடையீடுபடாமல் ஒரு சிறுபொழுதினுள்ளே ஒரு தாமிரவேலாயுதம் முடிப்பிக்கப்பட்டது என்றாயே. உற்சவவேலாயுதம் முறியத்தக்க சமயம் யாது? உற்சவமுடிந்து வாகனத்தினின்றும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய்ச் சிங்காசனத்தில் இருத்துஞ் சமயத்திலே முறிதற்கு ஏதுவில்லையே! அபிஷேகஞ் செய்யுஞ் சமயத்திலாவது அலங்காரஞ் செய்யுஞ் சமயத்திலாவது முறிந்திருத்தல்வேண்டும்! அப்படி முறிந்தநேரமுதல் எவ்வளவு நேரத்தினுள்ளே, அவ்வேலாயுதத்திலே பூசிக்கப்பட்ட மூர்த்தி கும்பத்திலே தாபிக்கப்படுதலும், ஒரு கன்னானலே கருக்கட்டிக் கரியவைத்து ஒரு வேலாயுதம் வார்த்துச் செவ்வைசெய்து முடித்துக்கொணரப்படுதலும், அது பிரதிட்டை செயப்படுதலும், இடையீடுபடாமற் திருவிழா நடத்தப்படுதலுங் கூடும்! நீ சொல்லு! சிவாகமபண்டித சகவாசம் சைவாசாரிய சகவாசம் உனக்கிருப்பினன்றே நீ இவையெல்லாம் ஆராய்ந்து எழுதுவாய்! கிறிஸ்தவர் சகவாசமும், பரிகாரி சகவாசமும், கிரிசைப் புழுகையர் சகவாசமும் உனக்கு இவைகளை உணர்த்த வல்லனவோ? நீ யாது செய்வாய்! வேலாயுதம் எத்தனைநாளில் முடிக்கப்பட்டது! கன்னார இராமலிங்கரிடத்திலும் அவர் மக்களிடத்திலுங் கேட்டறிந்து பேசு. கந்தசுவாமிகோயிலிலே பிரசித்தமாக நடக்குங் குற்றங்களைப் பொய்யென மறுத்த நீ, இரகசியமாக நடந்த வேலாயுத விஷயத்தையும் பொய்யென மறுத்துவிடலாமே. மெய்யென்றேற்றுக்கொண்டு, அது ஒரு சிறுபொழுதினுள்ளே முடிக்கப்பட்டது என்று சொல்லப்புகுந்து, அகப்பட்டுக் கொண்டாயே.

எ. "மட்பாண்டத்தை வச்சிரகுளிசங்கொண்டு தகர்க்கின்றோம்" என்ற அதிவீரனே! உன் மதி குசமதியோ குசைமதியோ! "வைவர்த்தப்தாலுவென வந்தவரே" என்றாயே. "வைவர்த்தப்தாலு" என்பதற்குப் பொருளென்னே! அது எவ்வாறு புணர்ந்ததோ! "சைவம்வாய்" என முறையில் புணர்ச்சி செய்தாயே! இம்முறையில் புணர்ச்சி எங்கே கற்றாய்? கந்தசுவாமிகோயிலாரிடத்தோ! கந்தமடத்தடியாரிடத்தோ! "சைவம் வாய் மண்போட்டீர் போடுகிறீர்" என்றாய். கல்வியறிவொழுக்கமுஞ் சைவாநுட்டானமும் ஒருசிறிதும் இல்லாத நீ யாது பிதற்றினும் பிதற்று. அதனாலே சைவப்பிரசாரகருக்குக் குறை ஒரு சிறிதும் இல்லை. சூரியனை உன் உள்ளங்கையால் மறைக்கவல்லையானால், சைவப்பிரசாரகருடைய கீர்த்தியை உன் பத்திரத்தால் மறைக்க வல்லை.

சைவப்பிரசாரகர்மீது சோழதேசத்துள்ள வித்துவான்கள் செய்த பாடல்களைப் பார்! பார்!

## திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீமத். மீனாட்சிசுந்தரம்பிள்ளை பாடல்.

"மன்னுபெருந்தமிழ்ப்பாடை யிலக்கணமு மிலக்கியமும் வரம்புகண்டோன், பன்னுசிவபுராணங்கள் பலதெரிந்தோன் சிவாகமநூற் பரவைமூழ்கி, யுன்னுமனுபூதி யெனும் விலைவரம்பிலாமணிகையுறக் கொண்டுள்ளா, னின்னுநயகுணத்தினனாய்ச் சைவமெனும் பயிர்வளர்க்கு மெழிலிபோல்வான்."

"நீடுபுகழ்த் திருக்கேதீச்சரந் திருக்கோணசல மிந்நிலவாநின்ற, நாடுபுகழ்த்தலம்பொலி யாழ்ப்பாணத்து நல்லூர் வாழ் நகராக்கொண்டோன், றேடுபுகழுருவமைந்த கந்தவே

டவத்துதித்த செல்வன்யாரும், பாடுபுகழாறுமுகநாவலனை வ்வாறச்சிறப்பதிப்பித்தானே."

"அகத்தியந் தொல்காப்பியமுன்னுயபலவிலக்கணமுஞ்
சகத்தியல்பல்லிலக்கியமுஞ் சாற்றுபரமதநூலு [று
மகத்துவமெய்ப்பொருணூலு மதியமையப்பயின்றுணர்ந்
சுகத்தியலுமனுபூதித்தோன்றலாயமர்பெரியோன்.

"மாறுபடுபரசமய வழியனைத்துமறமாற்றி
யாறுபடுசெஞ்சடிலத் தண்ணலாரருணெறியே
தேறுபடும்படிவளர்த்துத் திகழுமாதவமுடையோன்
வீறுபடுசிவனடியார்மேன்மைமுழுமையுமுணர்ந்தோன்.

"கருள்விரவுதலைக்கழிக்குங்கண்மணியும்வெண்ணீறும் பொருள்விரவு மைந்தெழுத்தும் பொருளாகக் கொண்டுவப் போன், றெருள்விரவு சுத்தசைவசித்தாந்தப் பெருஞ்செ ல்வ, னருள்விரவு பரவுபுகழாறுமுகநாவலனே"

## தியாகராசச்செட்டியார் பாடல்.

"செந்தமி ழென்னுஞ் சுந்தரமங்கை
கந்தரத்தழகு களிமங் கலநா
ணிலக்கண மனைத்து நலக்க விளக்குந்
துலக்க மிகுந்த தூண்டா விளக்குப்
புணர்தரு மின்ப மணவறு புராண
முணர்வோர் யார்க்கு மொளியுறு நேத்திர
நல்லறி வுறுத்தித் தொல்பவந் தொலைக்கும்
பல்கலை கட்கெலாம் புல்லுமோ ரில்லம்
பொய்தெரித் தகற்றி மெய்யிதுவென்னுஞ்
சைவசித்தாந்தத் தெய்வ வைப்புக்
கண்ணுபுண் ணியங்கட் கண்ணிய வுயிராந்
தண்ணிய மாசிவ புண்ணியப் பிழம்பு

சிவனடி யவரைச் சிவமென மதிக்குந்
தவமது வளர்க்கு மவமறு சீல
னென் னுளங் குடிகொண் டிருக்கு
முன் னுசீ ராறு முகநா வலனே''
"தென்மொழி யென் னு மன்பெரும் பௌவ
மொருங்கு குடித்த பெருங்கும்ப முனிவ
னெல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமுத
லிலக்கண மெல்லா நலக்கவைத் தடுக்கிய
திருவ நீண்ட வொருபெரும் பேழை
யாரணம் புகலும் பூரண புராணனே
பொருளெனப் புகலும் புராண வாகரஞ்
சொல்பல சமயமாந் துகளற வடித்துச்
சமயா தீதமாஞ் சைவசித் தாந்தத்
தெய்வவா ரமுதம் பெய்து நிறைத்துப்
பொருவற வைத்த பூரண கும்பம்
பேறுபெரி தடைந்த வாறுமுக நாவலன்."

இன் னும், உபயவேதாந்தப் பிரவர்த்தகாசாரியராகிய ஸ்ரீ சுந்தரசிவாசாரிய சுவாமிகள், தாம் இயற்றிய சிவாதிக்ய ரத்நாவளியிலே, ககூ-ம் பக்கத்தில் "ஶா. ஶா. ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வெளியிட்ட நூல்களிலிவ்வுண்மையைப் பார்த்துணர்வாராக" என்றும், கஉக-ம் பக்கத்தில் "இவ்வுண்மையை ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வெளியிட்ட பாரதத்தாற் கண்டுணர்க" என்றுங் கூறுதலினாலே, சைவப்பிரசாரகர் வடதேசத்து மகான்களால் எவ்வாறு பாராட்டப்படுகின்றார் என் னும் உண்மையைத் தெளிந்து அடங்கக் கடவாய்.

இன் னும், கூடலூர்க் குமாரகுருசுவாமிகள் இயற்றி அச்சிற் பதிப்பித்த பாத்மோத்தர ரசாபாசதருப்பணத்தில்

ங௫-ம் ங௬-ம் பக்கங்களிலிருந்து மேல் எடுத்துக் காட்டப் படும் பாகத்தைக் கண்டு சைவப்பிரசாரகர் மகிமை தெளி யக்கடவாய்:—

"இராசகோபாலபிள்ளை திருத்தியச்சிற் பதிப்பித்த புத்தகத்தைப் பாரா தீர். ஏனெனில், அவர், முதனூற்கருத் தறியாதவராகையால், வில்லிபுத்தூராழ்வார் செய்த பாரத த்தைப், பெரியோர்வாக்கை அழிக்கக்கூடாதென்று சிறி தும் அஞ்சாது, சிவபரமாயிருந்த பாடல்கள் அநேகத் தைத் தள்ளியும், சில அடிகளை மாற்றியும், சில சொற்க ளைத் திரித்தும், மனம் போனவாறே அச்சிற் பதிப்பித்த னர். ஆதலால், அதனை நீக்கி, வில்லிபுத்தூரர் பாடினபடி யே ஆறுமுகநாவலர் அச்சிற் பதிப்பித்திருக்கும் புத்தகம் ஒன்று சம்பாதித்துப் பாரும் பாரும் உமது ஐயந் தீரும் தீரும். நாவலர் என்னும் பட்டம் அவருக்குத் தகுமேயன்றி உமக்கெல்லாமா தகும்! புலியை நோக்கிப் பூனை சூடிக்கொ ண்டாற் புழுத்துச்சாமேயன்றிப் புலியாமா! அதுபோலக் கல்விக்கடலாகிய ஆறுமுகநாவலரை நோக்கி நீரும் அப்பெ யர் தரித்துக்கொண்டாற் பழியும் பாவமும் அடைவீரே யன்றிப் புகழ் அடைவீரா! அடையீர் அடையீர்."

அ. சிறைகள் தங்கள் யசமானனை "நயினர்" என வழ ங்குவது நீ யறியாயோ! நீ சொல்வதில்லையாயினும், பிறர் சொல்லக் கேட்டதில்லையோ! நாயனார் என்னும் பெயர், பெரியபுராணந் திருவிளையாடற்புராணந் திருவாதவூரடிகள் புராணம் முதலியவைகளிலே, சிவபெருமானுக்கு வழங்கு வது நீ கேட்டறியாயோ! அப்பெயர் அறுபத்துமூவர் முத லிய சிவனடியார்களுக்கு வழங்குவது உனக்குத் தெரியா தோ! இந்நாயனார் என்னும் பெயரே "நயினர்" என மரு விற்றென்பது உனக்குச் சொல்வார் இல்லையோ! தங்க

ளைக் குடும்பத்தோடு ஏசியுங் கட்டிவைத்தடித்தும் எவ்வு ளவோ வேலைகளைச் செய்விக்கும் யசமானன் கல்வியறிவொ ழுக்கஞ் சமயபத்தி ஒரு சிறிதும் இல்லாதவனாயினும், அவன் தங்களைச் சிறிதேனும் அன்னாதி தந்து பாதுகாத்த நன்றியை நினைந்து, அறிவில்லாச் சிறைகளும், அவனை அவன் பெயர் வழங்கக் கூசி "நயினார் நயினார்" என வழங் குவது உலோக சம்மதமாயபொழுது, ஆவரங்காற் றம்பி, கைமாறு கருதாது, தனக்கு, நேரே தான், தம் மாணாக்கர்வா யிலாகத்தான், தம் புத்தகங்கள் வாயிலாகத்தான், தம் பிர சங்கங்கள் வாயிலாகத்தான், கல்வியமுதம் பொழிந்தா ரொருவரை, அவர் பெயர் வழங்கக் கூசி, "எம்பெருமான் எம்பெருமான்" என வழங்குவது லோக சம்மதமாகாதோ! நீ மகா ஞான நிட்டாபரனாதலால், ஒரு மகா குருவை அடுத் திருப்பாய்போலும். அவரை நீ "எம்பெருமான்" என்றால், சிறிது கல்வியறிவுடையானொருவன் தன் குருவை "எம் பெருமான்" எனலாகாதோ! காசி ராமேசுர பரியந்தம் மகா கீர்த்திபடைத்த மகைசுவரிய மகௌதாரிய மகாப்பிரபுவா கிய வைத்தியலிங்கச் செட்டியாரை அவர் பிள்ளைகள் எம் பிதா எனலாம்; உன் பிதாவை நீ எம்பிதா எனலாகாதோ! சொல்லு சொல்லு. உன் பிதா வேளாளனல்லனாயின், வே றொருவனைப் பிதாவென் றெழுதிக்கொள்வாய்போலும். "பெருமான்" என்னுஞ் சொற்குப் பொருள் நீ அறியா யோ! நீ அச்சொற்குப் பொருள் அகராதியிலே பார்க்க வில்லையோ! "பெருமான்" என்பது குருவுக்குந் தலைவனுக் கும் மூத்தோனுக்கும் பெயர் என்பது நீ காணவில்லையோ! சைவப்பிரசாரகரைப் "பெருமான்" என்று எழுதிய ஆவ ரங்காற் றம்பிமேலே பாய்கிற நீ, "சமையங் கணினுயர்ந்

தமைவுபெற்றோங்கித்—தெய்வத் திறம்பொலி சைவ மென்னப்—பலபல கலையெலா நிலவுற வுணர்ந்த—புலவரீ னுயர்ந் தொளிர் நலமலி பெருமான்—புகலருஞ் சீர்த்தி பொத்துஞ்—சகமகிழா றுமுகநாவலனே" எனப் பாடிய சோழதேசத்துப் புலவர் மேலே பாயாததேனோ?

கூ. வியாதியினாலே பீடிக்கப்பட்டுச் சாவக்கிடந்தானொருவன், தன்னைக் கடவுளது திருவருளை முன்னிட்டு, மருந்து தந்து, காத்த வைத்தியனது கருணையைப் பாராட்டி, முதலாவது கடவுளாலே இரண்டாவது இவ்வைத்தியனாலே வியாதி தீர்ந்துய்ந்தேன் எனத் துதிப்பதும், அதுகேட்டவர் "இது சொல்லியநா என்படும்! இவ்வைத்தியன் கடவுளுக்குச் சமமோ" எனக் கறுவாது, அவன் செய்ந்நன்றியறிதலைப் பாராட்டுவதும், நீ கேட்டறியாயோ! பரசமயிகள் செய்யுஞ் சிவதூஷணையும், பரசமய போதனையுந் தலைப்படக்கண்டு மயக்கமுற்றவர், தம்மைச் சைவசமயகுரவர் நால்வரது திருவருள் வழிப்பட்டு அவருடைய மகிமையையுந் தேவார திருவாசகப் பொருளையும் உணர்த்திப், பரசமயப்படுகுழியில் வீழாதுய்வித்த குரவரது கருணையைப் பாராட்டி, முதலாவது சைவசமய குரவர் நால்வராலும் இரண்டாவது இவ்வைந்தாங் குரவராலும் நாம் பரசமயத்திலே புகாது சைவசமயத்தினுண்மையை அறிந்து உய்ந்தேம் என்று கருதி, அவரை ஐந்தாங் குரவர் எனத் துதிப்பது சிவப்பிரீதிகரமெனவும், மெய்யறிவுடையோரெல்லாரும் அவரது செய்ந்நன்றியறிதலைப் பாராட்டுவரெனவுந் தெளிந்துகொள்ளமாட்டாத நினதறியாமைக்கு யாது செய்யலாம்! முப்பது வருஷகாலஞ் சைவ சமயவிருத்தி செய்துகொண்டுஞ் சைவாதீன மடாதிபதிகள் முதலிய மகான்களாலே இனிது பாராட்டப்பட்டுக்கொண்டும் வாழுஞ்

சைவப்பிரசாரகரைக் "குரவர்" எனத் துதித்த தர்க்ககுடார தாலுதாரியை விளித்து, "இது சொல்லிய நா என்படும்!" என்றாய். சிவபெருமான் எல்லாரினும் மிக்க காமி எனவும், பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தம் அநாதி நித்திய மல்ல எனவும், சிவலிங்கமெனப்படுவது சிவனுடைய அற்று விழுந்த மற்றப்படியான் எனவும், பத்திரிகைகள் விடுத்த அதிபாதகர்களை விளித்து, நீ: "இவை சொல்லிய நா என்படும்" என்று வினவாததென்னையோ! அச்சிவதூஷண பத்திரிகைகளைப் பாராட்டிய உன் நா என்படும்! அவைகளைப் பாராட்டிக் கேட்ட உன் செவி என்படும்! அவைகளை மகிழ்ந்து பார்த்த உன் கண் என்படும்! அவைகளைப் பாராட்டி எழுதிய உன் கை என்படும்! அவைகளை நன்கு மதித்த உன்னெஞ் சென்படும்! உன் குடி என்படும்! உன் குலமென்படும்! திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலாயினார் குருபூசையிலே மாகேசுரர்களை யாராகப் பாவித்துப் பூசை செய்யப்படும்! எம் மந்திரங்கொண்டு பூசை செய்யப்படும்! நீ அறிவாயா! கல்வி கேள்வி ஒரு சிறிதுமின்றிக் குருபூசையிலே போசனஞ் செய்ய வந்திருக்கிற சைவர்கள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சமயகுரவராகப் பாவித்துப் பஞ்சாக்ஷர மந்திரத்தோடு கூடிய அவர் மந்திரத்தாலே பூசிக்கப்படும்போது, எவ்வளவோ காலம் சுவ சமயிகளாலும் எவ்வளவோ இடையூறு செய்யப்பட்டுச் சைவசமயத்துண்மையைப் பிரசங்கங்களாலும் பத்திரிகைகளாலும் புத்தகங்களாலும் வெளிப்படுத்தியருளும் ஒருவரை "ஐந்தாங் குரவ" ரெனத் துதிப்பது குற்றந்தானோ! இவை எல்லாம் நீ அறிவாயோ! இவையெல்லாம் நியாயமேயாகவும், தம்மைத் தர்க்ககுடார தாலுதாரி "ஐந்தாஞ்சைவசமய குரவர்" எனப்

பாடிப் பதிப்பித்ததைச் சைவப்பிரசாரகர் கேள்வியுற்று அதனை வேறுபிரகாரம் மாற்றிப் பதிப்பிக்கும்படி செய்துவிட்டது நன்றாக அறிந்தாயேயாகவும், சைவப்பிரசாரகரை உன் மனச்சான்றுக்கு விரோதமாக ஏனிகழ்கின்றாய்! குருபூசையிலே தம்மைப் பூசகர் சமயகுரவராகப் பூசிக்கும்பொழுது பூச்சியர் தாஞ் சமயகுரவரல்லர் தம்மை அப்படிப் பூசிக்கலாகாது என்று தடுக்கின், அது பாவமென்றிகழற்பாலதன்றோ! அப்படியே சைவப்பிரசாரகர் உன்னாலிகழப்படுவாராயின், அஃது ஒக்கும் ஒக்கும். சிராத்தகருத்தாத் தன்னாலே சிராத்தத்தில் வரிக்கப்பட்ட பிராமணரை யாராகப் பாவித்துப் பூசிக்கின்றான்? அப்பொழுது பிராமணர் தம்மை யாராகப்பாவித்துக்கொண்டிருக்கிறார்? இஃதறிந்தாற் சிராத்தஞ் செய்வோர் சிராத்தமேற்போர்களையுந் தூஷிப்பாயன்றோ! குருபூசைக்கிரமம் மாகேசுரபூசைக்கிரமந்தான் நீ அறியாய். சிராத்தக்கிரமந்தானும் அறியாயோ? உன் பிதா மாதாக்களுள் ஒருவரேனும் இன்னும் இறக்கவில்லையோ? அல்லது நீ சிராத்த சந்தேகியோ? வச்சிரகுலிசந் தொடக்குமாறு உனக்குத் துணைநின்ற பார்ப்பானாயினும் உனக்குச் சிராத்தக்கிரமம் அறிவித்தானில்லையோ? எந்தக்கோயிற் கலியாணப் படிப்பிலே குத்துவிளக்குக்கள் வந்திருக்கின்றன என்று பார்ப்பான்; எந்தவீட்டிலே எந்தப்பிராமணன் வைரரத்தினத்தை மறந்துவைத்துவிட்டு உள்ளேபோவான் என்று பார்ப்பான்; எந்த வீடுகளிலே சருகையுறுமால் புடைவை முதலியன அகப்படும் என்று பார்ப்பான்; எந்தத் தெருத்திண்ணையிலே பட்டுக்குடை திருடலாம் என்று பார்ப்பான்; எவரிடத்தே வாங்கிய கொப்புவாளியை அவர் மறந்துவிடுவார் என்று பார்ப்பான்; சிராத்தவிதியா பார்ப்பான்! செல்லப்பரிகாரியார் ஏவல்வழிச் செல்லப்பார்ப்

பான். செல்லநினைவு சென்ற வழி செல்லப்பார்ப்பான். சிவபிரானூல் வழியா செல்லப் பார்ப்பான. ஓகோ அரிசிவா என்ற வழி செல்லப் பார்ப்பான். ஆகா கரப்பிலா முந்நூல் அறப்பார்ப்பான். பிறர் இல்வழிச் செல்லமே லிராமையன் மீறப்பார்ப்பான்.

௫௦. சைவப்பிரசாரகர் பதியினது விளக்கந் தேவார திருவாசகங்களில் அதிவிசேடம் என்பதைக் குறித்து எழுதிய பாகத்தின் உண்மை அறியாது நினக்கு வேண்டியவாறே பிதற்றினாய். சிவலிங்கம் என்பதற்குப் பொருளென்னை? சிவலிங்கமென்னும் பெயர் சிலைமுதலியவற்றிற்கு நிருபசரித வார்த்தையா? உபசரித வார்த்தையா? சமயகுரவர் நால்வருஞ் சரியாவான்களா? கிரியாவான்களா? யோகிகளா? ஞானிகளா? தலந்தோறுஞ் சென்று சிவாலயதரிசனஞ் செய்தல் சரியையா? கிரியையா? யோகமா? ஞானமா? சிவபெருமானுக்கு வடிவம் எத்தனை வகைப்படும்? சரியையாளன் வழிபடும் வடிவம் எது? கிரியையாளன் வழிபடும் வடிவம் எது? யோகி வழிபடும் வடிவம் எது? ஞானி வழிபடும் வடிவம் எது? சிவனது சாந்நித்தியத்துவஞ் சிவலிங்கத்தில் நித்தியமா? அநித்தியமா? ஆவேசமா? அதிட்டானமா? அட்டபந்தன சலனாதி நிகழ்ந்தவழிப் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டபோது சிவலிங்கத்திலே சிவசாந்நித்தியத்துவம் உண்டா? இல்லையா? அப்பொழுது அது வழிபடற்பாலதா? ஒழிதற்பாலதா? சிவலிங்கத்துக்குப் பிரதிட்டை உண்டா? இல்லையா? தேவார திருவாசகங்களுக்குப் பிரதிட்டை உண்டா? இல்லையா? பிரதிட்டையாவது யாது? சிவலிங்கத்திற் சிவசாந்நித்தியத்துவத்திற்குக் காரணமென்னை? அதனொழிவுக்குக் காரணமென்னை? தேவார திருவாசகங்களிற் சிவசாந்நித்தியத்துவத்திற்குக் காரண

மென்னை? அதற்கெறிவுண்டா? நீ சிவஞானசித்திப்பொருள் அறிந்தாய்போல எடுத்துக்காட்டிய "ஞாலமதின் ஞானநிட்டையுடையோருக்கு" என்னுந் திருவிருத்தத்திற் கூறிய இலக்கணங்களுக்குப் பொருளென்னை? அவ்விலக்கணங்கள் உன்னால் உத்தேசிக்கப்பட்ட சமயகுரவர் நால்வரிடத்தும் உண்டோ இல்லையோ என்று பரீக்ஷை செய்தாயா? பரீக்ஷித்த பிரகாரந்தான் எப்படி? அது காட்டுவாயா? தேவார திருவாசகங்களால் உணர்த்தப்படும் வடிவெது? சொரூபமா? தடத்தமா? சிவலிங்கத்திற் பாவிக்கப்படும் வடிவெது? சொரூபமா? தடத்தமா? கந்தசுவாமி வடிவம் யாது? கற்பிதமா? வாஸ்தவமா? கற்பிதமாயின், அவரைத் தந்தார் வடிவென்னை? தந்தாரைத் தந்தார் வடிவென்னை? வாஸ்தவமாயின், வைந்தவமா? மாயேயமா? பிராகிருதமா? பூதசாரமா? பூதபரிணமமா? கந்தசுவாமியாலே சிதம்பரத்திலே வணங்கப்பட்டதென நீ சுட்டிய சபாநாயகவடிவம யாது? பூதபரிணமசரீரிகளாகிய நம்போலிகட்குப் புலப்படுந தாமிரவடிவந்தானு? பிறிதொன்று? அசசபை எவ்வடிவம்? பொன்வடிவமா? சநதனப்பலகை வடிவமா? பிறிதொன்று? கநதசுவாமிக்கு வேற்படை எச்சத்தி? சமவேதமா? பரிக்கிரகமா? சமவேதமாயின், இடையில் அவருக்குக் கொடுக்கப்பட்டதென்றதென்னை? பரிக்கிரகமாயின், வைநதவமா? மாயேயமா? நன்னூற்குச சைவசித்தாந்தியாகிய சங்கரநமசிவாயப் புலவருரையிலே முருகனது வேல் பிறிதின்கிழமைப் பொருளென்றதென்னை? கந்தசுவாமிக்குத் தெய்வயானையம்மை வள்ளியம்மை எச்சத்தி? சமவேதமா? பரிக்கிரகமா? இச்சத்திகளைக் கொடுத்த இந்திரன் வேடன் இவர் சரீரம் என்னை? கந்தசுவாமிக்கு வேற்படையொழிந்த ஆயு

தங்கள் எவ்வடிவம்? சத்தியா? மூங்கிலா? இரும்பா? கந்தசுவாமிக்குத் தேர் மயில் சேவல்கள் எவ்வடிவம்? இவையெல்லாவற்றிற்கும் விடையறிய வல்லையாயிற் சைவப் பிரசாரகர் திருவாக்குக்கும் பொருளறியவல்லை.

கக. நீ என்ன சமயி? சைவனோ? கிறிஸ்தவனோ? சைவனாயின், சிவதூஷண பத்திரிகைகளைப் பாராட்டாய். சிவசித்தாந்த பண்டிதரைச் சைவசமய போதகரைச சிவனடியாரைத் தூஷித்து எழுதத் துணியாய். கிறிஸ்தவனாயின், சைவசமயத்திலுங் கந்தசுவாமி கை வேலாயுதத்திலும் பற்றுடையை போல நடித்துக் காட்டாய். பொதுப்பெண்களைக் கோயில்களிலே தேவதாசிகள் எனக்கொண்டாடுவது எல்லாக் கேட்டுக்கும் மூலமென்று சைவப்பிரசாரகர் எழுதியது கிறிஸ்துசமயகுருமாராகிய பாதிரிமாரகளுக்குஞ் சம்மதமேயாகவும், அவர்களுக்கு மறுதலைப்பட்டு, அபபர சமயிகளுங் கனவினு நினைத்தல்செய்யாத அதிகுரூர தூஷணவார்த்தைகளை அபபரசமயிகளாலும் நன்குமதித்துப் பாராட்டப்படுஞ் சைவப்பிரசாரகர்மீது தூவ நினையாய். பாவீ! பின் நீ என்ன சமயி?

கஉ. நீ சைவப்பிரசாரகர் கோபமுடையர் என்றெழுதுகிறாய். சைவப்பிரசாரகருக்கு விரோதமாகப் பததிரிகை எழுதும்பொருட்டு உன்னை ஏவிவிட்டவர்களுள் ஒருவராகிய பரிகாரியாரிடத்தே மேல் வரும் வினாக்களை நீ வினவுக கடவாய்:—"நான்கு வருஷத்துக்கு முன்னே நீர வைததியம் அறிந்த ஒரு செட்டியாரோடு சைவபபிரசாரகரிடத்தே போய். 'நான் உஙகளுக்குத் தங்கஞ்சோதது ஒரு மருந்து செய்து தருவேன்' என்று சொல்லி, ஆறு வராகனெடை தங்கம் வாங்கிக்கொண்டு வநதீரோ அனறோ? சிலகாலஞ

சைவப்பிரசாரகர் அனுப்பிய மனுஷர்களைப் பலதரம் அலை த்துவிட்டுப் பின்பு அவருடைய வித்தியாசாலை உபாத்தி யாயர்களில் ஒருவரிடத்தே ஒருமருந்து கொடுத்தனுப்பி விட்டீரோ அன்றோ? அம்மருந்தைச் சைவப்பிரசாரகர் சில நாள் உட்கொண்டு, உடல்வெளுப்பு ஆயாசம் அன்னத் துவேஷமுதலியன அடைந்து வருத்தமுற்றுக் கிடந்தது உண்டோ இல்லையோ? அஃதறிந்த அச்செட்டியார் சென்று சைவப்பிரசாரகரைப் பார்த்து, மனம் பதைபதை த்து, அம்மருந்தில் ஒரு சிறிது வாங்கி, அதனைச் சோதிக்க வல்லவர் சிலரோடு கலந்து சோதித்து, அதிலே தங்கம் ஒரு சிறிதுஞ் சேர்க்கப்படவில்லையென்பது தெளிந்து, அவ்வுண் மையைச் சைவப்பிரசாரகருக்கு அறிவித்து மருந்து பின்பு உட்கொள்ளாவண்ணம் நிறுத்துவித்தது உண்டோ இல்லை யோ? நீர் சைவப்பிரசாரகருக்கு அம்மருந்து கொடுத்த நாண் முதல் இந்நாளெல்லையளவாகிய நான்குவருஷத்துள், ஒருநாளாயினும், அவரை நோக்கி: 'நீங்கள் என் மருந்து உட்கொண்டீர்களா? இப்பொழுது ஆரோக்கியம் எப்படி?' என்று 'வினவியதுண்டா? அப்படி வினவாததென்னை? எப்பொழுதுந் தமது வீட்டுவாயில் வழியே நீர் போக்கு வரவு செய்யக் காண்கின்ற சைவப்பிரசாரகர், ஒருபொழு தாயினும் உம்மை நோக்கி: 'நீர் எனக்கு இன்னபடி செய்ய லாமா' என்று கோபத்தோடாயினுஞ் சாந்தியோடாயி னுங் கேட்டதுண்டா? நீர் அவ்வாறு வராகனெடை தங்க மும் செல்லவங்கியிலே போட்டதுண்டோ இல்லையோ?"

கரு. கடவுள் ஒருவர் உண்டு புண்ணிய பாவபேதம் உண்டு சுவர்க்க நரகபலம் உண்டு என்பது உன் மனத்துணி வேயாமாயின், நீ இவ்வினைக்களை வினவி, இவைகளுக்கு விடையறிந்துகொண்டு, அம்மருந்து சோதித்தவர்கள் இவ

ர்களென ஆராய்ந்து, அவர்களிடத்தே விசாரித்துத் தெளிந்துகொண்டு, "சைவப்பிரசாரகர் தமக்கு இப்பெருங் கொடுஞ்செய்கை செய்த பரிகாரியாரை எவ்வெவை பேசலாம்! எவ்வெவை செய்தல்கூடும்! அவ்வவை பேசினரோ! அவ்வவை செய்தாரோ!" என்று நன்றாக ஆலோசித்துக்கொண்டு பின்பு "சைவப்பிரசாரகர் எப்படிப்பட்டவர்! அவர் கோபம் எப்படிப்பட்டது" என்று எழுதக்கடவாய். லோகப் பிரசித்திபெற்ற சைவப்பிரசாரகருக்கு இப்படிச்செய்யத் துணிந்த உன் பரிகாரியார் எப்படிப்பட்டவர்! எத்தனை ஏழைச்சனங்களுக்கு எவ்வெவை செய்திருப்பார்! நீ ஆலோசி. சைவப்பிரசாரகர் "சைவம் வாய்மண்போட்டார் போடுகிறார்" என்று மனம் பதைபதைத்து அது தவிர்க்க நினைந்து தானே உன் பரிகாரியார் இப்படிச்செய்தார்! சைவப்பிரசாரகர் கோயில்களிலே பொதுப்பெண்களைத் தேவதாசிகளெனக் கொண்டாடுவது குற்றமென்று செய்யும் பிரசங்கந் தமக்கும் பிறருக்குங் கேடு விளைக்கும் என்று மனம் பதைபதைத்து அது தவிர்க்கத்தானே, உன் பரிகாரியார் இப்படிச் செய்தார்! நீ கேளு கேளு. நீயுஞ் சாவதானமாயிரு. சைவப்பிரசாரகர் குற்றமுற்று மற்றவர் என்று நான் சொல்லத்துணியேன். ஒன்றுக்கும் பற்றாத சிறியேன் சைவப்பிரசாரகருடைய திருவடிகளைத் தொழுது, இங்கே ஒன்று விண்ணப்பஞ் செய்யத் துணிகின்றேன். சைவப்பிரசாரகர், மேலே சுட்டிய பரிகாரியாராலே தமக்கு விளைந்த பொருட்கேட்டையும் ஆரோக்கியக் கேட்டையும் பொறுத்தருளியது குணமாயினும், அப்பரிகாரியாருக்கு எத்தனையோ ஏழைகள் தப்பிக்கொள்ளும்பொருட்டு உண்மையை அப்பொழுதே உலகறிய வெளிப்படுத்தியருளாது மறைத்தது பெருங்குற்றம் பெருங்குற்றம். என்னை யாவர் குற்றம்பேசி

னும் பேசட்டும். நான் நீதியைச் சொன்னேன். நானோ மருந்து சோதித்தவர்களால் அறிந்துகொண்டேன்.

க௮. சைவப்பிரசாரகர் பதிப்பித்த நல்லூர்க் கந்தசுவாமிகோயிற் பத்திரிகைகளிரண்டும் எல்லாரெதிரும் இருக்கின்றன. அவைகளை எல்லாரும் வாசிக்கலாம். எல்லாருங்கேட்கலாம். அவைகளிலே பேசப்பட்டவைகள் மெய்யோ பொய்யோ என்று பற்பலதினம் பற்பலரிடத்தே எல்லாரும் நன்றாக விசாரித்து நிச்சயித்துக்கொள்ளலாம். அவைகளிலே பேசப்பட்டவைகள் சிவாகம சம்மதமோ சிவாகம விரோதமோ என்று சிவாகமப்பொருள் அறிய வல்லவர்களெல்லாருந் தாங்களே சிவாகமங்களை ஆராய்ந்து நிச்சயித்துக்கொள்ளலாம்; சிவாகமம் அறியாதவர்கள் எல்லாருஞ் சிவாகமம் அறிந்தவர்களிடத்தே கேட்டு நிச்சயித்துக்கொள்ளலாம். இப்படியெல்லாம் நிச்சயித்துக்கொண்ட பின், தங்கள் தங்கள் மனச்சான்றுக்கு விரோதமறநடக்கவிரும்புகிறவர்கள் அப்படியே நடக்கலாம்; விரும்பாதவர்களை வலாற்காரஞ் செய்வாரில்லை. இப்படியெல்லாமாகவே, சைவப்பிரசாரகர் தீமை செய்ய நினையினும், அவருக்குத் தப்பிக்கொள்ளலாம். உன் பரிகாரியாருக்கு யார் தப்பக்கூடும்! நீ ஆலோசி ஆலோசி.

க௯. யாழ்ப்பாணத்திலுள்ள பரம்பரைப் பிராமணகுருமார்களே! கரணவாய் வரணிகளில் உள்ள சைவகுருமார்களே! வேதாரணியத்தினின்றும் எழுந்தருளிவந்திருக்கின்ற சைவகுருமார்களே! உங்கள் திருவடிகளுக்கு வணக்கம். நல்லூர்க கந்தசுவாமிகோயிற் பத்திரிகை இரண்டும், அவைகளுக்கு விரோதமாக வெளிப்பட்ட பத்திரிகைகள் நான்கும், சுவாமிகாள்! நீங்கள் திருக்கண் சாத்தியிருக்க

லாமே. உங்கள் திருவுளக்கருத்தென்னேயோ! பத்திரிகை வாயிலாகச் சீஷர்கள் உய்யும்பொருட்டு வெளிப்படுத்தியரு ளலாகாதோ! சுவாமிகாள்! முடிவு மௌனந்தானோ! சிவ வாக்காகிய ஆகமத்தைச் சிரமேற்கொள்வது உங்கள் கடன். சிவவாக்கையும் அதற்கு மாறுபடாவண்ணம் போதிக்கும் உங்கள் வாக்கையுஞ் சிரமேற்கொள்வது உங்கள் சீஷர்கள் கடன். இதற்குஞ் சந்தேகமோ! உங்கள் சீஷர்களோ இவ் விரண்டையும் அவமதித்துத் தாங்கள் தாங்கள் விரும்பிய விரும்பியபடி பிரதிட்டை உற்சவம் பூசை முதலியன செய் துவிடும்பொருட்டு உங்களுக்குக் கட்டளையிடும்பொழுது, ஓகோ! அவர்கள் கடன் யாதாய் முடிந்தது! நீங்கள் சிவ வாக்கை அவமதித்து உங்கள் சீஷர் கட்டளையைச் சிரமேற் கொண்டு நேர்ந்த நேர்ந்தபடி செய்துவிடுகிறபோது, ஆகா சுவாமிகாள்! உங்கள் கடன் யாதாய் முடிந்தது! நல்லது நல்லது. உங்கள்பாடு இப்படியிருக்க, சிவபிரான் கடன் யாதோ! தெரியாதோ! தெரிவிக்கவேண்டுமோ! சுவாமி காள்! உங்கள் கடன் முடிந்தபடிதான் சிவபிரான்கடனும் முடியுமென்றெண்ணமோ! சிவபிரானும் காசாசை துணி யாசை அரிசியாசை காயாசை கனியாசை உப்புப் புளி மிளகாயாசை கும்பிடாசைகளினாலே தங்கடனை மறந்து விடுவாரென்றெண்ணமோ! சுவாமிகாள்! நல்லது நல்லது!

இங்ஙனம்,

வண்ணார்பண்ணை, } ஓர் சைவசமயாபிமானி.
யுவஸு கார்த்திகை உகஉ. }

# ௪. பாடல்கள்.

## சனி நீராடு.

(உதய தாரகை.)

மக்கர்குரு தத்தர்கிட தத்தர்பிற மன்னர்தொழ
வளமிகுதொன் மதுரை நீங்கி
மத்தகய மொத்ததிறல் பெற்றிடு புவிச்சக்ர
வர்த்தி சிங்காரியன் முதல்
மன்னரரசாளுமிட மென்னவள ரியாழ்ப்பாண
மருவு நல்லாபுரியினன்
மயில்வாகனச்சுப்ர மணியசுவாமியின் றிரு
மலரடி துதிக்குமடிமை,
திக்கனைத்தும்புகழு முத்தமமிகுத்திடுஞ்
செந்தமிழ்க் கலை ஞாபகன்
சீர்மருவு கந்தனருள் மைந்தனு மாறுமுக
தீரனெழுதுங் காகிதம்
செப்புதயதாரகைப் பத்திரமச் சிற்பதித்
திட்டப்ர சித்திசெய்யும்
திகழ்முகாமைக்கார ரெதிர்கொண்டு துயர்விண்டு
சித்தமகிழ் கொண்டு காண்க,
தக்கசனி நீரா டெனுமவ்வை யார்மொழி
தனக்குறை தனைப் பகரிடிற்
சனிவார மதிலெண்ணெ யிட்டுவெந் நீரினிற்
றலை முழுக வென்பதாகுஞ்
சத்திய விசித்திரகவி ஞர்க்குளு சிதப்ரபல்ய
சற்குண மகத்துவமிகும்
தணிகைவளர் கந்தப்ப தேசிகனளித்திடுஞ்
சரவணப் பெருமானெனும்.

மிக்கபுலவனு மிங்ஙன முரைவகுத்தன்ன
  மிருசோ திடங்க ளாலும்
வித்தக வறப்பளீச் சுரசதக முதலான
  வேறுபல நூல்க ளாலும்
மேலான பொருளிதென வேயுணர்க வேறுசில
  வீணர்பொருள் வேறு பகர்வார்
மெய்மையைப் பற்றிவள் ளுவர்சொன் றூன் றுங்குறள்
  விளங்கிலார் போலு மன்றே.

## வாழி.

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதன
  மாறுமறு தினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ
  னருண்முருகர் சரணம் வாழி
கருணைமழை பொழிபனிரு நயனமதி னொடுவலிய
  கவினுலவு தோள்கள் வாழி
கனகிரியை யிருபிளவு படவுருவு நெடியவயில்
  கரதலத் தினிது வாழி
வருணமர கதவழகு திகழுவரு மவுணனெனு
  மயிலினொடு சேவல் வாழி
வனசரர்த மரசனுத வியகுறமி னொடுகடவுண்
  மயிலிவர்க டினமும் வாழி
தருணமிது வெனவமரர் பணிநல்லை யமர்கந்தர்
  தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண
  சடக்ஷரம் வாழி வாழி.

ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு
இரண்டாம்பாகம்
முற்றிற்று.

# நல்லைநகர்க்கந்தரகவல்.

நேரிசையாசிரியப்பா.

[இஃது ஆறுமுகநாவலரவர்கள் தமையமாருளொருவரும் கதிரையாத்திரை விளக்கத்திலுள்ள பலகீர்த்தனங்கள் செய்தவருமாகிய பரமானந்தப்புலவர் செய்தது.]

கடன்முகட் டுதித்தசெங் கதிரெனத் திகழும்
படம்விரித் தெழுந்த பஃறலை யரவின்
பருமணித் தொகையு மரிமணிக் குவையும்
பச்சையும் வயிரமு மற்றைய மணியும்
விண்ணகத் திடையிடை தண்ணிழல் விடுப்ப
இந்திர வில்லென் றினமயி லேமாந்
தெங்கணு மகவுஞ் செம்பொனி னிமையத்
தண்கிரி நடுவட் டமைத்தெழு பச்சைப்
பைங்கொடி யன்றருள் பண்ணிய மருந்தே
இருவராண் டளந்து மொருகரை காணாக்
கருணைவா ரிதியின் விளையுமா ரமுதே
கருத்துறக் கருதிக் கசிந்தவ ருள்ளத்
திருட்டொகை துரக்குந் திருத்தகு விளக்கே
இல்லையென் றொருவரை யிரவா தடியவர்
அல்லனோ யகற்றியின் பருளுநன் னிதியே
வண்டினங் குடைந்துபண் பாடிட வளர்முகை
விண்டலர் கடம்பெனும் வெறிமலர்த் தொடையனே
கோகன கத்தில்வாழ் குரவனைச் சிறைபுரிந்
தாருயிர் படைத்தரு ளளித்திடு முதல்வனே

கிரணைச் சிறைசெயுங் கிருத்திமத் தனைநெடு
வீரவேல் விடுத்துமுன் வீட்டிய விமலனே
அருட்குரு வாகிமுன் னகத்தியர்க் கருமறை
தெருட்டுநல் லுணர்வருள் சிற்பரா னந்தனே
நாரதன் மகத்தினில் நணுகுறு செச்சையை
ஊர்தி யெனப்பிடித் தூர்ந்திடு மொருவனே
ஆறுருத் தனையுமோ ரங்கையா லணைத்துமை
ஓர்வடி வாத்திரட் டியவொரு முருகனே
தடநெடுஞ் சரவணந் தனிலறு மங்கையர்
குடமுலை யூறுபால் குடித்திடுங் குமரனே
ஆவினன் குடியினு மரியவே ரகத்தினுஞ்
சீரலை வாயினுந் திருப்பரங் கிரியினும்
பழமுதிர் சோலையென் றுரைபெறு மலையினும்
உளமகிழ் வோடுறை யொப்பிலா முதல்வனே
குன்றுதொ றாடல்செய் துலவிடுங் குழகனே
அதிர்கருங் கடல்புடை யடர்ந்தவம் புவிதொழுங்
கதிரையங் கிரியுறை கங்கைதன் புதல்வனே
குடவளை யினம்பல குமிறுதண் பணையொடு
தடமலர் வாவிகள் தயங்குநல் லூரனே
அன்பினர் நெஞ்சத் தடந்தொறு மலர்ந்தநின்
பங்கயப் பாதமென் சிந்தைவைத் தியம்புவன்
மாயிரு ஞாலத்து மக்களிற் பற்பலர்
தந்தையுந் தாயும் தமருந் தனயருஞ்
செஞ்சொல்வஞ் சியருந் தேடிய பொருளும்
மீமிசைப் பவக்குழி வீழ்த்திடப் பிணித்த
பாசமென் றெல்லாம் பற்றறத் துறந்து
காட்டிடைப் புகுந்தொரு காலினை முடக்கிமேல்
நோக்கிய கண்ணொடு கூப்பிய கையுமாய்

நெடுந்தவம் புரிந்து மெலிந்தனர் தளர்ந்துங்
காற்றுதிர் சருகுங் காயுங் கனியும்
வாய்த்தன வருந்தி வருந்தின ருலைந்தும்
பேயெனத் திரிந்தும் பேருடல் வரண்டுங்
கானிடை விலங்கெனக் காண்வர வுழன்றும்
வேற்றொரு தேவரை வேண்டார் நின்னடி
போற்றினர் முத்தி புகுவது பொருளாய்
அங்கவை யனைத்துஞ் சிந்தைசெய் யாது
தண்டலை மலர்விழும் வண்டின மென்னக்
கண்டன கண்டன காமுற்று வைகலும்
அறுசுவை யமுத மொருசுவை குறைந்துழி
அட்டனர் வெருவ வெட்டென வெகுண்டுந்
தண்ணறுஞ் சாந்து சவாது குங்குமம்
ஒண்மலர்ச் சூட்டொடன் றுள்ளன புனைந்தும்
நன்னெறி படர்கிலார் நட்பினை நயந்தும்
நாணிலாக் கணிகையர் நயனவேற் குடைந்தும்
வாணாளெல்லாம் வீணாக் கழித்தனன்
இளமணிக் குலங்க ளிமைக்குமா முடியுந்
தினகரர் போலொளி திகழ்முக மாறும்
ஒருமர வடிவா யுலகினை யுலைத்தசூர்
இருபிளவாக வெறிந்திமை யோர்கள்
சிறைதவிர்த் தருளிய திருநெடு வேலும்
மற்றுள படையும் வரதமு மபயமும்
உற்றிடு பன்னிரு கைத்தல நிரையும்
அருவரை யனைய வகலமு மிரண்டு
மடவன முவந்து வாழ்வுறு பாலும்
கலகலென் றிசைக்குநின் கழலுங் காட்டி
மரகதக் கலாப மயின்மிசைத் தோன்றும்

## நல்லைநகர்க்கந்தரகவல்.

வடிவினை வாழ்த்தி மறவா துள்கி
இரவினும் பகலினு மிறைஞ்சலை ஞயினும்
உன்னையே தெய்வமென் றுளத்துட் டுணிந்தனன்
அன்னது துணிந்தேற் குன்னது பாரஞ்
சினமொடு தீமையு மனமடு காமமும்
நெறியிடைப் புகாத பொருளிடைச் செலவும்
நரகிடை வீழ்த்துங் கொலைகள வாதியும்
இன்னவு மிம்மையி லகற்றி
அம்மையின் முத்தி யருளு மாறே.

திருச்சிற்றம்பலம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௩ | ௧௬ | விப்பாரே | விப்பாரே. |
| ௭ | ௨௧ | தொண்டுப் | தொட்டுப் |
| ௫௦ | ௨௫ | கருப்பக்கிரக | கருப்பக்கிருக |
| ௫௨. | ௫ | சிறிலு | சிறிது |
| ௬௭ | ௧ | நல்லூர்க் கந்தசுவாமிகோயில். | மித்தியாவாதநிரசனம். |
| ௬௬ | ௧ | ,, | ,, |
| ௧௦௧ | ௧ | ,, | ,, |
| ௧௦௫ | ௧ | ,, | ,, |
| ௧௨௬ | ௧௮ | மீனாட்சிசுந்தரம்பிள்ளை | மீனாட்சிசுந்தரப்பிள்ளை |
| ௧௪௧ | ௧ | ௧௪ | ௧௪௧ |

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.